# நிதியியல் உறுதிப்பாட்டு மீளாய்வு 2026




ශ්‍රී ලංකා මහ බැංකුව

இலங்கை மத்திய வங்கி

CENTRAL BANK OF SRI LANKA

# நிதியியல் உறுதிப்பாட்டு மீளாய்வு
# 2026

இலங்கை மத்திய வங்கி

**வெளியிடுபவர்:**

இலங்கை மத்திய வங்கி
30, சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01
இலங்கை

2023 ஆம் ஆண்டு இல. 16 இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் பிரிவு 70(1) இன் படி, இலங்கை மத்திய வங்கி ஒவ்வொரு ஆண்டும் ஒத்தோபர் 31 இற்கு முன்னர் நிதியியல் உறுதிப்பாட்டு மீளாய்வு (Financial Stability Review - FSR) இனை தயாரித்து வெளியிட வேண்டும். இச் சட்டப்பூர்வ கடமையை நிறைவேற்றும் வகையில், 2026 ஆம் ஆண்டிற்கான நிதியியல் உறுதிப்பாட்டு மீளாய்வு, நிதியியல் முறைமையில் ஏற்பட்ட முன்னேற்றங்கள், அதில் அடையாளம் காணப்பட்ட அபாயங்கள் மற்றும் பலவீனங்கள், அவற்றை எதிர்கொள்வதற்காக இலங்கை மத்திய வங்கியும் பிற ஒழுங்குபடுத்தும் நிறுவனங்களும் ஆய்வுக்காலத்தில் மேற்கொண்ட கொள்கை நடவடிக்கைகள் ஆகியவற்றை உள்ளடக்குகிறது. இந்த ஆய்வு பெரும்பாலும் 2026 யூன் மாத இறுதி வரை கிடைக்கப்பெற்ற தரவுகளை அடிப்படையாகக் கொண்டதாக இருந்தாலும், பின்னர் இடம்பெற்ற சில முக்கியமான சமீபத்திய முன்னேற்றங்களும் அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், இவ்வெளியீட்டில் பயன்படுத்தப்பட்ட சில தரவுகள் பல்வேறு மூலங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டுள்ளதோடு குறிப்பாக இந்த அறிக்கைக்காக மேற்கொள்ளப்பட்ட கணிப்புக்களையும் உள்ளடக்கியிருக்கலாம்.

**கேள்விகள், கருத்துக்கள் மற்றும் பின்னூட்டங்களுக்கு தயவு செய்து தொடர்பு கொள்ளவும்:**
பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
30, சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01
மின்னஞ்சல்: msd@cbsl.lk

**ISBN 978-624-6764-34-0**

## உள்ளடக்கம்


**சுருக்க அறிக்கை**

**சிறப்பம்சங்கள்**

**அத்தியாயங்கள்**

**1. பேரண்ட நிதியியல் நிலைமைகள் 1**

1.1 பன்னாட்டுப் பொருளாதாரச் சூழலும் நிதியியல் நிலைமைகளும் 2

1.2 உள்நாட்டுப் பேரண்ட நிதியியல் நிலைமைகள் 8

**2. நிதியியல் சந்தைகள் மற்றும் கொடுப்பனவு உட்கட்டமைப்பு 23**

2.1 பங்குரிமைச் சந்தை 24

2.2 அரசாங்கப் பிணையங்கள் சந்தை 28

2.3. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை 31

2.4. உள்நாட்டுப் பணச் சந்தை 34

2.5. கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு உட்கட்டமைப்பு 37

**3. நிதியியல் நிறுவனங்கள் 41**

3.1. வங்கித்தொழில் துறை 42

3.2. நிதிக் கம்பனிகள் துறை 63

3.3. காப்புறுதித் துறை 72

3.4 நிதியியல் நிறுவனங்களின் இணையம் சார்ந்த இடர்நேர்வுகள் மற்றும் தொழிற்பாட்டு ரீதியிலான தாக்குப்பிடிக்குந்தன்மை 76

**4. வீட்டலகு மற்றும் கூட்டாண்மைத் துறைகள் 81**

4.1. வீட்டலகு மற்றும் நிறுவன ரீதியிலான துறைகளின் இடர்நேர்வு மதிப்பீடு 82

4.2. பட்டியலிடப்பட்ட நிதியல்லாக் கூட்டாண்மைகளின் இடர்நேர்வு மதிப்பீடு 86

**5. நிதியியல் உறுதிப்பாட்டிற்கான கொள்கைகள் 93**

5.1. உறுதிப்பாட்டிற்கான பேரண்டமுன்மதியுடைய கொள்கைகள் 94

5.2. உரிமம்பெற்ற வங்கிகளுடன் தொடர்புடைய கொள்கைகள் 97

5.3. நிதிக் கம்பனிகள், உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் மற்றும் முதன்மை வணிகர் கம்பனிகளுடன் தொடர்புபட்ட கொள்கைகள் 99

5.4. கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகளுடன் தொடர்புபட்ட கொள்கைகள் 100

5.5. நிதியியல் நிறுவனங்களின் வைப்புக் காப்புறுதி மற்றும் தீர்மானம் மீதான கொள்கைகள் 100

5.6. நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புடன் தொடர்புபட்ட கொள்கைள் 101

5.7. பணம் தூயதாக்கலுக்கெதிரான, பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மற்றும் ஆயுதப்பொருக்கத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் என்பவற்றுடன் தொடர்புபட்ட கொள்கைகள் 102

5.8. நிதியியல் வசதிக்குட்படுத்தலுடன் தொடர்புடைய கொள்கைகள் 103

5.9. நிதியியல் முறைமை மேற்பார்வைக் குழு 103

5.10. நிலைபெறத்தக்க நிதி மீதான கொள்கைகள் 104

**நிதியியல் துறைக்காக நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய கொள்கைசார் மாற்றங்கள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகள் பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்பு 105**

**சிறப்பு குறிப்புக்கள்**

1. அதிகரித்துவரும் காலநிலை இடர்நேர்வுகள்: நிதியியல் முறைமை உறுதிப்பாடு தொடர்பில் வளர்ந்துவருமொரு கரிசனை 17

2. முறைமைசார் இடர்நேர்வு அளவீடு 38

3. இலங்கையின் வங்கித்தொழில் துறையில் செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு 77

**பின்னிணைப்புகள் 117**

## வரைபடங்கள்


**1 பேரண்டநிதியியல் நிலைமைகள்**

வரைபடம் 1.1 உலகளாவிய நிச்சயமற்றதன்மை 2

வுரைபடம் 1.2 உலகளாவிய உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 3

வுரைபடம் 1.3 உலகளாவிய தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் 3

வுரைபடம் 1.4 உலகளாவிய வணிகப்பொருள் வர்த்தக வளர்ச்சி 3

வுரைபடம் 1.5 உலகளாவிய பணவீக்கம் 4

வுரைபடம் 1.6 உலகளாவிய பண்ட விலைச் சுட்டெண்கள் 5

வுரைபடம் 1.7 நிதியியல் நிலைமைச் சுட்டெண் 5

வுரைபடம் 1.8 கொள்கை வீத வீச்சு (2021 சனவரி தொடக்கம் 2026 யூலை வரை) 6

வுரைபடம் 1.9 நீண்டகால அரசாங்க முறி விளைவு வீதங்கள்: 10 ஆண்டு 7

வுரைபடம் 1.10 எம்எஸ்சிஐ பங்கு விலைச்சுட்டெண்கள் 7

வுரைபடம் 1.11 வங்கிகள் மற்றும் நிதிக்கம்பனிகளின் மொத்த கொடுகடன் வளர்ச்சி 8

வுரைபடம் 1.12 வங்கிகள் மற்றும் நிதிக்கம்பனிகளின் வெளிப்படுத்துகை 9

வுரைபடம் 1.13 வங்கித்தொழில் துறையின் வைப்பு விகிதத்திற்கான கொடுகடன் 10

வுரைபடம் 1.14 வங்கித் தொழிற்துறையின் வைப்பிற்கான கொடுகடன் விகிதம் எதிர் மொ.உ.உற்பத்தி வளர்ச்சி 10

வுரைபடம் 1.15 கொடுகடன் நிரம்பல் அளவீட்டுச் சுட்டெண்களின் அசைவு 11

வுரைபடம் 1.16 தனியார்துறைக் கொடுகடன் சுழற்சி 11

வுரைபடம் 1.17 கொள்கை வீதம் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட சந்தை வட்டி வீதங்கள் 12

வுரைபடம் 1.18 சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் மற்றும் உண்மை சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் 12

வுரைபடம் 1.19 அரசாங்க பிணையங்களின் இரண்டாந்தர சந்தை விளைவு வளையி 12

வுரைபடம் 1.20 காலாண்டு மொ.உ.உற்பத்தி வளர்ச்சி 13

வுரைபடம் 1.21 முதன்மை பணவீக்கம் மற்றும் உள்நாட்டு எண்ணெய் விலைகள் 13

வுரைபடம் 1.22 தொழிலின்மை வீதம் மற்றும் கூலி வீதச் சுட்டெண்கள் 14

வுரைபடம் 1.23 உண்மைச் சொத்து விலைகள் மற்றும் கடன்வழங்கல் வீதங்கள் 14

வுரைபடம் 1.24 உண்மைச் சொத்துத்துறைக்கான வங்கித்தொழில் துறை வெளிப்படுத்துகை 14

வுரைபடம் 1.25 தங்க விலைகளின் ஏற்ற இறக்கங்கள் 15

வுரைபடம் 1.26 வெளிநாட்டு மீதிகள் 15

வுரைபடம் 1.27 அரசாங்கத்திற்கு நிதியளித்தல் 16

**2 நிதியியல் சந்தைகள் மற்றும் கொடுப்பனவு முறைமை உட்கட்டமைப்பு**

வரைபடம் 2.1 நிதியியல் அழுத்தச் சுட்டெண் 24

வரைபடம் 2.2 பங்கு விலைச் சுட்டெண்கள் 24

வரைபடம் 2.3 மாதாந்த பங்குரிமைச் சந்தைப் புரள்வும் உண்மை ஆதாயங்களும் 24

| | | |
|---|---|---|
| வரைபடம் 2.4 | கணிக்கப்பட்ட பங்குரிமை மூலதன மேலதிக ஆதாயமும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் கொடுகடன் அளவும் | 25 |
| வரைபடம் 2.5 | பங்கு விலைச்சுட்டெண்களின் தளம்பல் | 25 |
| வரைபடம் 2.6 | சந்தைப் பெறுமதிக் குறிகாட்டிகள் | 26 |
| வரைபடம் 2.7 | பங்குரிமைச் சந்தையின் துறைசார் இயக்கவாற்றல்கள் | 26 |
| வரைபடம் 2.8 | துறைவாரியான நிலை (2020 சனவரி தொடக்கம் 2026 ஓகத்து வரை) | 27 |
| வரைபடம் 2.9 | இரண்டாந்தர பங்குச் சந்தையில் வெளிநாட்டுப் பங்கேற்பு | 27 |
| வரைபடம் 2.10 | அரசாங்கப் பிணையங்களின் இரண்டாந்தர சந்தை விளைவு வீதங்கள் | 28 |
| வரைபடம் 2.11 | முதலாந்தரச் சந்தை விளைவு வீதங்கள், சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்பு பண வீதம் மற்றும் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் | 28 |
| வரைபடம் 2.12 | அரசாங்கப் பிணையங்களுக்கான முதலாந்தரச் சந்தைக் கேள்வி | 29 |
| வரைபடம் 2.13 | திறைசேரி உண்டியல் ஏலங்களின் இயக்கவாற்றல் | 29 |
| வரைபடம் 2.14 | இரண்டாந்தரச் சந்தை வர்த்தகப்படுத்தல்கள் | 29 |
| வரைபடம் 2.15 | அரசாங்கப் பிணையங்களின் இரண்டாந்தரச் சந்தை வர்த்தகப்படுத்தல்கள் - விளைவு வீதங்கள் எதிர் காலம் | 30 |
| வரைபடம் 2.16 | அரசாங்கப் பிணையங்கள் இரண்டாந்தரச் சந்தை விளைவு வீத வளையி | 30 |
| வரைபடம் 2.17 | இரண்டாந்தரச் சந்தை வீத தளம்பல்கள் | 30 |
| வரைபடம் 2.18 | அரசாங்கப் பிணையங்கள் சந்தை வெளிநாட்டுப் பாய்ச்சல்கள் | 31 |
| வரைபடம் 2.19 | மாதாந்த வெளிநாட்டுப் பாய்ச்சல்கள், செலாவணி வீதம் மற்றும் மாதாந்த விளைவு வீதங்கள் | 31 |
| வரைபடம் 2.20 | ஐ.அ.டொலருக்கெதிரான இலங்கை ரூபாவின் அசைவு | 31 |
| வரைபடம் 2.21 | இலங்கை ரூபாவுக்கு எதிரான முக்கிய செலாவணி வீதங்கள் | 32 |
| வரைபடம் 2.22 | விற்க மற்றும் வாங்க எண்ணும் விலைக்கிடையேயான வேறுபாடு (ஐ.அ.டொலர்/ரூபா) | 33 |
| வரைபடம் 2.23 | வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் | 33 |
| வரைபடம் 2.24 | ஒரு மாத மிகை தொகை | 34 |
| வரைபடம் 2.25 | உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தலையீடுகளும் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளும் | 34 |
| வரைபடம் 2.26 | உள்நாட்டு பணச் சந்தை அளவு | 34 |
| வரைபடம் 2.27 | அழைப்புச் சந்தைப் பங்கேற்பாளர்கள் | 35 |
| வரைபடம் 2.28 | மீள்கொள்வனவுச் சந்தைப் பங்கேற்பாளர்கள் | 35 |
| வரைபடம் 2.29 | சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் | 36 |
| வரைபடம் 2.30 | சராசரி நிறையேற்றப்பட்ட மீள்கொள்வனவு வீதம் | 36 |
| வரைபடம் 2.31 | பணச் சந்தைத் திரவத்தன்மை பரம்பல் | 37 |

| | | |
|---|---|---|
| வரைபடம் 2.32 | பாரிய பெறுமதிக் கொடுப்பனவு முறைமை - அதேநேர மொத்தத் தீர்ப்பனவு பெறுமதி | 37 |
| வரைபடம் 2.33 | 2026இன் முதலரைக்கான சில்லறை பெறுமதிக் கொடுப்பனவு முறைமைகளும் சாதனங்களும் | 40 |

**3 நிதியியல் நிறுவனங்கள்**

| | | |
|---|---|---|
| வரைபடம் 3.1 | வங்கித்தொழில் ஆற்றல்வாய்ந்ததன்மைச் சுட்டெண் | 42 |
| வரைபடம் 3.2 | வங்கித்தொழில் ஆற்றல்வாய்ந்ததன்மை வரைபடம் | 42 |
| வரைபடம் 3.3 | கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 42 |
| வரைபடம் 3.4 | நாணயத்தின் அடிப்படையில் கொடுகடனில் காலாண்டு ரீதியான மாற்றம் | 43 |
| வரைபடம் 3.5 | வங்கி வகை அடிப்படையில் கொடுகடனில் காலாண்டு ரீதியான மாற்றம் | 43 |
| வரைபடம் 3.6 | 2026இன் 2ஆம் காலாண்டில் முடிவடைந்த ஆண்டுக் காலப்பகுதியில் கொடுகடனில் மாற்றத்திற்கு துறைவாரியான பங்களிப்பு | 44 |
| வரைபடம் 3.7 | முக்கிய பொருளாதாரத் துறைகளின் கொடுகடன் உள்ளமைப்பு | 44 |
| வரைபடம் 3.8 | நுகர்வு நடவடிக்கைகளுக்கான கொடுகடன் | 44 |
| வரைபடம் 3.9 | நுகர்வுக் கொடுகடன் செறிவு | 45 |
| வரைபடம் 3.10 | கரைகடந்த நிறுவனங்களுக்கான கொடுகடன் | 45 |
| வரைபடம் 3.11 | நிதியியல் சேவை துறைக்கான கொடுகடன் | 45 |
| வரைபடம் 3.12 | கட்டம் 3 மற்றும் கட்டம் 2 கடன் விகிதங்கள் | 45 |
| வரைபடம் 3.13 | கடன்களின் கட்டம் வாரியான உள்ளமைப்பு | 46 |
| வரைபடம் 3.14 | வங்கிவாரியாக கட்டம் 3 கடன் விகிதம் | 46 |
| வரைபடம் 3.15 | பெறுமதியிழப்புக் காப்பு விகிதங்கள் | 46 |
| வரைபடம் 3.16 | கட்டம் 3 கடன்கள் மற்றும் கட்டம் 3 கடன்களுக்கான பெறுமதியிழப்பிலான மாற்றம் | 47 |
| வரைபடம் 3.17 | வங்கிவாரியாக கட்டம் 3 கடன்கள் மற்றும் கட்டம் 3 கடன்களுக்கான பெறுமதியிழப்புக் காப்பு | 47 |
| வரைபடம் 3.18 | பொதுவான பங்குரிமை மூலதன அடுக்கு 1 மூலதனத்திற்கான தேறிய கட்டம் 3 கடன்கள் | 47 |
| வரைபடம் 3.19 | உயர் கட்டம் 3 கடன்கள் விகிதங்களுடைய பொருளாதாரத் துறைகள் | 47 |
| வரைபடம் 3.20 | கடன்பாட்டாளர் வகைப்பாட்டு ரீதியிலான கொடுகடன் | 48 |
| வரைபடம் 3.21 | 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் கடன்பாட்டாளர் வகைப்பாடு ரீதியிலான தவணை தவறுதல் இடர்நேர்வு | 48 |
| வரைபடம் 3.22 | நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கான துறைவாரியான கொடுகடன் செறிவு மற்றும் தவணைத்தவறுதல் இடர்நேர்வு | 49 |
| வரைபடம் 3.23 | அரசாங்கம் மற்றும் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான வெளிப்படுத்துகை | 49 |
| வரைபடம் 3.24 | ரூபாய் திரவத்தன்மை காப்பு விகிதம் | 50 |
| வரைபடம் 3.25 | அனைத்து நாணய திரவத்தன்மை காப்பு விகிதம் | 51 |
| வரைபடம் 3.26 | தேறிய நிலையான நிதியிடல் விகிதம் | 51 |

| | | |
|---|---|---|
| வரைபடம் 3.27 | உயர்தர திரவச் சொத்துக்களின் உள்ளமைப்பு | 51 |
| வரைபடம் 3.28 | வெளிநாட்டு நாணயச் சொத்துக்களின் உள்ளமைப்பு | 52 |
| வரைபடம் 3.29 | வெளிநாட்டு நாணய முதலீடுகளின் உள்ளமைப்பு | 52 |
| வரைபடம் 3.30 | வெளிநாட்டு நாணயப் பொறுப்புக்களின் உள்ளமைப்பு | 52 |
| வரைபடம் 3.31 | தேறிய வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் | 53 |
| வரைபடம் 3.32 | சில்லறை மற்றும் மொத்த விற்பனை நிதியங்கள் | 53 |
| வரைபடம் 3.33 | வங்கி வகைவாரியான சில்லறை மற்றும் மொத்த விற்பனை நிதியங்கள் | 53 |
| வரைபடம் 3.34 | முதிர்வு இடைவெளி | 53 |
| வரைபடம் 3.35 | குறுங்கால முதிர்வு இடைவெளி எதிர் உயர்தரத் திரவச் சொத்துக்கள் | 54 |
| வரைபடம் 3.36 | ஐந்தொகைக்கு வெளியேயான செயற்பாடுகள் | 54 |
| வரைபடம் 3.37 | வரிக்குப் பின் இலாபம் (அரையாண்டு) | 55 |
| வரைபடம் 3.38 | வரிக்குப் பின்னரான இலாபத்தின் கூறுகள் | 55 |
| வரைபடம் 3.39 | வங்கி வகை வாரியான வரிக்குப் பின் இலாபம் | 56 |
| வரைபடம் 3.40 | வங்கி வகை வாரியான தேறிய வட்டி வருமானம் | 56 |
| வரைபடம் 3.41 | வட்டியல்லா வருமானம் | 56 |
| வரைபடம் 3.42 | சொத்துக்கள் மீது அறவிடப்பட்ட புதிய பெறுமதியிழப்பு | 56 |
| வரைபடம் 3.43 | இலாபத்தன்மை விகிதங்கள் | 57 |
| வரைபடம் 3.44 | வங்கி வாரியான தேறிய வட்டி எல்லை மற்றும் பங்குரிமை மூலதனம் மீதான வருவாய் என்பனவற்றின் பகிர்ந்தளிப்பு | 57 |
| வரைபடம் 3.45 | தேறிய வட்டி எல்லையின் கூறுகளாக்கம் | 57 |
| வரைபடம் 3.46 | வட்டி வருமானத்தின் உள்ளமைப்பு | 58 |
| வரைபடம் 3.47 | திரண்ட வட்டி ஈட்டுகின்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் | 58 |
| வரைபடம் 3.48 | ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்திற்கான தேறிய வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகை | 58 |
| வரைபடம் 3.49 | நாணய ரீதியிலான தேறிய வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகை | 59 |
| வரைபடம் 3.50 | பங்குரிமை மூலதன முதலீடுகள் | 59 |
| வரைபடம் 3.51 | மூலதனப் போதுமாந்தன்மை விகிதங்கள் | 60 |
| வரைபடம் 3.52 | வங்கி வகை வாரியான மூலதனப் போதுமாந்தன்மை | 60 |
| வரைபடம் 3.53 | வங்கி வகை வாரியான மொத்த மூலதனம் மற்றும் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் | 60 |
| வரைபடம் 3.54 | ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தில் ஏற்பட்ட மாற்றத்தின் மீது தாக்கம்செலுத்திய காரணிகள் | 61 |
| வரைபடம் 3.55 | கொடுகடனிற்கான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் உள்ளமைப்பு | 61 |
| வரைபடம் 3.56 | வங்கி வகை ரீதியிலான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் அடர்த்தி | 61 |

| | | |
|---|---|---|
| வரைபடம் 3.57 | மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் பங்காகக் கொடுகடன் இடர்நேர்விற்கான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் | 62 |
| வரைபடம் 3.58 | தூண் 1இன் கீழ் குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாட்டிற்கு மிகையான மூலதனம் | 62 |
| வரைபடம் 3.59 | முடுக்கி விகிதம் | 62 |
| வரைபடம் 3.60 | வங்கி வகை வாரியான முடுக்கி விகிதம் | 62 |
| வரைபடம் 3.61 | நிதிக் கம்பனிகள் ஆற்றல்வாய்ந்ததன்மை வரைபடம் | 63 |
| வரைபடம் 3.62 | மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 64 |
| வரைபடம் 3.63 | 2026இன் இரண்டாம் காலாண்டில் முடிவடைந்த காலப்பகுதியின் கொடுகடன் விரிவாக்கத்திற்கான ஆண்டுவாரியான பங்களிப்பு | 64 |
| வரைபடம் 3.64 | மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களின் உள்ளமைப்பு | 65 |
| வரைபடம் 3.65 | கட்டம் 3 கடன்கள் விகிதங்கள் | 65 |
| வரைபடம் 3.66 | உற்பத்தி வாரியான கொடுகடன் வளர்ச்சி மற்றும் கட்டம் 3 கடன்கள் விகிதம் | 66 |
| வரைபடம் 3.67 | கட்டம் வாரியான கடன்களின் உள்ளமைப்பு | 66 |
| வரைபடம் 3.68 | பெறுமதியிழப்புக் காப்பு விகிதங்கள் | 66 |
| வரைபடம் 3.69 | வெளிவாரி நிதியங்கள் மற்றும் மொத்தச் சொத்துக்களிற்கான ஒழுங்குமுறைப்படுத்தல் திரவச் சொத்துக்கள் | 67 |
| வரைபடம் 3.70 | திரவச் சொத்துக்களின் உள்ளமைப்பு | 67 |
| வரைபடம் 3.71 | வைப்புக்கள் மற்றும் கடன்பாடுகள் | 67 |
| வரைபடம் 3.72 | நிதியிடல் கட்டமைப்பு | 67 |
| வரைபடம் 3.73 | கடன்பாடுகளின் உள்ளமைப்பு | 68 |
| வரைபடம் 3.74 | காலாண்டு வாரியிலான வரிக்குப் பின் இலாபம் | 68 |
| வரைபடம் 3.75 | வரிக்குப் பின் இலாபத்தின் கூறுகள் | 68 |
| வரைபடம் 3.76 | தேறிய வட்டி வருமானத்தின் உள்ளமைப்பு | 69 |
| வரைபடம் 3.77 | வட்டிச் செலவுகளின் உள்ளமைப்பு | 69 |
| வரைபடம் 3.78 | இலாபத்தன்மைக் குறிகாட்டிகள் | 69 |
| வரைபடம் 3.79 | தேறிய வட்டி எல்லை எதிர் சொத்துத் தளம் | 70 |
| வரைபடம் 3.80 | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வட்டி வீத உணர்திறன் | 70 |
| வரைபடம் 3.81 | மூலதனப் போதுமாந்தன்மை விகிதங்கள் | 71 |
| வரைபடம் 3.82 | மொத்த ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தின் மாற்றம் | 71 |
| வரைபடம் 3.83 | கொடுகடன் இடர்நேர்வுக்கான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் | 71 |
| வரைபடம் 3.84 | மிகை மூலதனம் | 72 |
| வரைபடம் 3.85 | மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணத்தின் வளர்ச்சி (ஆண்டிற்காண்டு) | 72 |
| வரைபடம் 3.86 | துணைத் துறை வாரியான மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் | 73 |

| | | |
|---|---|---|
| வரைபடம் 3.87 | சொத்துக்களின் வளர்ச்சி (ஆண்டிற்காண்டு) | 73 |
| வரைபடம் 3.88 | 2026இன் முதலாம் அரையாண்டு இறுதியில் நீண்டகால மற்றும் பொதுக் காப்புறுதியின் சொத்துக்களின் உள்ளமைப்பு | 74 |
| வரைபடம் 3.89 | துணைத் துறை வாரியாக செலுத்தப்பட்ட கோரல்கள் | 74 |
| வரைபடம் 3.90 | 2026இன் முதலாம் அரையாண்டுப்பகுதியில் செலுத்தப்பட்ட கோரல்கள் | 74 |
| வரைபடம் 3.91 | 2026இன் முதலாம் அரையாண்டு இறுதியில் வகை மற்றும் நிலை வாரியான டித்வா புயல் தொடர்புடைய கோரல்கள் | 74 |
| வரைபடம் 3.92 | சொத்துக்கள் மீதான வருவாயும் பங்குரிமை மூலதனம் மீதான வருவாயும் | 75 |
| வரைபடம் 3.93 | மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் | 75 |
| வரைபடம் 3.94 | காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதி நிறுவனங்களுக்கான வங்கித்தொழில் துறை கடன்வழங்கல் | 75 |
| வரைபடம் 3.95 | காப்புறுதித் துறையின் வங்கிகளுடனான வைப்புக்கள் | 75 |
| வரைபடம் 3.96 | இலங்கையின் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டில் இணையம் சார்ந்த இடர்நேர்வுகளின் பொதுநோக்கு | 76 |
| **4** | **வீட்டலகு மற்றும் கூட்டாண்மைத் துறைகள்** | 82 |
| வரைபடம் 4.1 | வீட்டலகுத் துறைக் கொடுகடன் | 82 |
| வரைபடம் 4.2 | வீட்டலகுத் துறைக் கொடுகடனின் உள்ளடக்கம் (%) | 83 |
| வரைபடம் 4.3 | மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான வீட்டலகுத் துறையின் கொடுகடன்கள் | 83 |
| வரைபடம் 4.4 | 2026 யூன் இறுதியில் வீட்டலகுத் துறை கடன்களின் புவியியல் பரம்பல் | 83 |
| வரைபடம் 4.5 | வீட்டலகுத் துறைக் கொடுகடன் தரம் | 84 |
| வரைபடம் 4.6 | வீட்டலகுத் துறை கடன்படுநர்களின் சராசரி கொடுகடன் மதிப்பெண்கள் | 84 |
| வரைபடம் 4.7 | கொடுகடன் தகவல் பணியகத்தின் மதிப்பெண்களின் ஒட்டுமொத்த நிறையேற்றப்பட்ட சராசரி | 84 |
| வரைபடம் 4.8 | கொடுகடன் மதிப்பொண்ணின் அளவு - கா2 2025 எதிர் கா2 2026 | 85 |
| வரைபடம் 4.9 | 2026 யூன் இறுதியில் வீட்டலகுத் துறை கடன்படுநர்களின் கொடுகடன் இடர்நேர்வுப் பரம்பல் | 85 |
| வரைபடம் 4.10 | நிறுவனத் துறை கொடுகடன் | 85 |
| வரைபடம் 4.11 | நிறுவனத் துறை உள்ளடக்கம் (%) | 86 |
| வரைபடம் 4.12 | நிறுவனத்துறை கொடுகடன் பரம்பல் | 86 |
| வரைபடம் 4.13 | 2026 யூன் இறுதியில் நிறுவன கடன்படுநர்களின் கொடுகடன் இடர்நேர்வுப் பரம்பல் | 86 |
| வரைபடம் 4.14 | நிதியல்லா கூட்டாண்மைகளின் வருமானம் மற்றும் வருமானத்தின் வளர்ச்சி | 87 |
| வரைபடம் 4.15 | வருமானத்தில் ஓர் அதிகரிப்பை அறிக்கையிட்ட நிதியல்லா கூட்டாண்மைகளின் பங்கு | 87 |
| வரைபடம் 4.16 | வருமான வளர்ச்சியில் துறைகளின் பங்களிப்பு | 88 |
| வரைபடம் 4.17 | நிதியல்லா கூட்டாண்மைகளின் தேறிய இலாபமும் தேறிய இலாப வளர்ச்சியும் | 88 |
| வரைபடம் 4.18 | தேறிய இலாபத்தில் அதிகரிப்பை அறிக்கையிட்ட நிதியல்லா கூட்டாண்மைகளின் பங்கு | 88 |

| | | | |
|---|---|---|---|
| | வரைபடம் 4.19 | நிதியல்லா கூட்டாண்மை நிறுவனங்களின் வட்டி, வரி, தேய்மானப் பெறுமதி குறைப்புக்கு முன்னரான வருமானம் மற்றும் அதன் வளர்ச்சி | 88 |
| | வரைபடம் 4.20 | தேறிய இலாபத்திற்கான காரணிகள் | 89 |
| | வரைபடம் 4.21 | இலாபத்தன்மை குறிகாட்டிகள் | 89 |
| | வரைபடம் 4.22 | சராசரிப் படுகடன்களின் சதவீதமாக வட்டிச் செலவினங்கள் | 89 |
| | வரைபடம் 4.23 | பிரதான நிதியியல் செயற்றிறன் குறிகாட்டிகள் | 90 |
| | வரைபடம் 4.24 | வட்டிக்காப்பு விகிதத்தின் பிரகாரம் கம்பனிகளின் பரம்பல் | 90 |
| | வரைபடம் 4.25 | துறைசார் வட்டிக்காப்பு விகிதம் | 90 |
| | வரைபடம் 4.26 | துறைசார் நிதியியல் செயற்றிறன் குறிகாட்டிகள் | 91 |
| **5** | **நிதியியல் உறுதிப்பாட்டிற்கான கொள்கைகள்** | | |
| | வரைபடம் 5.1 | நிதியியல் துறையில் மொத்த கொடுகடன் வளர்ச்சி | 94 |
| | வரைபடம் 5.2 | நிதியியல் துறையில் மோட்டார் வாகன தொடர்புடைய கொடுகடன் மற்றும் தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்களின் செறிவாக்கம் | 94 |
| | வரைபடம் 5.3 | நிதியியல் துறையில் மோட்டார் வாகன தொடர்புடைய மற்றும் தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கொடுகடன்களின் வளர்ச்சி | 94 |
| | வரைபடம் 5.4 | உலகளாவிய தங்க விலைகளின் அசைவுகள் | 95 |
| | வரைபடம் 5.5 | மோட்டார் வாகனத்தின் பெறுமதிக்கான கொடுகடன் கட்டமைப்பின் படிப்படியான இறுக்கமாக்கலும் எளிமைப்படுத்தலும் | 96 |

# சுருக்க அறிக்கை

இலங்கையின் நிதியியல் முறைமையானது பல்வகை அதிர்வுகளுக்கு மத்தியில், தொடர்ச்சியான பொருளாதார மீட்சி, வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகளுக்கிடையில் போதுமான மூலதன மற்றும் திரவத்தன்மை தாங்கியிருப்புக்கள் நிலையுறுதியடைந்தமை என்பவற்றுடன் மேம்பட்ட இறைச் செயலாற்றம் என்பன மூலம் துணையளிக்கப்பட்டு 2026இன் முதலரைக் காலப்பகுதியில் உறுதியானதாக விளங்கியது. உள்நாட்டு பேரண்டநிதியியல் நிலைமைகள் உறுதியாகக் காணப்பட்ட அதேவேளை, உலக-ளாவிய சூழலில் தீவிரமடைகின்ற நிச்சயமற்றதன்மைகள் உள்நாட்டுப் பொருளாதாரத்திற்கு பாதகமான கசிவுத்தாக்கங்களின் இடர்நேர்வுகளை அதிகரித்தன. பொருளாதார நடவடிக்கைகளின் தொடர்ச்சியான மீட்சி, மேம்பட்ட இறைச் செயலாற்றம் மற்றும் வலுவான நிதியியல் துறைச் செயலாற்றம் என்பன மீளாய்வுக் காலப்பகுதியில் உறுதிப்பாட்டிற்குத் துணையளித்தன. இத்தகைய அபிவிருத்திகள், தீவிரமடைந்த வெளிநாட்டு நிச்சயமற்றதன்மைகளுக்கெதிராக முக்கிய காப்பினை வழங்கியதுடன் ஒட்டுமொத்த நிதியியல் முறைமை உறுதிப்பாட்டிற்கும் ஆதரவளித்தன. எவ்வாறிருப்பினும், வெளிநாட்டுச் சூழல் சவால்மிக்கதாகவே இருந்தது. தீவிரமடைந்த புவிசார் அரசியல் பதற்றங்கள், மீளெழுச்சிபெற்ற உலகளாவிய பணவீக்க அழுத்தங்கள், உயர்வடைந்த சக்தி மற்றும் பண்ட விலைகள், இறுக்கமான உலகளாவிய நிதியியல் நிலைமைகள், வளர்ச்சியடைகின்ற வர்த்தக பிளவுகள் மற்றும் அதிகரிக்கின்ற காலநிலையுடன் தொடர்புபட்ட இடர்நேர்வுகள் என்பன உள்நாட்டு பொருளாதாரத்திற்கு சாத்தியமான கசிவுத்தாக்கங்களைத் தொடர்ந்தும் தோற்றுவித்தன. வர்த்தகம், சுற்றுலாக் கிடைப்பனவுகள், தொழிலாளர் பணவனுப்பல்கள், மூலதனப் பாய்ச்சல்கள், வெளிநாட்டு நிதியிடல் நிலைமைகள் மற்றும் செலாவணி இயக்கவாற்றல்கள் என்பனவற்றிற்கு ஊடாக இலங்கை குறிப்பிடத்தக்களவு ஆட்கொள்ளப்பட்டிருப்பதனைக் கருத்திற்கொள்கையில், குறிப்பாக, நாடு பாதகமான வெளிநாட்டு அபிவிருத்திகளுக்கு ஆட்பட்டுக் காணப்பட்டது. உள்நாட்டுப் பக்கத்தில், கொடுகடன் குறிப்பாக வாகன நிதியிடல் மற்றும் தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கல் உள்ளடங்கலாக வீட்டலகுக் கடன்வழங்கலின் வளர்ச்சியானது தனியார் துறை கொடுகடன் இடைவெளியை தொடர்ந்தும் விரிவுபடுத்தி, சாத்தியமான முறைமைசார் பாதிக்கப்படும்தன்மைகள் தோற்றுவிக்கப்படுவதை சமிக்ஞைப்படுத்தியது. மேலும், அரசாங்கத் துறைக்கான நிதியியல் துறையின் வெளிப்படுத்தல்கள் குறைந்த போதிலும், அது இன்னமும் முக்கியமானதாகவிருந்ததுடன் அரசாங்கத்திற்கும் நிதியியல் துறைக்கும் இடை-யிலான குறிப்பிடத்தக்க பிணைப்பினை அடிக்கோடிட்டுக் காட்டியது. உயர்வடைகின்ற வீட்டலகு கடன்சுமைகள், பிணை-யுறுதியினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கலுக்கு அதிகரித்தளவில் உட்பட்டிருகின்ற நிலைமையில் பிணையுறுதிப் பெறுமதிகளின் தளம்பல்கள், உண்மைச் சொத்து விலைகளில் தொடர்ச்சியான உயர்வு மற்றும் பணவீக்க அழுத்தங்கள் என்பன தோற்றும்பெற்று வருகின்ற இடர்நேர்வுகளை மேலும் தீவிரப்படுத்தின. இத்தகைய அபிவிருத்திகளுக்கு பதிலிறுத்தி பொருளாதாரத்தினுள் பாதிக்கப்படும்தன்மைகள் தோற்றம்பெறுவதைக் கட்டுப்படுத்தும் நோக்கோடு, மத்திய வங்கி 2026 மே மாதத்தில் ஓரிரவுக் கொள்கை வீதத்தினை அதிகரித்ததுடன் வாகனங்கள் மற்றும் தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கல் மீது பெறுமதிக்கான கடன் வரையறைகள் உள்ளடங்கலாக பேரண்ட முன்மதியுடைய வழிமுறைகளை அறிமுகப்படுத்தியது.

நிதியியல் அழுத்தச் சுட்டெண் ஒப்பீட்டளவில் தாழ்வான மட்டங்களில் காணப்பட்டதுடன் உள்நாட்டு நிதியியல் சந்தைகள், மீளாய்வுக் காலப்பகுதியில் பெருமளவில் உறுதியாகக் காணப்பட்டன. தீவிரமடைந்த உலகளாவிய நிச்சயமற்றதன்மை, உள்நாட்டு பணவீக்க கரிசனைகள் மற்றும் இறுக்கமான நாணய நிலைமைகள் என்பன மூலம் நிதியியல் சந்தை நிலைமைகள் நெறிப்படுத்தப்பட்டன. பங்குரிமைச் சந்தைச் செயலாற்றமானது தாழ்வடைந்த முதலீட்டாளர் எண்ணப்பாங்கிற்கு மத்தியில் மிதமடைந்த அதேவேளை, திரவத்தன்மை நலிவடைந்துடன் தளம்பல்கள் அதிகரித்தன. படிப்படியாக வளர்ச்சியடைகின்ற சந்தை எதிர்பார்க்கைகள் மற்றும் நாணயக் கொள்கை இறுக்கமாக்கலைத் தொடர்ந்து அரசாங்கப் பிணையங்களின் விளைவு வீதங்கள் மீளாய்வுக் காலப்பகுதியில் முதிர்ச்சிகள் முழுவதும் அதிகரித்தன. இரண்டாந்தரச் சந்தை திரவத்தன்மை ஒப்பீட்டளவில் குறைவடைந்து, உள்நாட்டு படுகடன் சந்தையில் மட்டுப்படுத்தபட்ட விரிவையும் வர்த்தக நடவடிக்கைகளையும் குறித்துக்காட்டியது. அதேவேளை வெளிநாட்டு முதலீட்டாளர் பங்கேற்பானது தொடர்புடைய காலப்பகுதியின் பிந்திய பாகத்தை நோக்கி மிதமான மீட்சியொன்றுக்கு மத்தியில் தொடர்ந்தும் குறைவாகவே இருந்தது. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை குறிப்பாக மத்திய கிழக்கில் பதற்றங்கள் உயர்வடைந்தமை மூலம் தீவிரமடைந்த அழுத்தத்தைக் கொண்ட காலப்பகுதிகளை அனுபவித்து, உயர்வான இறக்குமதிச் செலவினம், உயர்வடைகின்ற சக்தி விலைகள் மற்றும் முதலீட்டாளர் எண்ணப்பாங்கின் மாறுதல்கள் என்பவற்றிலிருந்து தோன்றுகின்ற வெளிநாட்டு

நாணயத்திற்கான அதிகரித்த கேள்வியினைப் பிரதிபலித்தது. இத்தகைய அபிவிருத்திகள் ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபாவின் தேய்விற்குப் பங்களித்தன. கொள்கை வழிமுறைகள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள், சுற்றுலா, ஏற்றுமதிகளிலிருந்தான தொடர்ச்சியான உட்பாய்ச்சல்கள் மற்றும் எரிபொருள் விலைகளில் அவ்வப்போதான வீழ்ச்சி என்பன மூலம் துணையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து சந்தை நிலைமைகள் மேம்பட்டன. காலப்பகுதியில் பணச் சந்தை நடவடிக்கை வலுவடைந்த அதேவேளை, ஒட்டுமொத்த திரவத்தன்மை மிகையாகக் காணப்பட்டதுடன் வட்டி வீதங்கள் நாணயக் கொள்கையுடன் பரந்தளவில் அணிசேர்ந்து காணப்பட்டன. தீர்ப்பனவு உட்கட்டமைப்பில் மேலும் டிஜிட்டல்மயமாக்கல் மற்றும் மேம்பாடுகள் மூலம் துணையளிக்கப்பட்டு கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் தொழிற்பாட்டு ரீதியாக தொடர்ந்தும் தாக்குப்பிடிக்கும் தன்மையை எடுத்துக்காட்டின. இணைய, தொழிற்பாடு சார்ந்த மற்றும் மூன்றாந்தரப்பு இடர்நேர்வுகளுக்கு நி-தியியல் முறைமை உள்ளாகின்ற தன்மை அதிகரிக்கின்றமைக்கு மத்தியில் டிஜிட்டல் நிதியியல் சேவைகளின் தொடர்ச்சியான விரிவடைதல் வினைத்திறனையும் நிதியியல் வசதிக்குட்படுத்தலையும் மேம்படுத்தியது. டிஜிட்டல் தொடர்புகள் விரிவடைந்து, தொழில்நுட்பவியல் துரிதமாக பரிணாம வளர்ச்சியடைவதற்கேற்ப நிதியியல் உறுதிப்பாட்டைப் பாதுகாப்பதற்கு போதுமான இணைய ரீதியான தாக்குப்பிடிக்கும்தன்மையை உறுதிசெய்வதும் தொழிற்பாடு சார்ந்த தயார்நிலையும் இன்றியமையாததாகக் காணப்படுகின்றது.

பொருளாதார நடவடிக்கையில் மீட்சி, வலுவான இலாபத்தன்மை மற்றும் போதுமான மூலதனம் அத்துடன் திரவத்தன்மை தாங்கியிருப்புக்கள் என்பன மூலம் துணையளிக்கப்பட்டு நிதியியல் நிறுவனங்கள் மீளாய்வுக் காலப்பகுதியில் தொடர்ந்தும் ஒட்டுமொத்த தாக்குப்பிடிக்கும்தன்மையை எடுத்துக்காட்டின. நுகர்வு, வர்த்தகம், நிதியியல் பணிகள், கட்டடவாக்கம், கரைகடந்த தொடர்புபட்ட கடன்வழங்கல் என்பவற்றின் குறிப்பிடத்தக்க வளர்ச்சியுடன் தனியார் துறையின் கடனுக்கான வலுவான கேள்விக்கு மத்தியில் வங்கித்தொழில் துறையின் கொடுகடன் குறிப்பிடத்தக்களவு விரிவடைந்தது. கட்டம் 3 கடன் விகிதத்தின் வீழ்ச்சியுடன் கட்டம் 3 பெறுமதியிழப்பு காப்பு விகிதத்தின் மேம்படுதலும் இணைந்து வங்கித்தொழில் துறையின் மேம்பட்ட தாக்குப்பிடிக்கும்தன்மையினை வெளிக்காட்டியது. எனினும், கட்டம் 2 கடன்கள் 2026 இரண்டாம் காலாண்டுக் காலப்பகுதியில் அதிகரித்து, உயர்வடைந்த கொடுகடன் விரிவடைதலுக்கு மத்தியில் கடன்பெறுநர்களுக்கிடையில் சாத்தியமான கொடுகடன் இடர்நேர்வு தோற்றம்பெறுவதை எடுத்துக்காட்டியது. வங்கித்தொழில் துறையில் திரவத்தன்மை விகிதங்கள், மீளாய்வுக் காலப்பகுதியில் மிதமடைந்த அதேவேளை, அவை ஒழுங்குமுறைப்படுத்தல் அடிப்படை அளவுகளுக்கு நன்கு மேலே காணப்பட்டன. இவ்வீழ்ச்சியானது முதன்மையாக உயர்தர திரவச் சொத்துக்களில் குறிப்பாக அரசாங்கப் பிணையங்களிலிருந்து தனியார் துறை கடன்வழங்கலுக்காக சொத்து ஒதுக்கீட்டின் மாற்றம் ஒன்றைப் பிரதிபலித்தது. அதேவேளை, குறுகியகால முதிர்ச்சி பொருந்தாமைகள் விரிவடைந்து, எதிர்பாராத அழுத்த நிலைமைகளின் கீழ் துறையினுள் சாத்தியமான மீள்நிதியளிப்பு மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வுகளை அதிகரித்தன. மேலும், வங்கித்தொழில் துறையின் இலாபத்தன்மை, 2025இன் முதலரைக் காலப்பகுதியில் பதிவாகிய வளர்ச்சி வேக மட்டங்களிலிருந்து ஓரளவு மிதமடைந்த போதிலும் தொடர்ந்தும் மேம்பட்டன. வலுவான இலாபத்தன்மையினால் உந்தப்பட்டு மூலதனத்தின் தொடர்ச்சியான கட்டியெழுப்புதலுக்கு மத்தியில் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் வளர்ச்சி மூலதன ஒன்றுசேர்த்தல் வேகத்தை விஞ்சிச்சென்றமையினால் வங்கித்தொழில் துறையின் மூலதனப் போதுமாந்தன்மை விகிதங்கள் வீழ்ச்சியடைந்தன. இம்மிதமடைதல் எவ்வாறிருப்பினும், மூலதனத் தாங்கியிருப்புக்கள் ஒழுங்குமுறைப்படுத்தல் அடிப்படை அளவுகளுக்கு நன்கு மேல் காணப்பட்டு, சாத்தியமான அதிர்வுகளை ஈர்ப்பதற்கான போதிய இயலளவினை வழங்கின.

நிதிக் கம்பனிகள் துறையானது வாகன நிதியளிப்பு மற்றும் தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கல் என்பவற்றிற்கான தீவிரமடைந்த கேள்வியினால் தூண்டப்பட்டு, குறிப்பிடத்தக்க கொடுகடன் விரிவடைதலை அனுபவித்தது. கட்டம் 3 கடன் விகிதத்தின் மேம்படுதலுக்கு மத்தியில் கட்டம் 2 கடன்களில் சடுதியான அதிகரிப்பானது நிதிக் கம்பனிகள் துறையினுள் அதிகரிக்கின்ற கொடுகடன் இடர்நேர்வுகளை எடுத்துக்காட்டின. பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்கள் மீது டித்வா புயலினாலும் மத்திய கிழக்கு மோதலினாலும் ஏற்பட்ட பாதகமான விளைவுகள் இதற்கு பகுதியளவில் காரணமாக அமைந்து சொத்துத் தர அபிவிருத்திகளினதும் துறைசார் பாதிக்கப்படும் தன்மைகளின் சாத்தியமான ஒன்றுசேர்தல்கள் பற்றியும் தொடர்ச்சியான கண்காணித்தலுக்கான தேவையினை அடிக்கோடிட்டுக்காட்டின. மேலும், பெறுமதியிழப்பு காப்பு விகிதம் வீழ்ச்சியடைந்து, துறையினுள் இழப்புக்களை உள்ளீர்க்கும் இயலளவில் ஓர் சீர்குலைவொன்றினை எடுத்துக்காட்டியது. நிதிக் கம்பனிகள் துறையின் திரவத்தன்மை தாங்கியிருப்புக்கள் போதுமானதாகவும் ஒழுங்குமுறைப்படுத்தல் அடிப்படை

அளவுகளுக்கு நன்கு மேலும் காணப்பட்ட அதேவேளை, வலுவான கொடுகடன் விரிவாக்கத்திற்கு மத்தியில் திரவத்தன்மை விகிதங்கள் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, வைப்புக்களுடன் ஒப்பிடுகையில் கடன்பெறுதல்களில் விரைவான வளர்ச்சி நிதிக் கம்பனிகளுக்கும் வங்கிகளுக்குமிடையில் அதிகரிக்கின்ற ஒன்றுடனொன்று இணைந்த தன்மையினை எடுத்துக்காட்டியது. 2026/2027 நிதியாண்டின் முதல் காலாண்டில் நிதிக் கம்பனிகள் துறையின் இலாப வளர்ச்சி வீதம் மிதமடைந்த போதிலும் தேறிய வட்டி வருமானத்தினால் துணையளிக்கப்பட்டு இலாபங்கள் தொடர்ந்தும் அதிகரித்தன. கொடுகடனில் விரிவடைதலினால் தூண்டப்பட்டு இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் அதிகரிப்புடன் ஒருங்கிணைந்து துறையின் மூலதன தாங்கியிருப்புக்கள் வீழ்ச்சியடைந்தன. காப்புறுதித் துறையின் இலாபத்தன்மை மிதமடைந்த போதிலும் அத்துறை போதுமானளவு மூலதனமாக்கப்பட்டு காணப்பட்டது. டித்வா புயலிலிருந்து தோன்றிய கணிசமமான கோரிக்கைகள், மீள்காப்புறுதி கிடைக்கப்பெறத்தக்கவைகளை அதிகரித்ததுடன் எழுத்துறுதி திரவத்தன்மை மற்றும் இணைத்தரப்பு இடர்நேர்வுகள் என்பவற்றை தீவிரமாக்கியது.

வீட்டலகு மற்றும் நிறுவனசார் துறைகள்[1] இரண்டிற்குமான கடன்வழங்கல் 2026இன் முதலரைக் காலப்பகுதியில் அதிகரித்தன. வீட்டலகுக்கான கொடுகடன் வளர்ச்சி உயர்வடைந்து காணப்பட்ட போதிலும் காலப்பகுதியின் பிந்திய பாகத்தை நோக்கி சிறிதளவு மிதமடைந்தமை அவதானிக்கப்பட்டது. வீட்டலகுகளுக்கான முறைசார் நிதி வழங்கலின் முதன்மை மூலமாக வங்கித்தொழில் துறை காணப்பட்ட போதிலும், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்படும் வீட்டலகுத் துறைக்கான கொடுகடனின் பங்கு 2026இன் முதலரைக் காலப்பகுதியில் மேலும் அதிகரித்தது. மேலும், ஒட்டுமொத்த கொடுகடன் புள்ளிகளால் பிரதிபலிக்கப்பட்டவாறு வீட்டலகு கடன்பெறுநர்களின் இடர்நேர்வுப் பட்டியல் 2026இன் முதலரைக் காலப்பகுதியில் பரந்தளவில் நிலையாகக் காணப்பட்டது. துறைக்கான பாரிய பெரும்பாண்மையான கடன்வழங்குதலுக்கு வங்கித்தொழில் துறை வகைகூறுவதுடன் நிறுவனசார் துறைக்கான கொடுகடனும் துரிதமான வேகத்தில் விரிவடைந்து. அதேவேளை, பட்டியலிடப்பட்ட நிதியியல்லா கூட்டாண்மைத் துறையின்[2] ஒன்றுதிரட்டிய இலாபத்தன்மை பலவீனமடைந்த போதிலும் 2026இன் முதலரைக்காலப்பகுதியில் வலுவான வருவாய் வளர்ச்சியைப் பதிவுசெய்தது. ஒன்றுதிரட்டிய இலாபங்களில் வீழ்ச்சிக்கு உயர்வான விற்பனைச் செலவுகள் மற்றும் தொழிற்படுத்தல் செலவுகள் பெருமளவில் காரணமாக அமைந்தன. இப்பின்னணிக்கெதிராக ஒன்றுதிரட்டிய இலாபத் தன்மையிலும் படுகடன் தீர்ப்பனவு இயலளவிலும் மெதுவடைதலைப் பிரதிபலித்து பட்டியலிடப்பட்ட நிதியியல்லா கூட்டாண்மைத் துறையின் கடன்நம்பகத்தன்மை சில மிதமடைதல் சமிக்ஞைகளைக் காண்பித்தது.

நிதியியல் துறையின் அபிவிருத்திகளுக்கும் தோற்றம்பெறுகின்ற இடர்நேர்வுகளுக்கும் பதிலிறுத்தி, மீளாய்வுக் காலப்பகுதியில் பல்வேறு கொள்கை வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. வாகன நிதியளிப்பு மற்றும் தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கலில் துரிதமான கொடுகடன் விரிவடைதலைக் கொண்ட பின்னணிக்கெதிராக மிதமிஞ்சிய கடன் சுமையினைக் கட்டுப்படுத்துவதற்கும் தோற்றம்பெறுகின்ற இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கும் கடன்பெறுநர் அடிப்படையிலமைந்த பேரண்ட முன்மதியுடைய வழிமுறைகள் இறுக்கமாக்கப்பட்டன. முன்மதிமிக்க கடன்வழங்கல் நடைமுறைகளை ஊக்குவிப்பதையும் முறைமைசார்ந்த பாதிக்கப்படும் தன்மைகள் தோற்றம்பெறுவதைக் கட்டுப்படுத்துவதையும் நோக்காகக் கொண்டு மோட்டார் வாகன நிதியளிப்பு மீது உயர்ந்தபட்ச பெறுமதிக்கான கடன் வரையறைகளை எளிமைப்படுத்தல் மற்றும் இறுக்கமாக்குதல் அத்துடன் தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கல் மீது உயர்ந்தபட்ச பெறுமதிக்கான கடன் வரையறைகளை அறிமுகப்படுத்தல் என்பவற்றை இவ்வழிமுறைகள் உள்ளடக்கியிருந்தன. தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கல் மீது பெறுமதிக்கான கடன்வழங்கல் வரையறைகளுக்கு மேலதிகமாக மீளாய்வுக் காலப்பகுதியில் ஏற்புடைய இடர்நேர்வு நிறையேற்றங்களும் இறுக்கமாக்கப்பட்டன. டித்வா புயலின் பாதகமான தாக்கங்களுக்குப் பதிலிறுத்தும் வகையில் பாதிக்கப்பட்ட தனியாட்களுக்கும், வியாபாரங்களுக்கும் நிவாரண வழிமுறைகள் வழங்கப்பட வேண்டுமெனக் கோரி வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகள் இரண்டிற்கும் மத்திய வங்கி சுற்றறிக்கைகளை வழங்கியது. வங்கித்தொழில் மற்றும் நிதிக் கம்பனிகள் துறைகளின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை வலுப்படுத்துவதை நோக்காகக் கொண்டு ஒன்றுதிரட்டுதல் முன்முயற்சிகளுடன் சேர்த்து வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகள் இரண்டிற்கும் மீண்டெழுதல் திட்டங்கள் மீதான பணிப்புரைகள் வழங்கப்பட்டன. நிதியியல் மோசடிகள் மற்றும் டிஜிட்டல் கொடுப்பனவு முறைகளில் இடம்பெறுகின்ற நிதியியல் மோசடிகளின் அதிகரிக்கின்ற பரவலுக்கு மத்தியில் டிஜிட்டல் கொடுப்பனவு முறைகளின் பாதுகாப்பினை வலுப்படுத்துவதையும்

1 கொடுகடன் தகவல் பணியகத்திடமிருந்து பெற்றுக்கொண்ட ஒன்று திரண்ட கொடுகடன் தரவுகளை அடிப்படையாகக் கொண்டது.
2 கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட 204 கம்பனிகளின் நிதியியல் செயலாற்றத்தினை அடிப்படையாகக் கொண்டது.

தொடர்புபட்ட இடர்நேர்வுகள் பற்றி பொதுமக்கள் விழிப்புணர்வை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு மத்திய வங்கி கொள்கைசார் முயற்சிகளை அறிமுகப்படுத்தியது. நிதியியல் வசதிக்குட்படுத்தலை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்ட முயற்சிகள் மற்றும் தீர்மானக் கட்டமைப்பு, நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு மற்றும் பணம் தூயதாக்கலுக்கெதிரான பயங்கரவாத நிதியளிப்பைத் தடுத்தல் கட்டமைப்புக்கள் ஆகியவற்றை வலுப்படுத்துவதோடு பணம் தூயதாக்கலுக்கு ஆசிய பசுபிக் குழுமத்தினால் மேற்கொள்ளப்படும் இலங்கையின் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை தடுத்தல் கட்டமைப்புக்காக மூன்றாவது இணக்க மதிப்பீட்டுக்கு தயாராதலுடன் ஒன்று சேர்ந்து வழிமுறைகள் எடுக்கப்பட்டன.

**தோற்றப்பாடு**

நிதியியல் உறுதிப்பாட்டிற்கான தோற்றப்பாடு பரந்தளவில் சாதகமாகவே காணப்படுகின்ற போதும், முன்னெடுக்கப்பட்டுவருகின்ற பொருளாதார மீட்சி நிலையுறுதிமிக்கதாகக் காணப்படுதல், இறை திரட்சிப்படுத்தல் முன்னேறமடைதல், முன்மதிமிக்க கொள்கை நடைமுறைப்படுத்தல்கள் தொடர்ந்தும் இடம்பெறல் என்பனவற்றில் தங்கியுள்ளது. எவ்வாறாயினும், புவிசார் அரசியல் மற்றும் நிதியியல் சந்தையில் நிச்சயமற்றதன்மைகள் உள்ளடங்கலாக வெளிநாட்டு அபிவிருத்திகள், அதேபோன்று பரிணமிக்கின்ற இணைய இடர்நேர்வுகளுடன் ஒன்றுசேர்ந்து கொடுகடனின் மிதமிஞ்சிய விரிவாக்கம் மற்றும் துறைசார் செறிவு ஆகியவற்றிலிருந்து தோன்றுகின்ற உள்நாட்டு பாதிக்கப்படும்தன்மைகள் போன்றவற்றின் நிபந்தனைக்குட்பட்டே இத்தோற்றப்பாடு காணப்படுகின்றது. ஆகையினால், நிதியியல் உறுதிப்பாட்டினைப் பேணிக்காப்பதில் தொடர்ச்சியான கண்காணித்தலும், உரியகால கொள்கை ரீதியான தலையீடுகளும் முக்கியமானதாக விளங்கும். நீடித்த புவிசார் அரசியல் பதற்றங்களும் எரிசக்தி விலை அதிர்ச்சிகளும் வெளிநாட்டு மீதிகளை பலவீனப்படுத்தி, பணவீக்க அழுத்தங்களை அதிகரித்து, இதனூடாக கடன்பெறுநர்களின் மீளச்செலுத்தும் இயலளவு பாதிக்கப்படலாம். இத்தாக்கங்கள், வீட்டலகுகளுக்கான பிணையுறுதி அடிப்படையில் வழங்கப்படும் கடன்வழங்கலில் வளர்ச்சி, அதிகரித்து வரும் கட்டம் 2 கடன் அளவுகள் மற்றும் வீழ்ச்சியடைகின்ற திரவத்தன்மை அத்துடன் மூலதன தாங்கியிருப்புகள் உள்ளடங்கலாக ஏற்கனவேயுள்ள உள்நாட்டு பாதிக்கப்படும் தன்மைகளை மிகைப்படுத்தக்கூடும். முதலீட்டாளர் நம்பிக்கையை வலுப்படுத்துதல், சந்தைத் திரவத்தன்மையை மேம்படுத்துதல், உள்நாட்டு மூலதனச் சந்தைகளை விரிவுபடுத்தல் என்பவற்றுடன் பரந்த மற்றும் மிகவும் உறுதியான வெளிநாட்டு முதலீட்டாளர் தளத்தை ஈர்த்தல் போன்ற இயலுமையின் மூலம் நிதியியல் சந்தையின் தாக்குப்பிடிக்கும்தன்மை அதிகரித்தளவில் நெறிப்படுத்தப்பட்டு, இதன் மூலம் அதிர்ச்சிகளை ஈர்ப்பதற்கும் வினைத்திறன்மிக்க விலை கண்டறிதலுக்கு ஆதரவளிப்பதற்கும் சந்தையின் இயலளவு மேம்படுத்தப்படும். ஒட்டுமொத்தமாக, நிதியியல் உறுதிப்பாட்டைப் பேணுவதென்பது கட்டமைப்பு மறுசீரமைப்புகளில் தொடர்ச்சியான முன்னேற்றத்தினால் துணையளிக்கப்பட்ட முன்மதிமிக்க நாணய, பேரண்டமுன்மதிமிக்க மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கொள்கைகள் என்பவற்றின் நன்கு அளவமைக்கப்பட்ட ஒன்றிணைப்பினை வேண்டிநிற்கின்றது. எனவே, நிதியியல் நிறுவனங்கள் முழுவதும் வலுவான மூலதன மற்றும் திரவத்தன்மை தாங்கியிருப்புகளை பேணிக்காத்தல், காலநிலை தொடர்புபட்ட மற்றும் இணைய இடர்நேர்வுகள் பற்றிய முகாமைத்துவத்தை வலுப்படுத்துதல், தீர்மான மற்றும் நெருக்கடிக்குத் தயார்நிலைக் கட்டமைப்புக்களை மேம்படுத்துதல், கொடுகடன் விரிவாக்கமானது அடிப்படைப் பொருளாதார நடவடிக்கை மற்றும் இடர்நேர்வு நிலைமைகளுக்கு ஒப்பிடத்தக்கவாறு இருப்பதை உறுதிசெய்தல் என்பவற்றின் மீது நிதியியல் துறை முன்னுரிமைகள் மையப்படுத்திருக்க வேண்டும். இம்முயற்சிகள், முறைமைசார் பாதிக்கப்படும் தன்மைகள் கட்டியெழுப்பப்படுவதை தணிப்பதற்கும், நிதியியல் முறைமையின் அதிர்ச்சியை ஈர்க்கும் இயலளவை வலுப்படுத்துவதற்கும், நடுத்தர காலத்தில் நிதியியல் உறுதிப்பாட்டைப் பாதுகாப்பதற்கும் இன்றியமையாததாக விளங்கும்.

# பேரண்ட நிதியியல் நிலைமைகள்

### சவால்மிக்க உலகளாவிய நிலைமைகள்

- பூகோள பதட்டம் மற்றும் மத்திய கிழக்கு போர் தீவிமடைந்தது.
- உலகளாவிய வளர்ச்சி மிதமாகுமென எறிவுசெய்யப்பட்டது.
- உலகளாவிய பணவீக்கம் உயரும் என எறிவுசெய்யப்பட்டது.
- உலகளாவிய நிதியியல் நிலைமைகள் இறுக்கமடைந்தன.

### உள்நாட்டுப் பொருளாதார சூழ்நிலைகள்

- 4.2% மொ.உ.உற்பத்தி வளர்ச்சி (கா2 2026)
- 7.3% பணவீக்க உயர்வு (2026 யூலை)
- வெளிநாட்டுத் துறை வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைந்தது.
- இறைசார் செயற்றிறன் மேம்பட்டது.
- காலநிலை தொடர்பான இடர்நேர்வு உருவாகிறது.

**இலங்கையின் பேரண்ட நிதியியல் சூழ்நிலை உறுதியாகக் காணப்பட்டது.**

### கொடுகடன் இடையேற்பாடு

- வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகளினால் வழங்கப்பட்ட மொத்தக் கொடுகடன்கள் குறிப்பிடத்தக்களவு விரிவடைந்தன.
- அரச வெளிப்படுத்துகைகள் வீழ்ச்சியடைந்தமையின் மத்தியில் தனியார் துறைக் கொடுகடன்கள் மேம்பாடடைந்தன.
- நிதியியல் இடையேற்பாடு மேம்பாடடைந்தது.
- தனியார் துறை கொடுகடன் வளர்ச்சி விரிவாக்கல் கட்டத்தினுள் காணப்பட்டது.

### சொத்துக்களால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கல்களின் அபிவிருத்திகள்

- மெய் சொத்து விலைகள் அதிகரித்தது
- தங்க விலைகளின் தளம்பல் உயர்வடைந்தது.
- வாகன மற்றும் தங்கத்தால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கலின் உறுதியான வளர்ச்சி
- பேரண்ட முன்மதியுடைய வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன

### ஒட்டுமொத்த மதிப்பீடு

தீவிரமடைந்த உலகளாவிய நிச்சயமற்றதன்மைக்கு மத்தியில் » உள்நாட்டு பேரண்ட நிதியியல் நிலைமைகள் உறுதியாகக் காணப்பட்டது » இறைசார் திரட்சி மற்றும் மேம்பாடடைந்த பொருளாதார வளர்ச்சியால் ஆதரவளிக்கப்பட்டது » பணவீக்க அழுத்தங்கள், துரித கொடுகடன் வளர்ச்சி மற்றும் உயர்வான வெளிநாட்டு இடர்நேர்வுகள் காணப்பட்ட போதும் » நிதியியல் உறுதித்தன்மையைப் பாதுகாக்க தொடர்ச்சியான கண்காணிப்பு அவசியம்.

# நிதியியல் சந்தைகள்

### பங்குச் சந்தை

**சந்தை விலைச் சுட்டெண்கள்**

| | அனைத்து பங்கு விலைச் சுட்டெண் | எஸ் அன்ட் பி எஸ் எல் 20 |
|---|---|---|
| 2026 சன-ஓகத் | -5.7% | -2.4% |
| 2025 | 42% | 27% |

2026 ஓகத்து இறுதியில் உள்ளவாறு: அனைத்து பங்கு விலைச் சுட்டெண்: 21,338.69; எஸ் அன்ட் பி எஸ் எல் 20: 6,009.68

தேசிய வெளிநாட்டு உட்பாய்ச்சல் (2026 சன-ஓகத்) ஐ.அ.டொ. 171.8 மில்.

இரண்டாந்தரச் சந்தையிலிருந்து தேறிய வெளிநாட்டுப் பாய்ச்சல் நீடித்தது

**சந்தை பெறுமதியில் குறிகாட்டிகள்**

2026 ஓகத்து இறுதியில் உள்ளவாறு: ஈட்டுக்கான விலை விகிதம் 11.2; புத்தகப் பெறுமதிக்கான விலை 1.3

2026 ஓகத்து இறுதியில் உள்ளவாறு: சந்தை மூலதனமாக்கல் ரூ. 7,730.8 பில்

2026 சன-ஓக காலப்பகுதிக்குள்: சராசரி நாளாந்த புரள்வு ரூ. 4,000.3 மில்

### அரச பிணையங்கள் சந்தை

தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சல் (2026 சன-ஓக) ஐ.அ.டொ. 207.7 மில்.

தேறிய நேர்க்கணியப் பெறுமதியில் பேணப்பட்ட வெளிநாட்டு மூலதன உட்பாய்ச்சல்

2026 ஓகத்து இறுதியில் உள்ளவாறு

| | | |
|---|---|---|
| 91-நாள் திறைசேரி உண்டியல் | 9.01% | (+140அ.புள்ளிகள்) |
| 364-நாள் திறைசேரி உண்டியல் | 9.80% | (+174அ.புள்ளிகள்) |
| 05-ஆண்டுகள் திறைசேரி முறிகள் | 10.80% | (+101அ.புள்ளிகள்) |

- விளைவுகள் மேல்நோக்கி நகர்ந்தன
- திரவத்தன்மை மட்டுப்பட்ட அளவில் காணப்பட்டது
- வெளிநாட்டு பங்குபற்றல் மிதமானது

### உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை

மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டு கொள்வனவுகள்

ஐ.அ.டொ. 1,517.4 மில்

உள்நாட்டு வெளிநாட்டு நாணயச் சந்தையிலிருந்து மத்திய வங்கியின் தேறிய கொள்வனவுகள் அதிகரித்து வெளிநாட்டு ஒதுக்கத்தை கட்டியெழுப்ப ஆதரவளித்தது.

2026 ஓகத்து இறுதியில் உள்ளவாறு

| | | |
|---|---|---|
| ஐ.அ.டொ./ரூபா | ரூ. 328.01 பில் | (-5.5%) |
| 1 மாத முன்னோக்கிய கட்டுப்பணம் | 4.56% | (+102 அ.புள்ளிகள்) |
| வங்கிகளுக்கிடையேயான வெளிநாட்டு நாணய கொடுக்கல்வாங்கல் தொகை | ஐ.அ.டொ.1,355.9 மில் | மாதாந்த சராசரி |

### உள்நாட்டு பணச் சந்தை

ஓரிரவு பணச் சந்தை திரவத்தன்மை ரூ. 132.33 பில்

மீளாய்வு காலப்பகுதி முழுவதும் நேர்கணியமாகக் காணப்பட்டது

**வர்த்தகத் தொகை**

செயற்பாடுகள் அதிகரித்தது

**திரவத்தன்மை பரம்பல்**

சமச்சீரற்ற நிலைமைகள்

2026 ஓகத்து இறுதியில் உள்ளவாறு

| | | |
|---|---|---|
| சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்பு பண வீதம் | 8.85% | (+81 அ.புள்ளிகள்) |
| சராசரி நிறையேற்றப்பட்ட மீள்கொள்வனவு வீதம் | 8.91% | (+85 அ.புள்ளிகள்) |

# வங்கித்தொழில் துறை

## வங்கித்தொழில் ஆற்றல்வாய்ந்ததன்மை




## கொடுகடன்

கொடுகடன் வளர்ச்சி (ஆண்டுக்காண்டு)

23.6% 2026 கா2

2025 கா2 : 11.4%

நாணயவாரியான கொடுகடன் வளர்ச்சி (ஆண்டுக்காண்டு)

2026 கா2

ரூபா கடன்கள் : 25.4%

வெளிநாட்டு நாணயக் கடன்கள் : 17.2%




## திரவத்தன்மை

ரூபா திரவத்தன்மை காப்பு விகிதம்

272.5% 2026 கா2

2025 கா2 : 328.5%

தேறிய உறுதியான நிதியியல் விகிதம்

2026 கா2 : 148.1%

2025 கா2 : 162.7%




## சொத்துத் தரம்

மொத்த கட்டம் 3 கடன்கள் விகிதம்

9.1% 2026 கா2

2025 கா2 : 11.9%

கட்டம் 3 கடன்களின் வளர்ச்சி (ஆண்டுக்காண்டு)

7.8% 2026 கா2

2025 கா2 : - 18.0%




## இலாபத்தன்மை

வரிக்குப் பின் இலாபம் (ஆண்டுக்காண்டு)

12.9% 2026 அரை1

2025 அரை1 : 67.2%

தேறிய வட்டி வருமான வளர்ச்சி (ஆண்டுக்காண்டு)

2026 அரை1 : 11.3%

2025 அரை1 : 26.4%




## மூலதனம்

மூலதன போதுமாந்தன்மை விகிதம்

18.2% 2026 கா2

2025 கா2 : 19.4%

வளர்ச்சி (ஆண்டுக்காண்டு)

2026 கா2

ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனம் : 15.9%

இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள்: 23.8%




# நிதிக் கம்பனிகள் துறை

## கொடுகடன்

கொடுகடன் வளர்ச்சி (ஆண்டுக்காண்டு)

2026 கா2: 45.0%

2025 கா2: 35.1%

மொத்த கட்டம் 3 கடன்கள் விகிதம்

2026 கா2: 5.1%

2025 கா2: 8.3%




## திரவத்தன்மை




திரவச் சொத்துக்களுக்கு வெளியக நிதிகள் விகிதம்

2025 கா2 15.0% 2026 கா2 10.9%




## மூலதனம்

மூலதனப் போதுமாந்தன்மை விகிதம்

2026 கா2: 19.3%

2025 கா2: 22.0%

வளர்ச்சி (ஆண்டுக்காண்டு) 2026 கா2

ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனம் : 20.8%

இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் : 37.6%




## இலாபத்தன்மை

வரிக்கு முன்னரான இலாபம் அதிகரித்தது (ஆண்டுக்காண்டு)

2026 கா2: 16.4%

2025 கா2: 59.3%

தேறிய வட்டி வருமான வளர்ச்சி (ஆண்டுக்காண்டு)

2026 கா2: 27.6% 2025 கா2: 28.3%




## வைப்புக்களும் கடன்பெறுதல்களும்

வைப்பு வளர்ச்சி

2026 கா2: 22.9%

2025 கா2: 16.3%

கடன் பெறுதல்களின் வளர்ச்சி

2026 கா2: 124.0%

2025 கா2: 75.9%



## காப்புறுதித் துறை

### மொத்த எழுதப்பட்ட கட்டுப்பண வளர்ச்சி

**20.3%** 2026 அரை1 (ஆண்டுக்காண்டு) ↑

நீண்டகாலம் ↓ **19.3%** 2026 அரை1 (ஆண்டுக்காண்டு)

பொது ↑ **21.8%** 2026 அரை1 (ஆண்டுக்காண்டு)




### இலாபத்தன்மை

பொதுக் காப்புறுதி

2026 அரை1

பங்குரிமை மீதான வருமானம்: **17.4%** ↓

சொத்துக்கள் மீதான வருமானம் **7.1%** ↓

நீண்டகாலக் காப்புறுதி

2026 அரை1

பங்குரிமை மீதான வருமானம்: **16.8%** ↓

சொத்துக்கள் மீதான வருமானம் **3.0%** ↓




### செலுத்தப்பட்ட கோரல்கள்

மோட்டார் கோரல்கள் **40.8%** அதிகரிப்பால் உந்தப்பட்டு 2026இன் முதலாம் அரையாண்டில் பொதுக் காப்புறுதி கோரல்கள் **21.4%** ஆண்டுக்காண்டு அதிகரித்தது.




### மூலதனம்

☑ 2026 கா2 இறுதியில் குறைந்தபட்ச தேவைப்பாடுகளுக்கு மேலதிகமானது.

நீண்டகாலம் **313.1%** ↓

பொது **286.2%** ↓




## வீட்டலகு மற்றும் கூட்டாண்மைத் துறைகள்

### கொடுகடன் வளர்ச்சி

**25.4%**

2026 இரண்டாம் காலாண்டு இறுதியில்

14.8% 2025 இரண்டாம் காலாண்டு இறுதியில்



வீட்டலகுத் துறை

### ஈட்டல் வளர்ச்சி

**22.0%**

2026 முதலரைப் பகுதியில்

7.6% 2025 முதலரைப் பகுதியில்



பட்டியலிடப்பட்ட நிதியல்லா கூட்டாண்மைத் துறை

### வீட்டலகு சுருக்கப்பார்வை

கொடுகடன் வழங்குநர்கள்

**வங்கிகள் பிரதானமான மூலங்களாக விளங்கியது**

வங்கிகள் 62.5% வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் 37.5%

கடன்பெறுநர் கொடுகடன் புள்ளி

**538.2**

2026 கா2 இல் நிறைவேற்றப்பட்ட சராசரி

2025 கா2 இல் 511.6 இலிருந்து மேம்பட்டது.

மொ.உ.உற்பத்திக்கு கொடுகடன் விகிதம்

**இதனுடைய மேல்நோக்கிய போக்கு தொடர்ந்தது.**



மேல் மாகாணம்

**48.9%**

வீட்டலகு கொடுகடன் மொத்தத்தில்

### கூட்டாண்மை சுருக்கப்பார்வை

தேறிய இலாப வளர்ச்சியின் மையம் 2026 முதலரையாண்டில்

**7.7%** பெரும்பான்மையான கம்பனிகள் தேறிய இலாபமொன்றை பதிவுசெய்தன

2025 முதலரையாண்டில் 7.3%

| முக்கிய இலாபத்தன்மைக் குறிகாட்டிகள் | | | | படுகடன் மீளச்செலுத்துகை இயலளவு | |
|---|---|---|---|---|---|
| சொத்துக்கள் மீதான வருமானம் | | பங்குரிமை மீதான வருமானம் | | வட்டி காப்பு விகிதம் | |
| 10.2% | 9.0% | 14.5% | 11.9% | 4.2 | 3.7 |
| 2025 அரை1 | 2026 அரை1 | 2025 அரை1 | 2026 அரை1 | 2025 அரை1 | 2026 அரை1 |

*கொடுகடன் தகவல் பணியக தரவுகளை அடிப்படையாகக் கொண்டு வீட்டலகுத் துறை ஆய்வு செய்யப்பட்டது.

அத்தியாயம் 1

# பேரண்டநிதியியல் நிலைமைகள்



வெளிநாட்டு பாதகமான சூழ்நிலைகள் தீவிரமடைந்த அதேவேளை 2026 இன் முதலரைப்பகுதியில் இலங்கையின் பேரண்டநிதியியல் சூழல் பரந்தளவில் நிலையாகக் காணப்பட்டு, நிதியியல் உறுதிப்பாட்டிற்குத் துணையளித்தது. காலப்பகுதியில் உலகளாவிய பேரண்டநிதியியல் நிலைமைகள் மிகவும் சவால்மிக்கனவாகத் மாற்றம்பெற்று, உள்நாட்டு பொருளாதாரம் மீது எதிர்மறையான கசிவுத்தாக்க அழுத்தங்களைப் பிரயோகித்தன. மத்திய கிழக்கில் அதிகரிக்கின்ற மோதல், உள்ளடங்கலாக தீவிரமடைந்த புவிசார் அரசியல் பதற்றங்கள், உயர்வடைந்த உலகளாவிய நிச்சயமற்றதன்மை புதுப்பிக்கப்பட்ட பணவீக்க அழுத்தங்கள், இறுக்கமாக்கப்பட்ட உலகளாவிய நிதியியல் நிலைமைகள், அதிகரிக்கின்ற வர்த்தகப் பிளவு, கொள்கை நிச்சயமற்றதன்மை, எல் நினோ போன்ற காலநிலையுடன் தொடர்புபட்ட இடர்நேர்வுகள் மற்றும் நிதிச் சந்தைகளில் உயர்வடைந்த தளம்பல் என்பன உள்நாட்டு பேரண்டப் பொருளாதாரம் மற்றும் நிதியியல் உறுதிப்பாடு என்பவற்றுக்கான சாத்தியமான விளைவுகளுடன் சவால்மிக்க வெளிநாட்டுச் சூழலொன்றைத் தோற்றுவித்தன. உயர்வடைகின்ற சக்தி மற்றும் பண்ட விலைகள், முக்கிய வர்த்தக மார்க்கங்களுக்கான இடையூறுகள் அத்துடன் தீவிரமடைந்த நிச்சயமற்றதன்மை என்பன பணவீக்க அழுத்தங்கள் மீளத்தோன்றுவதற்கும் உலகளாவிய தோற்றப்பாட்டிற்கான அதிகரித்த கீழ்நோக்கிய இடர்நேர்வுகளுக்கும் பங்களித்தன. இவ்வபிவிருத்திகள் வர்த்தகம், முதலீட்டுப் பாய்ச்சல், நிதியிடல் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி வீதம் மூலமும் அதேபோன்று காலநிலை தொடர்புபட்ட அதிர்வுகள் என்பன ஊடாக பாதகமான கசிவுத்தாக்கங்களுக்கு இலங்கை உள்ளடங்கலாக வளர்ந்துவரும் சந்தைகளும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களும் உட்படுவதை தீவிரப்படுத்தின.

இப்பின்னணிக்கெதிராக, தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சி, மேம்பட்ட இறைச் செயலாற்றம் மற்றும் ஆக்கபூர்வமான நிதியியல் துறை அபிவிருத்திகள் என்பவற்றினால் துணையளிக்கப்பட்டு உள்நாட்டு பேரண்ட நிதியியல் நிலைமைகள் நிதியியல் உறுதிப்பாட்டில் பரந்தளவில் ஆக்கபூர்வமாகக் காணப்பட்டன. எனினும், விரைவான கொடுகடன் விரிவாக்கம் மற்றும் உலகளாவிய பேரண்டநிதியியல் நிலைமைகளிலிருந்து தோன்றிய அழுத்தம் என்பன நிதியியல் முறைமை மீதான உன்னிப்பான கண்காணித்தலை தேவைப்படுத்தின. பொருளாதார நடவடிக்கையில் மீட்சி மற்றும் மீளாய்வுக் காலப்பகுதியின் அநேகமான காலப்பகுதியின் போது நிலவிய ஒப்பீட்டளவில் தளர்வான நாணய நிலைமைகள் என்பவற்றுக்கு மத்தியில் குறிப்பாக வீட்டலகுக்கான கடன்வழங்கல், வாகன நிதியிடல் மற்றும் தங்கத்தால் பிணையிடப்பட்ட கடன்வழங்கல் என்பவற்றில் அவதானிக்கப்பட்ட வலுவான விரிவாக்கத்துடன் தனியார் துறைக்கான கொடுகடன் குறிப்பிடத்தக்களவு விரிவடைந்தது. இதன் விளைவாக, கொடுகடன் வளர்ச்சியானது தொடர்ந்தும் வைப்பு வளர்ச்சியை விஞ்சியமையால் நிதியியல் இடையேற்பாடு வலுவடைந்தது. மேலும், விரிவடைகின்ற தனியார் துறைக்கான கொடுகடன் இடைவெளியுடன் தனியார் துறைக்கான கொடுகடன் சுழற்சிவட்டமானது விரிவாக்கக் கட்டத்தில் காணப்பட்டு, முறைமைசார்ந்த பாதிக்கப்படும்தன்மைகள் கட்டியெழுப்பப்படும் சாத்தியப்பாட்டினை எடுத்துக்காட்டியது. அதேவேளை, உயர்வான உலகளாவிய சக்தி மற்றும் பண்ட விலைகள் மற்றும் வலுவடைகின்ற உள்நாட்டுக் கேள்வியிலிருந்து தோற்றம்பெறுகின்ற புதுப்பிக்கப்பட்ட பணவீக்க அழுத்தங்கள் என்பன தனியார் துறைக்கான கொடுகடனில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியுடன் சேர்ந்து 2026 மே மாதத்தில் உள்நாட்டு நாணயக் கொள்கையின் இறுக்கமாக்கலைத் தேவைப்படுத்தின. இதன் விளைவாக, சந்தை வட்டி வீதங்களிலும், அரசாங்க பிணையங்களின் விளைவுவீதங்களிலும் மேல் நோக்கிய சீராக்கங்களுக்கு இது பங்களித்தது. இதற்கு மேலதிகமாக, குறிப்பிடத்தக்க கொடுகடன் வளர்ச்சியிற்கு மத்தியில் நிதியியல் முதன்மைக்குள் பாதிக்கப்படும் தன்மைகள் கட்டியெழுப்பப்படுவதனைக் கட்டுப்படுத்துவதற்கு வாகன மற்றும் தங்கத்தில் பிணையளிக்கப்பட்ட கடன்களின் பெறுமதிக்கான கடன் எல்லைகள் போன்ற பேரண்டமுன்மதியுடைய வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

இறைச் செயலாற்றம் மேலும் வலிமையடைந்து, உள்நாட்டு நிதியிடல் மீது தங்கியிருத்தலைக் குறைத்ததுடன் தனியார் துறை நடவடிக்கைகளை நோக்கி நிதியியல் துறை மூலவளங்கள் மீள்ஒதுக்கீடு செய்யப்படுவதற்குத் துணையளித்தது. எவ்வாறிருப்பினும், வெளிநாட்டுத் துறையானது வர்த்தக மற்றும் சுற்றுலா, தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் செலாவணி வீத மார்க்கங்கள் என்பவற்றினூடான சாத்தியமான கசிவுத்தாக்கங்களுடன், குறிப்பாக பண்ட விலைகள் ஊடாக பாதகமான உலகளாவிய அபிவிருத்திகளுக்கு பாதிக்கப்படத்தக்கதாகக் காணப்பட்டது. அதேவேளை, நிதியியல் நிறுவனங்களுக்கிடையேயான வளர்ச்சியடைகின்ற ஒன்றுடனொன்று இணைந்ததன்மை, நிதியியல் பணிகளின் அதிகரிக்கின்ற டிஜிட்டல்மயமாக்கம், நிதியியல் தொழில்நுட்பங்களில் துரிதமான அபிவிருத்திகள் என்பன அதிகரிக்கின்ற இணையப் பாதுகாப்பு அச்சுறுத்தல்களுடன் ஒன்றிணைந்து நிதியியல் துறை தாக்குப்பிடிக்கும் தன்மைக்கான முக்கிய கரிசனைகளாகத் தோற்றம்பெற்றுள்ளன. மேலும், காலநிலை தொடர்புபட்ட நிகழ்வுகளின் அதிகரிக்கின்ற நிகழ் இடைவெளி மற்றும் தீவிரம் என்பன பேரண்டப் பொருளாதார இடர்நேர்வு தோற்றவமைப்புடன் சேர்ந்து உறுதிப்பாட்டிற்கான சவால்களைத் தோற்றுவித்துள்ளன.

முன்னோக்கி நோக்குகையில், இலங்கையின் பேரண்டப் பொருளாதாரத் தோற்றப்பாடானது பல முனைகளிலிருந்தான சாத்தியமான பாதக சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் பரந்தளவில் உறுதியாகக் காணப்படுகின்றது. தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சி வலுவான இறைச் செயலாற்றம் மற்றும் மேம்பட்ட நிதியியல் துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மை என்பன சாத்தியமான அதிர்வுகளுக்கெதிராக முக்கிய பாதுகாப்பினை வழங்கியதும் எவ்வாறிருப்பினும், முன்னோக்கிச் செல்கையில் தீவிரமடைந்த புவிசார் அரசியல் பதற்றங்கள், புதுப்பிக்கப்பட்ட பணவீக்க அழுத்தங்கள், இறுக்கமான உலகளாவிய நிதியியல் நிலைமைகள், காலநிலை தொடர்புபட்ட இடர்நேர்வுகள் மற்றும் விரைவான கொடுகடன் விரிவடைதல் என்பன நிதியியல் உறுதிப்பாட்டிற்குச் சவால்களைத் தோற்றுவிக்கக்கூடும். அதற்கமைய, பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினைப் பேணிப்பாதுகாத்தல், போதுமான மூலதனம் மற்றும் திரவத்தன்மை தாங்கியிருப்புக்களைப் பேணுதல், இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளை வலுப்படுத்தல் அத்துடன் ஏதுவாகின்ற பொருளாதார அடிப்படைகளுடன் கொடுகடன் விரிவாக்கம் ஒத்திசைவாகக் காணப்படுகின்றதா என்பதனை உறுதிசெய்தல் ஆகியன நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை பாதுகாப்பதற்கு முக்கியமானதாக அமையும். ஆகையினால், மத்திய வங்கியானது நிதியியல் முறைமையில் தோற்றம்பெறுகின்ற இடர்நேர்வுகளையும் பாதிக்கப்படும் தன்மைகளையும் தொடர்ந்தும் உன்னிப்பாக கண்காணித்து, மதிப்பிடும் என்பதுடன் அவசியமானவிடத்து செயலூக்கமிக்க மற்றும் காலோசித பேரண்டமுன்மதியுடைய வழிமுறைகளையும் எடுக்கும்.

## 1.1 பன்னாட்டு பொருளாதாரச் சூழலும் நிதியியல் நிலைமைகளும்

### உலகளாவிய பேரண்டநிதியியல் அபிவிருத்திகளும் தோற்றப்பாடும்

**தீவிரமடைந்த புவிசார் அரசியல் பதற்றங்கள், மத்திய கிழக்கின் மோதல், புதுப்பிக்கப்பட்ட பணவீக்க அழுத்தங்கள், அதிகரித்துவரும் வர்த்தகப் பிளவு, கொள்கை நிச்சயமற்றதன்மை மற்றும் தளம்பல்மிக்க நிதியியல் சந்தைகள் என்பவற்றுடன் உலகளாவிய பேரண்டநிதியியல் நிலைமைகள் மீளாய்வுக் காலப்பகுதியில் மிகவும் சவால்மிக்கதாகத் தோற்றம்பெற்றுள்ளன.** 2026இன் ஆரம்ப காலப்பகுதியில் மத்திய கிழக்கில் உயர்வடைந்த பதற்றங்கள், உலகளாவிய இடர்நேர்வுத் தோற்ற அமைப்பினைக் கணிசமாக மாற்றியமைத்து, சக்திப் பாதுகாப்பு மீதான கரிசனைகளைத் தீவிரப்படுத்தி, பன்னாட்டு வர்த்தக மார்க்கங்களுக்கான இடையூறுகளையும் புதுப்பிக்கப்பட்ட வழங்கல் பக்க அழுத்தங்களையும் ஏற்படுத்தியுள்ளன. இப்பின்னணிக்கெதிராக உலகளாவிய நிச்சயமற்றதன்மைக் குறிகாட்டிகள் 2025இல் பதிவாகிய உச்சத்திலிருந்து தளர்வடைந்தமைக்கு மத்தியிலும் வரலாற்று ரீதியான மட்டங்களுக்கு மேல் காணப்பட்டன. எவ்வாறாயினும், புவிசார் அரசியல் பதற்றங்கள் அதிகரித்தமையின் பின்னர் உலகளாவிய நிதியியல் நிலைமைகளின் இறுக்கமடைதல் முன்னைய பாரிய உலகளாவிய அதிர்வுக் காலப்பகுதிகளைவிடவும் குறைவாக இருந்த அதேவேளை, பன்னாட்டு கொடுகடன் சந்தைகள் பரந்தளவில் ஒழுங்கான முறையில் தொடர்ந்தும் இயங்கின. அதேவேளை, காலநிலை தொடர்புபட்ட நிகழ்வுகளின் அதிகரிக்கின்ற தீவிரத்தால் உலகளாவிய வழங்கலில் ஏற்படுத்தப்படும் இடையூறுகள், பண்ட விலை அழுத்தங்கள் மற்றும் பொருளாதார இழப்புக்கள் என்பவற்றை குவியச்செய்து, ஏற்கனவே காணப்படுகின்ற பேரண்ட நிதியியல் பாதிக்கப்படும் தன்மைகளுக்கு வலுச்சேர்த்து கசிவுத்தாக்கங்கள் ஊடாக உள்நாட்டு பேரண்டப் பொருளாதார நிலைமைகளை பாதிக்கக்கூடிய சாத்தியங்கள் எழக்கூடும். அதேவேளை, புவிசார் அரசியல் இடர்நேர்வுகளுக்கிடையிலான இடைத்தொடர்பு, தொடர்ச்சியான பணவீக்க அழுத்தங்கள், உயர்வடைந்த நாட்டிற்கான படுகடன் சுமை மற்றும் உலகளாவிய நாணயக் கொள்கைத் தோற்றப்பாட்டினைச் சூழ்ந்துள்ள நிச்சயமற்றதன்மை என்பன பரஸ்பரமாக மீள்வலிமையூட்டும் அழுத்தங்களை அதிகரிக்கக்கூடும். பிரதானமாக பண்ட இறக்குமதிகள், வர்த்தகம், சுற்றுலா, பணவனுப்பல், செலாவணி வீதங்கள் மற்றும் உலகளாவிய முதலீட்டாளர் எண்ணப்பாங்குகள் என்பன ஊடாக உள்நாட்டு பேரண்டநிதியியல் நிலைமைகள் இவ்வபிவிருத்திகளுக்கு உட்பட்டுள்ளன. எனினும், வலுவான இறை ஏற்பாடு, நிலையுறுதிமிக்க பணவனுப்பல் பாய்ச்சல் அத்துடன் மேம்பட்ட வெளிநாட்டு ஒதுக்குத் தாங்கியிருப்புக்கள் என்பன இச்சவால்களை எதிர்கொள்வதற்கு ஓரளவு காப்பளிக்கின்றன. அதேவேளை, உலகளாவிய நிலைமைகள் நீண்டகாலமாக மோசமடைதலானது உள்நாட்டு பேரண்டநிதியியல் நிலைமைகளைத் தொடர்ந்தும் வலுவிழக்கச்செய்து நிதியியல் நிறுவனங்களுக்கும் பரந்த நிதியியல் உறுதிப்பாட்டிற்கும் சாத்தியமானளவு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.

### உலகளாவிய வளர்ச்சியும் வணிகப்பொருள் சந்தையும்

**தொடர்ச்சியான புவிசார் அரசியல் மற்றும் கொள்கை நிச்சயமற்றதன்மைகள் என்பவற்றுக்கு மத்தியில் ஒழுங்கற்ற உலகளாவிய வளர்ச்சியும், குறைவடைந்த உலகளாவிய வர்த்தகமும் இலங்கை போன்ற சிறிய திறந்த பொருளாதாரங்களுக்கு வெளிநாட்டு பாதிக்கப்படும் தன்மைகளைத் தீவிரப்படுத்தின.** உலகளாவிய பொருளாதார வளர்ச்சி சாதகமாகக் காணப்பட்டது ஆயினும், நாடுகள் மற்றும் பிராந்தியங்களுக்கிடையில் குறிப்பாக, மத்திய கிழக்கு மோதலினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ள சக்தி இறக்குமதிசெய்யும் பொருளாதாரங்களில் அதிகரித்தளவில்

வரைபடம் 1.1
உலகளாவிய நிச்சயமற்றதன்மை




மூலம்: உலக நிச்சயமற்ற தன்மை குறிகாட்டி தரவகம்* மற்றும் mmm.matteoiacoviello.com.

*உலக நிச்சயமற்றதன்மை சுட்டெண் (WUI) தரவுத்தளம் எச்.அஹிர், என்.ப்ளும் ஆகியோரின் "The world uncertinity Jndex" எனும் ஆய்வுக் கட்டுரையின் முறைமையியலை கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. தேசிய பொருளாதார ஆய்வு மையத்தின் ஆய்வுக் கட்டுரை 29763.

வரைபடம் 1.2 உலகளாவிய உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி




மூலம்: சர்வதேச நாணயநிதியம் உலகப் பொருளாதார தோற்றப்பாடு

வரைபடம் 1.3 உலகளாவிய தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்




மூலம்: ஸ்டாண்டட் அன்ட் புவர் குளோபல்

ஒழுங்கற்றுக் காணப்படுகின்றது. 2026 யூலை இற்றைப்படுத்தப்பட்ட பன்னாட்டு நாணய நிதிய உலகப் பொருளாதாரத் தோற்றப்பாடானது உலகளாவிய வளர்ச்சியை 2025இன் 3.5 சதவீதத்திலிருந்து 2026இல் 3.0 சதவீதமாக மிதமடையுமென எறிவுசெய்துள்ளது. உலகளாவிய பொருளாதார நடவடிக்கை தாக்குப்பிடிக்கத்தக்க மட்டத்தினை எடுத்துக்காட்டியுள்ள போதிலும், வளர்ச்சிச் செயலாற்றம் பொருளாதாரங்களுக்கிடையில் கணிசமாக வேறுபட்டுள்ளது. தொழில்நுட்பம் தொடர்புபட்ட முதலீடுகளில் தொடர்ச்சியான வலிமையும், செயற்கை நுண்ணறிவில் முன்னேற்றங்களும், செயற்கை நுண்ணறிவு தொடர்புபட்ட தொழில்நுட்ப பெறுமதிச் சங்கிலிகளுக்குள் கூட்டிணைக்கப்பட்ட நாடுகளின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்தன. மாறாக, பல வளர்ந்து வரும் சந்தைகளும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களும் பலவீனமான வெளிநாட்டுக் கேள்வியையும் தீவிரமடைந்த பாதிக்கப்படும் தன்மைகளையும் எதிர்கொண்டன.

**உலகளாவிய தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் 2025 யூன் தொடக்கம் விரிவாக்கப் புலத்தினுள் காணப்பட்டமையிற்கிடையில் உலகளாவிய தயாரிப்பு நடவடிக்கை தாக்குப்பிடிக்கத்தக்கதாக விளங்கியது.** முக்கிய பொருளாதாரங்களில் முன்கூட்டிய முன்னெச்சரிக்கையாக கையிருப்பை அதிகரித்துக்கொள்ளல் மற்றும் தாக்குப்பிடிக்கத்தக்க நடவடிக்கை என்பன மூலம் பகுதியளவில் ஆதரவளிக்கப்பட்டு தயாரிப்பு வெளியீடும் புதிய கட்டளைகளும் தொடர்ந்தும் அதிகரித்தன. எவ்வாறிருப்பினும், வெளியீடு மற்றும் புதிய கட்டளைகளின் வளர்ச்சி தளர்வடைந்தமையினால் விரிவாக்க வேகம் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் அவதானிக்கப்பட்ட உச்சத்திலிருந்து படிப்படியாக மெதுவடைந்த அதேவேளை, வழங்கல் சங்கிலி அழுத்தங்கள் மற்றும் செலவு அதிகரிப்புக்கள் என்பவற்றின் ஓரளவு மிதமடைதலுக்கு மத்தியில் வியாபார எண்ணப்பாங்கு குறைவடைந்து காணப்பட்டது. மேலும், புதிய ஏற்றுமதிக்

வரைபடம் 1.4 உலகளாவிய வணிகப்பொருள் வர்த்தக வளர்ச்சி




மூலம்: CPB உலகவர்த்தக கண்காணிப்பு

கட்டளைகள் அண்மைக்கால சுருக்கங்களின் பின்னர் 2026 யூலையில் நிலையுறுதியடைந்த அதேவேளை, புவிசார் அரசியல் பதற்றங்கள், வர்த்தகக் கொள்கை நிச்சயமற்றதன்மை மற்றும் சக்தி விலைகள் மீதான கரிசனைகள் என்பன தோற்றப்பாடு மீது தொடர்ந்தும் தாக்கம்செலுத்தி, உலகளாவிய தயாரிப்பு நடவடிக்கைக்கு கீழ்நோக்கிய இடர்நேர்வைத் தோற்றுவித்தன.

**புவிசார் அரசியல் பதற்றங்கள், உயர்வடைந்த கொள்கை நிச்சயமற்றதன்மை மற்றும் வர்த்தகக் கட்டுப்பாடுகளின் தொடர்ச்சியான பெருக்கம் என்பன எல்லை தாண்டிய வர்த்தகம் மீது தாக்கம் செலுத்தியமையினால் மீளாய்வுக் காலப்பகுதியில் உலகளாவிய வணிகப்பொருள் வர்த்தகம் குறைவடைந்து காணப்பட்டது.** இதனால், வர்த்தக வளர்ச்சி மெதுவடைதல் வளர்ந்துவரும் பொருளாதாரங்கள் மத்தியில் மிகத் தீவிரமாகக் காணப்பட்டமையுடன் மத்திய கிழக்கில் பதற்றங்கள் உயர்வடைந்ததைத் தொடர்ந்து 2026 மாச்சில் முன்னேற்றமடைந்து மற்றும் வளர்ந்துவரும் பொருளாதாரங்கள் முழுவதும் பலவீனமடைந்தது. உலகளாவிய வர்த்தக மார்க்கங்களுக்கான பாரியளவிலான இடையூறுகள் பெருமளவில் தவிர்க்கப்பட்ட போதிலும், வழங்கல் சங்கிலி பாதிக்கப்படும் தன்மைகள் குறிப்பாக மத்திய கிழக்கில் முக்கிய கடல்சார் மார்க்கங்களுக்கான இடையூறுகளுக்கு மத்தியில் உயர்வடைந்து காணப்பட்டன. அதேவேளை, உயர்வான போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டுச்சேவைச் செலவுகள் கடல்சார் காப்புறுதி கட்டுப்பணங்களை அதிகரிக்கச்செய்ததுடன், நீண்ட ஒப்படைப்பு நேரங்களையும் தோற்றுவித்து வர்த்தகம் தொடர்புபட்ட நிச்சயமற்றதன்மைகளை மேலும் தீவிரப்படுத்தின. மேலும், முக்கிய பொருளாதாரங்களுக்கிடையில் தொழில்துறை கொள்கைகள், ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள், வர்த்தக வரையறைகள் அத்துடன் உபாய ரீதியான போட்டி என்பன ஊடாக அதிகரிக்கின்ற வர்த்தக பிளவுபடுதல் உலகளாவிய வர்த்தக மற்றும் முதலீட்டு விதங்களை தொடர்ந்தும் மீளவடிவமைத்து, உலகளாவிய தோற்றப்பாடு நலிவடைதலை அதிகப்படுத்தியது.

**இதன் விளைவாக, உள்நாட்டு நிதியியல் துறை தற்போதைய உலகளாவிய அபிவிருத்திகளிலிருந்து தோற்றுகின்ற பாதகமான கசிவுத்தாக்கங்களுக்கு பாதிக்கப்படத்தக்கதாகக் காணப்படுகின்றது, இது நிதியியல் உறுதிப்பாட்டிற்கு இடர்நேர்வுகளைத் தோற்றுவிக்கக்கூடும்.** பலவீனமான உலகளாவிய வளர்ச்சி மற்றும் வர்த்தகம் என்பன இலங்கையின் ஏற்றுமதி வருவாய்களை தடைப்படுத்தியுள்ள அதேவேளை, உயர்வடைந்த சக்தி மற்றும் பண்ட விலைகள் மற்றும் உயர்வான போக்குவரத்துச் செலவுகள் என்பன இறக்குமதிச் செலவுகளை அதிகரித்து வெளிநாட்டுத் துறை நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையை ஏற்படுத்துகின்ற அதேவேளை வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளை திரட்டுவதைப் பாதித்திருக்கின்றன. அத்தகைய அபிவிருத்திகளானவை இறக்குமதி செய்யப்பட்ட பணவீக்கம், உயர்வான உற்பத்திச் செலவுகள், பலவீனமான வீட்டலகு மற்றும் கூட்டாண்மை மீளச்செலுத்தல் இயலளவு அத்துடன் இறுக்கமான உள்நாட்டு நிதியியல் நிலைமைகள் என்பன ஊடாக சாத்தியமான இரண்டாம் சுற்றுத் தாக்கங்களுடன் உள்நாட்டு, வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் அழுத்தங்களை அதிகரித்து, செலாவணி வீத தளம்பலுக்கு பங்களிக்கின்றன. அதற்கமைய, உலகளாவிய வர்த்தகம் மற்றும் வளர்ச்சி நிலைமைகள் என்பவற்றில் மேலும் மோசமடைதல் இலங்கையின் வெளிநாட்டுத் துறை தாங்கியிருப்புக்களை பலவீனப்படுத்தி, உள்நாட்டு பொருளாதார நடவடிக்கை மற்றும் நிதியியல் முறைமை என்பவற்றுக்கு வெளிநாட்டு அதிர்வுகளின் ஊடுகடத்தலை ஒன்றுசேர்த்து இதனூடாக பேரண்டநிதியியல் நிலைமைகளுக்கும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டிற்கும் கீழ்நோக்கிய இடர்நேர்வுகளைத் தோற்றுவிக்கலாம்

## உலகளாவிய பணவீக்கமும் பண்ட விலைகளும்

**உயர்வடைந்த மற்றும் தளம்பல்மிக்க பண்ட விலைகளின் மூலம் உலகளாவிய பணவீக்க அழுத்தங்கள் 2026 காலப்பகுதியில் தீவிரமடைந்தன.** 2026 யூலையின் பன்னாட்டு நாணய நிதிய உலகப் பொருளாதார தோற்றப்பாடு இற்றைப்படுத்தலின்படி உலகளாவிய முதன்மைப் பணவீக்கமானது 2027இல் 3.9 சதவீதமாக மிதமடைவதற்கு முன்னர் 2025இன் 4.1 சதவீதத்திலிருந்து 2026இல் 4.7 சதவீதத்திற்கு அதிகரிக்குமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. சக்தி வழங்கல் இடையூறுகள் மீதான கரிசனைகள் போக்குவரத்து முட்டுக்கட்டைகள் மற்றும் மத்திய கிழக்கின் முக்கிய கப்பலேற்றல் மார்க்கங்களுக்கான இடர்நேர்வுகள் என்பன மசகெண்ணெய் விலைகளில் தீவிரமடைந்த தளம்பலுக்குப் பங்களித்த அதேவேளை, அதிகரித்த எரிபொருள், மின்சார, தயாரிப்பு, போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டுச்சேவைச் செலவுகள் ஊடாக உயர்வான சக்திச் செலவுகள் பரந்த பணவீக்க அழுத்தங்களை ஏற்படுத்தியுள்ளன. உயர்வான சக்தி மற்றும் வளமாக்கிச் செலவுகள், காலநிலை தொடர்பான அதிர்வுகள் மற்றும் வேளாண்மை வழங்கல் சங்கிலிகளுக்கான இடையூறுகள் என்பனவற்றுக்கு உணவு விலைகளும் பாதிக்கப்படத்தக்கதாகக் காணப்பட்டு,

வரைபடம் 1.5

உலகளாவிய பணவீக்கம்[அ]




(அ) அனைத்து விடயங்களிலுமான நுகர்வு விலைச்சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த முதன்மைப்பணவீக்கம், சராசரிக்காலப்பகுதி, சதவீதமாற்றம்.

மூலம்: சர்வதேசநாணய நிதியம்-உலகப் பொருளாதாரத் தோற்றப்பாடு

வரைபடம் 1.6
உலகளாவிய பண்ட விலைச் சுட்டெண்கள்




மூலங்கள்: உலக வங்கி
புளும் பேர்க்

வீட்டலகுச் செலவினத்தின் ஒப்பீட்டளவில் பாரிய பங்கிற்கு உணவு மற்றும் சக்தி வகைகூறி வளர்ந்துவருகின்ற சந்தைகள் மற்றும் அபிவிருத்தியடைந்துவருகின்ற பொருளாதாரங்களை விகிதசமமற்றுப் பாதித்துள்ளன. தேறிய சக்தி இறக்குமதி செய்யும் பொருளாதாரம் என்ற வகையில் இலங்கையைப் பொறுத்தவரையில் உலகளாவிய சக்தி மற்றும் உணவு விலைகளில் நிலையான அதிகரிப்புக்கள் வணிகப் பொருள் இறக்குமதிச் செலவை உயர்வடையச்செய்து, வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு மற்றும் உள்நாட்டு பணவீக்கம் என்பன மீது அழுத்தத்தைத் தீவிரப்படுத்துகின்ற அதேவேளை, வீட்டலகுக் கொள்வனவுச் சக்தியைக் குறைவடையச்செய்து, வியாபாரங்களுக்கான தொழிற்பாட்டுச் செலவுகளை அதிகரித்து விளைவுத் தாக்கங்கள் மூலம் படுகடன் தீர்ப்பனவு இயலளவு, சொத்துத் தரம் மற்றும் ஒட்டுமொத்த நிதியியல் முறைமை உறுதிப்பாடு என்பனவற்றைப் பாதிக்கக்கூடும். அதேவேளை, தீவிரமடைந்த புவிசார் அரசியல் நிச்சயமற்றதன்மை மற்றும் அதிகரித்த பாதுகாப்பான முதலீட்டிற்கான கேள்வி என்பவற்றுக்கு மத்தியில் உலகளாவிய தங்க விலைகள் 2026 சனவரியில் அதன் வரலாற்றிலேயே உயர்வான மட்டத்தினை எட்டியதுடன் அதனைத்தொடர்ந்து விலைகள் ஏறத்தாழ 25 சதவீத கீழ்நோக்கிய சீராக்கத்தைப் பதிவுசெய்தன. தங்க விலைகளில் இக்குறிப்பிடத்தக்க ஏற்ற இறக்கங்கள், தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கலினையுடைய நிதியியல் நிறுவனங்களைக் கொண்டுள்ள இலங்கை போன்ற நியாய ஆதிக்கங்களில் கவனிக்கப்படுதல் அவசியமாகும்.

## உலகளாவிய நிதியியல் நிலைமைகள்

**உலகளாவிய நிதியியல் நிலைமைகள், 2026 காலப்பகுதியில் தீவிரமடைந்த புவிசார் அரசியல் பதற்றங்கள், புதுப்பிக்கப்பட்ட பணவீக்க அழுத்தங்கள், உலகளாவிய நாணயக் கொள்கைத் தோற்றப்பாட்டைச் சூழ்ந்துள்ள அதிகரித்த நிச்சயமற்றதன்மை என்பவற்றுக்கு மத்தியில் இறுக்கமடைந்தன.** முதலீட்டாளர்கள், பணவீக்கம், வட்டி வீதங்கள் மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பவற்றுக்கான தோற்றப்பாட்டினை மீளக்கணிப்பிட்டமையினால் மத்திய கிழக்கு மோதல் அதிகரித்தமையானது உலகளாவிய நிதியியல் சந்தைகள் முழுவதும் பரந்த மீள் விலையிடலைத் தூண்டியது. நாட்டிற்கான முறி விளைவு வீதங்கள் அதிகரித்து, பங்கு மூலதனச் சந்தைகள் தற்காலிக சீராக்கங்களை அனுபவித்ததுடன் பல சந்தைப் பிரிவுகளில் நிதியியல் நிலைமைகள் இறுக்கமடைந்தன. எவ்வாறிருப்பினும், இறுக்கமடைதலானது உலகளாவிய சந்தை அழுத்தங்களின் முன்னைய முக்கிய கால நிகழ்வுகளைவிட தீவிரம் குறைவாகக் காணப்பட்ட அதேவேளை, ஒட்டுமொத்த நிதியியல் நிலைமைகள் வரலாற்று ரீதியான நியமங்களவில் பரந்தளவில் தளர்வானதாகக் காணப்பட்டன. தாக்குப்பிடிக்கத்தக்க பொருளாதார நடவடிக்கை, ஒப்பீட்டளவில் சாதகமான திரவத்தன்மை நிலைமைகள் மற்றும் பல முக்கிய பொருளாதாரங்களில் நாணயக் கொள்கை தளர்த்தல் பற்றிய எதிர்பார்க்கைகள் என்பன மூலம் துணையளிக்கப்பட்டு,

வரைபடம் 1.7
நிதியியல் நிலைமைச் சுட்டெண்




மூலம்: புளும்பேர்க்

நிதியியல் சந்தைகள் பரந்தளவில் தொடர்ந்தும் ஒழுங்கான விதத்தில் இயங்கின. நிதியிடல் நிலைமைகள் பொருளாதாரங்களிடையே ஒழுங்கற்றுக் காணப்பட்டன. முன்னேற்றமடைந்த பொருளாதாரங்கள் ஆழமான மற்றும் திரவத்தன்மை மிக்க நிதியியல் சந்தைகளிலிருந்து பொதுவாக தொடர்ந்தும் நன்மையடைந்த அதேவேளை, பல வளர்ந்துவரும் சந்தைகளும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களும் உயர்வடைந்த வெளிநாட்டு பாதிக்கப்படும் தன்மைகள், பலவீனமான இறை நிலைமைகள் மற்றும் ஒப்பீட்டளவில் உயர்வான கடன்பெறுதல் செலவுகள் என்பன காரணமாக மிகவும் சவால்மிக்க நிதியிடல் சூழல்களை எதிர்கொண்டன. மேலும், வலுவான ஐ.அ.டொலர், குறைந்த பெறுமதி நாணயங்களில் வாங்கிய சொத்துகளை விற்பனைசெய்து முடிவுறுத்தல் மற்றும் ஒப்பீட்டளவில் இடர்நேர்வு உணர்திறன்மிக்க வங்கியல்லா நிதியியல் முதலீட்டாளர்களின் அதிகரிக்கின்ற பங்கேற்பு என்பன மூலதன வெளிப்பாய்ச்சல்கள் நிகழ்வதையும் வெளிநாட்டுச் செலாவணி அழுத்தங்களையும் அதிகரிக்கக்கூடும்.

**இத்தகைய அபிவிருத்திகள், நிதியியல் நிலைமைகளை குறிப்பாக பாதிக்கப்படத்தக்க பொருளாதாரங்களில் இறுக்கமடையச்செய்யக்கூடும்.** இறுக்கமடைகின்ற நிதியியல் நிலைமைகளுக்கு மத்தியில் அதிகரிக்கின்ற மீள்நிதியிடல் செலவுகள், கணிசமாக வெளிநாட்டு நாணயப் பொறுப்புக்களுடன் அல்லது குறிப்பிடத்தக்க வெளிநாட்டு நிதியிடல் தேவைப்பாடுகளுடன்கூடிய பொருளாதாரங்களை வெகுவாகப் பாதிக்கலாம். அதேவேளை, நீண்ட புவிசார் அரசியல் நெருக்கடி, தொடர்ச்சியாக சக்தி விலை காரணமாக தூண்டப்படும் பணவீக்கம் அல்லது உலகளாவிய நாணயக் கொள்கைத் தோற்றப்பாட்டில் எதிர்பாராத மீள்மதிப்பீடு என்பன நிதியியல் நிலைமைகளில் மேலும் இறுக்கமாக்கலுக்கு வழிவகுக்கக்கூடும். இவ்வபிவிருத்திகள் இலங்கையில் வெளிநாட்டு நிதியிடல் செலவுகளில் அதிகரிப்பொன்றுக்கு இட்டுச்சென்று, மூலதனப் பாய்ச்சல்கள் மற்றும் செலாவணி வீத இயக்கவாற்றல்களுக்கு செல்வாக்குச்செலுத்தி, பன்னாட்டு நிதியிடலுக்கான உள்நாட்டு நிறுவனங்களுக்கான பெறுவழியினை தடைப்படுத்துவதற்கு வழிவகுக்கலாம். எனவே, நிதியியல் நிலைமைகள் இறுக்கமடைதல் மீள்நிதியிடல் அழுத்தங்களை ஒன்றுதிரட்டி உயர் கடப்பாடுடைய கடன்பெறுநர்களினதும் நிதியியல் இடையேற்பாட்டாளர்களினதும் ஐந்தொகைகளை பலவீனப்படுத்தலாம். அதற்கமைய, பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடும் மற்றும் போதுமான இறை, வெளிநாட்டு மற்றும் நிதியியல் துறை தாங்கியிருப்புக்களைப் பேணிக்காப்பதும் உலகளாவிய நிதியியல் நிலைமைகளிலிருந்தான சாத்தியமான பாதகமான கசிவுத்தாக்கங்களை தணிப்பதில் முக்கியமானதாக விளங்குகின்றது.

**வரைபடம் 1.8** **2021 சனவரி - 2026 யூலை இடையிலான கொள்கை வீத வீச்சு**




மூலங்கள்: இங்கிலாந்து வங்கி, பெடரல் ரிசேர்வ், ஐரோப்பிய மத்திய வங்கி மற்றும் ஜப்பானிய வங்கி.

## உலகளாவிய நிதியியல் சந்தைகள்

**அதிகரித்த மத்திய கிழக்கு பதற்றங்கள் புவிசார் அரசியல் நிச்சயமற்றதன்மைகளைத் தீவிரப்படுத்தி, முதலீட்டாளர் நம்பிக்கையினை நலிவடையச் செய்தமையினால் மீளாய்வுக் காலப்பகுதியில் நிதியியல் சந்தைத் தளம்பல் அதிகரித்தது.** சக்திப் பாதுகாப்பு மீதான கரிசனைகள், புதுப்பிக்கப்பட்ட பணவீக்க அழுத்தங்கள் மற்றும் உலகளாவிய வர்த்தகத்திற்கான இடையூறுகள் என்பன நிதியியல் சந்தை இடர்நேர்வுகளை மீள்மதிப்பிடுவதற்கு முதலீட்டாளர்களுக்கு தூண்டுதலளித்து பங்குரிமை மூலதனம், நாட்டிற்கான முறி, வெளிநாட்டுச் செலாவணி மற்றும் பண்டச் சந்தைகளில் தீவிரமடைந்த விலை ஏற்ற இறக்கங்களுக்கு வழிவகுத்தன. இத்தகைய அபிவிருத்திகளைப் பிரதிபலித்து, உட்கிடை தளம்பல்களின் முக்கிய வழிமுறைகள் 2026[1] ஆரம்ப காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. சமகாலத்தில் வேறுபட்ட சொத்து வகுப்புக்களுக்கிடையிலான தளம்பல் உலகளாவிய நிதியியல் சந்தைகளின் ஒன்றுடனொன்றிணைந்த தன்மையினையும் முதலீட்டாளர் சொத்துப்பட்டியல் மற்றும் நிதியியல் இடையேற்பாட்டாளர்கள் ஊடாக துரிதமாக ஊடுகடத்தப்படும் புவிசார் அரசியல் அதிர்வுகளுக்கான சாத்தியத்தினையும் எடுத்துக்காட்டுகின்றது. இவ்வதிகரித்த தளம்பலானது இடர்நேர்வு மிகையினை உயர்வடையச்செய்து, சந்தைத் திரவத்தன்மையைக் குறைத்து ஒப்பீட்டளவில் இடர்நேர்வுமிக்க சொத்துக்களைக் குறைப்பதற்கு முதலீட்டாளர்களுக்கு ஊக்கமளித்து இலங்கை போன்ற வளர்ந்துவரும் சந்தைகளிலிருந்து சாத்தியமானளவு மூலதன வெளிப்பாய்ச்சல்களைத் தோற்றுவிக்கலாம். தளர்வடைகின்ற புவிசார் அரசியல் பதற்றங்கள் மற்றும் மேம்படுகின்ற முதலீட்டாளர் எண்ணப்பாங்குகள் பற்றிய சமிக்ஞைகளின் பின்னர் நிதியியல் சந்தை தளம்பல் மிதமடைந்த போதிலும், உலகளாவிய சந்தைகள் புதுப்பிக்கப்பட்ட அழுத்த நிகழ்வுகளுக்கு உட்படக்கூடியதாகக் காணப்பட்டன. மேலும், உயர்வான பொதுப்படுகடன் மற்றும் குறுகியகால வழங்கல் மீது அதிகளவு தங்கியிருத்தல் என்பன நாட்டிற்கான பாரிய சந்தைகளில் மீள்நிதியிடல் மற்றும் சந்தைத் திரவத்தன்மை இடர்நேர்வுகள் என்பவற்றை அதிகரித்தன. தொடர்ச்சியான

1 ஐக்கிய அமெரிக்க ஸ்டான்டட் அன்ட் புவர் 500 சுட்டெண்ணில் எதிர்பார்க்கப்பட்ட தளம்பலை அளவிடுகின்ற VIX, யூரோ வலயத்தின் EURO STOXX 50 சுட்டெண்ணில் எதிர்பார்க்கப்படும் தளம்பலை அளவிடுகின்ற VSTOXX, யப்பானின் Nikkei 225 இல் எதிர்பார்க்கப்பட்ட தளம்பல்களை தடமறிகின்ற NKY தளம்பல் சுட்டெண் தீவிரமடைந்த புவிசார் அரசியல் பதற்றக் காலப்பகுதியில் தெளிவாக அவதானிக்கத்தக்களவு அதிகரித்தன.

வரைபடம் 1.9 நீண்டகால அரசாங்க முறி விளைவு வீதங்கள்: 10 ஆண்டு




மூலம்: பெடரல் றிசேர்வ் வங்கியின் செ. லூயிஸ்-பொருளாதார தரவு

புவிசார் அரசியல் இடர்நேர்வுகள், உயர்வடைந்த சொத்து விலைமதிப்பீடுகள், உயர்வடைந்த நாட்டிற்கான படுகடன் மற்றும் பணவீக்கம், நாணயக் கொள்கை என்பவற்றுக்கான தோற்றப்பாட்டைச் சூழ்ந்திருக்கும் நிச்சயமற்றதன்மை என்பன உலகளாவிய இடர்நேர்வு எண்ணப்பாங்கில் எதிர்பாராத மாற்றங்களுக்கான நிலைமைகளைத் தொடர்ந்தும் தோற்றுவித்தன. ஆகையினால், உலகளாவிய இடர்நேர்வு எண்ணப்பாங்கு நீண்டகாலம் மோசமடைதலானது நிதியியல் நிறுவனங்களின் ஐந்தொகை மற்றும் உலகளாவிய நிதியியல் உறுதிப்பாடு என்பவற்றுக்கு சாத்தியமான பாதகமான உள்ளார்ந்தங்களுடன் நாட்டிற்கான முறிச் சந்தைகள், மூலதனப் பாய்ச்சல்கள், செலாவணி வீதங்கள் மற்றும் நிதியிடல் நிலைமைகள் என்பன ஊடாக பரஸ்பரம் மீள்வலிமைப்படும் அழுத்தங்களை தோற்றுவிக்கின்றன. எனவே, அத்தகைய நிகழ்வுகள் செலாவணி வீதம் மற்றும் மூலதனப் பாய்ச்சல் தளம்பலை அதிகரித்து, வெளிநாட்டு முதலீட்டாளர் பங்கேற்பைப் பாதித்து, பாதகமான வெளிநாட்டு நிதியியல் சந்தை கசிவுத்தாக்கங்கள் ஊடாக உள்நாட்டு நிதியியல் நிலைமைகளை இறுக்கமாக்குவதற்குப் பங்களிக்கக்கூடும்.

வரைபடம் 1.10 எம்எஸ்சிஐ பங்கு விலைச்சுட்டெண்கள்




மூலம்: புளும்பேர்க்

## உள்நாட்டு நிதியியல் உறுதிப்பாட்டிற்கான விளைவுகள்

**உலகளாவிய பேரண்டநிதியியல் அபிவிருத்திகள், உள்நாட்டு நிதியியல் துறையின் வெளிநாட்டு இடர்நேர்வுகளை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.** பாதகமான வெளிநாட்டு கசிவுத்தாக்கங்களுக்கு குறிப்பாக வர்த்தகம், மூலதனப் பாய்ச்சல், செலாவணி வீதம், பண்ட விலைகள் போன்ற ஊடுகடத்தல் வழிகள் மூலம் வளர்ந்துவருகின்ற மற்றும் அபிவிருத்தியடைந்துவருகின்ற பொருளாதாரங்கள் பாதிக்கப்படத்தக்கவையாகக் காணப்படுகின்றன. உயர்வான சக்தி மற்றும் பண்ட விலைகள், உலகளாவிய வர்த்தக மற்றும் வழங்கல் சங்கிலிகளுக்கான சாத்தியமான இடையூறுகளுடன் ஒன்றுசேர்ந்து முன்நோக்கிச்செல்லுகையில் உள்நாட்டு பணவீக்க இயக்கவாற்றல்கள், வெளிநாட்டு மீதிகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் என்பவற்றை வெகுவாகப் பாதிக்கலாம். மேலும், ஏற்றுமதியாளர்கள், சுற்றுலா தொடர்பான வியாபாரங்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் போன்றோரின் இலாபத்தன்மை மற்றும் படுகடன் தீர்ப்பனவு இயலளவு என்பவற்றை இது குறைக்கக்கூடும். உயர்வான உணவு மற்றும் எரிபொருள் என்பவற்றுடன் உபயோகச் செலவுகள் வீட்டலகுகளின் செலவிடத்தக்க வருவாயினைக் குறைக்குமாயின் அவர்களின் மீள்செலுத்தல் இயலளவையும் இவ்வபிவிருத்திகள் நலிவடையச்செய்யலாம். இதற்கு மேலதிகமாக, நிதியியல் நிறுவனங்களின் செயற்படாக் கடன்கள் மற்றும் பெறுமதியிழப்பு அறவீடுகளில் குறிப்பாக உலகளாவிய நிச்சயமற்றதன்மை தொடருமாயின் இது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். எவ்வாறிருப்பினும் 2026 மே மாதத்தில் நாணயக் கொள்கை இறுக்கமாக்குதலுடன் பெறுமதிக்கான கடனுடன்[2] தொடர்புபட்ட வழிமுறைகளின் அறிமுகப்படுத்தலுடன் ஒன்றிணைந்து கொடுகடன் விரிவடைதலில் படிப்படியான மிதமடைதலுக்கு பங்களிக்குமென எதிர்பார்க்கப்படுவதுடன் நிதியியல் பாதிக்கப்படும் தன்மைகள் கட்டியெழுப்பப்படுதலை கட்டுப்படுத்துவதற்கு உதவும். அதே சந்தர்ப்பத்தில் பாரிய முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களில் ஒப்பீட்டளவில் கட்டுப்பாடுமிக்க நாணயக் கொள்கை தொடர்ந்திருக்கின்றமை மற்றும் உலகளாவிய முதலீட்டாளர் எண்ணப்பாங்குகளில் மாறுதல் என்பன தொடர்ச்சியான செலாவணி வீத அழுத்தங்கள், இறுக்கமான வெளிநாட்டு நிதியிடல் நிலைமைகள் மற்றும் மூலதனப் பாய்ச்சல்களின் அதிகரித்த தளம்பல் என்பவற்றிற்குப் பங்களித்து, இதன்மூலம் பேரண்டப் பொருளாதார மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டிற்கு சவால்களைத் தோற்றுவிக்கலாம். ஆகையினால், இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளை தொடர்ச்சியாக வலுப்படுத்தல், போதுமான மூலதன மற்றும் திரவத்தன்மை தாங்கியிருப்புக்களைப் பேணுதல் அத்துடன் தோற்றம்பெறுகின்ற இடர்நேர்வுகள் பற்றிய தொடர்ச்சியான கண்காணிப்பு என்பன உள்நாட்டு நிதியியல் துறையின் தாக்குப்பிடிக்குந்தன்மைக்கு ஆதரவளிப்பதிலும் சாத்தியமான வெளிநாட்டு அதிர்வுகளை ஈடுகொடுப்பதற்கான அதன் இயலுமையிலும் முக்கியமானதாக விளங்கும்.

2 பெறுமதிக்கான கடன்களின் மேலதிக விபரங்கள் அத்தியாயம் 5 இல் காணப்படுகின்றன.

## 1.2 உள்நாட்டுப் பேரண்டநிதியியல் நிலைமைகள்

### கொடுகடனின் அபிவிருத்திகள்

**பொருளாதார நடவடிக்கைகளின் தொடர்ச்சியான மீட்சி மற்றும் பெரும்பாலான காலப்பகுதியில் நிலவிய ஒப்பீட்டளவில் தளர்த்தப்பட்ட நாணய நிலைமைகள் என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு, மொத்த உள்நாட்டுக் கொடுகடனானது[3] மீளாய்வுக் காலப்பகுதியில் துரித வேகமொன்றில் விரிவடைந்தது.** எவ்வாறாயினும் மத்திய கிழக்கில் மோதல் தீவிரமடைந்ததனைத் தொடர்ந்து தொழிற்பாட்டுச் சூழல் அதிகளவு சவால்மிக்கதாக மாற்றமடைந்தமையானது உயர்ந்தளவிலான சக்தி மற்றும் பண்ட விலைகள் ஊடாக உயர்வடைந்த உலகளாவிய நிச்சயமற்றதன்மை மற்றும் புதுப்பிக்கப்பட்ட பணவீக்க அழுத்தங்கள் என்பவற்றிற்குப் பங்களித்ததுடன் அதன்மூலம், உள்நாட்டுப் பொருளாதாரத்திற்குக் கசிவுத்தாக்க விளைவுகளை ஏற்படுத்தியது. பெறுமதிக்கான கடன் விகிதங்கள் தொடர்பான பேரண்டமுன்மதியுடைய வழிமுறைகளுடன் இணைந்து 2026 மே மாதத்தில் உள்நாட்டு நாணய நிலைமைகளின் இறுக்கமடையச்செய்தலானது முன்னோக்கிச் செல்கையில் கொடுகடன் வளர்ச்சியினை மிதமடையச்செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகளை உள்ளடக்குகின்ற ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட வைப்புக்களை ஏற்கும் நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட கொடுகடனானது வலுவான வளர்ச்சியினைப் பதிவுசெய்ததுடன் மொத்தக் கொடுகடனின் ஆண்டிற்காண்டு வளர்ச்சியானது உள்நாட்டு நாணய நிலைமைகளின் படிப்படியான இறுக்கமடைதலினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2026 யூன் மாதமளவில் 26.4 சதவீதத்திற்குச் சிறிதளவு மிதமடைவதற்கு முன்னர் 2025 யூனில் 14.0 சதவீதத்திலிருந்து 2026 மாச்சில் 27.9 சதவீதம் கொண்ட உச்சமொன்றிற்குத் துரிதமடைந்தது. மேலும், இக்கொடுகடன் விரிவாக்கமானது குறிப்பாக தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கலிலும் வாகனம் தொடர்பான நிதியளித்தலிலும் அவதானிக்கப்பட்டது. வங்கித்தொழில் துறையானது பாரியளவிலான கடன்வழங்கல் பங்கிற்குத் தொடர்ந்து வகைகூறிய போதிலும், நிதிக் கம்பனிகள் துறை கணிசமானளவு உயர்ந்தளவிலான வளர்ச்சி வீதமொன்றினைப் பதிவுசெய்தமையானது நிதியியல் முறைமை முழுவதும் கொடுகடனில் விரிவாக்கத்திற்குப் பங்களித்தது.

**துரிதக் கொடுகடன் விரிவாக்கமானது நிதியியல் இடையேற்பாட்டிற்கு ஆதரவளித்தபோதிலும், கொடுகடன் வளர்ச்சியின் நிலையான உயர் வேகம் மற்றும் கொடுகடனின் உள்ளமைப்பு என்பன உன்னிப்பான கண்காணிப்பினைத் தேவைப்படுத்துகின்றன.** தற்போதைய பொருளாதார மீட்சிக்கு மத்தியில் கொடுகடன் வளர்ச்சியின் வலுவான உத்வேகமானது நிதியியல் இடையேற்பாட்டிற்கு ஆதரவளித்த வேளையில், கொடுகடனின் நிலையான உயர்ந்தளவிலான விரிவாக்க வேகமானது நிதியியல் துறையினுள் முறைமை இடர்நேர்வுகள் கட்டியெழுப்பப்படுவதற்கான சாத்தியப்பாட்டினை எடுத்துக்காட்டுகின்றது. குறிப்பாக, அதிகரித்தளவிலான கடன்பாட்டாளர் கடன்சுமை, ஒப்பீட்டளவில் இடர்நேர்வுமிக்க பிரிவுகளில் கடன்வழங்கலின் செறிவடைதல், பலவீனமடைகின்ற கொடுகடன் எழுத்துறுதித் தரநியமங்கள் அல்லது நிதியியல் நிறுவனங்களின் மூலமான அதிகரித்தளவிலான இடர்நேர்வு ஏற்றல் ஆகியவற்றுடன் ஒருங்கிணையும் பட்சத்தில் விரைவான கொடுகடன் வளர்ச்சி நீடித்திருக்கும் காலப்பகுதியொன்றானது பாதிக்கப்படக்கூடியதன்மைகளின் கட்டியெழுப்பலொன்றிற்குப் பங்களிக்கும். அதேவேளை, நாணய நிலைமைகளின் இறுக்கமடைதலினைத் தேவைப்படுத்திய அதிகரித்துச் செல்கின்ற உள்நாட்டுப் பணவீக்க மட்டங்கள் வீட்டலகுகள் மற்றும் வியாபாரங்கள் என்பவற்றிற்கான படுகடன் தீர்ப்பனவுச் சுமைகளை அதிகரிக்கக்கூடும். முன்னோக்கிச் செல்கையில், உலகளாவிய பொருளாதாரத் தோற்றப்பாடு, புவிசார் அரசியல் அபிவிருத்திகள், பண்ட விலை ஏற்ற இறக்கங்கள்

3 தனியார் துறை மற்றும் பொதுத் துறை ஆகிய இரண்டிற்கும் வங்கிகளினாலும் நிதிக் கம்பனிகளினாலும் வழங்கப்பட்ட மொத்தக் கொடுகடனினை உள்ளடக்கின்றது.

வரைபடம் 1.11 வங்கிகள் மற்றும் நிதிக்கம்பனிகளின் மொத்த கொடுகடன் வளர்ச்சி




மூலம்: இலங்கை மத்திய வங்கி

மற்றும் உலகளாவிய நிதியியல் நிலைமைகளில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் காலநிலையுடன் தொடர்புடைய இடர்நேர்வு ஆகியவற்றினைச் சூழ்ந்துள்ள தொடர்ச்சியான நிச்சயமற்றதன்மையானது, உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளினையும் கடன்பாட்டாளர் மீள்கொடுப்பனவு இயலாற்றலினையும் பாதகமான முறையில் பாதிக்கக்கூடும். காலநிலையுடன் தொடர்புடைய நிகழ்வுகள் பொருளாதார நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்து, உற்பத்திச் சொத்துக்களிற்குச் சேதத்தினை ஏற்படுத்தி அத்துடன் வீட்டலகு மற்றும் கூட்டாண்மை வருமானங்களைப் பாதகமான முறையில் பாதித்து, படுகடன் தீர்ப்பனவு இயலளவு பலவீனப்படுத்தலை சாத்தியமாக்கலுடன் கொடுகடன் இடர்நேர்வுகளைக் குறிப்பாக, காலநிலை உணர்திறன் வாய்ந்த துறைகளில் அதிகரிக்கச் செய்யக்கூடும். இத்தகைய அபிவிருத்திகள் கொடுகடன் இடர்நேர்வினைத் தீவிரப்படுத்தக்கூடுமென்பதுடன் சொத்துத் தரத்தைக் குறிப்பாக, விரைவான கொடுகடன் விரிவாக்கத்தினை எதிர்கொண்டுள்ள துறைகளில் தாக்கம் செலுத்தக்கூடிய சாத்தியப்பாடு காணப்படுவதுடன் நிதியியல் முறைமை முழுவதிலும் கொடுகடனின் வேகம், உள்ளமைப்பு மற்றும் தரம் என்பவற்றைத் தொடர்ச்சியாகக் கண்காணிப்பதற்கான தேவையினை எடுத்துக்காட்டுகின்றது.

**மீளாய்வுக் காலப்பகுதியில் நிதியியல் நிறுவனங்களின் வெளிப்படுத்துகைகள் தனியார் துறையினை நோக்கித் தொடர்ந்து மீள்சமநிலைப்படுத்தப்பட்டமையானது வலுவான தனியார் துறைக் கொடுகடன் கேள்வியினைப் பிரதிபலித்ததுடன் நிதியியல் இடையேற்பாட்டின் படிப்படியான இயல்புநிலைத்திரும்பலிற்கு ஆதரவளித்தது.** நிதியியல் அளவீட்டுத் (M4) தரவுகளிற்கமைய, கொடுகடனின் இம்மீளாற்றுப்படுத்தலானது மேலதிக உத்வேகத்தினைப் பெற்றதுடன் மொத்த நிதியியல் துறை வெளிப்படுத்துகையில் தனியார் துறை வெளிப்படுத்துகையின் பங்கு 2026 யூன் இறுதியளவில் 61.3 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில், அரசாங்கம் மற்றும் பொதுக் கூட்டாண்மைகளிற்கான வெளிப்படுத்துகையின் பங்கு 38.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இம்மாற்றமானது குறிப்பாகத் தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கல் உள்ளிட்ட தனியாள் கடன்கள் மற்றும் முற்பணங்கள் மற்றும் பணிகள் துறை மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிற்றுறை சார்ந்த துணைத் துறைகளிற்கான அதிகரித்தளவிலான கடன்வழங்கல் ஆகியவற்றிற்கான தனியார் துறைக் கொடுகடன் வெளிப்படுத்துகையின் வலுவான வளர்ச்சியினால் முதன்மையாகத் தூண்டப்பட்டது. மாறாக, அரசாங்கம் மற்றும் பொதுக் கூட்டாண்மைகளிற்கான கொடுகடன் வெளிப்படுத்துகையானது மீளாய்வுக் காலப்பகுதியில் படிப்படியாக வீழ்ச்சியடைந்தது. எனினும், அரசாங்கப் பிணையங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் உள்ளடங்கலாக அரசாங்கம் மற்றும் பொதுக் கூட்டாண்மைகளிற்கான ஒட்டுமொத்த வெளிப்படுத்துகைகள் கணிசமானளவிலானதாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றமையானது இறையாண்மைக்கும் நிதியியல் துறைக்கும் இடையிலான தொடர்ச்சியான இடைத்தொடர்பினை எடுத்துக்காட்டுகின்றது. முன்னோக்கிப் பார்க்கையில், உயர்வடைந்த புவிசார் அரசியல் நிச்சயமற்றதன்மையும் இறைத் துறை அரசிறை மற்றும் செலவினம் என்பன மீதான தொடர்புடைய அழுத்தங்களும் அரசாங்கத்தின் நிதியளிப்புத் தேவைப்பாடுகளை அதிகரிக்கக்கூடுமென்பதுடன் உள்நாட்டு நிதியியல் துறையினை நோக்கிச் குறைவடைந்துவரும் பொதுத் துறைசார் வெளிப்படுத்துகையில் அவதானிக்கப்பட்ட போக்கினைத் திரும்பலடையச்செய்யக்கூடும். நிதியியல் உறுதிப்பாட்டுக் கண்ணோட்டமொன்றில், தனியார் துறையினை நோக்கிய கொடுகடனின் தொடர்ச்சியான மீள்சமநிலைப்படுத்தலானது பொருளாதார நடவடிக்கைகளிற்கு ஆதரவளிக்கக்கூடுமென்ற போதிலும், தனியார் துறைக் கொடுகடன் வளர்ச்சியின் துரித வேகமானது கொடுகடனின் மீளொதுக்கு விஞ்சியளவிலான கடன்பாட்டாளர் கடன்சுமை, பலவீனமடைகின்ற எழுத்துறுதித் தரநியமங்கள் அல்லது துறைசார் கொடுகடன் செறிவடைதல்களின் கட்டியெழுப்பல்

வரைபடம் 1.12 வங்கிகள் மற்றும் நிதிக்கம்பனிகளின் வெளிப்படுத்துகை




மூலம்: இலங்கை மத்திய வங்கி, நிதியியல் அளவீடு (M4)

என்பவற்றிற்குப் பங்களிப்பதில்லை என்பதனை நிச்சயப்படுத்துவதற்காக உன்னிப்பான கண்காணிப்பினைத் தேவைப்படுத்துகின்றது.

## நிதியியல் இடையேற்பாடு மற்றும் கொடுகடன் சுழற்சிவட்டம்

**கொடுகடனில் தொடர்ச்சியான விரிவாக்கத்துடன் மீளாய்வுக் காலப்பகுதியில் நிதியியல் இடையேற்பாடானது வலுவடைந்தது.** வங்கித்தொழில் துறை வைப்பிற்கான கொடுகடன் விகிதமானது 2025இன் முற்பகுதியில் தோற்றம்பெற்ற மேல்நோக்கிய உத்வேகத்தினைப் பேணி, மூன்று ஆண்டுகளில் முதலாவது தடவையாக 2026இன் முற்பகுதியில் 70 சதவீதத்தினை விஞ்சிக் காணப்பட்டதுடன் 2026இன் இரண்டாம் காலாண்டு முடிவில் அதன் நீண்டகாலச் சராசரியினைத் மீறிக் காணப்பட்டது. குறிப்பாக, பரந்தளவில் உறுதியான, மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியுடன் இணைந்து வைப்பிற்கான கொடுகடன் விகிதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பானது நிதியியல் இடையேற்பாடு மற்றும் கொடுகடன் கேள்வி என்பவற்றின் மீட்சி ஒட்டுமொத்த பொருளாதார நடவடிக்கைகளின் மாற்றங்களினைவிட விரைவாக மேம்பட்டதனை எடுத்துக்காட்டுகின்றது. பொருளாதார நடவடிக்கைகளின் தொடர்ச்சியான மீட்சி மற்றும் இக்காலப்பகுதியில் பெரிதும் நிலவிய தளர்த்தப்பட்ட நாணய நிலைமைகள் என்பவற்றிற்கு மத்தியில் கொடுகடன் வளர்ச்சியானது குறிப்பிடத்தக்களவில் துரிதமடைந்தமையினால் இவ்வதிகரிப்பானது கொடுகடன் மற்றும் வைப்பு வளர்ச்சி என்பவற்றிற்கு இடையிலான விரிவடைகின்ற வேறுபாட்டினைப் பிரதிபலித்த வேளையில், வைப்பு வளர்ச்சி ஒப்பீட்டளவில் தொடர்ந்து மிதமடைந்து காணப்பட்டது. இருப்பினும், வைப்பிற்கான கொடுகடன் விகிதமானது அண்மைய பொருளாதார நெருக்கடிக்கு முன்னர் அவதானிக்கப்பட்ட மட்டங்களிற்குக் கீழாகத் தொடர்ந்து காணப்பட்டமையானது 2023 மற்றும் 2024ஆம் ஆண்டு காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட விதிவிலக்குமிக்க மெதுவடைந்த மட்டங்களிலிருந்து நிதியியல் இடையேற்பாட்டின் இயல்புநிலைத்திரும்பலினைத் தற்போதைய அதிகரிப்பு பகுதியளவில் பிரதிபலிப்பதனைக் குறித்துக்காட்டுகின்றது. மேலும், 2026இன் முதலாம் காலாண்டுடன் ஒப்பிடுகையில் கடனுக்கான கேள்வி சில்லறை, கூட்டாண்மை, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சி மற்றும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சித் துறைகளுக்கிடையில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்கள் 2026இன் இரண்டாம் காலாண்டில் மிகவும் மிதமான வேகமொன்றில் தொடர்ந்து வலுவடைந்ததனைக் கொடுகடன் நிரம்பல் அளவீட்டின் பெறுபேறுகள் குறித்துக்காட்டின. கொடுகடன் கேள்வியின் விரிவாக்கமானது பெரும்பாலும் உயர்ந்தளவிலான தொழிற்பாட்டு மூலதனத் தேவைப்பாடுகள், குறுங்காலக் கடன்களிற்கான கேள்வி மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளின் மீளெழுச்சி ஆகியவற்றினால் ஆதரளிக்கப்பட்டது. எவ்வாறாயினும், கடன்வழங்கல் நடவடிக்கை மற்றும் கொடுகடன் கேள்வி ஆகிய இரண்டும் 2026இன் மூன்றாம் காலாண்டில் நேர்க்கணியமாகத் தொடருமென வங்கிகள் எதிர்பார்த்த போதிலும், எதிர்பார்க்கப்படும் பணவீக்க அழுத்தங்கள், உயர்வடைந்து வருகின்ற தொழிற்பாட்டுச் செலவுகள், செலாவணி வீதத் தளம்பல் மற்றும் புவிசார் அரசியல் நிச்சயமற்றதன்மைகள் ஆகியவற்றிற்கு மத்தியில் கடன்வழங்கலிற்கான வங்கிகளின் விருப்பமானது மிகவும் எச்சரிக்கைமிக்க தோற்றப்பாடொன்றினைப் பிரதிபலிக்கின்ற வகையில் மெதுவான வேகமொன்றிலேயே அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. நிதியியல் இடையேற்பாட்டின் மீட்சியானது பொருளாதாரத்தின் நிதியளிப்புத் தேவைகளுக்கு ஆதரவளிக்கின்ற அதேவேளை, கொடுகடன் விரிவாக்கமானது உறுதியான வைப்பு நிதியிடலில் ஏற்படும் வளர்ச்சியினைக் குறிப்பிடத்தக்களவில் தொடர்ந்து விஞ்சிக் காணப்படுமெனில் கொடுகடன் மற்றும் வைப்பு வளர்ச்சிக்கு இடையிலான இடைவெளியின் தொடர்ச்சியான விரிவடைதலானது நிதியிடல் அழுத்தங்களை அதிகரித்து, திரவத்தன்மைத் தாங்கியிருப்புக்களின் படிப்படியான குறைவடைதலொன்றிற்குப் பங்களிக்கக்கூடும்.

வரைபடம் 1.13 வங்கித்தொழில் துறையின் வைப்பிற்கான கொடுகடன் விகிதம்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 1.14 வங்கித் தொழிற்துறையின் வைப்பிற்கான கொடுகடன் விகிதம் எதிர் மொ.உ.உ.ற்பத்தி வளர்ச்சி




மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வரைபடம் 1.15 கொடுகடன் நிரம்பல் அளவீட்டுச் சுட்டெண்களின் அசைவு




*இது கட்டம் 3 கடன்களை பிரதிபலிக்கக்கூடும்

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**தனியார் துறைக் கொடுகடன் சுழற்சிவட்டமானது விரிவடைகின்ற இடைவெளியுடன் விரிவாக்கக் கட்டத்தினுள் தொடர்ந்தும் முன்னேற்றமடைந்தமையானது முறைமைசார் இடர்நேர்வு கட்டியெழுப்பப்படுவதன் சாத்தியப்பாட்டை எடுத்துக்காட்டியது.** முக்கியமாக, பணிகள் துறை மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிற்றுறைத் துணைத் துறைகளிற்கான உயர்ந்தளவிலான கடன்வழங்கலுடன் இணைந்து, வாகன நிதியளித்தல் மற்றும் தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கல் என்பன உள்ளடங்கலாக தனியாள் கடன்களின் பெறத்தக்கவைகளினால் உந்தப்பட்ட கொடுகடனின் வலுவான விரிவாக்கத்தினால் ஆதரவளிக்கப்பட்டு, மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான தனியார் துறைக் கொடுகடன் விகிதமானது இக்காலப்பகுதி முழுவதும் தொடர்ந்து அதிகரித்தது. அதேவேளை, கொடுகடன் இடைவெளியானது நேர்க்கணிய வீச்சினுள் தொடர்ந்தும் காணப்பட்டு, மேலும் விரிவடைந்தமையானது தனியார் துறைக் கொடுகடன் வளர்ச்சி அதன் நீண்டகாலப் போக்கினைத் தொடர்ந்து விஞ்சியிருப்பதனைக் குறித்துக்காட்டியது. நேர்க்கணிய கொடுகடன் இடைவெளியொன்றின் தோற்றப்பாடானது 2022-2024 காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட நீடித்த சுருக்கத்தினைத் தொடர்ந்து கொடுகடன் விரிவாக்கத்தின் மீட்சியுடன் ஒத்திசைந்து காணப்படுகின்ற வேளையில், குறிப்பாக விரைவான தனியார் துறைக் கொடுகடன் வளர்ச்சியுடன் இணைந்து அதன் தொடர்ச்சியான விரிவடைதலானது நிதியியல் உறுதிப்பாட்டுக் கண்ணோட்டமொன்றிலிருந்து உன்னிப்பான கண்காணிப்பினைத் தேவைப்படுத்துகின்றது. கொடுகடனில் அதன் நீண்டகாலப் போக்கிற்குக் மேலாக ஏற்படும் தொடர்ச்சியான குறிப்பிடத்தக்க விரிவடைதலொன்று கடன்பாட்டாளர்களின் வருமானம் மற்றும் மீள்கொடுப்பனவு இயலளவு ஆகியவற்றில் அதற்கேற்ற வளர்ச்சியுடன் இசைந்திருக்காத பட்சத்தில், இது கடன்பாட்டாளர் கடன்சுமையின் கட்டியெழுப்பலொன்றிற்குப் பங்களித்து, இடர்நேர்வு ஏற்பினையும் துறைசார் கொடுகடன் செறிவடைதல்களையும் அதிகரிக்கக்கூடும். இருப்பினும், பெறுமதிக்கான கடனுடன் தொடர்புடைய வழிமுறைகளின் அறிமுகப்படுத்தலுடன் இணைந்து, 2026 மே மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட நாணயக் கொள்கை இறுக்கமாக்கலானது கொடுகடன் விரிவாக்கத்தில் படிப்படியான மிதமடைதலொன்றிற்குப் பங்களிக்குமெனவும் கொடுகடனுடன் தொடர்புடைய பாதிப்படையக்கூடியதன்மைகள் மேலும் கட்டியெழுப்பப்படுவதனைக் கட்டுப்படுத்துமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வழிமுறைகளின் தாக்கங்கள் காலதாமதமொன்றுடன் ஊடுகடத்தப்படுமென எதிர்பார்க்கப்படுவதனால் கொடுகடன் வளர்ச்சியின் வேகம் மற்றும் உள்ளமைப்பு ஆகியவற்றின் மீதான அவற்றின் தாக்கமானது தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்பட வேண்டியதன் தேவையைத் தோற்றுவித்துள்ளது. அதற்கமைய, கொடுகடன் சுழற்சிவட்டத்தின் தொடர்ச்சியான விரிவாக்கமானது தோற்றம்பெற்று வருகின்ற முறைமைசார் பாதிப்படையக்கூடியதன்மைகளை உருவாக்குகின்றதா என்பதனை மதிப்பிடுவதற்குக் கொடுகடன் இயக்கவாற்றல்களின் உன்னிப்பான கண்காணிப்பு முக்கியமானதாகக் காணப்படுகின்றது.

வரைபடம் 1.16 தனியார்துறைக் கொடுகடன் சுழற்சி*




*கொடுகடனுக்கான தரவு நிதியியல் அளவீடு ($M_4$) இலிருந்து பெறப்பட்டது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## சந்தை வட்டி வீதங்களும் விளைவு வீதங்களும்

**2025 காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட பரந்த அடிப்படையிலான தளர்வடைதலினைத் தொடர்ந்து, 2026இன் முதலரைப் பகுதியில் சந்தை வட்டி வீதங்களும் அரசாங்கப் பிணையங்களின் விளைவு வீதங்களும் மேல்நோக்கிச் சீராக்கப்பட்டன.** சந்தை வட்டி வீதங்கள் முக்கியமாக, புவிசார் அரசியல் பதற்றங்களிலிருந்து தோற்றம்பெற்ற உயர்வடைந்த நிச்சயமற்றதன்மை, பணவீக்கத்தின் மீதான சந்தை எதிர்பார்க்கைகள் மற்றும் கொள்கை வட்டி வீதங்கள் இறுக்கமடைதல் என்பவற்றினால் தூண்டப்பட்டு தொடர்ந்தும் மேல்நோக்கிய அழுத்தத்திற்குத் உட்பட்டிருந்தன. நாணயக் கொள்கை இறுக்கமாக்கலிற்குப் பதிலிறுத்தும் விதத்தில் குறுங்கால பணச் சந்தை

வரைபடம் 1.17 கொள்கை வீதம் மற்றும் தெரிவு செய்யப்பட்ட சந்தை வட்டி வீதங்கள்




மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

வரைபடம் 1.19 அரசாங்க பிணையங்களின் இரண்டாந்தர சந்தை விளைவு வளையி




மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

வட்டி வீதங்கள் அதிகரித்த வேளையில், கொள்கை நிலைப்பாட்டின் மாற்றமானது நிதியியல் முறைமையின் ஊடாக ஊடுகடத்தப்பட்டமையினால் கடன்வழங்கல் வீதங்களும் மேலும் சீராக்கப்பட்டன. இம்மேல்நோக்கிய சீராக்கங்களிற்கு மத்தியிலும் சந்தை வட்டி வீதங்கள் நெருக்கடிக்குப் பின்னைய காலத்தில் அவதானிக்கப்பட்ட உயர்வடைந்த மட்டங்களுக்கு நன்கு கீழாகத் தொடர்ந்தும் காணப்பட்டமையானது மீளாய்விற்கு உட்பட்ட காலப்பகுதியில் நிதியளித்தல் நிலைமைகள் நிதியியல் இடையேற்பாட்டிற்கு ஒப்பீட்டளவில் ஆதரவளிக்கின்ற விதத்தில் தொடர்ந்து காணப்பட்டமையினை எடுத்துக்காட்டியது. அதேவேளை, உயர்ந்தளவிலான நிச்சயமற்றதன்மையுடன் இணைந்து, மாற்றமின்றி சந்தை எதிர்பார்க்கைகள் மற்றும் முதலீட்டாளர் மனோபாவங்கள் என்பவற்றிற்கு மத்தியில் அரசாங்கப் பிணையங்களின் விளைவு வீதங்கள் முதிர்வுகள் முழுவதும் அதிகரித்து, விளைவு வளையியின் மேல்நோக்கிய

வரைபடம் 1.18 சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் மற்றும் உண்மை சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம்




மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

நகர்வொன்றிற்குப் பங்களித்தன. மேலும், பணவீக்கம் படிப்படியாக அதிகரித்தமையினால் உண்மை வட்டி வீதங்கள் இக்காலப்பகுதியில் மிதமடைந்தன. இப்பின்னணியில், 2025 மற்றும் 2026இன் முற்பகுதியில் குறிப்பிடத்தக்களவில் வலுவடைந்திருந்த தனியார் துறைக் கொடுகடன் வளர்ச்சியானது நிதியியல் நிலைமைகளின் இறுக்கமாக்கல் மற்றும் வளர்ச்சியடைந்து வருகின்ற பேரண்டநிதியியல் தோற்றவமைப்பு ஆகியவற்றுக்கு மத்தியில், காலப்பகுதியின் பிற்பகுதியில் ஓரளவு மிதமடைதலினைக் காட்டியது. ஒட்டுமொத்தமாக, நிதியியல் சந்தைகளும் நிறுவனங்களும் குறிப்பிடத்தக்க அழுத்த சமிக்ஞைகளின்றி, மாற்றமடைகின்ற வட்டி வீதச் சூழலிற்குத் தொடர்ந்தும் ஒழுங்காக சீரமைந்தன.

## பொருளாதார வளர்ச்சியும் பணவீக்கமும்

**பொருளாதார நடவடிக்கைகளின் தொடர்ச்சியான விரிவாக்கமானது பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டிற்கு ஆதரவளித்ததுடன் வீட்டலகுகள் மற்றும் வியாபாரங்கள் மீதான நிதியியல் அழுத்தங்களினைத் தளர்த்தியது.** இலங்கைப் பொருளாதாரம் 2025இன் இரண்டாம் காலாண்டின் 5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2026இன் இரண்டாம் காலாண்டில் 4.2 சதவீத ஆண்டிற்காண்டு வளர்ச்சியினைப் பதிவுசெய்து அதன் மீட்சி உத்வேகத்தினைத் தொடர்ந்தது. இவ்வளர்ச்சியானது, வேளாண்மைத் துறை சுருக்கமடைந்தமைக்கிடையிலும், கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளிலிருந்தான சாதகமான பங்களிப்புக்களினால் ஆதரவளிக்கப்பட்டது. இத்தொடர்ச்சியான மீட்சியானது வியாபார நம்பிக்கைக்கும் வருமான உருவாக்கத்திற்கும் ஆதரவளித்து அதன்மூலம், வீட்டலகு மற்றும் கூட்டாண்மை என்பவற்றின் ஐந்தொகைகளின் படிப்படியான வலுப்படுத்தலிற்குப் பங்களித்து, நிதியியல் நிறுவனங்களினால் எதிர்கொள்ளப்படுகின்ற தவணைதவறுதல்சார் இடர்நேர்வின் தளர்வடைதலிற்கு ஆதரவளித்துள்ளது. இருப்பினும்,

வரைபடம் 1.20 காலாண்டு மொ.உ.உற்பத்தி வளர்ச்சி




மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வளர்ச்சித் தோற்றப்பாடானது குறிப்பாக மத்திய கிழக்கில் தீவிரமடைந்து வருகின்ற புவிசார் அரசியல் பதற்றங்களினால் தோற்றம்பெற்றுள்ள கீழ்நோக்கிய இடர்நேர்வுகளிற்கு உட்பட்டுக் காணப்படுவதுடன், இது உயர்ந்தளவிலான எண்ணெய் விலைகள், அதிகரித்த கப்பலேற்றல் கட்டணங்கள், பலவீனமான வெளிநாட்டுக் கேள்வி மற்றும் உயர்வடைந்த நிச்சயமற்றதன்மை ஆகியவற்றின் ஊடாக பொருளாதார நடவடிக்கைகளில் பாதகமாகத் தாக்கம் செலுத்தக்கூடும். 2026இன் முற்பகுதியில் எதிர்கொள்ளப்பட்ட வெப்ப அலைகள் மற்றும் எல் நினோ நிலைமைகளின் சாத்தியமான தோற்றப்பாடு என்பன உள்ளிட்ட பாதகமான வானிலை நிலைமைகளும் வேளாண்மை உற்பத்தி, வலு நிரம்பல் மற்றும் பரந்தளவிலான பொருளாதார நடவடிக்கைகள் ஆகியவற்றில் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடும். எவ்வாறாயினும், முன்னோக்கிச் செல்கையில் தனியார் துறைக் கொடுகடனின் தொடர்ச்சியான விரிவாக்கம் மற்றும் உறுதியான உள்நாட்டுக் கேள்வி என்பன பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவினை வழங்கக்கூடும்.

**பணவீக்க அழுத்தங்களில் ஏற்பட்டுள்ள அண்மைய அதிகரிப்பானது வீட்டலகுகள் மற்றும் நிறுவனங்கள் மீதான நிதியியல்சார் பாதிப்பினை அதிகரித்து, அதன்மூலம் நிதியியல் துறைக்கு எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.** தொடர்ச்சியாக பதினொரு மாதகாலங்கள் நிலவிய பணச்சுருக்கத்தினைத் தொடர்ந்து, பணவீக்கமானது 2025 ஓகத்தில் நேர்க்கணிய வீச்சிற்குத் திரும்பலடைந்ததுடன் அதன்பின்னர் துரிதமடைந்து 2026 ஏப்பிறல் மாதத்திலிருந்து மத்திய வங்கியின் 5 சதவீத இலக்கினை விஞ்சிக் காணப்பட்டது. முதன்மைப் பணவீக்கமானது ஏனைய விலைச் சீராக்கங்களுடன் இணைந்து, மத்திய கிழக்கில் நிலவும் மோதல்களிற்கு மத்தியில் உயர்ந்தளவிலான உள்நாட்டு சக்தி மற்றும் எரிபொருள் விலைகளின் ஊடுகடத்தலினைப் பிரதிபலித்து 2025 இறுதியில் 2.1 சதவீதத்திலிருந்து 2026 யூலை மாதமளவில் 7.3 சதவீதத்திற்கு அதிகரித்து, இலக்கின் உயர்ந்த எல்லைக்கு மேலாக அதிகரித்தது. பொருளாதார நடவடிக்கைகளின் தொடர்ச்சியான மீட்சியானது வருமான உருவாக்கலிற்கும் மீள்கொடுப்பனவு இயலளவிற்கும் ஆதரவளித்துள்ள வேளையில், உயர்வடைந்து வருகின்ற விலை மட்டங்கள் உண்மை வருமானங்களைக் குறைவடையச்செய்து, குறிப்பாக விரைவான கொடுகடன் வளர்ச்சிப் பின்னணியில், வீட்டலகு மற்றும் கூட்டாண்மை என்பவற்றின் ஐந்தொகைகள் மீது அழுத்தத்தை ஏற்படுத்தக்கூடும். 2025இன் நடுப்பகுதியிலிருந்து உண்மைக் கூலிச் சுட்டெண்களில் படிப்படியான மீட்சி காணப்பட்ட போதிலும், 2026இன் இரண்டாம் காலாண்டில் அவதானிக்கப்பட்ட சிறியளவிலான வீழ்ச்சியானது புதுப்பிக்கப்பட்ட பணவீக்க அழுத்தங்களிற்கு மத்தியில் வீட்டலகின் கொள்வனவுச் சக்தி மீதான தோற்றம்பெற்று வருகின்ற அழுத்தங்களைக் குறித்துக்காட்டுகின்றது. மேலும், பணவீக்கமானது நடுத்தர காலத்தில் படிப்படியாக ஏறத்தாழ 5 சதவீதத்தினையடைந்து உறுதிநிலைப்படுவதற்கு

வரைபடம் 1.21 முதன்மை பணவீக்கம் மற்றும் உள்நாட்டு எண்ணெய் விலைகள்




மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்

வரைபடம் 1.22 தொழிலின்மை வீதம் மற்றும் கூலி வீதச் சுட்டெண்கள்




மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனம்

வரைபடம் 1.23 உண்மைச் சொத்து விலைகள் மற்றும் கடன்வழங்கல் வீதங்கள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

முன்னர், அண்மைக் காலத்தில் இலக்கிற்கு மேலாகக் காணப்படுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. மேலும், புவிசார் அரசியல் பதற்றங்கள், உயர்ந்தளவிலான சக்தி மற்றும் கப்பலேற்றல் கட்டணங்கள், வலுவான உள்நாட்டுக் கேள்வி, செலாவணி வீத அழுத்தங்கள் மற்றும் குறிப்பாக எல் நினோ தாக்கத்தினால் ஏற்படும் பாதகமான வானிலை நிலைமைகள் ஆகியவற்றிலிருந்து தோற்றம்பெறுகின்ற மேல்நோக்கிய இடர்நேர்வுகளுடன் பணவீக்கத் தோற்றப்பாடு உயர்வடைந்த நிச்சயமற்றதன்மைக்கு உட்பட்டதாகக் காணப்படுகின்றது. எனவே, உயர்வடைந்த பணவீக்கம் நீண்டகாலத்திற்கு இருக்குமாயின் வீட்டலகுகள் மற்றும் நிறுவனங்கள் ஆகிய இரண்டினதும் படுகடன் தீர்ப்பனவு இயலளவினை மேலும் பலவீனப்படுத்தி, அதன்மூலம் நிதியியல் துறையினுள் சொத்துத் தரத்திற்குச் சவால்களைத் தோற்றுவிக்கக்கூடும்.

## உண்மைச் சொத்துத் துறை

**உண்மைச் சொத்து நடவடிக்கைகளிற்கான வங்கித்தொழில் துறையின் அதிகரித்துச் செல்கின்ற வெளிப்படுத்துகையுடன் இணைந்து, உண்மைச் சொத்து விலைகளின் தொடர்ச்சியான மேல்நோக்கிய போக்கானது தொடர்ச்சியான கண்காணிப்பினைத் தேவைப்படுத்துகின்றது.** கொழும்பு மாவட்டத்தில் நிலங்கள், வீடுகள் மற்றும் தொடர்மாடிக் குடியிருப்புகளிற்கான கோரல் விலைச் சுட்டெண்கள் இக்காலப்பகுதியில் தொடர்ந்து அதிகரித்ததுடன் இம்மூன்று சுட்டெண்களும் 2019 ஆண்டிலிருந்து அவற்றின் மிகவும் உயர்வடைந்த மட்டங்களை எட்டின. விலைகளில் ஏற்பட்டுள்ள மேல்நோக்கிய அசைவானது ஒப்பீட்டளவில் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைமைகளிற்கு மத்தியில் குறைந்தளவிலான கடன்பாட்டுச் செலவுகளினால் ஆதரவளிக்கப்பட்டு மேம்படுகின்ற பொருளாதார நடவடிக்கை, உயர்வடைந்த கட்டடவாக்கச் செலவுகள் மற்றும் உண்மைச் சொத்துக்களிற்கான தொடர்ச்சியான கேள்வி ஆகியவற்றைப் பிரதிபலிக்கின்றது. இருப்பினும், ஆதனப் பெறுமதிகளிலுள்ள தொடர்ச்சியான அதிகரிப்பானது சந்தைச் சமநிலையின்மைகளின் சாத்தியமான இடர்நேர்வுகளினைக் கருத்திற்கொண்டு தொடர்ச்சியான கவனம் செலுத்தலிற்கான தேவையினை எடுத்துக்காட்டுகின்றது. அதேவேளை, உண்மைச் சொத்துடன் தொடர்புடைய நடவடிக்கைகளிற்கான வங்கித்தொழில் துறையின் வெளிப்படுத்துகையானது உயர்வடைந்து காணப்பட்டதுடன் துறைக்கு வழங்கப்பட்ட கடன்கள் 2026 யூன் மாத இறுதியளவில் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களில் 13.7 சதவீதத்திற்கு வகைகூறின. உண்மைச் சொத்துத் துறைக் கடன்வழங்கலின் விரிவாக்கமானது முதன்மையாக குடியிருப்புசார் உண்மைச் சொத்து நடவடிக்கைகளினால் தூண்டப்பட்ட வேளையில், குடியிருப்பல்லாத உண்மைச் சொத்து நடவடிக்கைகளிற்கான கடன்வழங்கல் சுருக்கமொன்றினைப் பதிவுசெய்தது. இருப்பினும், துறையின் கட்டம் 3 கடன்கள் விகிதம் ஓர் ஆண்டிற்கு முன்னைய 14.0 சதவீதத்திலிருந்து 2026 யூன் மாத

வரைபடம் 1.24 உண்மைச் சொத்துத்துறைக்கான வங்கித்தொழில் துறை வெளிப்படுத்துகை




(அ)காணி கொள்வனவு, அனைத்து வகையான குடியிருப்புக் கட்டடங்களைக் நிர்மாணித்தல் மற்றும் அபிவிருத்திசெய்தல் அல்லது ஏற்கனவேயுள்ள குடியிருப்புக் கட்டமைப்புக்களை மீள்வடிவமைத்தல் மற்றும் புனரமைத்தல், அனைத்து வகையான குடியிருப்பல்லாத கட்டடங்களை நிர்மாணித்தல், அபிவிருத்தி செய்தல் அல்லது புனரமைத்தல் அல்லது அத்தகைய கட்டமைப்புக்களை மீள்வடிவமைத்தல் மற்றும் புனரமைத்தல், சொந்தமான அல்லது குத்தகைக்கு விடப்பட்ட ஆதனங்களுடன் தொடர்மாடிக் குடியிருப்புச் செயற்றிட்டங்களை அபிவிருத்திசெய்தல் உள்ளடங்கலாக உண்மைச் சொத்து நடவடிக்கைகள் மற்றும் ஏனைய கட்டுமான நடவடிக்கைகள் என்பவற்றிற்காக வழங்கப்பட்ட கடன்களினை இது உள்ளடக்கின்றது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

இறுதியளவில் 10.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமையானது கொடுகடன் விரிவாக்கத்திற்கு மத்தியில் சொத்துத் தரத்தில் முன்னேற்றமொன்றினைக் குறித்துக்காட்டியது. உண்மைச் சொத்துச் சந்தைக்கும் வங்கித்தொழில் துறைக்கும் இடையிலான இணைப்புக்களினைக் கருத்திற்கொள்கையில், ஆதன விலைகளில் ஏற்படும் சடுதியான திருத்தமொன்று பிணையுறுதிப் பெறுமதிகளையும் கடன்பாட்டாளர் மீள்கொடுப்பனவு இயலளவினையும் பாதகமாகப் பாதித்து, நிதியியல் உறுதிப்பாட்டிற்கு எதிர்மறையான கசிவுத்தாக்க இடர்நேர்வுகளை உருவாக்கக்கூடும்.

### பிணையுறுதிச் சொத்து விலைகள்

**புவிசார் அரசியல் பதற்றங்களுடன் இணைந்து தங்கச் சந்தையில் நிலவிய தளம்பலானது நிதியியல் உறுதிப்பாட்டிற்குத் தொடர்ந்தும் சவால்களினைத் தோற்றுவித்தது.** உயர்வடைந்த சந்தை நடவடிக்கைகளிற்கு மத்தியில், 2025இன் இரண்டாம் அரைப்பகுதி மற்றும் 2026இன் முற்பகுதியில் தங்கத்தின் விலைகள்[4] வலுவாக அதிகரித்து, 2026 சனவரி மாத இறுதியில் பவுனொன்றிற்கு ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1,393 தொகையிலான உச்சமொன்றினை எட்டின. அதனைத்தொடர்ந்து, குறிப்பிடத்தக்க ஏற்ற இறக்கங்களிற்குப் பிறகு, தங்கத்தின் விலைகள் திருத்தப்பட்டதுடன் தளம்பல்தன்மையுடன் காணப்பட்டன. தங்கத்தின் விலைகள் 2026 ஓகத்து இறுதியளவில் பவுனொன்றிற்கு ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1,141 தொகைக்குச் சரிவடைந்து, மேலதிக விலைச் சீராக்கங்களிலிருந்து, கணிசமானளவிலான தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கல் வெளிப்படுத்துகைகளைக் கொண்டுள்ள நிறுவனங்களிற்கு ஏற்படக்கூடிய சாத்தியமான இடர்நேர்வுகளினை எடுத்துக்காட்டின. குறிப்பாக, தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கலின் வலுவான வளர்ச்சியினைக் கருத்திற்கொண்டு, தங்கத்தின் விலைகளில் ஏற்படும் மேலதிக திருத்தங்கள் பிணையுறுதிப் பெறுமதிகளைப் பலவீனப்படுத்தி, சொத்துத் தரம் சார்ந்த இடர்நேர்வுகளை அதிகரிக்கக்கூடும். மேலும், தற்போதைய புவிசார் அரசியல் பதற்றங்கள் உயர்ந்தளவிலான சக்தி விலைகளிற்கும் நிரம்பல் சங்கிலி இடையூறுகளிற்கும் வழிவகுத்து, குறிப்பாக போக்குவரத்து, சுற்றுலா மற்றும் வர்த்தகத்துடன் தொடர்புடைய துறைகளில் வீட்டலகு மற்றும் வியாபாரங்களின் வருமானங்கள் மீது அழுத்தத்தை ஏற்படுத்தி, அதன்மூலம் படுகடன் தீர்ப்பனவு இயலளவினைப் பாதிக்கலாம். இவ்விடர்நேர்வுகளை அடையாளங்கண்டு, விஞ்சியளவிலான இடர்நேர்வு ஏற்பினைக் கட்டுப்படுத்துவதனையும் சொத்து விலைத் தளம்பலிலிருந்து எழுகின்ற பாதிப்படையக்கூடியதன்மைகளைத் தணிப்பதனையும் நோக்காகக் கொண்டு, தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கல் மீதான பெறுமதிக்கான கடன் விகிதக் கட்டுப்பாடுகள் உள்ளடங்கலாக இலக்கிடப்பட்ட பேரண்டமுன்மதியுடைய வழிமுறைகளை மத்திய வங்கி நடைமுறைப்படுத்தியுள்ளது.

### வெளிநாட்டுத் துறை

**இலங்கையின் வெளிநாட்டுத் துறையானது பாதகமான உலகளாவிய அபிவிருத்திகளுக்குத் தொடர்ந்தும் பாதிக்கப்படக்கூடியதாகக் காணப்பட்டு, நிதியியல் துறைக்குக் கசிவுத் தாக்கங்களினைத் தோற்றுவித்தது.** தேறிய சக்தி இறக்குமதி செய்கின்ற பொருளாதாரத்தினைக் கொண்ட நாடொன்றாக விளங்கும் இலங்கை குறிப்பாக, உலகளாவிய எண்ணெய் மற்றும் ஏனைய பண்ட விலைகளில் அதிகரிப்பினை எதிர்கொண்டதுடன் இது உயர்ந்தளவிலான வாகன இறக்குமதிகளுடன் இணைந்து, உயர்ந்தளவிலான இறக்குமதிப் பட்டியலொன்றின் ஊடாக வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறையின் விரிவடைதலிற்குப் பங்களித்தது. எவ்வாறாயினும் வாகனங்கள் தொடர்பான கடன்வழங்கல் மீது அறிமுகப்படுத்தப்பட்ட பெறுமதிக்கான கடன் எல்லைகள் வாகன இறக்குமதிகளுக்கான கொடுகடன் கேள்வியினை

4 தங்கச் சவரன் விலைகள் பு;ம்பர்க் தங்கத்தின் விலையிலிருந்து (ஐ.அ.டொலர்.்.டிராய் அவுன்ஸ்) பெற்றுக்கொள்ளப்பட்டு, கிராம்களாக மாற்றப்படுவதுடன் 8 கிராம் கொண்ட நியம சவரனின் நிறைக்கு ஏற்ப சீராக்கப்படுகின்றன.

வரைபடம் 1.25 தங்க விலைகளின் ஏற்ற இறக்கங்கள்*




*தங்கத்தின் விலையானது வியாபார நாளின் தொடக்கத்தில் புளூம்பெர்க்கில் ஐக்கிய அமெரிக்க டொலர்களில் குறிப்பிடப்படுகின்ற டிராய் அவுன்ஸொன்றிற்கான தங்கத்தின் விலையையும் குறிகாட்டி ஐக்கிய அமெரிக்க டொலர் உடனடிச் செலாவணி வீதத்தையும் (ஐக்கிய அமெரிக்க டொலரொன்றிற்கான இலங்கை ரூபா) அடிப்படையாகக் கொண்டு பெறப்படுகிறது.

மூலம்: புளூம்பெர்க்

வரைபடம் 1.26 வெளிநாட்டு மீதிகள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

மிதமடையச்செய்யத் துணைபுரிந்து, அதன்மூலம் இறக்குமதிச் செலவினம் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிக் கேள்வி மீதான தொடர்புடைய அழுத்தங்களைக் கட்டுப்படுத்தி, வெளிநாட்டுத் துறைப் பாதிப்படையக்கூடிய தன்மைகளைத் தணிப்பதற்கு ஓரளவு ஆதரவளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, பலவீனமான உலகளாவிய வளர்ச்சி மற்றும் வர்த்தகக் கூறாக்கல் என்பன வணிகப்பொருட்கள் ஏற்றுமதி வருவாய்களையும் ஏனைய வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களையும் கட்டுப்படுத்திய வேளையில், உயர்வடைந்த புவிசார் அரசியல் நிச்சயமற்றதன்மையானது சுற்றுலாத்துறையிலிருந்தான பெறுகைகளையும் முதலீட்டாளர் பாய்ச்சல்களையும் பாதிப்படையச்செய்தது. இருப்பினும், சுற்றுலாத்துறை மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள் ஆகியவற்றிலிருந்தான தொடர்ச்சியான உட்பாய்ச்சல்கள் வெளிநாட்டு அழுத்தங்களுக்கு எதிராக முக்கியமான தாங்கியிருப்பொன்றினை வழங்கியதுடன் வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மைக்கு ஆதரவளிக்கத் துணைபுரிந்தன. ஆதலால், வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு நலிவடைந்தமைக்கு மத்தியில், வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குத் திரட்சி மிதமடைந்ததுடன் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2026 யூலை இறுதியளவில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 6.6 பில்லியன் தொகையில் உறுதிநிலைப்படுத்தப்பட்ட வேளையில், ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிரான இலங்கை ரூபாவின் பெறுமதித்தேய்வின் மூலம் பிரதிபலிக்கப்பட்டவாறு உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் அழுத்தங்கள் அதிகரித்தன. அதற்கமைய, உள்நாட்டு நாணயத்தின் பெறுமதித்தேய்வுடன் இணைந்து உயர்வடைந்து வருகின்ற இறக்குமதிச் செலவானது இறக்குமதிசெய்யப்பட்ட பணவீக்கத்தினையும் வெளிநாட்டு நாணய நிதியிடல் செலவுகளையும் அதிகரித்த வேளையில், இடர்நேர்வைத் தணிக்கும் நாணய நிலைமைகள் இல்லாத வெளிநாட்டு நாணயக் கடன்பாட்டாளர்களின் படுகடன் தீர்ப்பனவுச் சுமைகளை உயர்வடையச் செய்தது.

## இறைத் துறை

**இறைச் செயலாற்றத்தில் ஏற்பட்டுள்ள தொடர்ச்சியான மேம்பாடுகள் பரந்தளவிலான பொருளாதார மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டிற்கு ஆதரவளித்தன.** முதன்மையாக பெறுமதி கூட்டப்பட்ட வரி, கலால் தீர்வைகள், இறக்குமதியுடன் தொடர்புடைய வரிகள் மற்றும் வருமான வரிகள் ஆகியவற்றிலிருந்தான வலுவான வரி அரசிறைச் சேகரிப்புக்களினால் தூண்டப்பட்டு, 2026இன் முதலரைப் பகுதியில் அரசிறையானது தொடர்ந்து உறுதியாகக் காணப்பட்டது. இவ்வதிகரிப்பானது வரிக் கொள்கை வழிமுறைகளின் தாக்கங்கள், மேம்பட்ட வரி நிர்வாகம், வலுவடைகின்ற பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் வலுவான வாகன இறக்குமதிகள் ஆகியவற்றைப் பிரதிபலித்தது. அதேவேளை, மானியங்கள், மாற்றல்கள், சம்பளங்கள் மற்றும் கூலிகள் மற்றும் மூலதனச் செலவிடல் ஆகியவற்றில் அதிகரிப்புக்கள் ஏற்பட்ட போதிலும், அரசாங்கச் செலவினத்தில் வளர்ச்சியானது ஒப்பீட்டளவில் மிதமடைந்து காணப்பட்டது. இதன் விளைவொன்றாக, முக்கிய இறை மீதிகள் மேலும் மேம்பட்டதுடன் இக்காலப்பகுதியில் கணிசமானளவிலான முதன்மை மற்றும் நடைமுறைக் கணக்கு மிகைகள் பதிவுசெய்யப்பட்டன. இறைச் செயலாற்றத்தின் தொடர்ச்சியான வலுவடைதலானது உள்நாட்டு நிதியளித்தல் மீதான அரசாரங்கத்தின் தங்கியிருப்பினைக் குறைத்து, உள்நாட்டு நிதியியல் துறை மீதான சாத்தியமான அழுத்தங்களைத் தளர்த்தியது. அதற்கமைய, அரசாங்கம் 2026இன் முதலரைப்பகுதியில் உள்நாட்டு நிதியளித்தலில் தேறிய மீள்கொடுப்பனவொன்றினைப் பதிவுசெய்து,

வரைபடம் 1.27 அரசாங்கத்திற்கு நிதியளித்தல்




மூலம்: நிதி அமைச்சு, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி

சிறப்பு குறிப்பு 1

## அதிகரித்துவரும் காலநிலை இடர்நேர்வுகள்: நிதியியல் முறைமை உறுதிப்பாடு தொடர்பில் வளர்ந்துவருமொரு கரிசனை

### அறிமுகம்

நாட்டினைக் கடுமையாக பாதித்துவரும் சமகால காலநிலை நிகழ்வுகள், எதிர்காலத்தில் இதுபோன்ற நிகழ்வுகள் மீண்டும் மீண்டும் நிகழ்வதால் ஏற்படக்கூடிய பொருளாதாரத் தாக்கம் குறித்த கலந்துரையாடலை தோற்றுவித்துள்ளன. எந்தவொரு காலநிலைசார்ந்த பேரழிவும் உற்பத்தியைப் பாதித்து, பொது விலை மட்டத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தி விலை உறுதிப்பாடு பற்றிய கரிசனைகளை தோற்றுவிக்கலாம் என்பதோடு இது நிதியியல் முறைமை உறுதிப்பாட்டின் மீதும் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தக்கூடும். இலங்கையை பொறுத்தவரையில், ஏற்பட்டுள்ள அண்மைய அனுபவங்கள், ஏற்படக்கூடிய எந்தவொரு சாத்தியமான அதிர்வுகளின் தீவிரத்தை மிகவும் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. உலக வங்கியின் உலகளாவிய துரித சேத மதிப்பீட்டிற்கமைவாக (புசுயுனுநு), 2025 நவெம்பரில் இலங்கையைத் தாக்கிய டித்வா புயலானது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஏறத்தாழ 4 சதவீதத்திற்கு சமமான, ஐ.அ.டொலர் 4.1 பில்லியன் மதிப்பிலான பௌதீக ரீதியிலான சேதங்களை ஏற்படுத்தியது. இப்புள்ளிவிபரங்கள், நேரடியான பௌதீகச் சேதங்களை மாத்திரமே குறிப்பதுடன் பரந்தளவிலான வருமானம், உற்பத்தி மற்றும் மீட்சியடைவதில் ஏற்படும் இழப்புக்கள் இதில் உள்ளடக்கப்படவில்லை.

தற்போதைய சூழலில், 2026 செத்தெம்பர் தொடக்கம் 2026 நவெம்பர் வரையான காலப்பகுதியினைத்தொடர்ந்து 2026 நவெம்பர் தொடக்கம் 2027 சனவரி வரையிலான காலப்பகுதியிலும் மிகத்தீவிரமான "எல்-நினோ" நிகழ்வு உருவாகுவதற்கு 90 சதவீத வாய்ப்புள்ளதாக இலங்கை வளிமண்டல ஆராய்ச்சித் திணைக்களம் உத்தியோகபூர்வமாக எதிர்வுகூறியுள்ளது. இது ஆரம்பத்தில், 2015-2016 அல்லது 2023-2024 போன்ற காலப்பகுதிகளில் ஏற்பட்ட எல்-நினோ நிகழ்வுகளை விட மிகவும் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தலாம் என்பதுடன் குறிப்பாக நெற் பயிர்செய்கை, ஏனைய வேளாண்மை, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சி துறைகளின் உற்பத்திக்களில் தாக்கத்தினை ஏற்படுத்தலாம்.

இக்காலநிலை நிகழ்வுகள், குறிப்பாக பௌதீக ரீதியிலான இடர்நேர்வுகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய சாத்தியமான நிலைமாறுதல்சார் இடர்நேர்வுகள் என்பன மூலம் நிதியியல் உறுதிப்பாட்டிற்கு அதிகரித்துவரும் இடர்நேர்வுகளை ஏற்படுத்துகின்றன. வெள்ளப்பெருக்குகள், புயல், வறட்சி, கடுமையான வெப்பநிலை மற்றும் கடல் மட்ட உயர்வு போன்ற காலநிலையுடன் தொடர்புடைய நிகழ்வுகள் மற்றும் நீண்டகால மாற்றங்கள் என்பவற்றினால் பௌதீக ரீதியிலான இடர்நேர்வுகள் ஏற்படுகின்ற அதேவேளை காலநிலை மாற்றத்தின் பின்னணியில் குறைந்த காபன் பொருளாதாரத்தை நோக்கிய மாற்றத்தின் போது உருவாகும் காலநிலை கொள்கைகள், தொழில்நுட்பங்கள், சந்தைகள் மற்றும் வாடிக்கையாளர் விருப்புக்கள் போன்றவற்றில் ஏற்படும் மாற்றங்களினால் நிலைமாறுதல்சார் இடர்நேர்வுகள் உருவாகின்றன. இவ்விரண்டு இடர்நேர்வுகளும் பொருளாதார நடவடிக்கை, நிதியியல் நிறுவனங்கள் மற்றும் நிதியியல் சந்தைகள் போன்றவற்றை கடுமையாக பாதிக்கலாம்.

இதற்கமைவாக, கொடுகடன், சந்தை, திரவத்தன்மை, தொழிற்பாட்டு அதேபோன்று காப்புறுதி மற்றும் நாட்டிற்கான இடர்நேர்வுகள் போன்றன உள்ளடங்கலாக மரபுசார்ந்த நிதியியல் இடர்நேர்வுகளின் அனைத்துப் பிரிவுகளையும் ஊடுருவிச் செல்லும் காரணியாக காலநிலை இடர்நேர்வு இனிவரும் காலங்களில் பெருமளவில் கருத்தப்பட வேண்டும். இதேபோன்று, காலநிலை இடர்நேர்வை ஏற்படுத்தும் உந்துசக்திகள் தனிப்பட்ட வங்கிகளின் பாதுகாப்பினையும் ஆற்றல்வாய்ந்த தன்மையினையும் பாதித்து, பரந்தளவிலான நிதியியல் உறுதிப்பாட்டு தாக்கங்களையும் ஏற்படுத்தக்கூடும் என்பதையும் வங்கித்தொழில் மேற்பார்வை மீதான பாசல் குழு அடையாளங்காண்கின்றது .

### காலநிலை நிகழ்வானது நிதியியல் உறுதிப்பாட்டு கரிசனையாக எவ்வாறு ஊடுகடத்தப்படுகின்றது

பொருளாதாரத்தின் பன்முகத் துறைகளை உள்ளடக்கிய பல்வேறு ஒன்றுடனொன்று தொடர்புடைய வழிகளினூடாக காலநிலையுடன் தொடர்புடைய இடர்நேர்வுகள் நிதியியல் முறைமைக்கு ஊடுகடத்தப்படலாம்.

வரைபடம் 1 காலநிலை இடர்நேர்வுகள் நிதியியல் உறுதிப்பாட்டிற்கு ஊடுகடத்தப்படும் வழிகள்




மூலம்: நிதியியல் முறைமையினை பசுமையாக்குவதற்கான வலையமைப்பு (NGFS)

இலங்கையின் பின்னணியில் பார்க்கும் போது, காலநிலைசார்ந்த அதிர்வுகள் குறிப்பாக, வேளாண்மை வீட்டலகுகள், சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகள் மற்றும் அனர்த்தம் நேரக்கூடிய பகுதிகளிலுள்ள வியாபாரங்கள் போன்ற காலநிலையினால் பாதிக்கப்படக்கூடிய கடன்பாட்டாளர்களின் வருமானத்தையும் மீள்கொடுப்பனவு இயலாற்றலையும் குறைக்கக்கூடும். மட்டுப்படுத்தப்பட்ட நிதியியல் தாங்கிருப்புக்கள் உயர்ந்தளவான நிலுவைகள், மறுசீரமைப்புக்கள் மற்றும் செலுத்தத் தவறுதல்களுக்கு வழிவகுக்கக்கூடிய அதேவேளை பிணையுறுதியளிக்கப்பட்ட சொத்துக்களின் சேதம் சாத்தியமான கொடுகடன் இழப்புக்களை மேலும் தீவிரப்படுத்தலாம். எடுத்துக்காட்டாக, தொடர்ச்சியான வெள்ளப்பெருக்கு மற்றும் கடலோரப் பகுதிசார்ந்த அனர்த்தங்கள் அத்தகைய பகுதிகளில் அமைந்துள்ள ஆதனங்களின் சந்தைப்படுத்தக்கூடிய தன்மையையும் பெறுமதியையும் குறைக்கலாம். இதன்விளைவாக, கடன்பாட்டாளர் தொடக்கத்தில் கடனைத் தவறாமல் செலுத்தி வந்தபோதும், பிணையுறுதியின் தரம் வீழ்ச்சியடையும் பட்சத்தில், எதிர்காலத்தில் அவர் கடனைச் செலுத்தத் தவறும் சந்தர்ப்பமொன்றில், வங்கிக்கு ஏற்படக்கூடிய சாத்தியமான இழப்பு மேலும் அதிகரிக்கக்கூடும்.

மறுபுறம், இயற்கை பேரழிவுகள் அடிக்கடி நிகழ்வதும் அவற்றின் தீவரத்தன்மை அதிகரிப்பதும் உயர்ந்தளவான காப்புறுதிக் கோரிக்கைகள், உயர்ந்தளவுக் கட்டுப்பணங்கள் மற்றும் காப்புறுதி காப்பீட்டின் கிடைப்பனவு குறைவடைதல் போன்ற விளைவுகளுக்கு வழிவகுக்கக்கூடும். காப்புறுதி பாதுகாப்பு இடைவெளி விரிவடைதலானது வீட்டலகுகள், நிறுவனங்கள், அரசாங்கங்கள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் போன்றவற்றினால் ஏற்க வேண்டிய இழப்புக்களின் பகுதியையும் அதிகரிக்கச்செய்யும். முன்னேற்றமடைந்துவரும் பொருளாதாரங்களில், பொதுவாக 80 சதவீதம் - 90 சதவீதம் கொண்ட பேரழிவு இழப்புகள் காப்பீடு செய்யப்படாமலேயே காணப்படுவதாக சுவிஸ் ரீ நிறுவகம் மதிப்பீடு செய்துள்ளதுடன் ஒப்பீட்டளவில் குறைந்த காப்புறுதி ஊடுருவலுள்ள நாடுகளில் இவ்வழியின் சாத்தியமான முக்கியத்துவத்தை இது எடுத்துக்காட்டுகின்றது.

உயர் அனர்த்தத்துடன் தொடர்புடைய செலவினம், நலிவடைந்த அரசிறைகள் மற்றும் மீட்பு காலகட்டத்தில் அதிகரிக்கும் இறக்குமதிகள் போன்றவற்றினூடாக காலநிலை அதிர்வுகள் இறை மற்றும் வெளிநாட்டுத் துறை அழுத்தங்களையும் அதிகரிக்கச் செய்யும். வேளாண்மை, சக்தி, போக்குவரத்து மற்றும் உணவு வழங்கல்கள் போன்றவற்றுக்கு தடங்கல்களை ஏற்படுத்துவதன் மூலம் இவை பணவீக்க அழுத்தங்களையும் உருவாக்குவதோடு இதன்மூலம் வீட்டலகு கொள்வனவுச் சக்தி குறைவடையும், கூட்டாண்மை இலாபத்தன்மையை சுருங்கும் கடன்பெறுவதற்கான செலவினை அதிகரிக்கச்செய்யும் வகையில் வழிவகுக்கின்றது மற்றும் நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல் சிக்கலக்குட்படுத்தப்படும்.

**உறுதிப்பாட்டிற்கு ஏற்படக்கூடிய தாக்கங்களை முன்கூட்டியே கண்டறிதல்**

காலநிலை அதிர்வுகள் வங்கிகள் மற்றும் நிதிக்கம்பனிகளின் கடன் நிலுவைகள் கட்டம் 1 இலிருந்து கட்டம் 2 வெளிப்படுத்துகைகளுக்கு மாறுவதன் மூலமே முதலில் வெளிப்படக்கூடும். கடன்பாட்டாளரின் மீள்கொடுப்பனவு இயலளவு மோசமடையும் போது, எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பிற்கான ஒதுக்கீடுகள் உயர்வடைகின்றன. இந்நிலைமைகள் நீடிக்குமாயின், இவ்வெளிப்படுத்துகைகளின் பகுதியானது கட்டம் 3இற்கு நகரக்கூடும். வேளாண்மை, கிராமியக் கடன்கள், குத்தகை மற்றும் சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகள் போன்றவற்றுக்கு அதிகளவு கடன்வழங்கும் நிறுவனங்கள் பெருமளவு பாதிப்பிற்குள்ளாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வங்கித்தொழில் துறையின் சிறிய மற்றும் நடுத்தரளவிலான துறைக் கடன்களின் பங்கானது மொத்தக் கடன் சொத்துப்பட்டியலில் ஏறத்தாழ 11 சதவீதமாக விளங்குகின்றது. தனிப்பட்ட நிறுவனங்கள் தாக்குப்பிடிக்கும் தன்மையுடன் காணப்படுகின்ற போதும் கூட காலநிலை அதிர்வுகள் முறைமை ரீதியிலான விளைவுகளை உருவாக்கக்கூடும்.

2026இன் முதலாவது அரையாண்டு இறுதியளவில், வேளாண்மைத் துறைக்கான வங்கிக் கடன்வழங்கலானது 9.2 சதவீதம் கொண்ட மொத்தக் கட்டம் 3 கடன்கள் விகிதத்துடன், மொத்தக் கடன் சொத்துப்பட்டியலில் 8.7 சதவீதமாகக் காணப்பட்டது. இதேபோன்று, நுகர்வுக் கடன்கள், 3.3 சதவீதம் கொண்ட மொத்தக் கட்டம் 3 கடன்கள் விகிதத்துடன், மொத்த வங்கிக் கடன்வழங்கலில் 19.5 சதவீதத்திற்கு வகைகூறின. வளிமண்டல ஆராய்ச்சித் திணைக்களத்தின் எதிர்வுகூறலுக்கமைவாக, 90 சதவீதம் சாத்தியப்பாடுள்ள எல் நினோ நிகழ்வானது ஏற்படுமாயின், மேலே குறிப்பிடப்பட்ட ஊடுகடத்தல் வழிகளினூடாக ஏனைய துறைகளிடையே உயர்ந்தளவான தாக்கத்துடன், வேளாண்மை மற்றும் நுகர்வுத் துறைகள் போன்றவற்றினுள் ஊடுகடத்தப்படக்கூடும்.

எனவே, காலநிலையுடன் தொடர்புடைய அதிர்வுகளின் அதிகரித்துவரும் தீவிரத்தன்மை மற்றும் பொருளாதார முக்கியத்துவம் என்பன பேரண்டமுன்மதியுடையக் கண்காணிப்பு கட்டமைப்பினுள் காலநிலை இடர்நேர்வு பற்றிய கூடுதல் கவனம் தேவைப்படுகின்றது என்பதை எடுத்துக்காட்டுகின்றன. இது தொடர்பில், பின்வரும் வழிமுறைகள் இலங்கையின் நிதியியல் முறைமையின் தாக்குப்பிடிக்கும் தன்மையை வலுப்படுத்தக்கூடும்.

- காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் அனர்த்தங்களுக்கான துறைவாரியான மற்றும் புவியியல் வெளிப்படுத்துகைகளைக் கண்காணிப்பதன் மூலமும் பாதிக்கப்படக்கூடிய துறைகள் மற்றும் அமைவிடங்களில் அவற்றின் செறிவடைதல்களை அடையாளங்காண்பதன் மூலமும் காலநிலையுடன் தொடர்புடைய இடர்நேர்வுக் கண்காணிப்பினை வலுப்படுத்தல்.
- காலநிலை இடர்நேர்வு தரவுக் கட்டமைப்பினை உருவாக்குதல் - போதியளவு நுணுக்கமான மற்றும் முன்னோக்கிய தரவுகள் கிடைப்பது பன்னாட்டளவில் முக்கிய தடையாக உள்ளது. காலநிலை இடர்நேர்வு அளவிற்கு நுணுக்கமான தரவுகளும் முன்னோக்கிய முறையியல்களும் தேவைப்படுகின்றன என்று வங்கித்தொழில் மேற்பார்வை மீதான பாசல் குழு (டீஊடீளு) குறிப்பிடுகின்ற அதேவேளை கடன்பாட்டாளர்கள் மற்றும் பிணையுறுதி குறித்து புவியியல் தகவல்களை இந்திய ரிசர்வ் வங்கியும் முக்கியச் சவாலாக அடையாளங்கண்டுள்ளது.
- ஆரம்பத்தில், இலங்கையின் முக்கிய பௌதீக ரீதியிலான

அனர்த்தங்களிலும் அதன்பின்னர் நிலைமாறுதல்சார் இடர்நேர்வுகளிலும் கவனம்செலுத்தி, ஏற்கனவேயுள்ள நிதியியல் உறுதிப்பாட்டுக் கட்டமைப்பினுள் காலநிலைச் சூழ்நிலை பகுப்பாய்வு மற்றும் அழுத்தப் பரிசோதனை என்பவற்றை உருவாக்குதல்.

- குறிப்பாக, காலநிலை மாற்றத்தினால் பாதிக்கப்படக்கூடிய துறைகள் மற்றும் அனர்த்தம் ஏற்படக்கூடிய பகுதிகளில் கடன்பாட்டாளர் மதிப்பீடு, பிணையுறுதி மதிப்பீடு, சொத்துப்பட்டியல் கண்காணிப்பு மற்றும் அதற்கான ஒதுக்கீடுகள் உள்ளடங்கலாக காலநிலை இடர்நேர்வினை கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவத்தினுள் ஒருங்கிணைத்தல்.

- **மூலதனம் மற்றும் திரவத்தன்மை திட்டமிடலில் காலநிலை சார்ந்த அம்சங்களை ஒருங்கிணைத்தல் -** காலநிலை இடர்நேர்வு அளவிடல் மேம்படுவதால், காலநிலையுடன் தொடர்புடைய முக்கிய பாதிக்கப்படக்கூடியதன்மைகள் வங்கிகளின் உள்ளக மூலதனப் போதுமாந்தன்மை மதிப்பீட்டுச் செயன்முறைகள், மீட்புத் திட்டமிடல் மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவம் போன்றவற்றில் அதிகளவில் இடம்பெறுகின்றன. வழக்கமான அழுத்தப் பரிசோதனைகளினூடாக கண்டறிய முடியாத பாதிக்கப்படக்கூடியதன்மைகளை காலநிலை அழுத்தப் பரிசோதனைகள் அடையாளங்காணக்கூடும் என்பதை பன்னாட்டு அனுபவம் எடுத்துரைக்கின்றது .

- **பன்னாட்டு ஒத்துழைப்பினையும் தொழில்நுட்ப இயலாற்றலையும் வலுப்படுத்தல் -** பன்னாட்டு முன்னெடுப்புக்களுடன் தொடர்ந்து ஈடுபடுவதன் மூலமும், பன்னாட்டளவில் அங்கீகரிக்கப்பட்ட காலநிலைச் சூழ்நிலைகளையும் வழிமுறைகளையும் பின்பற்றுவதன் மூலமும் அதேவேளை அவற்றை இலங்கைக்கான குறிப்பாக பௌதீக ரீதியிலான அனர்த்தங்கள், பொருளாதாரக் கட்டமைப்பு மற்றும் நிதியியல் துறை வெளிப்படுத்துகைகள் போன்றவற்றுக்கேற்ப சீராக்குவதன் மூலமும் இலங்கை பயன்பெறக்கூடும்.

**முன்னோக்கிய பாதை**

**மேம்படுத்தப்பட்ட கண்காணிப்பு, காலநிலைச் சூழல் பகுப்பாய்வு, அழுத்தப் பரிசோதனை, நுணுக்கமான தரவு, காப்புறுதி** மற்றும் இடர்நேர்வு பரிமாற்றல் பொறிமுறைகள் போன்றவற்றின் மூலம் காலநிலை இடர்நேர்வினை ஏற்கனவேயுள்ள இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்புக்களினுள் ஒருங்கிணைப்பதில் நிதியியல் முறைமை பங்கேற்பாளர்கள், தனிப்பட்ட மற்றும் கூட்டு முயற்சிகளை மேற்கொண்டு, மிகவும் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய நிதியினை வசதிப்படுத்தல் வேண்டும். காலநிலை மாற்றத்தைத் தாக்குப்பிடிக்கக்கூடிய உட்கட்டமைப்பு, காலநிலைக்கேற்ற வேளாண்மை, மீள்புதுப்பிக்கத்தக்கம் சக்தி மற்றும் ஏனைய நீடித்து நிலைத்திருக்கக்கூடிய முதலீடுகள் என்பவற்றை மேம்படுத்துவதானது நீண்டகாலப் பொருளாதார அபிவிருத்திக்கு ஆதரவளிக்கும் அதேவேளை நிதியியல் முறைமையின் தாக்குப்பிக்கும்தன்மையை வலுப்படுத்தும்.

1. உலக வங்கிக் குழு - ஊடக அறிக்கை - https://www.worldbank.org/en/news/press-release/2025/12/22/damage-from-cyclone-ditwah-in-sri-lanka-estimated-at-4-1-billion
2. வளிமண்டல ஆராய்ச்சித் திணைக்களம் - 2026ஆம் ஆண்டின் செத்தெம்பர், ஒத்தோபர் மற்றும் நவெம்பர் மாதங்களுக்கான எல்நினோ - தெற்கு - அலைவு மற்றும் பசுபிக் பெருங்கடலின் இருமுனை அலைவு போன்றவற்றுக்கான தற்போதைய நிலைமை மற்றும் எதிர்வுகூறல்கள் (2026 செத்தெம்பர் 10).
3. வங்கித்தொழில் மேற்பார்வை மீதான பாசல் குழு - காலநிலையுடன் தொடர்புடைய நிதியியல் இடர்நேர்வுகள் - https://www.bis.org/basel_consolidated_guidelines/chapter/RMA/60.htm
4. சுவிஸ் ரீ நிறுவகம்- https://www.swissre.com/press-release/Wildfires-storms-floods-contribute-to-record-92-of-global-insured-losses-in-2025-says-Swiss-Re-Institute/7b39b1a5-b878-4a55-a5ff-bf5aa561a675 https://www.swissre.com/institute/research/sigma-research/sigma-2026-01-natcat-2025-wildfire-storm-risk/global-natcat-losses-2025.html
5. காலநிலையுடன் தொடர்புடைய நிதியியல் இடர்நேர்வுகள் - அளவீட்டு முறையியல் https://www.bis.org/bcbs/publ/d518.htm
6. வங்கிகள் காலநிலை மற்றும் இயற்கை இடர்நேர்வுகளை முகாமைசெய்வதில் சிறந்த முன்னேற்றம் அடைந்துள்ளன மேலும் அவை அதைத் தொடர்ந்தும் மேற்கொள்ள வேண்டும். https://www.ecb.europa.eu/press/blog/date/2025/html/ecb.blog20250711~f5c6a0259f.en.html

உள்நாட்டுக் கடன்பாட்டிற்கான குறைவடைந்த தேவையினை எடுத்துக்காட்டியது. இது தனியார் துறைக் கடன்வழங்கலுக்கான நிதியியல் வளங்களின் கிடைப்பனவிற்கு ஆதரவளித்து, அதன்மூலம் தனியார் துறையினுள் மேம்பட்ட நிதியியல் இடையேற்பாட்டினை வசதிப்படுத்தியுள்ளது. இருப்பினும், வளர்ச்சியடைந்து வருகின்ற வெளிநாட்டு நிச்சயமற்றதன்மைகள் மற்றும் பாதகமான வானிலை நிகழ்வுகள் மற்றும் புவிசார் அரசியல் அபிவிருத்திகள் ஆகியவற்றிலிருந்து எழுகின்ற சாத்தியமான செலவின அழுத்தங்களிற்கு மத்தியில், இறை ஒழுக்கவியலினைப் பேணுவதானது முக்கியமானதாகக் காணப்படுகின்றது.

## நிதியியல் உறுதிப்பாட்டிற்கான காலநிலையுடன் தொடர்புடைய இடர்நேர்வுகள்

**அதிகரித்து வருகின்றதும் அடிக்கடி நிகழ்தலுமான காலநிலையுடன் தொடர்புடைய நிகழ்வுகளின் தீவிரத்தன்மையானது சொத்துப் பெறுமதிகள், கடன்பாட்டாளர் மீள்கொடுப்பனவு இயலளவு, கொடுகடன் தரம், காப்புறுதி இழப்புக்கள் மற்றும் பரந்தளவிலான பேரண்டப்பொருளாதார நிலைமைகள் என்பன மீது ஏற்படுத்தும் பாதகமான தாக்கங்களின் ஊடாக நிதியியல் உறுதிப்பாட்டிற்கான இடர்நேர்வுகளைத் தோற்றுவிக்கக்கூடும்.** அனைத்து 25 மாவட்டங்களையும் பாதிப்படையச்செய்த டித்வா புயலானது பௌதீக உட்கட்டமைப்பிற்குக் குறிப்பிடத்தக்க சேதத்தினை ஏற்படுத்தி, சொத்துப் பெறுமதிகளின் குறைவடைதலிற்கு வழிவகுத்து, நிதியியல் நிறுவனங்களின் பிணையுறுதியினைப் பாதிப்படையச்செய்தது. அதேவேளை, பொருளாதார நடவடிக்கைகளிற்கான இடையூறுகள் கடன்பாட்டாளர் மீள்கொடுப்பனவு இயலாற்றலினை மட்டுப்படுத்தி, பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கான படுகடன் இசைவுத்தாமதம் மற்றும் சலுகை ஏற்பாடுகள் என்பன உள்ளிட்ட நிவாரண வழிமுறைகளின் நடைமுறைப்படுத்தலினைத் தேவைப்படுத்தி, மதிப்பிழந்த கடன்களின் ஊடாக நிதியியல் துறையின் மீதான தாக்கம்

திரிபடைதலுக்கான சாத்தியப்பாட்டினை உருவாக்கின. மேலும், தற்போதைய எல் நினோவுடன் தொடர்பான வானிலை நிலைமைகள், காலநிலை மாற்றத்தினால் அதிகம் பாதிக்கப்படக்கூடிய துறைகளில் தொழிற்படுகின்ற பாதிக்கப்பட்ட வீட்டலகுகள், சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகள் மற்றும் வியாபாரங்கள் என்பவற்றின் மட்டுப்படுத்தப்பட்ட படுகடன் மீள்கொடுப்பனவு இயலாற்றலின் காரணமாக கட்டம் 2 மற்றும் கட்டம் 3 கடன்களின் சாத்தியமான அதிகரிப்பொன்றுடன் கொடுகடன் தரம் மோசமடைதலொன்றின் ஊடாக நிதியியல் நிறுவனங்கள் மீது அழுத்தத்தை ஏற்படுத்தும். காலநிலை நிகழ்வுகள் அடிக்கடி நிகழ்தல் அல்லது தீவிரத்தன்மையில் ஏற்படுகின்ற அதிகரிப்பொன்றிலிருந்தான உயர்ந்தளவிலான கோரல்கள் மற்றும் எழுத்துறுதி இழப்புக்கள் என்பவற்றினைக் காப்புறுதித் துறையும் எதிர்கொள்ளக்கூடும். இதேவேளை, வேளாண்மை உற்பத்திக்கான சேதங்கள் மற்றும் போக்குவரத்து, உட்கட்டமைப்பு மற்றும் நிரம்பல் சங்கிலிகளில் ஏற்படும் இடையூறுகள் என்பன உள்நாட்டு உற்பத்தியையும் ஏற்றுமதியையும் கட்டுப்படுத்தி, உணவு மற்றும் ஏனைய பண்ட விலைகளை உயர்வடையச்செய்து, நிவாரண வழிமுறைகளுக்கான அரச துறைச் செலவிடலினை அதிகரிப்பதன் மூலம் ஒட்டுமொத்த பேரண்டப்பொருளாதார நிலைமைகளையும் பாதிப்படையச் செய்யக்கூடும். மேலும், அரசாங்கக் கொள்கை மாற்றங்கள், தொழில்நுட்ப அபிவிருத்திகள் மற்றும் மாற்றமடைந்து வருகின்ற முதலீட்டாளர் மற்றும் சந்தை எதிர்பார்க்கைகள் என்பன காலநிலை மாற்றத்திற்கான வரையறுக்கப்பட்ட நிலைமாறுதல்சார் தயார்நிலையினைக் கொண்டுள்ள நிதியியல் துறை மற்றும் கடன்பாட்டாளர்களைப் பாதகமாகப் பாதிக்கக்கூடும். எனவே, முன்னோக்கிச் செல்கையில் இந்நிலைமைகள் காலநிலையுடன் தொடர்புடைய நிகழ்வுகளின் தொடர்ச்சியான இடம்பெறுகையுடன் நிதியியல் நிறுவனங்களின் இலாபத்தன்மை, திரவத்தன்மை மற்றும் மூலதனத் தாங்கியிருப்புக்கள் என்பன மீது மேலதிக அழுத்தத்தை ஏற்படுத்தக்கூடும். இதேவேளை, நிலைபெறத்தக்க நடவடிக்கைகளுக்கான கடன்வழங்கலானது ஒப்பீட்டளவில் வரையறுக்கப்பட்டு, வங்கித்தொழில் துறைக் கடன் சொத்துப்பட்டியலில் ஏறத்தாழ 2 சதவீதத்திற்கும் நிதிக்கம்பனிகள் துறைக் கடன் சொத்துப்பட்டியலில் ஏறத்தாழ 1 சதவீதத்திற்கும் வகைகூறுவதானது காலநிலைசார் தாக்குப்பிடிக்குந்தன்மை மற்றும் மாறுதலிற்கு ஆதரவளிக்கின்ற நடவடிக்கைகளிற்கு மேலதிக நிதியளிப்பினை வழங்குவதற்கான நோக்கெல்லை காணப்படுவதனைக் குறித்துக்காட்டுகின்றது.

**ஒட்டுமொத்தமாக, தோற்றம்பெற்று வருகின்ற இடர்நேர்வுகள் மற்றும் வெளிநாட்டு நிச்சயமற்றதன்மைகள் என்பவற்றிற்கு மத்தியில் உள்நாட்டுப் பேரண்டநிதியியல் நிலைமைகள் நிதியியல் துறை உறுதிப்பாட்டிற்குப் பரந்தளவில் ஆதரவளிப்பதாகக் காணப்பட்டன.** தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சி, மேம்படுகின்ற நிதியியல் இடையேற்பாடு, வலுவான இறைச் செயலாற்றம் மற்றும் தாக்குப்பிடிக்கக்கூடிய கொடுகடன் தரக் குறிகாட்டிகள் இச்சாதகமான பின்னணிக்குத் துணைபுரிந்தன. பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சியும் தளர்த்தப்பட்ட நிதியியல் நிலைமைகளும் தனியார் துறைக் கொடுகடனில் வலுவான விரிவாக்கமொன்றிற்கு ஆதரவளித்த வேளையில், மேம்பட்ட வருமான உருவாக்கமும் தளர்வடைகின்ற நிதியியல் அழுத்தமும் வீட்டலகு மற்றும் கூட்டாண்மைகளின் ஐந்தொகைகளை வலுப்படுத்தின. தொடர்ச்சியான இறைத் திரட்சியானது அரச துறை நிதியினை வலுப்படுத்தியதுடன் உள்நாட்டு நிதியளித்தல் மீதான தங்கியிருத்தலினைக் குறைவடையச்செய்து, அதன்மூலம் உற்பத்தித்திறன்மிக்க தனியார் துறை நடவடிக்கைகளை நோக்கி நிதியியல் வளங்களின் மீளொதுக்கீட்டினை வசதிப்படுத்தியது. எவ்வாறாயினும், கொடுகடன் வளர்ச்சி குறிப்பிடத்தக்களவு துரிதமடைந்தமையானது சில பிரிவுகளில் கொடுகடன் விரிவாக்கத்திற்கும் அடிப்படைப் பொருளாதார நடவடிக்கைகளிற்கும் இடையிலான விரிவடைகின்ற விலகலொன்றினைத் தோற்றுவித்தது. அதேவேளை, பணவீக்க அழுத்தங்கள் மீண்டும் தோற்றம்பெற்றதுடன் சந்தை வட்டி வீதங்கள் மேல்நோக்கிச் சீராக்கப்பட்டன. சொத்துத் தரக் குறிகாட்டிகள் தொடர்ந்து மேம்பட்ட போதிலும், கொடுகடன் வளர்ச்சியின் துரித வேகம், அதிகரித்துச் செல்கின்ற தனியார் துறைக் கடன்சுமை, உயர்வடைந்த உண்மைச் சொத்து மதிப்பீடுகள் மற்றும் உலகளாவிய பொருளாதார மற்றும் நிதியியல் தோற்றப்பாட்டினைச் சூழ்ந்துள்ள உயர்வடைந்த உலகளாவிய பொருளாதார மற்றும் நிதியியல் நிச்சயமற்றதன்மை மற்றும் காலநிலையுடன் தொடர்புடைய இடர்நேர்வுகளுக்கான அதிகரித்துச் செல்கின்ற வெளிப்படுத்துகை என்பன உள்நாட்டு நிதியியல் முறைமைக்கு சாத்தியமான பாதிப்படையக்கூடியதன்மைகளைத் தொடர்ந்து தோற்றுவிக்கின்றன. அதேவேளை, வங்கிகள் மற்றும் நிதிக்கம்பனிகளுக்கு இடையிலான வளர்ச்சியடைந்து வருகின்ற ஒன்றுடனொன்று இணைந்ததன்மை, நிதியியல் பணிகளின் அதிகரித்துச் செல்கின்ற டிஜிட்டல்மயமாக்கல், அதிகரித்து வருகின்ற இணையப் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள், வளர்ச்சியடைந்து வருகின்ற கொடுப்பனவுத் தொழில்நுட்பங்கள், செயற்கை நுண்ணறிவினால் உந்தப்பட்ட நிதியியல் பணிகளில் ஏற்பட்டு வருகின்ற முன்னேற்றங்கள் மற்றும் டிஜிட்டல் நாணயங்களின் தோற்றப்பாடு ஆகியன நிதியியல் துறைத் தாக்குப்பிடிக்கக்கூடியதன்மைக்கான முக்கியமான கரிசனைகளாகத் தோற்றம்பெற்றுள்ளன. முன்னோக்கிச் செல்கையில் முன்மதிமிக்க கடன்வழங்கல்

தரநியமங்களை நிலைபெறச்செய்தல், போதியளவிலான திரவத்தன்மை மற்றும் மூலதனத் தாங்கியிருப்புக்களைப் பேணுதல் மற்றும் கொடுகடன் வளர்ச்சியானது உற்பத்தித்திறன்மிக்க பொருளாதார நடவடிக்கைகளுடன் ஒத்திசைந்திருப்பதனை நிச்சயப்படுத்தல் என்பன பேரண்டநிதியியல் உறுதிப்பாட்டினைப் பாதுகாப்பதற்கும் நிதியியல் முறைமையின் தாக்குப்பிடிக்குந்தன்மையினை வலுப்படுத்துவதற்கும் முக்கியமானதாகக் காணப்படுகின்றன. வெளிநாட்டு, பணவீக்க மற்றும் காலநிலையுடன் தொடர்புடைய இடர்நேர்வுகள் என்பவற்றுடன் இணைந்து துரித கொடுகடன் விரிவாக்கத்திலிருந்தான பாதிப்படையக்கூடியதன்மைகள் கட்டியெழுப்பப்படக்கூடிய சாத்தியப்பபடாது தொடர்ச்சியான விழிப்பினைத் தேவைப்படுத்துகின்றது. இதற்கமைய, தோற்றம்பெற்று வருகின்ற இடர்நேர்வுகளை உன்னிப்பாகக் கண்காணிப்பதும் தேவையேற்படும் பட்சத்தில் நேரத்துடனான கொள்கைப் பதிலிறுப்புக்களை மேற்கொள்வதும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பாதுகாப்பதில் தொடர்ந்து முக்கியமானதாகக் காணப்படும்.

## அத்தியாயம் 2

# நிதியியல் சந்தைகள் மற்றும் கொடுப்பனவு உட்கட்டமைப்பு



நிதியியல் அழுத்தச் சுட்டெண்ணினால்[1] அளவிடப்பட்டவாறான உள்நாட்டு நிதியியல் சந்தைகளில் அழுத்தமானது தீவிரமடைந்த புவிசார் அரசியல் நிச்சயமற்றதன்மைக்கு மத்தியில் 2026 மாச்சில் தற்காலிக அதிகரிப்பொன்றுடன் காணப்பட்ட போதும் 2026இன் முதல் எட்டு மாதகாலப்பகுதியில் கீழாகவே காணப்பட்டது. பங்குரிமை மூலதன மற்றும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை அழுத்தத்தில் அவ்வப்போதான அதிகரிப்புக்களை அரசாங்கப் பிணையங்கள் சந்தை மற்றும் பணச் சந்தை என்பவற்றில் காணப்பட்ட ஒப்பீட்டளவில் உறுதியான நிலைமைகள் எதிரீடு செய்தமையினால் நிதியியல் அழுத்தச் சுட்டெண் தொடர்ந்தும் தாழ்வான மட்டத்திலேயே காணப்பட்டது.

தீவிரமடைந்த புவிசார் அரசியல் பதற்றங்கள், உலகளாவிய நிதியியல் சந்தை நிச்சயமற்றதன்மை, உயர்வடைகின்ற சக்தி விலைகள், உள்நாட்டு பணவீக்கத் தோற்றப்பாடு மற்றும் இறுக்கமான நாணய நிலைமைகள் என்பவற்றுக்கு மத்தியில் பங்குச் சந்தைச் செயலாற்றம் 2026இன் முதல் எட்டு மாதகாலப்பகுதியில் மிதமடைந்து காணப்பட்டது. பங்குரிமை மூலதன விலைச் சுட்டெண்கள் குறைவடைந்து காணப்பட்ட அதேவேளை, சந்தைத் திரவத்தன்மை மிதமடைந்ததுடன் தளம்பல் அதிகரித்தது. சந்தை விலைமதிப்பீட்டுக் குறிகாட்டிகள் மிதமாக அதிகரித்தன ஆயினும், பரந்தளவில் அவற்றின் நீண்டகால சராசரிகளுக்கு இசைவாகவும் அநேகமான பிராந்திய இணையான நாடுகளின் குறிகாட்டிகளுக்கு கீழும் காணப்பட்டன. சந்தைத் திரவத்தன்மையையும் தாக்குப்பிடிக்கும் தன்மையையும் வலுப்படுத்துவதற்கு நிலையான, நீண்டகால முதலீட்டு உட்பாய்ச்சல்களைக் கவருவதன் முக்கியத்துவத்தை தொடர்ச்சியான தேறிய வெளிநாட்டு வெளிப்பாய்ச்சல்கள் அடிக்கோடிட்டுக்காட்டின.

அனைத்து முதிர்ச்சிகளிலும் விளைவு வீதங்கள் அதிகரித்தமையுடன் அரசாங்கப் பிணையங்கள் சந்தையில் நிலைமைகள் இறுக்கமடைந்தன. மாற்றமடையும் சந்தை எதிர்பார்க்கைகள், புவிசார் அரசியல் நிச்சயமற்றதன்மை, இறுக்கமான நாணய நிலைமைகள் என்பன விளைவு வீதங்களின் மேல்நோக்கிய சீராக்கத்தில் பிரதிபலிக்கப்பட்டன. வலுவான இறைச் செயலாற்றம் மற்றும் அரசாங்கப் பிணையங்களுக்கான வலுவான கேள்வி என்பவற்றுக்கு மத்தியில், இரண்டாந்தரச் சந்தைத் திரவத்தன்மையானது மட்டுப்படுத்தப்பட்ட முதிர்ச்சி வீச்சொன்றினுள் செறிவுற்றிருந்த வர்த்தகப்படுத்துலுடன், கட்டுப்படுத்தப்பட்டதாகக் காணப்பட்டது. ஒட்டுமொத்த வெளிநாட்டு பங்கேற்பு குறைவாகக் காணப்பட்ட போதும் விளைவு வீதங்கள் மேல்நோக்கி சீர்செய்யப்பட்டு, செலாவணி வீத நிலைமைகள் மேம்பட்டமையினால் வெளிநாட்டு முதலீடு மீளாய்வுக் காலப்பகுதியின் பிற்பகுதியில் மிதமான மீட்சியினைப் பதிவுசெய்தது.

உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை ஓரளவு அழுத்தத்தை எதிர்கொண்டேனும் மீளாய்வு கால பிற்பகுதியில் நிலைமைகள் மேம்பட்டன. தீவிரமடைந்த புவிசார் அரசியல் பதற்றங்கள், அதிகரிக்கின்ற சக்தி விலைகள், அதிகரித்த இறக்குமதிக்கான கேள்வி, மாற்றமடைகின்ற முதலீட்டாளர் எண்ணப்பாங்கு என்பன ஐக்கிய அமெரிக்க டொலருக்கும் பல ஏனைய முக்கிய நாணயங்களுக்குமெதிராக இலங்கை ரூபாவினை தேய்வடையச் செய்தன. எவ்வாறிருப்பினும், கொள்கை வழிமுறைகள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள் சுற்றுலா வருவாய்கள் மற்றும் ஏற்றுமதிப் பெறுகைகளின் தொடர்ச்சியான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் என்பன மூலம் ஆதரவளிக்கப்பட்டு நிலைமைகள் தொடர்ந்து மேம்பட்ட அதேவேளை, செலாவணி வீத தளம்பல் மிதமடைந்து வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல் அளவுகள் படிப்படியான மீட்சியொன்றினை வெளிப்படுத்தின.

அதிகரித்த மீள்கொள்வனவு மற்றும் அழைப்புப் பணச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் மூலம் உள்நாட்டுப் பணச் சந்தை நடவடிக்கைகள் மேலும் வலுவடைந்தன. அரசிற்குச் சொந்தமான வங்கிகள் முக்கிய தேறிய கடன்வழங்குநர்களாகத் தொடர்ந்தும் காணப்பட்ட அதேவேளை, உள்நாட்டு தனியார் வங்கிகள் தொடர்ந்தும் தேறிய கடன்பெறுநர்களாகவிருந்தமை சமச்சீரற்ற திரவத்தன்மைப் பரம்பலைப் பிரதிபலித்தது. சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்பு பண வீதம் மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட மீள்கொள்வனவு வீதம் என்பன மீளாய்விற்குரிய காலப்பகுதியில் இடைக்கிடையே பரந்தளவு மேல்நோக்கிய அழுத்தத்திற்கு உள்ளாகிய நேரத்திலும் ஓரிரவுக் கொள்கை வீதத்துடன் பரந்தளவில் ஒருங்கிணைந்து காணப்பட்ட அதேவேளை, ஒட்டுமொத்த பணச் சந்தைத் திரவத்தன்மை மிகையாகக் காணப்பட்டது.

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு உட்கட்டமைப்பானது மீளாய்வுக் காலப்பகுதியில் தொழிற்பாட்டு ரீதியாக தாக்குப்பிடிக்கத்தக்கதாக காணப்பட்ட அதேவேளை, டிஜிட்டல் கொடுப்பனவுகளில் தொடர்ச்சியான வளர்ச்சி, தீர்ப்பனவு இடர்நேர்வு முகாமைத்துவத்தை வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள், ஒன்றுடனொன்று இணைந்ததன்மை மற்றும் அணுகல் என்பன கொடுப்பனவு முறைமை தாக்குப்பிடிக்கும் தன்மைக்கு துணையளித்தன. எவ்வாறிருப்பினும், டிஜிட்டல் மார்க்கங்கள் மீது தொடர்ந்து தங்கியிருத்தலானது இணைய, தொழிற்பாடுசார் மற்றும் மூன்றாம் தரப்பு இடர்நேர்வுகள் பற்றிய உன்னிப்பான கண்காணித்தலைத் தொடர்ந்தும் தேவைப்படுத்தியது.

ஒட்டுமொத்தமாக, உள்நாட்டு நிதியியல் சந்தைகளும் கொடுப்பனவு உட்கட்டமைப்புகளும் மீளாய்வுக் காலப்பகுதியில் தீவிரமடைந்த உலகளாவிய நிச்சயமற்றதன்மை, இறுக்கமான உள்நாட்டு நாணய நிலைமைகள் மற்றும் வெளிநாட்டு செலாவணி மற்றும் பங்குச் சந்தைகள் மீதான மிதமான அழுத்தம் என்பவற்றுக்கு மத்தியில் தாக்குப்பிடிக்கத்தக்கதாகவே விளங்கின. பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டைப் பேணுவதும் முதலீட்டாளர் நம்பிக்கையை வலுப்படுத்துவதும் வெளிநாட்டு முதலீட்டுத் தளத்தினை விரிவுபடுத்துவதும் உள்நாட்டு நிதியியல் சந்தைகளையும் கொடுப்பனவு உட்கட்டமைப்புகளையும் ஆழப்படுத்துவதும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு அதிர்வுகளுக்கெதிரான தாக்குப்பிடிக்கும்தன்மையை மேம்படுத்தும்.

திரவத்தன்மை மற்றும் மூலதன நிலைமைகள் என்பன மீது குறிப்பிடத்தக்க அழுத்தத்தினை ஏற்படுத்தக்கூடும்.

---

1 இச்சுட்டெண் பங்குரிமை மூலதனம் உள்நாட்டு, வெளிநாட்டுச் செலாவணி, அரசாங்கப் பிணையங்கள் மற்றும் உள்நாட்டு பணச் சந்தைகள் என்பவற்றிலிருந்து தோன்றுகின்ற ஒன்றிணைந்த அழுத்தத்தினை வெளிப்படுத்துகின்றது.

வரைபடம் 2.1 நிதியியல் அழுத்தச் சுட்டெண்




மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
கொழும்பு பங்கு பரிவர்த்தனை
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
புளும்பேர்க்

## 2.1 பங்குரிமைச் சந்தை

**தீவிரமடைந்த வெளிநாட்டு நிச்சயமற்றதன்மைகளுக்கு மத்தியில் பங்குரிமை மூலதனச் சந்தையின் செயலாற்றம் 2025இல் பதிவாகிய வலுவான ஈட்டல்களுக்குப் பின்னர் மீளாய்வுக் காலப்பகுதியில் மிதமடைந்தது.** பங்குரிமைச் சந்தை விலைச் சுட்டெண்கள், மத்திய கிழக்கில் அதிகரிக்கின்ற பதற்றத்துடன் 2026 மாச்சில் வீழ்ச்சியொன்றினைக் காண்பித்து, 2026 ஓகத்து இறுதிவரை ஒப்பீட்டளவில் குறைவடைந்தே காணப்பட்டன. 2026 ஓகத்து இறுதியிலுள்ளவாறு அனைத்து பங்கு விலைச் சுட்டெண் மற்றும் எஸ் அன்ட் பி எஸ்எல் 20 சுட்டெண் என்பன 2025 இறுதியளவில் பதிவாகிய முறையே 41.9 சதவீதம் மற்றும் 26.6 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க ஆண்டு வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் முறையே 5.7 சதவீதம் மற்றும் 2.4 சதவீதம் மூலம் வீழ்ச்சியடைந்தன. பங்குரிமைச் சந்தையின் குறைவடைந்த செயலாற்றமானது முதலீட்டாளர் எண்ணப்பாங்கினை வெகுவாகப் பாதித்த மத்திய கிழக்கில் தீவிரமடைந்த புவிசார் அரசியல் பதற்றங்களையும் உலகளாவிய நிதியியல் சந்தைகளில் அதிகரித்த நிச்சயமற்றதன்மையையும் பிரதிபலித்தன. உலகளாவிய சக்தி விலைகளில் அதனோடிணைந்த அதிகரிப்பும் உள்நாட்டு பணவீக்கத் தோற்றப்பாடு பற்றி கரிசனைகளை உயர்வடையச்செய்து சந்தை நிச்சயமற்றதன்மைக்கு வலுச்சேர்த்தன. தொடர்ச்சியான உள்நாட்டு நாணய நிலைமைகளின் இறுக்கமாக்கலானது உயர்வான சந்தை வட்டி வீதங்களுடன் ஒன்றிணைந்து நிலையான வருமான முதலீடுகள் பற்றிய ஒப்பீட்டளவிலான கவர்ச்சித்தன்மை மற்றும் அதிகரிக்கின்ற நிதியிடல் செலவுகள் மற்றும் நிறுவன வருவாய்களுக்கு ஏற்புடைய கழிவு வீதங்கள் என்பன மூலம் பங்குரிமைச் சந்தை எண்ணப்பாங்கு மீது மேலும் தாக்கம் செலுத்தின. இதன்விளைவாக, சந்தை மூலதனமயமாக்கல் 2025 இறுதியிலிருந்து 2026 ஓகத்து இறுதியளவில் ரூ.7,730.8 பில்லியனாக 4.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதுவரையிலுமான ஒழுங்கான சீராக்கத்தன்மை நிதியியல் முறைமைக்கான மட்டுப்படுத்தப்பட்ட உடனடி விளைவுகளை எடுத்துரைக்கின்ற போதிலும், முதலீட்டாளர் முடுக்கி, வெளிநாட்டுச் சொத்துப்பட்டியல் பாய்ச்சல்கள் மற்றும் சந்தைத் திரவத்தன்மை என்பவற்றில் ஏற்பட்ட அபிவிருத்தியானது தொடர்ச்சியான கண்காணிப்பினைத் தேவைப்படுத்துகின்றன.

**பணவீக்கம் சீராக்கப்பட்ட அனைத்து பங்கு மொத்த ஆதாயச் சுட்டெண்ணினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு பங்குரிமை மூலதனச் சந்தையில் உண்மை ஆதாயம்[2] மீளாய்வுக் காலப்பகுதியில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது.** 2025 ஓகத்தின் உச்சத்தின் பின்னர் பெயரளவு பங்குரிமை மூலதனச் சந்தைச் செயலாற்றத்தில் மிதமடைதலானது உயர்வடைகின்ற உள்நாட்டுப் பணவீக்கத்துடன்

2 அனைத்து பங்கு விலைச் சுட்டெண்ணுக்கான உண்மை ஆதாயம் கணிக்கப்படும் முறை:
(1+ மாதாந்த அனைத்து பங்கு மொத்த வருமான சுட்டெண் வருமானம்)(1+ மாதாந்த கொழும்பு நுகர்வோர் சுட்டெண் பணவீக்க வீதம் (2021=100) -1

வரைபடம் 2.2 பங்கு விலைச் சுட்டெண்கள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி
கொழும்பு பங்கு பரிவர்த்தனை

வரைபடம் 2.3 மாதாந்த பங்குரிமைச் சந்தைப் புரள்வும் உண்மை ஆதாயங்களும்




மூலங்கள் : இலங்கை மத்திய வங்கி
கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை
தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

**வரைபடம் 2.4 கணிக்கப்பட்ட பங்குரிமை மூலதன மேலதிக ஆதாயமும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் கொடுகடன் அளவும்**




மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
கொழும்பு பங்குப் பரிவர்த்தனை
பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணையம்

ஒன்றிணைந்து சென்றமையினால் பங்குரிமை மூலதனச் சந்தையின் உண்மை ஆதாயம் வீழ்ச்சியடைந்து, முதலீட்டாளர்களுக்கு பலவீனமான உண்மை ஆதாயங்களை விளைவித்தது. 2025இல் பதிவான நேரொத்த காலப்பகுதியில் ரூ.5,179.2 மில்லியன் கொண்ட சராசரியுடன் ஒப்பிடுகையில் 2026இன் முதல் எட்டு மாதகாலப்பகுதியில் சராசரி நாளாந்த புரள்வு ரூ.4,000.3 மில்லியனாக வீழ்ச்சியடைந்தமை மூலம் சான்றுபடுத்தப்பட்டவாறு மீளாய்வுக் காலப்பகுதியில் சந்தைத் திரவத்தன்மையும் பலவீனமடைந்தது. கணிக்கப்பட்ட பங்குரிமை இடர்நேர்வு மிகை[3] 2026 மே தொடக்கம் அதன் கீழ்நோக்கிய பாதையில் சென்று எதிர்க்கணியப் புலத்திற்கு நகர்ந்தது. பங்குரிமை மூலதனங்கள் மீதான திரண்ட வருவாய் விளைவு வீதங்கள், 364-நாள் திறைசேரி உண்டியல் விளைவு வீதத்திற்குக் கீழ் வீழ்ச்சியடைந்து, பங்குரிமை மூலதனங்களை வைத்திருப்பதற்கான இடர்நேர்வற்ற அரசாங்கப் பிணையங்களுடனான ஒப்பீட்டு ஆதாய ஈடளிப்பைக் குறைத்து அவற்றின் சார்பு கவர்ச்சித்தன்மையினை சாத்தியமானளவு குறைத்தன என்பதனை எதிர்மறையாகக் கணிக்கப்பட்ட பங்குரிமை இடர்நேர்வு மிகை எடுத்துக்காட்டியது. மேலும், 2026 ஆரம்ப காலம்வரை அதிகரிக்கின்ற போக்கொன்றினைக் காண்பித்த பங்குரிமை மூலதனச் சந்தைக்கான மொத்த கொடுகடன் அளவு[4] தொடர்ச்சியாக குறைவடைய ஆரம்பித்து, சந்தை வருவாய்களில் மிதமடைதலை நெருக்கமாகப் பின்தொடர்ந்து செல்லும் தாமதமான பதிலிறுத்தலினை எடுத்துக்காட்டுகின்றது. 2026 ஓகத்து இறுதியிலுள்ளவாறு, கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் மொத்த கொடுகடன் நிலை 2025 இறுதியுடன் ஒப்பிடுகையில் 12.0 சதவீத அதிகரிப்பையும் 2024 இறுதியுடன் ஒப்பிடுகையில் 91.0 சதவீத அதிகரிப்பையும் பதிவுசெய்து ரூ.99.0 பில்லியனாகவிருந்தது. எனினும், சந்தை மூலதனமாக்கலினதும் வங்கித்தொழில் மற்றும் நிதிக் கம்பனிகள் துறைகளினதும் மொத்த கடன் சொத்துப்பட்டியலின் சதவீதமாக அது மிகக் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது. கொடுகடன் அளவின் தொடர்ச்சியான மிதமடைதல் பங்குரிமை மூலதனச் சந்தைச் சீராக்கங்களை ஒன்றுசேர்ப்பதற்கான உள்ளார்ந்த ஆற்றலைக் குறைத்த அதேவேளை, எல்லை மற்றும் ஏனைய கொடுகடன் அளவுகளின் அபிவிருத்திகள் குறிப்பாக உயர்வடைந்த சந்தைத் தளம்பலைக் கொண்ட காலப்பகுதியில் தொடர்ச்சியான கண்காணித்தலினைத் தேவைப்படுத்தின. எனினும், சந்தை விலைகளில் ஒழுங்கான சீராக்கமும் கொடுகடன் அளவுகளின் தொடர்ச்சியான மிதமடைதலும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டிற்கான நேரடி விளைவுகள் கட்டுப்பாட்டினுள் காணப்பட்டது என்பதைக் குறிப்பிட்ட போதிலும் சந்தைத் தளம்பல், முதலீட்டாளர் முடுக்கி மற்றும் திரவத்தன்மை நிலைமைகள் என்பவற்றுக்கிடையிலான இடைத்தொடர்பு தொடர்ச்சியான கண்காணித்திலை தேவைப்படுத்தியது.

**2026இன் முதல் எட்டு மாதகாலப்பகுதியில் பங்குரிமை மூலதன சந்தை தளம்பல்,[5] தீவிரமடைந்த புவிசார் அரசியல் நிச்சயமற்றதன்மை மற்றும் மாற்றமடைகின்ற முதலீட்டாளர் எண்ணப்பாங்கு என்பவற்றுக்கு மத்தியில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது.** 20 நாள் அசையும் நியம விலகல் மூலம் அளவிடப்படுகின்றவாறு அனைத்து பங்கு விலைச் சுட்டெண் மற்றும் எஸ் அன்ட் பி எஸ்எல் 20

3 கணிக்கப்பட்ட பங்குரிமை இடர்நேர்வு மிகையானது இடர்நேர்வற்ற வீதத்தினைப் பிரதிபலிக்கின்ற 364-நாள் திறைசேரி உண்டியல்களின் இரண்டாந்தரச் சந்தை விளைவு மீதான திரண்ட சந்தை வருவாய் விளைவு வீதங்கள் வருவாய்களுக்கான சந்தை விலை விகிதத்தின் நேர்மாறு என்பவற்றுக்கிடையிலான வித்தியாசமாகக் கணிக்கப்படுகின்றது.

$$\text{கணிக்கப்பட்ட பங்குரிமை இடர்நேர்வு மிகை} = \left(\frac{1 \times 100}{\text{வருவாய்களுக்கான சந்தை விலை}}\right) - \text{இடர்நேர்வற்ற விளைவுவீத மிகை}$$

கணிக்கப்பட்ட பங்குரிமை இடர்நேர்வு மிகை = வருவாய்களுக்கான சந்தை விலை விகிதம் மற்றும் லூ(வஇ”சுக” ) 364-நாள் திறைசேரி உண்டியல் மீதான நிலவுகின்ற விளைவு வீதம்.

4 பங்குரிமை மூலதனச் சந்தைக்கான மொத்தக் கொடுகடன் அளவானது கொழும்பு பங்குப் பரிவர்த்தனை மீது பிணையங்களை வர்த்தகப்படுத்துவதற்காக முதலீட்டாளர்களுக்கு உரிமம்பெற்ற இலாப எல்லை வழங்குநர்களிடமிருந்தான அனைத்து நிலுவையாகவிருக்கின்ற இலாப எல்லைக் கடன்கள் மற்றும் உரிமம்பெற்ற பங்குத்தரகர்களினால் வழங்கப்பட்ட கொடுகடன் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

5 கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் செயற்பாடுமிக்க தொழிற்பாட்டினைக் கொண்ட முன்னுறுகின்ற 20 நாட்களுக்கான அனைத்து விலைச் சுட்டெண் மற்றும் எஸ் அன்ட் பி எஸ்எல் 20 இன் நியம விலகல் மூலம் பங்குரிமை மூலதனச் சந்தை தளம்பல் அளவிடப்படுகின்றது.

**வரைபடம் 2.5 பங்கு விலைச்சுட்டெண்களின் தளம்பல்**




மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

இரண்டிலுமான தளம்பல் 2024 மற்றும் 2025களில் பதிவாகிய சராசரி மட்டங்களை விஞ்சி 2021 சனவரி தொடக்கம் முதலான அதிகூடிய மட்டத்திற்கு 2026 மாச்சில் சடுதியாக உயர்வடைந்தமையானது, அதிகரிக்கின்ற புவிசார் அரசியல் குறிப்பாக மத்திய கிழக்கில் பதற்றங்களுக்கு மத்தியில் அதிகரித்த சந்தை நிச்சயமற்றதன்மையையும் முதலீட்டாளர் எண்ணப்பாங்கின் மாற்றங்களையும் பிரதிபலித்தன. பங்குரிமைச் சந்தையின் தளம்பல் 2026 மாச்சில் அதன் உச்சத்திலிருந்து அதன்பின் மிதமடைந்த போதும் மீளாய்வுக் காலப்பகுதியின் பாகங்களில் ஒப்பீட்டளவில் உயர்வடைந்தே காணப்பட்டது. தொடர்ச்சியான அல்லது புதுப்பிக்கப்பட்ட, தீவிரமான தளம்பல் நிகழ்வுகள் முதலீட்டாளர் நம்பிக்கையினை பலவீனமடையச்செய்து, சந்தைத் திரவத்தன்மையைக் குறைத்து, குறிப்பாக, முதலீட்டாளர்கள் முதிர்ச்சி நிலைமைக்கு உட்படுகின்றவிடத்து, விலை மதிப்பீட்டு இழப்புக்களை பெருக்கலாம். எவ்வாறிருப்பினும், பரந்த நிதியியல் முறைமையுடனான பங்குரிமை மூலதனச் சந்தையின் ஒப்பீட்டளவிலான மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றுடன் ஒன்று இணைந்த தன்மையினைக் கருத்திற்கொள்ளுகின்ற போது நிதியியல் முறைமை உறுதிப்பாட்டிற்கான நேரடி தாக்கங்கள் கட்டுப்படுத்தப்பட்டுக் காணப்பட்ட அதேவேளை, சந்தைத் திரவத்தன்மை, முதலீட்டாளர் முடுக்கி மற்றும் நிதியியல் நிறுவனங்களின் பங்குரிமை மூலதனம் தொடர்புபட்ட கடன் அளவுகள் என்பன தொடர்ச்சியான கண்காணிப்பதைத் தேவைப்படுத்துகின்றன.

**பங்குரிமை மூலதனச் சந்தையின் ஏட்டுப் பெறுமதிக்கான விலை விகிதம் மற்றும் வருவாய்களுக்கான விலை விகிதம் என்பன அவற்றின் நீண்டகால சராசரிகளை அண்மித்துக் காணப்பட்டன.** ஏட்டுப் பெறுமதிக்கான விலையானது 2025 இறுதியில் பதிவாகிய மட்டங்களிலேயே மாற்றமின்றி 2026 ஓகத்து இறுதியிலும் 1.30 ஆகக் காணப்பட்டது. மேலும், வருவாய்களுக்கான விலை விகிதமும் 2025 இறுதியின் 10.70 உடன் ஒப்பிடுகையில் 2026 ஓகத்து இறுதியில் 11.20 இனை அடைந்து, மீளாய்வுக் காலப்பகுதியில் அதிகரித்த அதேவேளை, 12.00 கொண்ட அதன் 2000ஆம் ஆண்டிலிருந்தான நீண்டகாலச் சராசரிக்கு சற்று கீழ் காணப்பட்டது. பங்குரிமை மூலதனச் சந்தை விலைகளில் மிதமடைதலை நிறுவன வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சி விஞ்சியமை இவ்வதிகரிப்பிற்குக் காரணமாக அமைந்தது. ஏட்டுப்பெறுமதிக்கான விலையில் மெதுவடைதலும் குறுகியகால தளம்பல்களும், புவிசார் அரசியல் நிச்சயமற்றதன்மைகள் உட்பட நிலவுகின்ற காரணிகள் ஓரளவிற்கு சந்தை வளர்ச்சியினைத் தடைப்படுத்தியுள்ளதனை எடுத்துக்காட்டுகின்றன. எவ்வாறிருப்பினும், கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் ஏட்டுப் பெறுமதிக்கான விலையும் வருவாய்களுக்கான விலை விகிதமும் பிராந்தியத்தின் ஏனைய அநேகமான பங்குப் பரிவர்த்தனைகளுடன் ஒப்பிடுகையில் குறைவான மட்டங்களிலேயே காணப்பட்டன.

**முக்கிய துறைகளுக்கிடையிலான பங்குரிமைச் சந்தைச் செயலாற்றம் மீளாய்வுக் காலப்பகுதியில் ஒழுங்கற்றுக் காணப்பட்டது.** 2026 ஓகத்து இறுதியிலுள்ளவாறு சந்தை மூலதனமாக்கலின் ஏறத்தாழ 74 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற ஐந்து முக்கிய துறைகள் 2020 இனை அடிப்படை ஆண்டாக கொண்ட துறைசார் நியமப்படுத்தப்பட்ட விலைச் சுட்டெண்களுக்கமைவாக மீளாய்வுக்குட்படுகின்ற காலப்பகுதியில் கலப்பான செயலாற்றத்தைப் பதிவுசெய்தன. அனைத்து முக்கிய துறைகளும் 2026 மாச்சில் கீழ்நோக்கிய அழுத்தத்தை அனுபவித்த அதேவேளை, அதன் பின்னரான மீட்சியானது துறைகள் முழுவதும் ஒழுங்கற்றிருந்தது. தொலைத்தொடர்பு பணிகள் துறை ஏனைய முக்கிய துறைகளை விஞ்சிச்சென்று வலுவான மீட்சியொன்றினைப் பதிவுசெய்ததுடன் 2026 ஓகத்து இறுதியளவில் அதன் சனவரிக்கு முந்திய மட்டத்திற்கு மேல் ஏறத்தாழ 48.3 சதவீதமாகவிருந்தது. மாறாக, பன்முகப்படுத்தப்பட்ட நிதியியலாளர்கள், மூலதனப் பொருட்கள், வங்கிகள், மற்றும் உணவு, குடிபானம் மற்றும் புகையிலை என்பன ஆண்டின் தொடக்கத்திலிருந்த மட்டங்களுக்குக் கீழ் காணப்பட்டன. இவ்வேறுபாடு ஏனைய முக்கிய துறைகள் 2026 மாச்சின்

வரைபடம் 2.6
சந்தைப் பெறுமதிக் குறிகாட்டிகள்




மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
கொழும்பு பங்குச் சந்தை

வரைபடம் 2.7
பங்குரிமைச் சந்தையின் துறைசார் இயக்கவாற்றல்கள்*




* எண்தொகைகள், 2020 சனவரி 02 அன்று ஒவ்வொரு துறைச்சுட்டெண்ணும் 100 ஆக அடிப்படை மாற்றப்பட்டு சுட்டெண்ணாக்கப்பட்ட துறை விலை அசைவுகளைத் தருகின்றது. துறைச்சுட்டெண்கள்தொடக்கத்தில் அடிப்படைக் காலப்பகுதியாக 2020 சனவரி 02 இணை பயன்படுத்தி தொகுக்கப்பட்டவையாகும். (02 சனவரி 2020 = 100)

மூலம்: இலங்கை மத்திய வங்கி
கொழும்பு பங்குப்பரிவர்த்தனை

வரைபடம் 2.8

துறைவாரியான நிலை (2020 சனவரி தொடக்கம் 2026 ஓகத்து வரை)*




*குறிப்புகள்: 2026 ஓகத்து இறுதியில் உள்ளவாறான தொடர்புடைய துறையின் சந்தை மூலதனமாக்கல் வட்டத்தின் அளவு மூலம் குறித்துக்காட்டப்பட்டுள்ளது.
தோன்றுகின்ற தெளிவினைப் பேணுவதற்கு போக்குவரத்துத் துறை (2020இல் அதீத ஏட்டுப் பெறுமதிக்கான விலையினையும் 2026இல் பங்கிலாப விளைவு வீதத்தையும் கொண்டிருந்த) மற்றும் மென்பொருள் சேவைகள் துறை (2026இல் அதீத பங்கிலாப விளைவு வீதத்தைக் கொண்டிருந்த) வரைபடத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி
கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

சந்தைச் சீராக்கத்தினைத் தொடர்ந்து குறைவடைந்த செயலாற்றத்தினைப் பிரதிபலித்த அதேவேளை, ஒட்டுமொத்த சந்தைச் செயலாற்றத்திற்கு பிரதானமாக தொலைத்தொடர்பு பணிகள் துறை துணையளித்திருந்ததுடன் துறைசார் செயலாற்றம் பரந்த அடிப்படையிலமைந்திருக்கவில்லை என்பதனை எடுத்துக்காட்டுகின்றது. பங்குரிமைச் சந்தையின் தொடர்ச்சியான மீட்சி பட்டியலிடப்பட்ட கம்பனிகளுக்கிடையில் பரந்த அடிப்படையிலமைந்த மேம்படுதல்களினால் துணையளிக்கப்பட்டிருப்பதைக் காட்டிலும் தெரிவுசெய்யப்பட்ட துறைகளில் செறிவாக இருந்தமையினை இது எடுத்துக்காட்டுகிறது. அத்தகைய செறிவானது துறைகளினதும் நிறுவனங்களினதும் ஒப்பீட்டளவிலான குறுகிய தொகுதியினைப் பாதிக்கக்கூடிய அபிவிருத்திகளால் ஒன்றுசேர்ந்த சந்தைச் செயலாற்றத்தின் உணர்திறன் தன்மையை அதிகரித்தது. எவ்வாறிருப்பினும், துறைகளுக்கிடையிலான வேறுபட்ட செயலாற்றம் குறிப்பிட்ட துறையின் வருவாய் எதிர்பார்க்கைகள், ஐந்தொகை நிலைமைகள் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பேரண்ட நிதியியல் நிலைமைகளில் மாற்றங்களுக்கான உணர்திறன் என்பவற்றை பிரதிபலிக்கின்றன.

**துறைசார் பெறுமதிக் குறிகாட்டிகள் உயர்ந்தளவு வேறுபட்டிருந்த அதேவேளை சந்தை மூலதனமாக்கல் ஐந்து முக்கிய துறைகளுக்குள்ளும் தொடர்ந்தும் செறிவுற்றிருந்தது.** சில துறைகள் ஏட்டுப் பெறுமதிக்கான விலை விகிதங்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காண்பித்த போதும் பல துறைகளினதும் ஏட்டுப் பெறுமதிக்கான விலை விகிதங்கள் குறிப்பிட்ட நிலை மட்டம் ஒன்றை நோக்கி ஒருங்கிணைந்து சென்றன என்பதனை 2020 சனவரி தொடக்கம் 2026 ஓகத்து வரையான இரண்டாந்தரச் சந்தைத் தரவுகள் காண்பிக்கின்றன. மீளாய்வுக் காலப்பகுதியின் போது மென்பொருள் மற்றும் பணிகள் துறை அதன் ஏட்டுப் பெறுமதிக்கான விலை விகிதத்தில் பாரிய விகிதாசார அதிகரிப்பினைப் பதிவுசெய்து 2025 இறுதியின் 5.0 இலிருந்து 2026 ஓகத்து இறுதியளவில் 6.9 ஆக அதிகரித்தது. இதனைத்தொடர்ந்து வர்த்தக மற்றும் தொழில்சார் பணிகள் துறை மற்றும் தொலைத்தொடர்பூட்டல் பணிகள் துறைகள் காணப்பட்டன. இதற்கு மாறாக, வாடிக்கையாளர் பணிகள் துறைகள் அதன் ஏட்டுப் பெறுமதிக்கான விலை விகிதத்தில் பாரிய வீழ்ச்சியினைப் பதிவுசெய்து 2025 இறுதியின் 1.3 இலிருந்து 2026 ஓகத்து இறுதியளவில் 0.9 ஆக குறைவடைந்தது. அதனைத்தொடர்ந்து உணவு மற்றும் நிலையான சில்லறை வர்த்தகத் துறை, சில்லறை மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட நிதியியல் துறை என்பன காணப்பட்டன. நீண்டகால பங்குலாப விளைவு வீதம் மற்றும் ஏட்டுப் பெறுமதிக்கான விலை நியதிகளில் வாகன மற்றும் பாகங்கள், உண்மைச் சொத்து முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி, வங்கிகள் மற்றும் காப்புறுதித் துறைகள் ஒப்பீட்டளவில் உயர்வான பங்குலாப விளைவு வீதங்களுடன் அநேகமாக நடுத்தரமான ஏட்டுப் பெறுமதிக்கான விலை விகிதங்களைக் கொண்ட பண்புகளைக் கொண்டிருந்தன.

**கொழும்பு பங்குப் பரிவர்த்தனை 2026 முதல் எட்டு மாதங்களில் தேறிய வெளிநாட்டு வெளிப்பாய்ச்சல்களைப் பதிவுசெய்தது.** இரண்டாந்தர பங்குச் சந்தை 2024இல் ஐ.அ.டொலர் 32.6

வரைபடம் 2.9

இரண்டாந்தர பங்குச் சந்தையில் வெளிநாட்டுப் பங்கேற்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி
கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

மில்லியன் மற்றும் 2025இல் ஐ.அ.டொலர் 127.7 மில்லியன் கொண்ட தேறிய வெளிநாட்டு வெளிப்பாய்ச்சல்களின் பின்னர் 2026 ஓகத்து இறுதியில் ஐ.அ.டொலர் 171.8 மில்லியன் கொண்ட திரண்ட தேறிய வெளிநாட்டு வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தது. முதலாந்தரச் சந்தையிலும் வெளிநாட்டுப் பங்கேற்பு 2025இன் ஐ.அ.டொலர் 5.4 மில்லியனுடனும் 2024இன் ஐ.அ.டொலர் 65.5 மில்லியனுடனும் ஒப்பிடுகையில் மீளாய்வுக் காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 2.9 மில்லியன் மாத்திரம் கொண்ட வெளிநாட்டு உட்பாய்ச்சல்களுடன் குறைவடைந்து காணப்பட்டது. கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் வெளிநாட்டு முதலீட்டாளர்களால் வைத்திருக்கப்பட்ட பங்குகளின் பாகம், 2025இன் இறுதியில் 17.8 சதவீதத்துடனும் 2024 இறுதியில் 17.6 சதவீதத்துடனும் 2023 இறுதியில் 24.9 வீதத்துடனும் ஒப்பிடுகையில் 2026 யூலை இறுதியில் 19.0 சதவீதமாகவிருந்தது. சந்தையினுள் நீண்ட கால உட்பாய்ச்சல்களைக் கவருவது பங்குரிமைச் சந்தையில் வளர்ச்சியினை நிலைநிறுத்துவதற்கு முக்கிய தேவைப்பாடொன்றாகக் காணப்படுகிறது. நிலையான, நீண்டகால முதலீட்டாளர்களின் மிகுந்த பங்கேற்பு சந்தை விரிவிற்கும் திரவத்தன்மைக்கும் முதலீட்டாளர் தளத்தின் பன்முகப்படுத்தலுக்கும் ஆதரவளித்து இதனூடாக உள்நாட்டு பங்குரிமைச் சந்தையின் தாக்குப்பிடிக்கும் தன்மையையும் அபிவிருத்தியையும் வலுப்படுத்தக்கூடும்.

## 2.2 அரசாங்கப் பிணையங்கள் சந்தை

**மாற்றமடைகின்ற சந்தை எண்ணப்பாங்கு, மற்றும் நாணய நிலைமைகள் இறுக்கமடைதல் என்பன மூலம் தூண்டப்பட்டு அரசாங்கப் பிணையங்களின் விளைவு வீதங்கள் மீளாய்வுக் காலப்பகுதியில் அதிகரித்தன.** இறை அழுத்தங்கள் பற்றிய எதிர்பார்க்கைகள் மற்றும் இறைத் தாங்கியிருப்பு நிதியங்களின் உபயோகம் என்பன 2025 இறுதியை நோக்கி விளைவு வீதங்களின் அதிகரிப்பொன்றுக்கு வழிவகுத்த போதும் அரசாங்கப் பிணையங்களின் விளைவு வீதங்கள் மீதான டித்வா புயல் தாக்கம் மட்டுப்படுத்தப்பட்டுக் காணப்பட்டது. அதனைத்தொடர்ந்து மத்திய கிழக்கில் புவிசார் அரசியல் பதற்றங்கள் உயர்வடைந்தமை உள்நாட்டு பணவீக்கத் தோற்றப்பாட்டை மாற்றியமைத்து 2026 மாச்சு தொடக்கம் விளைவு வீதங்களில் படிப்படியான அதிகரிப்பினை விளைவித்தது. மேலும், 2023 யூனின் பின்னரான முதலாவது கொள்கை வீத அதிகரிப்பினை அடையாளப்படுத்திய ஓரிரவுக் கொள்கை வீதத்தில் 100-அடிப்படைப் புள்ளி அதிகரிப்பின் பின்னர் விளைவு வீதங்கள் 2026 மே இறுதியில் சடுதியாக உயர்வடைந்தன. வலுவான இறைச் செயலாற்றம் மற்றும் தாங்கியிருப்பு நிதியங்களின் பேணுகை என்பவற்றுக்கு மத்தியில் தீவிரமடைந்த பணவீக்க அழுத்தங்களை தொடர்ந்தும் முதலீட்டாளர்களால் விலையேற்றப்பட்டமையினால் முதிர்ச்சிகள் முழுவதுமான விளைவு வீதங்கள் மீதான மேல்நோக்கிய அழுத்தம் உயர்வடைந்து காணப்பட்டது.

**வலுவான தனியார் துறை கொடுகடன் வளர்ச்சி மற்றும் முதனிலை ஏலங்களில் பாரிய முன்வைப்புத் தொகைகள் என்பவற்றுக்கு மத்தியில் முதலாந்தரச் சந்தையில் அரசாங்கப் பிணையங்களுக்கான கேள்வி மீளாய்வுக் காலப்பகுதியின் போது வலுவாகக் காணப்பட்டது.** தனியார் துறை கொடுகடன், 2025இல் பதிவாகிய வலுவான வளர்ச்சியின் பின்னர் 2026 காலப்பகுதியிலும் ஒப்பிட்டளவில் உயர்வான வேகத்தில் தொடர்ந்து விரிவடைந்த போதும் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளுக்கான முதலீட்டாளர் கேள்வி வலுவாகவிருந்தது. எனினும், சவால்மிக்க உலகளாவிய நிலைமைகள் அத்துடன் 2026 மாச்சு தொடக்கம் உள்நாட்டு சந்தை எண்ணப்பாங்கில் ஏற்பட்ட மாற்றம் என்பன முதலாந்தரச் சந்தை ஏலங்களில் உயர்வான விளைவு வீதங்களைக் கோருவதற்கு முதலீட்டாளர்களை இட்டுச்சென்றது. எவ்வாறிருப்பினும், 2026இன் முதல் எட்டு மாதகாலப்பகுதியில் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் இரண்டிற்குமான கோரலுக்கான விலைக் குறிப்பீட்டு விகிதம் 221 சதவீதம் கொண்ட சராசரியினைப் பதிவுசெய்து அரசாங்கப் பிணையங்களுக்கான

**வரைபடம் 2.10 அரசாங்கப் பிணையங்களின் இரண்டாந்தர சந்தை விளைவு வீதங்கள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

**வரைபடம் 2.11 முதலாந்தரச் சந்தை விளைவு வீதங்கள், சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்பு பண வீதம் மற்றும் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் அடிப்படையிலான பணவீக்கம்**




மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

**வரைபடம் 2.12 அரசாங்கப் பிணையங்களுக்கான முதலாந்தரச் சந்தைக் கேள்வி**




மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

**வரைபடம் 2.14 இரண்டாந்தரச் சந்தை வர்த்தகப்படுத்தல்கள்**




மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

நிலையான முதலீட்டாளர் ஆர்வத்தினைப் பிரதிபலித்தது. எனினும், விளைவு வீதங்களில் மேல்நோக்கிய அழுத்தம் தோன்றியமையினால் சில ஏலங்கள் குறிப்பாக 182-நாட்கள் மற்றும் 364-நாட்கள் திறைசேரி உண்டியல்களுக்கானவை குறைவாக ஒதுக்கீடு செய்யப்பட்டன. அதேவேளை, 2025இன் இரண்டாமரைக் காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்திருந்த ஏலங்களில் முன்வைக்கப்பட்ட தொகைகள் 2026இன் முதல் எட்டு மாதங்களில் அதிகரித்தன. அதிகரித்த வழங்கலுக்கு மத்தியிலும் தொடர்ச்சியாக வலுவான கோரல் மட்டங்களினால் காட்டப்பட்டவாறு சந்தையினால் அரசாங்கப் பிணையங்கள் பொதுவாக அதிகமாக கோரப்பட்டிருந்தன.

**அரசாங்கப் பிணையங்களின் வர்த்தகப்படுத்தல் நடவடிக்கைகளில் அண்மைய மீட்சிக்கு மத்தியிலும் திரவத்தன்மை நிலைமைகள் தொடர்ந்தும் தடைப்பட்டிருந்ததுடன் இரண்டாந்தரச் சந்தை நடவடிக்கை ஒப்பீட்டளவில் குறைவடைந்து காணப்பட்டன.** 2025 செத்தெம்பரின் பின்னரான மாதங்களில் புரள்வு விகிதம் மேலும் வீழ்ச்சியடைந்து, 2025 நவெம்பர் அளவில் 16.4 சதவீதம் கொண்ட குறைவினை அடைந்தது. அதன்பின்னர், வர்த்தக நடவடிக்கை குறிப்பாக, திறைசேரி முறிகளில் படிப்படியாக மீட்சியடைந்து புரள்வு விகிதத்தின் அதிகரிப்பிற்குப் பங்களித்தது. எவ்வாறிருப்பினும், 2023 தொடக்கம் புரள்வு விகிதத்தில் அவதானிக்கப்பட்ட தளம்பலானது திரவத்தன்மை நிலைமைகளில் நிலையுறுதியான மேம்பாட்டினை விடவும் இரண்டாந்தரச் சந்தை நடவடிக்கையின் அவ்வப்போதான தன்மையினையே எடுத்துக்காட்டியது. அண்மைய ஆண்டுகள் முழுவதும் வர்த்தக நடவடிக்கையானது குறுங்காலப் பிணையங்களில் செறிவுமிக்கதாகவிருந்தது. எனினும், ஒட்டுமொத்த சந்தைத் திரவத்தன்மை வரையறுக்கப்பட்டு காணப்பட்ட போதும் 2026 காலப்பகுதியில் திறைசேரி முறிகளில் அவதானிக்கப்பட்ட ஒப்பீட்டளவில் உயர்வான புரள்வு, நீண்டகாலப் பிணையங்களில் ஓரளவு அதிகரித்த நடவடிக்கையினைக் குறிப்பிடுகின்றது. 2023 மற்றும் 2024 காலப்பகுதியில் விளைவு வீதங்களில் ஏற்பட்ட வீழ்ச்சி அத்துடன் 2026இல் அதனைத்தொடர்ந்த மேல்நோக்கிய நகர்வு என்பன உள்ளடங்கலாக விளைவு வீத வளையியின் மாற்றங்கள் முதலீட்டு வர்த்தக விருப்பங்களை அல்லது சந்தையின் ஒட்டுமொத்த திரவத்தன்மைத் தொகுப்பை கணிசமாக மாற்றவில்லை என்பதனை இது எடுத்துக்காட்டுகின்றது. முனைப்புடன் வர்த்தகம் செய்யப்பட்ட முதிர்ச்சிகள் குறுக்கமடைந்து காணப்பட்டமைக்கிடையில் தொடர்ச்சியாகவிருந்த மட்டுப்படுத்தப்பட்ட திரவத்தன்மையானது செயற்றிறனை விளைவு வீத வளையி உருவாக்கத்தையும் விலை கண்டறிதலையும் தடைப்படுத்தியது. மேலும், குறைவான முனைப்புடன் வர்த்தகப்படுத்தப்பட்ட முதிர்ச்சிகளுக்கான கோரப்பட்ட விலைகள் மீது தங்கியிருத்தலானது சந்தைத் திரவத்தன்மையை குறைத்து மதிப்பீடு செய்யக்கூடும். திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் இரண்டினதும் ஒட்டுமொத்த புரள்வு விகிதம் 2026 ஓகத்தின் 37.3

**வரைபடம் 2.13 திறைசேரி உண்டியல் ஏலங்களின் இயக்கவாற்றல்கள்**




குறிப்பு: மாத இறுதி ஏல விளைவு வீதங்கள் அதிகரித்த, ஏல ஒதுக்கீடுகள் முன்வைக்கப்பட்ட தொகைகளில் 100 சதவீதத்திற்குக் குறைவாகவிருந்த அல்லது ஏல சமர்ப்பணங்கள் முன்வைக்கப்பட்ட தொகைகளின் 100 சதவீதத்திற்குகுறைவாகவிருந்த காலப்பகுதியினை கருஞ்சிவப்பு நிறப்புள்ளிகள் குறித்துக் காட்டுகின்றன. பச்சை நிறத்திலானவை எதிரான நிலைமைகளைக் குறித்துக் காட்டுகின்றன.

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

**வரைபடம் 2.15 அரசாங்கப் பிணையங்களின் இரண்டாந்தரச் சந்தை வர்த்தகப்படுத்தல்கள் - விளைவு வீதங்கள் எதிர் காலம்**




மூலங்கள் : இலங்கை மத்திய வங்கி
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

சதவீதத்திற்கு மிதமடைவதற்கு முன்னர் 2026 யூலையில் 45.6 சதவீதமாக அதிகரித்த அதேவேளை, புரள்வில் அண்மைக்கால அதிகரிப்பானது இரண்டாந்தரச் சந்தைத் திரவத்தன்மையில் உறுதிநிலையடைந்த மேம்படுதலைக் இன்னும் காண்பிக்கவில்லை என்பதை வர்த்தகப்படுத்தல் நடவடிக்கையில் தொடர்ச்சியான மாறுபடுதன்மையும் முதிர்ச்சிகளின் வரையறுக்கப்பட்ட வீச்சுகளுக்கிடையில் அதன் செறிவும் எடுத்துக்காட்டுகின்றன.

**அராங்கப் பிணையங்களின் விளைவு வீதங்கள் மீளாய்வுக் காலப்பகுதியில் விளைவு வீத தளம்பலில் அதிகரிப்புக்களுடன் இணைந்து முதிர்ச்சி வகைகள் முழுவதுமாக மேல்நோக்கி மாறுதலடைந்தன.** விளைவு வீதமானது, 2025 முழுவதும் பரந்தளவில் நிலையாகக் காணப்பட்ட பின்னர், 2026 காலப்பகுதியில் படிப்படியாக மேல்நோக்கிய அழுத்தத்திற்கு உள்ளானது 2026 மாச்சில் தொடக்க சீராக்கம் நிகழ்ந்து, குறுகியகால விளைவு வீதங்களில் ஒப்பீட்டளவில் பாரிய அதிகரிப்புக்களுடன் விளைவு வீத வளையி சரிந்து தட்டையான போக்கினைக் காண்பித்ததுடன் தவணைமிகை தற்காலிகமாக குறுக்கமடைந்தது. அதனைத்தொடர்ந்து, சந்தையின் உட்பொதிந்த திரவத்தன்மையற்ற கட்டமைப்பானது மாற்றமுறும் சந்தை எதிர்பார்க்கைகளுடன் ஒன்றிணைந்து விளைவு வீத வளையியின் நீண்ட முனை மீது மேல்நோக்கிய அழுத்தத்தை தீவிரப்படுத்தியது. இது, நாணயக் கொள்கை வீதச் சீராக்கத்தின் பின்னர் மேலும் வலுவடைந்தது. இவ்வபிவிருத்திகளுக்கு ஒத்திசைவாக குறுகிய மற்றும் நீண்ட கால பிணையங்கள் முழுவதும் விளைவு வளையித் தளம்பலானது 2025இன் பிந்திய அரைப்பகுதியில் அவதானிக்கப்பட்ட ஒப்பீட்டளவில் குறைவடைந்த மட்டங்களுடன் ஒப்பிடுகையில் 2026 காலப்பகுதியில் அதிகரித்தன. உயர்வடைந்த விளைவு வீதத் தளம்பல் நிலையான வருமானப் பிணையங்களின் பெறுமதியில் நிச்சயமற்றதன்மையை அதிகரித்து, இரண்டாந்தரச் சந்தைப் பங்கேற்றலை ஊக்கமிழக்கச்செய்து, ஏற்கனவே காணப்படுகின்ற திரவத்தன்மை தடைகளை மீள வலுப்படுத்தும் சாத்தியப்பாடு காணப்படுகின்றது. விளைவு வீத வளையியில் பரந்த அடிப்படையிலான மேல்நோக்கிய மாறுதலும் பாரிய அரசாங்கப் பிணையங்களின் உரித்துகளுடன்கூடிய நிதியியல் நிறுவனங்களுக்கு குறிப்பாக, சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட பிணையங்கள் மீதான விலைமதிப்பீட்டு இழப்புகள் ஊடாக வட்டி வீத இடர்நேர்வைத் தீவிரப்படுத்தின.

**வெளிநாட்டுப் பங்கேற்பு குறைவாகக் காணப்பட்டு அவ்வப்போதான வெளிப்பாய்ச்சல்களுக்குட்பட்டிருந்த போதும் அரசாங்கப் பிணையங்களுக்கான அதிகரித்த விளைவு வீதத்தைப் பிரதிபலித்து, திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளுக்கான வெளிநாட்டுச் சொத்துப்பட்டியல் முதலீடுகள் மீளாய்வு காலப்பகுதியில் மிதமான மீட்சியைப் பதிவுசெய்தன.** 2025இல் அவதானிக்கப்பட்ட தேறிய உட்பாய்ச்சல்களின் பின்னர் அரசாங்கப் பிணையங்களிலான வெளிநாட்டு முதலீடுகள் 2026 சனவரி மற்றும்

**வரைபடம் 2.16 அரசாங்கப் பிணையங்கள் இரண்டாந்தரச் சந்தை விளைவு வீத வளையி**




மூலங்கள் : இலங்கை மத்திய வங்கி
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

**வரைபடம் 2.17 இரண்டாந்தரச் சந்தை வீத தளம்பல்கள்**




மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

**வரைபடம் 2.18** அரசாங்கப் பிணையங்கள் சந்தை வெளிநாட்டுப் பாய்ச்சல்கள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

பெப்புருவரி காலப்பகுதியில் தேறிய உட்பாய்ச்சல்களைப் பதிவுசெய்தன. எனினும், 2026 மாச்சு தொடக்கம் மே வரை குறிப்பிடத்தக்க வெளிப்பாய்ச்சல்கள் அவதானிக்கப்பட்டு, தீவிரமடைந்த புவிசார் அரசியல் நிச்சயமற்றதன்மை மற்றும் வளர்ந்துவரும் சந்தைகளின் சொத்துக்களை நோக்கிய பலவீனமான முதலீட்டாளர் எண்ணப்பாங்கு என்பவற்றைப் பிரதிபலித்தன. இவ்வெளிப்பாய்ச்சல்கள் அதிகரித்த சக்தி விலைகளிலிருந்து தோன்றுகின்ற உயர்வான இறக்குமதிச் செலவினத்துடன் ஒன்றிணைந்து இலங்கை ரூபா மீதான அதிகரித்த அழுத்தத்துடன் கூடிய சமகால நிகழ்வாகவிருந்தது. அதனைத்தொடர்ந்து, அரசாங்கப் பிணையங்களின் விளைவு வீதங்கள் மேல்நோக்கி சீராக்கப்பட்டு உள்நாட்டு, வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை நிலைமைகள் நிலையுறுதியடைந்தமையினால் வெளிநாட்டு முதலீட்டாளர் எண்ணப்பாங்கு மேம்பட்டு 2026 யூன், யூலை மற்றும் ஓகத்து மாதங்களில் புதுப்பிக்கப்பட்ட தேறிய உட்பாய்ச்சல்களுக்கு வழிவகுத்தது. இதன்விளைவாக, அரசாங்கப் பிணையங்களின் வெளிநாட்டு உரித்துக்கள் 2025இன் ஓகத்தின் 0.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2026 ஓகத்து இறுதியளவில் மொத்த வெளிநின்ற பிணையங்களின் ஏறத்தாழ 1.1 சதவீதமாக அதிகரித்தது. 2026 மாச்சு தொடக்கம் மே வரையில் அவதானிக்கப்பட்ட வெளிப்பாய்ச்சல்களும் அதன் பின்னர் 2026 யூன் தொடக்கம் ஓகத்து வரையான உட்பாய்ச்சல்களும் பெருமளவில் திறைசேரி முறிகளில் செறிவாகவிருந்து, படிப்படியாக வளர்ச்சியடைகின்ற விளைவு வீத எதிர்பார்க்கைகள் மற்றும் பரந்த சந்தை நிலைமைகள் என்பவற்றினால் வெளிநாட்டு முதலீடுகள் முதன்மையாக செல்வாக்குச் செலுத்தப்பட்டிருந்தன என்பதனைக் குறிப்பிடுகின்றன. எவ்வாறிருப்பினும், வெளிநாட்டு முதலீட்டாளர் பங்கேற்பின் பங்கும் அரசாங்கப் பிணையங்களின் அவர் உரித்துக்களும் குறைவாகவே இருந்து, வெளிநாட்டு சொத்துப்பட்டியல் பாய்ச்சல் மீளத்திரும்புதல்களிலிருந்து தோன்றுகின்ற சாத்தியமான தளம்பலுக்கு அரசாங்க பிணையங்கள் சந்தை நேரடியாக உட்படுவதை மட்டுப்படுத்தியது.

## 2.3 உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தை

**2023 மற்றும் 2024 ஆகிய இரு ஆண்டுகளின் தொடர்ச்சியாக உயர்வடைதலிற்குப் பின்னர் 2025இல் பதிவாகிய தேய்வு நீடித்து, 2026இன் முதல் எட்டு மாதகாலப்பகுதியில் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 5.5 சதவீதத்தினால் தேய்வடைந்தது.** இலங்கை ரூபா, 2026இன் முதல் இரண்டு மாதங்களின் சிறிய உயர்வடைதலின் பின்னர், உலக சக்தி விலைகளில் சடுதியானதொரு அதிகரிப்பு மற்றும் உலகளாவிய நிதியியல் சந்தைகளில் அதிகரித்த நிச்சயமற்றதன்மைகள் வழிவகுத்த மத்திய கிழக்கில் அதிகரிக்கின்ற புவிசார் அரசியல் பதற்றங்களுக்கு மத்தியில் பெப்புருவரியின் பிந்திய பகுதியிலிருந்து புதுப்பிக்கப்பட்ட அழுத்தங்களுக்குள்ளாகியது. இவ்வபிவிருத்திகள், வெளிநாட்டுச் செலாவணிக்கான குறிப்பாக எரிபொருள் மற்றும் இறக்குமதி தொடர்பான கேள்வி, ஊகச் சந்தை நடவடிக்கை மற்றும் பங்குரிமைச் சந்தை மற்றும் அரச பிணையங்கள்

**வரைபடம் 2.19** மாதாந்த வெளிநாட்டுப் பாய்ச்சல்கள், செலாவணி வீதம் மற்றும் மாதாந்த விளைவு வீதங்கள்




மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

**வரைபடம் 2.20** ஐ.அ.டொலருக்கெதிரான இலங்கை ரூபாவின் அசைவு




மூலம்: இலங்கை மத்தியவங்கி

சந்தைகளிலிருந்தான வெளிப்பாய்ச்சல்கள் மற்றும் பல்வேறு மாதங்களில் ஏற்றுமதிப் பெறுகைகளின் மெதுவடைந்த மாற்றல் என்பவற்றுடன் ஒன்றிணைந்து உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை மீது அழுத்தத்தைத் தீவிரப்படுத்தின. உயர்வடைந்த சக்தி இறக்குமதிச் செலவுகள், பொருளாதார நடவடிக்கை மற்றும் இறக்குமதிகள் விரிவடைதலுடன் இணைந்த வெளிநாட்டுச் செலாவணிக்கான அதிகரிக்கின்ற கேள்வி மற்றும் பாதகமான சந்தை எண்ணப்பாங்கு என்பன செலாவணி வீதம் மீது தாக்கம் செலுத்தியமையினால் தேய்வும் தளம்பலும் 2026இன் இரண்டாம் காலாண்டு காலப்பகுதியில் தீவிரமடைந்தன. எனினும், உள்நாட்டு, வெளிநாட்டுச் செலாவணி சந்தையில் அழுத்தத்தினைத் தளர்த்தி, மிதமிஞ்சிய தளம்பலைக் கட்டுப்படுத்துவதற்கு மத்திய வங்கியின் கொள்கை வழிமுறைகள் மற்றும் தலையீடுகளின் பின்னர் 2026 மேயின் பிந்திய பகுதியிலிருந்து சந்தை நிலைமைகள் மேம்படத்தொடங்கியதுடன் 2026 ஓகத்து காலப்பகுதியில் 2.4 சதவீதம் கொண்ட பெறுமதியுயர்வொன்றினைப் பதிவுசெய்தது. அதேவேளை, அரசாங்கத்தினால் மோட்டார் வாகன இறக்குமதிகள் மீது விதிக்கப்பட்ட மிகைக் கட்டணம், மத்திய வங்கியினால் விதிக்கப்பட்ட வாகனம் தொடர்புபட்ட கடன்வழங்கல் மீதான பெறுமதிக்கான கடன்[6] கட்டுப்படுத்தல்கள் இறுக்கமாக்கப்பட்டதுடன் ஒன்றிணைந்து வாகன இறக்குமதிகளுக்கான கேள்வியை மிதமடையச்செய்ததனூடாக அதனுடன் இணைந்த வெளிநாட்டுச் செலாவணிக் கேள்வியினைக் கட்டுப்படுத்தி உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் அழுத்தங்களைக் கட்டுப்படுத்துவதற்கு உதவுமென எதிர்பார்க்கப்படுகின்றது. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையானது தொழிலாளர் பணவனுப்பல்கள், சுற்றுலா வருவாய்கள் மற்றும் ஏற்றுமதிப் பெறுகைகள் என்பவற்றிலிருந்து வந்த நிலையான உட்பாய்ச்சல்களிலிருந்து தொடர்ந்தும் நன்மையடைந்தது. இது, தீவிரமடைந்த வெளிநாட்டுச் செலாவணிக் கேள்வியின் தாக்கத்தை குறித்த மட்டத்திற்கு குறைப்பதற்கு உதவியது. மேலும், செலாவணி வீதத் தளம்பலானது[7] இரண்டாம் காலாண்டின் தொடக்கத்தில் சந்தை அழுத்தங்களின் உச்சகாலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட சடுதியான அதிகரிப்புக்களுடன் ஒப்பிடுகையில் 2026 ஓகத்தை நோக்கித் தளர்வடைந்து, சந்தை நிலைமைகளில் படிப்படியான மேம்படுதலை எடுத்துக்காட்டியது. 2026ஆம் ஆண்டின் முதலாவது எட்டு மாதங்களில், பன்னாட்டு நாணய நிதியத்தினால் ஆதரவளிக்கப்பட்ட விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் வெளிநாட்டு ஒதுக்குகளினைக் கட்டியெழுப்புவதற்கு, வெளிநாட்டுத் தாங்கியிருப்புக்களினை வலுப்படுத்துவதற்கு, விஞ்சியளவிலான செலாவணி வீதத் தளம்பலினைத் தணிப்பதற்கு மற்றும் சக்தியின் தொடர்புடைய அத்தியாவசிய இறக்குமதிகளின் நிதியளித்தலினை வசதிப்படுத்துவதற்குத் தேவைக்கேற்ப, உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கி தலையிட்டது. எவ்வாறிருப்பினும், வெளிநாட்டு அபிவிருத்திகளுக்கு குறிப்பாக, புவிசார் அரசியல் நிச்சயமற்றதன்மைகள், உலகளாவிய சக்தி விலைகளில் தளம்பல்கள், கடல்சார் போக்குவரத்தில் இடையூறுகள், முதலீட்டாளர் எண்ணப்பாங்கில் மாற்றங்கள் மற்றும் மூலதன உட்பாய்ச்சல்கள் என்பவற்றுக்கு செலாவணி வீதம் உட்பட்டுக் காணப்பட்டது. வெளிநாட்டுச் செலாவணிக்கான கேள்வி குறிப்பாக, எரிபொருள் இறக்குமதிகள், வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கடப்பாடுகள் என்பவற்றில் சாத்தியமான பாதகமான உலகளாவிய அபிவிருத்திகள் ரூபா மீது மேலதிக அழுத்தத்தினைத் தீவிரப்படுத்தக்கூடும். ஆகவே, மிகையான செலாவணி வீத தளம்பலைக் கட்டுப்படுத்துவதானது வலுவான, படுகடனைத் தோற்றுவிக்காத வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களைப் பேணுதல், முதலீட்டாளர் நம்பிக்கையை மேம்படுத்துதல் மற்றும் போதுமான ஒதுக்குத் திரட்டலை உறுதிசெய்தல் என்பன மீது தங்கியிருக்கும்.

**இலங்கை ரூபா ஏனைய முக்கிய வர்த்தக பங்காளர் நாணயங்களுக்கெதிராகவும் தேய்வடைந்தது.** 2026 ஓகத்து இறுதியளவில் ரூபா யூரோவிற்கெதிராக 4.3 சதவீதத்தினாலும் இஸ்ரேலிங் பவுணுக்கெதிராக 6.1 சதவீதத்தினாலும் யப்பானிய யென்னுக்கெதிராக 3.5 சதவீதத்தினாலும் இந்திய ரூபாவிற்கெதிராக 0.4 சதவீதத்தினாலும் உயர்வடைந்தது. இலங்கை ரூபாவின் தேய்வானது அடிப்படை நாணயத்தின் சிறியளவிலான பெறுமதியுயர்விற்கு மேலதிகமாக ஏனைய காரணிகளின் குறிப்பிடத்தக்க செல்வாக்கினை எடுத்துக்காட்டுகின்றது. முக்கிய வர்த்தக நாணயங்களுக்கெதிரான செலாவணி வீத அசைவுகள் உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தையின் இருதரப்புகளின் அசைவுகள் மீது மாத்திரமன்றி உலகளாவிய நாணயச் சந்தைகளில் குறுக்குவீத அசைவுகள், புவிசார் அரசியல் இடர்நேர்வுகள், பாரிய மத்திய வங்கிகளின் நாணயக் கொள்கை நடவடிக்கைகள் மற்றும் சர்வதேச முதலீட்டாளர் எண்ணப்பாங்குகளில் மாறுதல்கள் என்பன மீதும் தொடர்ந்து சார்ந்திருக்கும்.

**ஐ.அ.டொலர்/ரூபா வீதத்தின் கொள்விலை மற்றும் விற்பனை விலைக்கிடையேயான வேறுபாடு 2026 மே தொடக்கம் யூலை**

வரைபடம் 2.21 இலங்கை ரூபாவுக்கு எதிரான முக்கிய செலாவணி வீதங்கள்




மூலம்: இலங்கை மத்தியவங்கி

6 பெறுமதிக்கான கடன் தேவைப்பாடுகள் தொடர்பிலான மேலதிக விவரங்களுக்கு அத்தியாயம் 05 இனைப் பார்க்கவும்.

7 செலாவணி வீதத் தளம்பல், நாளாந்த குறிகாட்டி ஐ.அ.டொ.்/ரூபா 20 நாள் அசைகின்ற நியம விலகளைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றது.

**வரைபடம் 2.22** விற்க மற்றும் வாங்க எண்ணும் விலைக்கிடையேயான வேறுபாடு (ஐ.அ.டொலர்/ரூபா)




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**வரையான காலப்பகுதியில் சடுதியான உயர்வுகளினை வெளிப்படுத்தியமையானது வெளிநாட்டுச் செலாவணி அழுத்தங்கள் தொடர்ச்சியாகக் காணப்பட்டமையை பிரதிபலித்து அதனைத்தொடர்ந்து மீளாய்வுக் காலப்பகுதியின் பிற்பகுதியில் ஒப்பீட்டளவில் தாழ்வாகக் காணப்பட்டது.** புவிசார் அரசியல் பதற்றங்கள் மற்றும் சக்தி விலைகள் மீதான அவற்றின் விளைவுகள் மற்றும் உள்நாட்டுச் சந்தை நிலைமைகளிற்கான அதன்விளைவான கசிவுத்தாக்கங்கள் உள்ளடங்கலாக உலகளாவிய அபிவிருத்திகளுடன் தொடர்புபட்ட தீவிரமடைந்த நிச்சயமற்றதன்மைகளினால் தூண்டப்பட்ட உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தற்காலிக கேள்வி மற்றும் நிரம்பல் பொருந்தாமைகளை முதன்மையாகப் பிரதிபலிக்கும் விற்பனை மற்றும் கொள்வனவு விளைவு விலைக்கிடையேயான வேறுபாட்டில் அவ்வப்போதான உயர்வுகள் அவதானிக்கப்பட்டன. நீண்டகாலத்திற்கு குறைவான மற்றும் நிலையான

**வரைபடம் 2.23** வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

கொள்விலை மற்றும் விற்பனை விலை இடைவெளியைப் பேணுவதென்பது சந்தைப் பங்கேற்பாளர்கள் மத்தியில் நம்பிக்கையினை மேம்படுத்துவதற்கும் அதேவேளை கொடுக்கல்வாங்கல் செலவுகளைக் குறைவாகப் பேணுகின்ற அதிகரித்த ஏற்றுமதி வருவாய்கள், சுற்றுலா மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள் அத்துடன் மூலதனச் சந்தை உட்பாய்ச்சல்கள் என்பன உள்ளடங்கலாக வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களை ஊக்குவிக்கின்ற கொள்கை வழிமுறைகளை தேவைப்படுத்துகின்றது. மேலும், இது, சீரான வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகளை வசதிப்படுத்துவதிலும் சாத்தியமானளவு வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவருவதிலும் இன்றியமையாததாகவிருப்பதுடன், இறுதியாக ஒட்டுமொத்த நிதியியல் உறுதிப்பாட்டிற்கும் பங்களிக்கும்.

**வங்கிகளுக்கிடையிலான மொத்த வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் அளவு கடந்த ஆண்டின் நேரொத்த காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2026இல் முதல் எட்டு மாதங்களில் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது.** மொத்த வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள், 2026 மாச்சு மற்றும் மே மாதங்களுக்கிடையில் வீழ்ச்சியடைந்து நிலவுகின்ற நிச்சயமற்றதன்மைகளுக்கு மத்தியில் குறைவடைந்த சந்தை நடவடிக்கைகளைப் பிரதிபலித்தது. எனினும், அதன் பின்னர் கொடுக்கல்வாங்கல் அளவு மீட்சியடைந்து, 2026 ஓகத்தில் ஐ.அ.டொலர் 1563.4 மில்லியனிற்குச் சிறிதளவு மிதமடைவதற்கு முன்னர், 2026இன் இதுவரையிலும் பதிவாகிய அதிகூடிய மாதாந்த வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல் அளவாக 2026 யூலை ஐ.அ.டொலர் 1,594.5 மில்லியனை எட்டியது. வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல் வாங்கல் அளவுகளின் மாதாந்தச் சராசரி 2025 ஆண்டுகாலப்பகுதியில் பதிவான ஐ.அ.டொலர் 1,465.0 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2026இன் முதல் எட்டு மாதகாலப்பகுதியில் ஐ.அ.டொலர் 1,355.9 மில்லியனாகவிருந்தது. முன்னோக்கிய கொடுக்கல்வாங்கல்கள், மீளாய்வுக் காலப்பகுதியில் மொத்த கொடுக்கல்வாங்கல் அளவின் பாரிய பங்கிற்கு வகைகூறி, ஒட்டு மொத்த கொடுக்கல்வாங்கல்களின் 38 சதவீதத்திற்குப் பங்களித்ததுடன் அதனைத்தொடர்ந்து காசு மற்றும் உடனடிக் கொடுக்கல்வாங்கல்கள் முறையே 30 சதவீதத்திற்கும் 21 சதவீதத்திற்கும் வகைகூறின. முன்னோக்கிய சந்தையில் நிறைவேற்றப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் பெரும்பாலானவை ஒரு வாரத்திற்கு மேற்பட்டவற்றிலிருந்து ஒரு மாதம் வரையிலானவையாகவிருந்து, குறுகியகால காப்பிற்கான வலுவான விருப்பத்தெரிவை எடுத்துக்காட்டின. முன்னோக்கிய ஒப்பந்த நடவடிக்கையானது வியாபாரங்களும் நிதியியல் நிறுவனங்களும் அவற்றின் இடர்நேர்வினை முகாமைசெய்வதற்கு உதவியபோதும் குறுகிய கால முதிர்ச்சிகளில் முன்னோக்கிய ஒப்பந்தத்தின் செறிவானது சந்தை நிலைமைகள் மேலும் இறுக்கமடையுமாயின் திரவத்தன்மை அழுத்தத்தைத் தோற்றுவிக்கலாம்.

**மீளாய்வுக் காலப்பகுதியின் போது உலகளாவிய பதற்றங்கள்**

வரைபடம் 2.24

**வரைபடம் 2.24: ஒரு மாத மிகை தொகை**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**தொடர்புபட்ட அதிகரித்த நிச்சயமற்றதன்மைகள் மற்றும் உள்நாட்டு சந்தை நிலைமைகள் என்பவற்றுக்கு மத்தியில் ஒரு மாத முன்னோக்கிய ஒப்பந்தங்களுக்கான மிகைத் தொகை தற்காலிக உயர்வொன்றினை வெளிக்காட்டியது.** இம்மிகைத் தொகையில் சடுதியான உயர்வு ரூபா மீதான அண்மையகால தேய்மான அழுத்தங்கள் பற்றிய சந்தை எதிர்பார்க்கைகளையும் செலாவணி வீத இடர்நேர்வுக்கெதிராக காப்பிடுவதற்கு சந்தைப் பங்கேற்பாளர்களுக்கிடையேயான மிகுந்த விருப்பத்தெரிவினையும் காண்பித்தது. இவ்வபிவிருத்திகள், தீவிரமடைந்த புவிசார் அரசியல் பதற்றங்கள், உலகளாவிய சக்தி விலைகளில் தளம்பல் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை நிலைமைகளில் ஏற்பட்ட நிச்சயமற்றதன்மை என்பன மூலம் செல்வாக்குச்செலுத்தப்பட்டிருக்கக்கூடும். எனினும், ஒரு மாத முன்னோக்கிய ஒப்பந்தத்திற்கான மிகைத் தொகையின் தொடர்ந்துவந்த மிதமடைதலானது நிச்சயமற்றதன்மைகள் தளர்வடைதல் மற்றும் மத்திய வங்கியினால் எடுக்கப்பட்ட வழிமுறைகள் மூலம் துணையளிக்கப்பட்டு சந்தை எண்ணப்பாங்கு மற்றும் வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மை நிலைமைகளில் மேம்படுதல்களை எடுத்துக்காட்டுகின்றது.

**மீளாய்வுக் காலப்பகுதியில் மத்திய வங்கி தேறிய கொள்வனவாளராக இருந்தது.** எனினும், உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தீவிரமடைந்த அழுத்தத்திற்கு மத்தியில் மிதமிஞ்சிய செலாவணி வீத தளம்பலைக் கட்டுப்படுத்தி, சக்தி தொடர்புபட்ட அத்தியாவசிய இறக்குமதிகளை வசதிப்படுத்துவதற்கு 2026 மாச்சு தொடங்கி சந்தைக்கு மத்திய வங்கி வெளிநாட்டுச் செலாவணியை நிரம்பல் செய்தது. அதன்மூலம் 2026 ஏப்பிறல் மற்றும் மே மாத காலப்பகுதியில், பெறுமதித் திகதியின் அடிப்படையில், தேறிய விற்பனையாளராக விளங்கியது. 2026 மேயின் பிந்திய பகுதியிலிருந்து சந்தை நிலைமைகள் மேம்பட்டமையினால் மத்திய வங்கி தேறிய வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகளை பதிவுசெய்தது. 2026இன் முதல் எட்டு மாதங்களில் மத்திய வங்கி வர்த்தகப்படுத்தல் திகதியின் அடிப்படையில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1,517.4 மில்லியன் கொண்ட தேறிய கொள்வனவுகளைப் பதிவுசெய்தது.

## 2.4 உள்நாட்டுப் பணச் சந்தை

**உள்நாட்டுப் பணச் சந்தை நடவடிக்கை 2026இன் முதல் எட்டு மாதகாலப்பகுதியில் வலுவாகக் காணப்பட்டது.** மீள்கொள்வனவு மற்றும் அழைப்புப் பணச் சந்தைகள் இரண்டிலும் அதிகரித்த நடவடிக்கைகளினால் தூண்டப்பட்டு, மொத்த மாதாந்த கொடுக்கல்வாங்களின் அளவு, 2026 மே மாதத்தில் அனைத்து காலங்களிலும் உயர்வானதொரு மட்டத்தை அடைந்தது. 2025இன் வருடாந்த சராசரி ரூ.861.0 பில்லியனிலிருந்து 2026 சனவரி தொடக்கம் ஓகத்து வரையான காலப்பகுதியில் ரூ.1,468.5 பில்லியனாக சராசரி மாதாந்த கொடுக்கல்வாங்கல் அளவுகள்

வரைபடம் 2.25

**உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தலையீடுகளும் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளும்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 2.26

**உள்நாட்டு பணச் சந்தை அளவு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 2.27 அழைப்புச் சந்தைப் பங்கேற்பாளர்கள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

அதிகரித்தமை மூலம் மீள்கொள்வனவுச் சந்தையானது பணச் சந்தை நடவடிக்கையின் பாரிய பங்கிற்கு தொடர்ந்தும் வகைகூறியது. அதேபோன்று, சராசரி மாதாந்த அழைப்புப் பணச் சந்தைப் புரள்வு 2025இல் பதிவாகிய ரூ.459.2 பில்லியனிலிருந்து 2026 முதல் எட்டு மாத காலப்பகுதியில் ரூ.805.6 பில்லியனாக குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. மாதாந்த மீள்கொள்வனவு சந்தை அளவுகள், மாதாந்த அழைப்புப் பணச் சந்தை அளவுகளைவிட தொடர்ச்சியாக உயர்வாகக் காணப்பட்டு, பிணையமல்லாக் கடன்வழங்கலுடன் ஒப்பிடுகையில் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கலில் சந்தைப் பங்கேற்பாளர்களின் மிகவும் செயலூக்கமிக்க ஈடுபாட்டைப் பிரதிபலித்தது. பங்கேற்பாளர் மட்ட நடவடிக்கையானது நிதியியல் நிறுவனங்களிடையே திரவத்தன்மை நிலைமைகளில் வேறுபாடுகளைக் குறித்துக்காட்டுகின்றது. தேறிய அடிப்படையில் உள்நாட்டு தனியார் வங்கிகளும் தனியான முதனிலை வணிகர்களும் 2026இன் முதல் எட்டு மாதகாலப்பகுதியில் மீள்கொள்வனவுச் சந்தையில் தேறிய கடன்பெறுநர்களாகவிருந்த அதேவேளை, அரசிற்குச் சொந்தமான வங்கிகள் தொடர்ந்தும் தேறிய கடன்வழங்குநர்களாவிருந்தன. அழைப்புப் பணச் சந்தையில் அதேகாலப்பகுதியில் அரசிற்குச் சொந்தமான வங்கிகளும் வெளிநாட்டு வங்கிகளும் தொடர்ந்தும் தேறிய கடன்வழங்குநர்களாவிருந்த அதேவேளை, உள்நாட்டு தனியார் வங்கிகள் தேறிய கடன்பெறுநர்களாகவிருந்தன. திரவத்தன்மை வழங்குநர்களாக அரசிற்குச் சொந்தமான வங்கிகளின் வகிபாகம் மீளாய்வுக் காலப்பகுதியில் பணச் சந்தை நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு உதவின. எனினும், அவற்றின் திரவத்தன்மை நிமைமைகள் மற்றும் அரசாங்க நிதியளிப்புத் தொழிற்பாடுகள் என்பவற்றுக்கிடையிலான தொடர்பை கருத்திற்கொள்கையில் அரசிற்குச் சொந்தமான வங்கிகள் மத்தியில் முறைமை திரவத்தன்மை இடையேற்பாட்டு செறிவுக்கான பாதிக்கப்படும் தன்மைகளை அதிகரித்திருக்கக்கூடும். அதற்கமைய, அரசாங்கத்தின் நிதியளித்தல் தேவைப்பாடுகளில் எதிர்பாராத அதிகரிப்புக்கள் அரசிற்குச் சொந்தமான வங்கிகளின் திரவத்தன்மை நிலைமைகளைப் பாதித்து, அதன் மூலம் ஒட்டுமொத்த பணச் சந்தை திரவத்தன்மை நிலைமைகளில் செல்வாக்குச்செலுத்தக்கூடும்.

**மாற்றமடைகின்ற திரவத்தன்மை நிலைமைகளுக்கு மத்தியில் சில தற்காலிக விலகல்களினைத் தவிர ஓரிரவு பணச் சந்தை வீதங்கள், ஓரிரவுக் கொள்கை வீதத்துடன் அணிசேர்ந்து காணப்பட்டன.** சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட மீள்கொள்வனவு வீதம் என்பன 2026இன் முதல் எட்டு மாதகாலப்பகுதியில் ஓரிரவுக் கொள்கை வீதத்துடன் பரந்தளவில் அணிசேர்ந்திருந்தன. இருப்பினும், இரு வீதங்களும் 2026 மே இறுதியில் மேற்கொள்ளப்பட்ட கொள்கை வீத அதிகரிப்பினைத் தொடர்ந்து, குறிப்பாக 2026 யூனிலிருந்து ஓகத்து மாதங்கள் வரை மேல்நோக்கிய அழுத்தத்தினை எதிர்கொண்டன. சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் ஆண்டின் முந்திய காலப்பகுதியில் ஓரிரவுக் கொள்கை வீதத்திற்குக் கீழ் செல்வதற்கு உள்நாட்டு பணச் சந்தையில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க திரவத்தன்மை மிகைகள் கீழ்நோக்கிய அழுத்தங்களைத் பிரயோகித்தன. இதன்பின்னணியில், மத்திய வங்கி மிகையான திரவத்தன்மையினை ஈர்ப்பதற்கும் ஓரிரவு கொள்கை வீதத்துடன் குறுகியகால சந்தை வட்டி வீதங்களின் அணி சேர்தலை வசதிப்படுத்துவதற்கும் 2026 பெப்புருவரி நடுப்பகுதியிலிருந்து திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை மீளத்தொடங்கியது. மிகைத் திரவத்தன்மை வீழ்ச்சியடைந்தமையினால் 2026 ஏப்பிறலில் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன. பின்னர் இதற்குப் பெருமளவில் காரணமாக அமைந்த பாரிய வெளிநாட்டுக் கடன் மீள்கொடுப்பனவுகள் மற்றும் பண்டிகைப் பருவகாலங்களில் அதிகரித்த நாணய மீளெடுப்புக்களிற்கு சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் படிப்படியாக ஓரிரவுக் கொள்கை வீதத்தை நோக்கி திரும்பலடைந்தது. எனினும், உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் புதுப்பிக்கப்பட்ட அழுத்தங்களின் நோக்கில் 2026 ஏப்பிறல் பிந்திய பகுதியிலிருந்து திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்

வரைபடம் 2.28 மீள்கொள்வனவுச் சந்தைப் பங்கேற்பாளர்கள்




மூலம்: இலங்கைம த்திய வங்கி

வரைபடம் 2.29 சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 2.30 சராசரி நிறையேற்றப்பட்ட மீள்கொள்வனவு வீதம்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

மீளத்தொடங்கப்பட்டன. உள்நாட்டு பணச் சந்தை திரவத்தன்மையின் தொடர்ச்சியான மிதமடைதல், நாணயக் கொள்கை நிலை இறுக்கமாக்கலுடன் ஒன்றிணைந்து குறுகிய கால சந்தை வட்டி வீதங்கள் மீது மேல்நோக்கிய அழுத்தத்தை ஏற்படுத்தின. திரவத்தன்மை நிலைமைகளில் மிதமடைதல் 2026இன் இரண்டாம் காலாண்டிலும் தொடர்ந்து குறுகிய கால வட்டி வீதங்கள் மீது மேல்நோக்கிய அழுத்தத்தைத் தீவிரப்படுத்தி, இதனூடாக 2026 மே நடுப்பகுதியிலிருந்து சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் மேல்நோக்கி நகர்வதற்குக் காரணமாகியது. 2026 ஓகத்து இறுதியிலுள்ளவாறு 2026 மே மாதத்தில் ஓரிரவுக் கொள்கை வீதத்தில் 100 அடிப்படைப் புள்ளிகள் அதிகரிப்பினைத் தொடர்ந்து சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம், சராசரி நிறையேற்றப்பட்ட மீள்கொள்வனவு வீதம் என்பன முறையே 8.85 சதவீதமாகவும் 8.91 சதவீதமாகவுமிருந்து 8.75 சதவீதம் கொண்ட அப்போதிருந்த ஓரிரவுக் கொள்கை வீதத்திற்கு சிறிதளவு மேலாக காணப்பட்டன. கொள்கை வீத அதிகரிப்பினைத் தொடர்ந்து பணச் சந்தை வீதங்களில் ஏற்பட்ட மேல்நோக்கிய சீராக்கமானது செயற்றிறன்மிக்க நாணயக் கொள்கை ஊடுகடத்தலினைக் குறித்துக்காட்டுகின்ற வேளையில், வீதங்கள் ஓரிரவுக் கொள்கை வீதங்களுடன் நெருக்கமாக ஒத்திசைந்து காணப்பட்டன. மீளாய்வுக் காலப்பகுதியில் அழைப்புப் பணச் சந்தையினதும் மீள்கொள்வனவுச் சந்தையினதும் நாளாந்த குறைந்தபட்ச மற்றும் உயர்ந்தபட்ச வீதங்களுக்கிடையிலான பரம்பல் பெரும்பாலும் குறுக்கமடைந்து காணப்பட்டு, சந்தையில் செயல்திறன்மிக்க வர்த்தக நடவடிக்கைகளைப் பிரதிபலித்தன. இம்மேம்படுதல்கள் காரணமாக சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட மீள்கொள்வனவு வீதம் என்பன 2026இன் முதல் எட்டு மாதகாலப்பகுதியில் தொடர்ந்தும் குறைவான தளம்பல்மிக்கனவாக இருந்தன.

**உள்நாட்டு பணச் சந்தை திரவத்தன்மையானது காலப்பகுதியில் மிகைகளின் பருமன் கணிசமாக வேறுபட்ட போதும் 2026இன் முதல் எட்டு மாதங்கள் முழுவதும் மிகையாகவிருந்தது.** பிரதானமாக உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணியின் கொள்வனவுகள், வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர ஒப்பந்த பரிமாற்றக் கொடுப்பனவுகள் மற்றும் மத்திய வங்கியின் இலாபங்களின் அரசாங்கத்திற்கான மாற்றல் என்பன மூலம் துணையளிக்கப்பட்டு 2026 மாச்சு ஆரம்பத்தில் திரவத்தன்மை மிகைகள், ரூ.403.8 பில்லியன் கொண்ட அண்மைய உச்சத்தினை எட்டியது. அதன் பின்னர் 2026 ஏப்பிறல் மற்றும் யூன் மாதங்களுக்கிடையில் மிகைத் திரவத்தன்மையில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி அவதானிக்கப்பட்டமைக்கு, ஒதுக்குகளைப் பயன்படுத்தி அரசாங்கத்தின் தேறிய வெளிநாட்டுக் கடன் மீள்கொடுப்பனவுகள் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் வெளிநாட்டுச் செலாவணி விற்பனைகள் மற்றும் மத்திய வங்கி வசமுள்ள திறைசேரி முறிகளின் மீதான கூப்பன் கொடுப்பனவுகள் என்பன முதன்மைக் காரணங்களாக அமைந்தன. 2026 ஓகத்து இறுதியிலுள்ளவாறு திரவத்தன்மை மிகை 2025 இறுதியளவின் ரூ.175.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ,132.3 பில்லியனாகவிருந்தது. காலப்பகுதியில் நாணயச் சந்தைத் திரவத்தன்மையில் குறிப்பிடத்தக்க ஏற்ற இறக்கங்கள் உள்நாட்டுத் திரவத்தன்மை நிலைமைகள் மீதான மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள் மற்றும் அரசாங்கத்துடன் தொடர்புடைய காசுப் பாய்ச்சல்கள் என்பவற்றின் தாக்கங்களினை முதன்மையாகப் பிரதிபலித்தன.

**சில மேம்பாடுகளுக்கு மத்தியில், பங்கேற்கின்ற நிறுவனங்களுக்கிடையில் சமச்சீரற்ற திரவத்தன்மைப் பரம்பல் 2026 காலப்பகுதியிலும் தொடர்ந்து இருந்தது.** வெளிநாட்டு வங்கிகள் மிகைத் திரவத்தன்மையைத் தொடர்ந்தும் பேணிய அதேவேளை, அரச வங்கிகளின் மிகைத் திரவத்தன்மை நிலை அண்மைக்காலத்தில் வீழ்ச்சியடைந்து அரசாங்கம் தொடர்புபட்ட கொடுக்கல்வாங்கல்களை பகுதியளவில் பிரதிபலித்தது. அதேவேளை, தனியார் துறை கொடுகடனில் விரிவடைதலினால் முதன்மையாகத் தூண்டப்பட்டு

வரைபடம் 2.31 பணச் சந்தைத் திரவத்தன்மை பரம்பல்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

உள்நாட்டு தனியார் வங்கிகள் ஒப்பீட்டளவில் இறுக்கமான திரவத்தன்மை நிலைமைகளை எதிர்கொண்டன. பங்கேற்கின்ற நிறுவனங்களுக்கிடையில் ஒழுங்கற்ற திரவத்தன்மை பரம்பல் தொடர்ந்திருந்தமை சந்தைப் பிளவுகளை அதிகரித்து வங்கிகளுக்கிடையிலான சந்தையினுள் வினைத்திறன்மிக்க திரவத்தன்மை மீள்பரம்பலைத் தடைப்படுத்தி, கொள்கை வீதத்துடன் குறுகியகால சந்தை வட்டி வீதங்கள் அணிசேர்ந்திருப்பதற்கான சாத்தியத்தைப் பாதித்து இதனூடாக நாணயக் கொள்கையின் செயல்திறன்மிக்க ஊடுகடத்தலையும் பாதிக்கக்கூடும்.

## 2.5 கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு உட்கட்டமைப்பு

**கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் 2026 முதலரைப்பகுதியில் தொடர்ந்தும் தொழிற்பாட்டு ரீதியாக தாக்குப்பிடிக்கும்தன்மையுடன் காணப்பட்டன.** பங்கேற்கின்ற நிறுவனங்கள் மத்தியில் பாரிய பெறுமதி

வரைபடம் 2.32 பாரிய பெறுமதிக் கொடுப்பனவு முறைமை – அதேநேர மொத்தத் தீர்ப்பனவு பெறுமதி




மூலம்: இலங்கை மத்திய வங்கி

மற்றும் நேர முக்கியத்துவமிக்க கொடுக்கல்வாங்கல்களின் சீரான, பாதுகாப்பான மற்றும் காலோசித தீர்ப்பனவை வசதிப்படுத்துகின்ற அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை ரூ.263 ரில்லியன் கொண்ட மொத்தப் பெறுமதியுடன் 318,231 கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்து, 2025இன் நேரொத்த காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2026இன் முதலரைப்பகுதியில் அளவு மற்றும் கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதிகளில் முறையே 10.4 சதவீத மற்றும் 31.5 சதவீத அதிகரிப்புக்களை எடுத்துக்காட்டியது. சில்லறைக் கொடுப்பனவு முறைமைகளும் 2026இன் முதலரைப்பகுதி முழுவதும் நிலையான வளர்ச்சியினை எடுத்துக்காட்டின. குறிப்பாக, நாட்டின் விரைவான கொடுப்பனவு முறைமையான பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி உடனடி வங்கிகளுக்கிடையிலான நிதிய மாற்றல்களை தொடர்ந்தும் வசதிப்படுத்தி, டிஜிட்டல் கொடுப்பனவுகளுக்கான முக்கிய வழியாகக் காணப்பட்டது. பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி ஊடாக செயன்முறைப்படுத்தப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் அளவு 2025இன் நேரொத்த காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2026இன் முதலரைக் காலப்பகுதியில் 31.9 சதவீதத்தினால் அதிகரித்து கணக்கிலிருந்து கணக்கிற்கான உடனடி மாற்றல்களுக்கான அதிகரிக்கின்ற விருப்பத்தெரிவினை எடுத்துக்காட்டுகின்றது. நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு நோக்கிலிருந்து பார்க்கையில் டிஜிட்டல் கொடுப்பனவு வழிகள் மீது அதிகரித்தளவில் தங்கியிருத்தலும் முறைமை ரீதியாக முக்கியத்துவமிக்க கொடுப்பனவு உட்கட்டமைப்பின் ஊடாக செயன்முறைப்படுத்தப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் வளர்ச்சியடைகின்ற அளவும் பெறுமதியும் சாத்தியமான தொழிற்பாடு சார்ந்த இடையூறுகளின் தாக்கம், இணைய நிகழ்வுகள் மற்றும் தொழில்நுட்பவியல் செயலிழப்புகள் என்பவற்றைத் தீவிரப்படுத்தி ஆற்றல்மிக்க தொழிற்பாட்டு ரீதியான தாக்குப்பிடிக்கும் தன்மை, இணையப் பாதுகாப்புகள் மற்றும் அவசரகால ஒழுங்கேற்பாடுகள் என்பவற்றைப் பேணுவதன் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக்காட்டுகின்றன.

**மீளாய்வுக்குட்படுகின்ற காலப்பகுதியில், பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி மற்றும் பொதுவான பணம் மீளெடுப்பு இயந்திர ஆளி என்பன தொடர்பிலான கொடுகடன் இடர்நேர்வை சிறப்பாக முகாமைசெய்வதற்கான பொறிமுறையொன்றின் அறிமுகப்படுதலொன்றுடன் சில்லறைக் கொடுப்பனவு உட்கட்டமைப்பின் தாக்குப்பிடிக்கும் தன்மை வலுப்படுத்தப்பட்டது.** அதற்கமைய, பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி மற்றும் பொதுவான பணம் மீளெடுப்பு இயந்திர ஆளி என்பவற்றின் பங்கேற்பாளர்கள் 2026 யூன் 1 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி மற்றும் பொதுவான பணம் மீளெடுப்பு இயந்திர ஆளி இரண்டிற்குமான ஏற்புடைய தேறிய பற்று உச்சவரம்புடனும் அதேபோன்று அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில்[8] ஏற்புடைய தீர்ப்பனவு உத்தரவாதத் தொகையுடனும் இணங்கியொழுகுவதற்கு தேவைப்படுத்தக்கட்டன. அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் தீர்ப்பனவு உத்தரவாத நிதியக் கணக்கில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் பங்கேற்பாளர் ஒருவர் பேணுகின்ற தீர்ப்பனவு உத்தரவாதத் தொகையானது

8 பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி மற்றும் பொதுவான பணம் மீளெடுப்பு இயந்திர ஆளி முறைமையின் பங்கேற்பாளர்கள் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் பங்கேற்பாளர்களாவர்.

சிறப்புக் குறிப்பு 2

## முறைமைசார் இடர்நேர்வு அளவீடு

இலங்கை மத்திய வங்கியானது இலங்கையின் நிதியியல் முறைமைக்கு ஏற்படக்கூடிய இடர்நேர்வுகளை மதிப்பிடும் பொருட்டு 2017ஆம் ஆண்டு தொடக்கம் அரையாண்டிற்கு ஒரு முறை என்ற அடிப்படையில் நிதியியல் நிறுவனங்களில் இடர்நேர்வு முகாமைத்துவத்திற்குப் பொறுப்பான நிறைவேற்று அலுவலர்களின் கண்ணோட்டத்தின் அடிப்படையில் முறைமைசார் இடர்நேர்வு அளவீட்டினை மேற்கொண்டு வருகின்றது. முறைமைசார் இடர்நேர்வு அளவீடானது முன்னோக்கிய பார்வையிலமைந்த அளவீடொன்றாகுமென்பதுடன் இச்சிறப்புக் குறிப்பு 2026ஆம் ஆண்டிற்கான முக்கிய அம்சங்களைச் சுருக்கமாகத் தொகுத்தளிப்பதுடன் குறிப்பாக, ஆண்டின் இரண்டாம் அரையாண்டில் நடத்தப்பட்ட அண்மைய அளவீட்டின் பெறுபேறுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றது.

### நிதியியல் முறைமை மீதான நம்பிக்கை

தேறிய சதவீத இருப்பினால் அளவிடப்படுகின்ற நிதியியல் முறைமை மீதான பதிலளித்தவர்களின் ஒட்டுமொத்த நம்பிக்கையானது 2026ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டில் சிறிதளவு முன்னேற்றமொன்றினைப் பதிவுசெய்வதற்கு முன்னர் 2026ஆம் ஆண்டின் முதலாவது அரையாண்டில் வீழ்ச்சியடைந்தது. ஒட்டுமொத்தமாக, குறுங்கால நம்பிக்கையானது நேர்க்கணிய வீச்சொன்றில் தொடர்ந்து காணப்பட்ட போதிலும், 2025 உடன் ஒப்பிடுகையில் 2026இல் தாழ்ந்தளவிலேயே தொடர்ந்தும் காணப்பட்டது. நடுத்தர கால நம்பிக்கையானது இரு அளவீட்டுச் சுற்றுக்களிலும் பரந்தளவில் ஒத்த போக்கொன்றினை வெளிப்படுத்தியது. பதிலளித்தவர்களில் கணிசமானளவிலான பகுதியினர் “ஓரளவு நம்பிக்கை” என்ற நிலைப்பாடொன்றினை வெளிப்படுத்தியமையானது நிதியியல் முறைமை உறுதிப்பாட்டின் மீதான நம்பிக்கை தொடர்ந்து மிதமடைந்து காணப்பட்டதனைக் குறித்துக்காட்டியது.

### உயர்ந்தளவிலான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய எதிர்மறை நிகழ்வொன்று குறித்த எண்ணப்பாங்கின் நிகழ்தகவு

குறுங்காலம் தொடக்கம் நடுத்தர காலம் வரையான காலப்பகுதியில் நிதியியல் முறைமையினுள் உயர்ந்தளவிலான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய எதிர்மறை நிகழ்வொன்று ஏற்படுவதற்கான சாத்தியக்கூறினை மதிப்பிடுமாறு பதிலளித்தவர்களிடம் அளவீட்டின் மூலம் கோரப்பட்டது. தேறிய சதவீத இருப்பில் பிரதிபலிக்கப்பட்டவாறு அத்தகைய நிகழ்வொன்று குறுங்காலத்தில் நடைபெறுதல் குறித்த எண்ணப்பாங்கின் நிகழ்தகவு அதிகரித்ததுடன் அதன்மூலம், முன்னைய ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியடைகின்ற போக்கு திரும்பலடைந்தது. இருப்பினும், உயர்ந்தளவிலான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய எதிர்மறை நிகழ்வொன்று நடுத்தர காலத்தில் ஏற்படுதல் குறித்த எண்ணப்பாங்கின் நிகழ்தகவானது 2026இன் முதலாவது அரையாண்டில் ஏற்பட்ட சிறியளவிலான அதிகரிப்பொன்றினைத் தொடர்ந்து, 2026இன் இரண்டாம் அரையாண்டில் சிறிதளவு மிதமடைந்தமையானது நடுத்தர கால இடர்நேர்வுகளின் சற்றுச் சாதகமான மதிப்பீடொன்றினைக் குறித்துக்காட்டியது.

### நிதியியல் முறைமைக்கான இடர்நேர்வுகளின் மூலங்கள்

அளவீட்டுப் பதில்களிற்கமைய, நிதியியல் முறைமை மீது ஏற்படுத்தக்கூடிய அதன் சாத்தியமான தாக்கத்தின் அடிப்படையில் 2026இன் இரண்டாம் அரையாண்டில் “உலகளாவிய பேரண்டப்பொருளாதார இடர்நேர்வுகள்” மிகவும் முக்கியமான இடர்நேர்வு வகையாகத் தோற்றம்பெற்று, பெரும்பாலும் புவிசார் அரசியல் பதற்றங்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய கசிவுத்தாக்கங்கள் என்பன குறித்த நிச்சயமற்றதன்மைகளைப் பிரதிபலித்தன. இதனைத் தொடர்ந்து “பொதுவான உள்நாட்டுப் பேரண்டப்பொருளாதார இடர்நேர்வுகள்” காணப்பட்டன. அதேவேளை, “நிதியியல் உட்கட்டமைப்புடன் தொடர்புடைய இடர்நேர்வுகளின்”தாக்கம் குறித்த எண்ணப்பாங்கானது 2026இன் முதலாவது அரையாண்டுடன் ஒப்பிடுகையில் 2026இன் இரண்டாம் அரையாண்டில் சிறிதளவு அதிகரித்து, அண்மைய அளவீடுகளில் அதிகரித்துச் செல்கின்ற போக்கொன்றினைக் குறித்துக்காட்டிய அதேவேளை, ஏனைய இடர்நேர்வு வகைகளின் தாக்கங்களின் எண்ணப்பாங்கானது வீழ்ச்சியடைந்து காணப்பட்டது.

2026இன் இரண்டாம் அரையாண்டில் நிதியியல் முறைமைக்கான பாரியளவிலான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சாத்தியப்பாட்டுடன் மிகவும் முக்கியமான துணை இடர்நேர்வாக “புவிசார் அரசியல் பதற்றங்கள் மற்றும் ஏனைய நாடுகளிலிருந்தான இடர்நேர்வுக் கசிவுத்தாக்கங்கள்” இனைப் பதிலளித்தவர்கள் அடையாளம் கண்டனர். இதனைத் தொடர்ந்து “இணையத் தாக்குதல்கள் மற்றும்

வரைபடம் 1 நிதியியல் முறைமை மீதான நம்பிக்கை




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2** நிதியியல் முறைமையில் உயர்ந்தளவிலான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வொன்று இடம்பெறுதல் குறித்த எண்ணப்பாங்கின் நிகழ்தகவு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 3** முக்கிய இடர்நேர்வு வகைகளின் இயக்கவாற்றல்கள்




குறிப்புக்கள்: ஒவ்வொரு பதிலளித்தவராலும் அடையாளம் காணப்பட்ட ஐந்து துணை இடர்நேர்வுகளும் ஒவ்வொரு முக்கிய இடர்நேர்வு வகைக்குமான மொத்தத் தொகையைக் கணக்கிடுகையில் பரிசீலனையிற்கொள்ளப்பட்டன. முன்னைய அளவீடுகளில் இடம்பெற்ற 'உள்நாட்டுப் பேரண்டப்பொருளாதார இடர்நேர்வுகள்' என்ற இடர்நேர்வு வகையானது 2025ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டில் மேற்கொள்ளப்பட்ட அளவீட்டிலிருந்து 'இறை மற்றும் இறையாண்மையுடன் தொடர்புடைய இடர்நேர்வுகள்' மற்றும் 'பொதுவான உள்நாட்டுப் பேரண்டப்பொருளாதார இடர்நேர்வுகள்' என இரண்டு தனித்தனி வகைகளாகப் பிரிக்கப்பட்டது.



மூலம்: இலங்கை மத்திய வங்கி

தகவல் திருட்டு (Phishing)' மற்றும் "பணவீக்கம்" ஆகியவை காணப்பட்டன. அளவீடு மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் உயர்வடைந்த புவிசார் அரசியல் பதற்றங்கள் குறிப்பாக, மத்திய கிழக்கில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் மற்றும் உள்நாட்டுப் பொருளாதாரத்திற்கான அவற்றின் சாத்தியமான கசிவுத்தாக்கங்கள் மீதான கரிசனைகள் ஆகியவற்றைப் புவிசார் அரசியல் மற்றும் பணவீக்கம் தொடர்பான இடர்நேர்வுகளின் முக்கியத்துவம் பிரதிபலித்திருக்கக்கூடும். "இணையத் தாக்குதல்கள் மற்றும் தகவல் திருட்டு" தொடர்பான இடர்நேர்வுசார் எண்ணப்பாங்குகள் 2025ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்ட அனைத்து அளவீடுகளிலும் அதிகமாகக் குறித்துக்காட்டப்பட்ட துணை இடர்நேர்வுகளிடையே தொடர்ந்தும் காணப்பட்டன. மேலும், வங்கிகள், நிதிக் கம்பனிகள் மற்றும் காப்புறுதிக் கம்பனிகள் உள்ளிட்ட நிதியியல் முறைமையின் அனைத்துத் துறைகளிலிருந்தும் பதிலளித்தவர்கள் "புவிசார் அரசியல் பதற்றங்கள் மற்றும் ஏனைய நாடுகளிலிருந்தான இடர்நேர்வுக் கசிவுத்தாக்கங்கள்" என்பவற்றை நிறுவன மட்டத்தில் முகாமைசெய்வதற்கு மிகவும் சவால்மிக்க இடர்நேர்வுகளாகத் தொடர்ந்து எடுத்துக்காட்டினர்.

**வரைபடம் 4** அதிகளவில் குறித்துக்காட்டப்பட்ட துணை இடர்நேர்வுகள்




குறிப்பு: ஒவ்வொரு துணை இடர்நேர்வுடனும் தொடர்புடைய முக்கிய இடர்நேர்வு வகை வட்டத்தின் நிறத்தினால் குறிக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய பேரண்டப்பொருளாதார இடர்நேர்வுகள் | உலகளாவிய பேரண்டப்பொருளாதார இடர்நேர்வுகள் | பொது உள்நாட்டுப் பேரண்டப்பொருளாதார இடர்நேர்வுகள் | நிதியியல் உட்கட்டமைப்புடன் தொடர்புடைய இடர்நேர்வுகள் | நிதியியல் சந்தை இடர்நேர்வுகள் | நிதியியல் நிறுவனங்களுடன் தொடர்புடைய இடர்நேர்வுகள்

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## முடிவுரை

அண்மைய முறைமைசார் இடர்நேர்வு அளவீட்டின் கண்டறியப்பட்டவைகளானவை முக்கியமாக, வெளிநாட்டு அபிவிருத்திகளின் காரணமாக நிதியியல் முறைமை மீதான பதிலளித்தவர்களின் ஒட்டுமொத்த நம்பிக்கை 2026 காலப்பகுதியில் சில ஏற்ற இறக்கங்களினை வெளிக்காட்டியமையினை எடுத்துக்காட்டுகின்றன. ஒட்டுமொத்த நம்பிக்கையானது 2026இன் முதலாவது அரையாண்டுடன் ஒப்பிடுகையில் 2026இன் இரண்டாம் அரையாண்டில் சிறியளவிலான மேம்பாடொன்றினைப் பதிவுசெய்து, நிதியியல் முறைமையினை நோக்கிய பொதுவான உறுதிமிக்க தோற்றப்பாடொன்றினைப் பிரதிபலித்தது. குறுங்காலத்தில் உயர்ந்தளவிலான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பாதகமான நிகழ்வொன்று ஏற்படுவதற்கான சாத்தியக்கூறு தொடர்பான எண்ணப்பாங்குகள் அதிகரித்து, அண்மைய ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியடைகின்ற போக்கினைத் திரும்பலடையச்செய்தது. இருப்பினும், 2026இன் இரண்டாம் அரையாண்டில் நடுத்தர கால இடர்நேர்வுசார் எண்ணப்பாங்குகள் சிறிதளவு தளர்வடைந்தமையானது நடுத்தர காலத்திலான இடர்நேர்வுகளின் மிகவும் சாதகமான மதிப்பீடொன்றினை எடுத்துக்காட்டியது. பதிலளித்தவர்கள் "உலகளாவிய பேரண்டப்பொருளாதார இடர்நேர்வுகளை,நிதியியல் முறைமைக்கான மிகவும் குறிப்பிடத்தக்க இடர்நேர்வு மூலமாக அடையாளங்கண்ட அதேவேளை, "புவிசார் அரசியல் பதற்றங்கள் மற்றும் ஏனைய நாடுகளிலிருந்தான இடர்நேர்வுக் கசிவுத்தாக்கங்கள்" மிகவும் முக்கியமான துணை இடர்நேர்வு வகையாகத் தோற்றம் பெறுகின்றமையைக் காட்டினர். நிதியியல் உட்கட்டமைப்புடன் தொடர்புடைய இடர்நேர்வுகளும் குறிப்பாக, "இணையத் தாக்குதல்கள் மற்றும் தகவல் திருட்டு" போன்றவை பதிலளித்தவர்களின் கரிசனைகளில் தொடர்ந்து முக்கிய இடத்தைப் பெற்றிருந்தன. மேலும், நிதியியல் துறையிலுள்ள நிறுவனங்கள் "புவிசார் அரசியல் பதற்றங்கள் மற்றும் வெளிநாட்டு இடர்நேர்வுக் கசிவுத்தாக்கங்கள்" என்பவற்றை நிறுவன மட்டத்தில் முகாமைசெய்வதற்கு மிகவும் சவால்மிக்க இடர்நேர்வுகளாக அடையாளம் கண்டன. இவ்வாறு கண்டறியப்பட்டவைகள் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினைப் பாதுகாப்பதற்கான தொடர்ச்சியான விழிப்புணர்வு, இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்புக்களை வலுப்படுத்தல், இணையத் தாக்குப்பிடிக்குந்தன்மையினை மேம்படுத்தல் மற்றும் உலகளாவிய அபிவிருத்திகளை உன்னிப்பாகக் கண்காணித்தல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன.

2026ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முறைமைசார் இடர்நேர்வு அளவீடுகளின் முக்கியமாக கண்டறியப்பட்டவைகளை முன்வைக்கின்ற அரையாண்டு ரீதியிலான வெளியீடுகள் இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் கிடைக்கப்பெறுவதுடன் அவற்றைப் பின்வரும் இணைப்பின் மூலம் அணுகலாம்:

பங்கேற்பாளரின் தேறிய பற்று உச்சவரம்பை நிர்ணயிக்கின்ற அதேவேளை, தேறிய பற்று உச்சவரம்பானது தேறிய பற்று உச்சவரம்பின் பெறுமதிக்கு இரு தீர்ப்பனவுச் சுற்றுகளுக்கிடையில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவுப் பங்கேற்பாளருக்கு ஏற்படக்கூடிய உயர்ந்தபட்ச கடன் அளவை வரையறுக்கின்றது. இப்பொறிமுறை தீர்ப்பனவு தொடர்புபட்ட கொடுகடன் அளவு முகாமைத்துவத்தை வலுப்படுத்துவதுடன் அதன் தீர்ப்பனவுக் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பங்கேற்பாளரொருவரின் இயலாமையிலிருந்து தோன்றுகின்ற சாத்தியமான இழப்புக்களின் ஊடுகடத்தலைக் கட்டுப்படுத்துவதற்கு உதவிசெய்து, இதன் மூலம் கொடுப்பனவு முறைமை மற்றும் பரந்த நிதியியல் முறைமை முழுவதும் இடையூறுகள் பரவும் இடர்நேர்வைக் குறைக்கும்.

**2026இன் முதலரைக் காலப்பகுதியில் டிஜிட்டல் கொடுப்பனவுகளின் பெறுவழியையும் உபயோகத்தையும் விரிவுபடுத்துவதற்கு மத்திய வங்கியினால் பல வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.** 2026 பெப்புருவரி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் ஜஸ்ட் பே இயலச்செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்களுக்கான உயர்ந்தபட்ச வரையறை ரூ.150,000 ஆக அதிகரிக்கப்பட்டது 2026 ஏப்பிறல் தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் லங்கா கியுஆர் ஊடான சக தரப்பினரிடையேயான நிதிய மாற்றல்கள் இயலச்செய்யப்பட்டதுடன் 2026 ஏப்பிறல் தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் வணிகர்கள் காட்சிப்படுத்தப்பட்ட ரூ.5,000 அல்லது அதற்குக் கீழான தொகை கொண்ட லங்கா கியுஆர் கொடுக்கல்வாங்கல்கள் மீதான வணிகர் கழிவு வீதம் தள்ளுபடி செய்யப்பட்டன. இலங்கையின் கியுஆர் கொடுப்பனவு முறைமையின் ஒன்றுடனொன்று ஒத்தியங்குதலும் சர்வதேச அடைவும் மேலும் இரு அதாவது வீசட் பே மற்றும் நேபாளத்தின் கனைக்ற்ஜபிஎஸ் வலையமைப்புக்கள் லங்கா பே (பிறைவேட்) லிமிடெட்டுடன் ஒருங்கிணைத்து, மேலும் விரிவுபடுத்தப்பட்டது. டிஜிட்டல் கொடுப்பனவு முறைகளை பரந்தளவில் பின்பற்றுவதை ஊக்குவிப்பதற்கும் டிஜிட்டல் கொடுப்பனவு உற்பத்திகளின் நன்மைகள் மற்றும் பாதுகாப்பான பயன்பாடு பற்றி பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்கும் பிராந்திய ஊக்குவிப்பு மற்றும் பொதுமக்கள் விழிப்புணர்வு பிரச்சாரங்களும் நடாத்தப்பட்டன. இவ்வழிமுறைகள் கொடுப்பனவு வினைத்திறன், அணுகல் மற்றும் நிதியியல் வசதிக்குட்படுத்தல் என்பவற்றுக்கு ஆதரவளித்த அதேவேளை பொருளாதார நடவடிக்கையில் ஒன்றுடனொன்று ஒத்தியங்கும் டிஜிட்டல் வழிகளின் வகிபாகத்தை விரிவுபடுத்தின. எவ்வாறாயினும், டிஜிட்டல் கொடுப்பனவு வழிகள் மீது அதிகரித்தளவில் தங்கியிருத்தலானது இணைய அச்சுறுத்தல்கள், தொழிற்பாடுசார்ந்த இடையூறுகள், மோசடி மற்றும் மூன்றாம் தரப்பில் தங்கியிருத்தல் என்பவற்றுக்கு நிதியியல் முறைமை ஆட்படுவதை தீவிரப்படுத்தி, இணையப் பாதுகாப்பு, தொழிற்பாடு சார்ந்த தாக்குப்பிடிக்கும் தன்மை மற்றும் அவசரகால ஒழுங்கேற்பாடுகள் என்பவற்றின் தொடர்ச்சியான வலுப்படுத்தலைத் தேவைப்படுத்துகின்றன.

**வரைபடம் 2.33** 2026இன் முதலரைக்கான சில்லறை பெறுமதிக் கொடுப்பனவு முறைமைகளும் சாதனங்களும்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

# அத்தியாயம் 3

# நிதியியல் நிறுவனங்கள்



உயர்வடைந்த புவிசார் அரசியல் நிச்சயமற்றதன்மை மற்றும் இயற்கை அனர்த்தங்கள் என்பவற்றிலிருந்தான பாதகமான தாக்கங்கள் காணப்பட்டபோதும் பொருளாதார நடவடிக்கையின் தொடர்ச்சியான மீட்சி, அதிகரித்த வருவாய்கள் மற்றும் போதியளவிலான மூலதனத் தாங்கியிருப்புக்கள் என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு 2026 யூனில் முடிவடைந்த பன்னிரெண்டு மாத காலப்பகுதியில் நிதியியல் நிறுவனங்கள் தாக்குப்பிடிக்குந்தன்மையினைக் கொண்டிருந்தன. வங்கித்தொழில் மற்றும் நிதிக் கம்பனிகள் துறைகளிடையே நிதியியல் இடையீடானது மேம்பட்டு, காலப்பகுதியின் போதான ஒட்டுமொத்த பொருளாதார மீட்சிக்கு ஆதரவளித்தது. வாகனம் மற்றும் தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட வசதிகள் உள்ளடங்கலாக சில துறைகளுக்கான கொடுகடன் கேள்வியானது குறிப்பிடத்தக்களவில் உயர்வடைந்து காணப்பட்டன. எவ்வாறாயினும், உயர்வடைந்த கொடுகடன் விரிவாக்கமானது திரவத்தன்மை மற்றும் மூலதன நிலைமைகளில் ஓரளவு மிதமடைதலிற்குப் பங்களித்த போதிலும், துறைகள் உரிய ஒழுங்குமுறைப்படுத்தல் குறைந்தபட்சத் தேவைப்பாடுகளுக்கு மேலாகப் போதியளவிலான தாங்கியிருப்புக்களைத் தொடர்ந்தும் பேணின. எனினும், துரித மற்றும் செறிவடைந்த கொடுகடன் வளர்ச்சி, கட்டம் 2 கடன்களில் அதிகரிப்புக்கள், எல்லைதாண்டிய கடன்வழங்கல்கள் மற்றும் நிதிக் கம்பனிகளுக்கான மிகையான கடன்வழங்கலிலிருந்து தோன்றுகின்ற வங்கிகளிற்கும் நிதிக் கம்பனிகளிற்கும் இடையிலான ஒன்றுடனொன்று இணைந்ததன்மை என்பன உன்னிப்பான கண்காணிப்பினைத் தேவைப்படுத்துகின்றன. மிகையான கொடுகடன் வளர்ச்சியிலிருந்தான முறைமைசார் இடர்நேர்வுகளின் சாத்தியமான கட்டியெழுப்பலினைப் பரிசீலனையிற்கொண்டு, மத்திய வங்கியானது வாகனக் கடன்களுக்கான இறுக்கமடைந்த பெறுமதிக்கான கடன் எல்லைகள் மற்றும் தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட வசதிகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட பெறுமதிக்கான கடன் எல்லைகள் மற்றும் உயர்ந்தளவிலான இடர்நேர்வு நிறையேற்றங்கள் உள்ளடங்கலாக பல்வேறு பேரண்டமுன்மதிமிக்க கொள்கைசார் வழிமுறைகளை அறிமுகப்படுத்தியது.[1] 2026 மே மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட கொள்கை வீதச் சீராக்கம் மற்றும் மோட்டார் வாகன இறக்குமதிகள் மீதான தற்காலிக மிகைக் கட்டணத்தின் விரிவாக்கம் என்பவற்றுடன் இணைந்து, இவ்வழிமுறைகள் எதிர்வருகின்ற காலாண்டுகளில் கொடுகடன் வளர்ச்சியினை மிதமடையச்செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

வங்கித்தொழில் துறையின் ஒட்டுமொத்த ஆற்றல்வாய்ந்ததன்மையை அளவிடும் வங்கித்தொழில் ஆற்றல்வாய்ந்ததன்மைச் சுட்டெண்ணானது 2026இன் முதலாம் அரையாண்டுக் காலப்பகுதியில் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. நுகர்வு, வர்த்தகம், நிதியியல் சேவைகள், கட்டடவாக்கம் மற்றும் கரைகடந்த கடன்வழங்கல் என்பவற்றில் குறிப்பிடத்தக்களவிலான வளர்ச்சியுடன் வலுவான தனியார் துறைக் கேள்விக்கு மத்தியில் வங்கித்தொழில் துறைக் கொடுகடன் குறிப்பிடத்தக்களவு விரிவடைந்தது. கொடுகடன் தளத்தின் விரிவாக்கம் மற்றும் கட்டம் 3 கடன்களின் வெளிநின்ற தொகைகளில் ஏற்பட்ட குறைவு என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு, சொத்துத் தரக் குறிகாட்டிகள் தொடர்ந்தும் மேம்பட்ட அதேவேளை, கட்டம் 3 பெறுமதியிழப்பு காப்பு விகிதத்தில் ஏற்பட்ட மேம்பாடானது எதிர்பார்க்கப்படாத கொடுகடன் இழப்புக்களுக்கு எதிராக மேலதிக பாதுகாப்பொன்றினை வழங்கியது. எவ்வாறிருப்பினும், 2026இன் இரண்டாம் காலாண்டுப்பகுதியில் அதிகரித்துச் செல்கின்ற கட்டம் 2 கடன்கள், எதிர்காலத்தில் கடன்களின் கீழ்நோக்கிய நகர்தலின் சாத்தியமான இடர்நேர்வினை எடுத்துக்காட்டுகின்றது. காலப்பகுதியிலான வலுவான தனியார் துறைக் கொடுகடன் கேள்விக்கு மத்தியில் அரசாங்கம் மற்றும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான துறையின் வெளிப்படுத்துகையானது வீழ்ச்சியடைந்த போதிலும், அது இன்னமும் கணிசமானளவிலானதாகக் காணப்பட்டது. திரவத்தன்மை உள்ளடக்க விகிதங்கள் மற்றும் தேறிய உறுதித்தன்மை வாய்ந்த நிதியிடல் விகிதம் என்பன குறைந்த பட்ச ஒழுங்குமுறைப்படுத்தல்களிற்கு நன்கு மேலாகத் தொடர்ந்தும் காணப்பட்ட போதிலும், வங்கிகள் கடன்வழங்கலினை நோக்கித் திரவச் சொத்துக்களை மீளொதுக்கீடு செய்தமையினால் சிறிதளவு மிதமடைந்தன. உறுதியான கொடுகடன் விரிவாக்கத்தின் காரணமாக இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் மூலதனத்தினைவிட வேகமாக விரிவடைந்தமையினால் மூலதன விகிதங்களும் வீழ்ச்சியடைந்து, எதிர்பார்க்கப்படாத இழப்புக்களை உள்ளீர்ப்பதற்கான துறையின் இயலளவினைச் சுருக்கமடையச்செய்தது.

வாகன இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் தளர்வினைத் தொடர்ந்து, மோட்டார் வாகன நிதியளித்தலிற்கான அதிகரித்தளவிலான கேள்வி மற்றும் உயர்வடைந்த தங்க விலைகளினால் ஆதரவளிக்கப்பட்டு தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கலின் தொடர்ச்சியான விரிவாக்கம் என்பவற்றிற்கு மத்தியில் கடன்வழங்கல்கள் சடுதியாகத் துரிதமடைந்து நிதிக் கம்பனிகள் துறையும் காலப்பகுதியில் வலுவான வளர்ச்சியை எடுத்துக்காட்டியது. வாகனம் மற்றும் தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கலில் ஏற்பட்ட கொடுகடனின் செறிவானது அடிப்படைப் பிணையுறுதிப் பெறுமதிகளில் பாதகமான அசைவுகளிற்கான துறையின் பாதிக்கப்படக்கூடியதன்மையை அதிகரித்தது. இவ்விடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்துவதற்கு, மத்திய வங்கியானது முன்னெச்சரியாகப் பல பேரண்டமுன்மதியுடைய கொள்கை நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியது. கொடுகடன் சொத்துப்பட்டியலின் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தினாலும் கட்டம் 3 கடன்களின் வெளிநின்ற தொகைகளில் குறைப்பொன்றினாலும் ஆதரவளிக்கப்பட்டு, சொத்துத் தரம் மேம்பட்டது. எவ்வாறாயினும், கட்டம் 2 வெளிப்படுத்துகைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் பெறுமதியிழப்பு காப்பில் ஏற்பட்ட மிதமடைதல் என்பன சொத்துத் தரத்தின் மீது தொடர்ச்சியான விழிப்புணர்வினைத் தேவைப்படுத்தின. துரித ஐந்தொகை விரிவாக்கத்திற்கு மத்தியில் துறையின் திரவத்தன்மைத் தாங்கியிருப்புக்கள் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, வங்கிகளிடமிருந்தான நிதியிடலின் மீதான துறையின் வளர்ச்சியடைகின்ற தங்கியிருத்தலை அடிப்படையாகக்கொண்டு, கடன்பாடுகள் 2026 யூன் இறுதியில் தொடர்ந்தும் உயர்வடைந்து காணப்பட்டன. கடன்வழங்கலின் வளர்ச்சியால் மூலதனத் தாங்கியிருப்புக்களில் வீழ்ச்சியொன்று காணப்பட்ட போதிலும், துறையின் ஒட்டுமொத்த மூலதன விகிதமானது ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளிற்கு நன்கு மேலாகக் காணப்பட்டது.

மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணங்கள் மற்றும் சொத்துக்கள் என்பவற்றின் உறுதியான வளர்ச்சியினால் ஆதரவளிக்கப்பட்டு, காலப்பகுதியில் காப்புறுதிசார் ஊடுருவலில் ஏற்பட்ட முன்னேற்றமொன்றுடன் காப்புறுதித் துறையானது தொடர்ந்தும் விரிவடைந்தது. நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி ஆகிய இரு துணைத் துறைகளிலும் இலாபத்தன்மை மிதமடைந்த போதிலும், அவற்றின் மூலதனப் போதுமாந்தன்மை விகிதங்கள் தொடர்புடைய குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளிற்கு நன்கு மேலாகக் காணப்பட்டன. டித்வா புயலானது கணிசமானளவிலான காப்புறுதிக் கோரல்களை உருவாக்கியதுடன் இக்கோரல்களின் தீர்ப்பனவானது பொதுக் காப்புறுதியளிக்கின்ற நிறுவனங்களின் எழுத்துறுதிச் செயலாற்றம், திரவத்தன்மை மற்றும் மூலதன நிலைமைகள் என்பன மீது குறிப்பிடத்தக்க அழுத்தத்தினை ஏற்படுத்தக்கூடும்.

1 பெறுமதிக்கான கடன் எல்லைகள் மற்றும் நிறையேற்றப்பட்ட இடர்நேர்வுகள் என்பன தொடர்பான மேலதிக விபரங்கள் அத்தியாயம் 1இல் காணப்படுகின்றன

## 3.1 வங்கித்தொழில் துறை

### வங்கித்தொழில் ஆற்றல்வாய்ந்ததன்மைச் சுட்டெண்[2]

**திரவத்தன்மை மற்றும் மூலதனப்போதுமாந்தன்மை என்பவற்றின் மீதான உறுதியான கொடுகடன் வளர்ச்சியின் விளைவுகளை முதன்மையாகப் பிரதிபலித்து, வங்கித்தொழில் ஆற்றல்வாய்ந்ததன்மைச் சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறான வங்கித்தொழில் துறையின் ஒட்டுமொத்த ஆற்றல்வாய்ந்ததன்மை, 2025இன் தொடர்புடைய கலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2026இன் 2ஆம் காலாண்டின் இறுதியில் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது.** அதற்கமைய, துரித கொடுகடன் விரிவாக்கமானது நிதியளித்தல் வளர்ச்சியை விஞ்சிய அதேவேளை பகுதியளவில் அரசாங்கப் பிணையங்களிலிருந்து கடன்வழங்கல் நடவடிக்கைகளுக்காக நிதியங்கள் மீளொதுக்கிடப்பட்டமை காரணமாக, உயர் தரத்திலான திரவநிலைச் சொத்துக்கள் வீழ்ச்சியடைந்தமையால் திரவத்தன்மை துணைச் சுட்டெண் நலிவடைந்தது. கொடுகடன் விரிவாக்கத்துடன் தொடர்புடைய இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களில் அதிகரிப்பொன்றுக்கு மத்தியில் வீழ்ச்சியடைந்த மூலதனப் போதுமாந்தன்மை விகிதங்களைப் பிரதிபலித்து, மூலதனப் போதுமாந்தன்மை துணைச் சுட்டெண்ணும் மோசமடைந்தது. அதேவேளை, பங்குரிமை மூலதனம் மீதான வருவாய்கள், சொத்துக்கள் மீதான வருவாய் மற்றும் தேறிய வட்டி எல்லை என்பவற்றில் பதிவுசெய்யப்பட்ட வீழ்ச்சிகளால் பங்களிப்புச்செய்யப்பட்டு, இலாபத்தன்மை துணைச் சுட்டெண் மிதமடைந்தது. எனினும், கட்டம் 3 கடன்கள் விகிதத்தில் வீழ்ச்சியொன்றால் ஆதரவளிக்கப்பட்டு, சொத்துத் தர துணைச் சுட்டெண், குறிப்பிடத்தக்க மேம்பாடொன்றைப் பதிவுசெய்த அதேவேளை, சந்தை இடர்நேர்வு துணைச் சுட்டெண்களுக்கான செயற்றிறனும் தாக்குப்பிடிக்கும்தன்மையும் காலப்பகுதியின் போது மேம்பட்டன.

**வரைபடம் 3.2** வங்கித்தொழில் ஆற்றல்வாய்ந்ததன்மை வரைபடம்*




* மையத்திலிருந்தான விலகலானது நேர்க்கணியத் தாக்கமொன்றினைக் குறித்துக்காட்டுகின்றது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

### கொடுகடன் இடர்நேர்வு

**அண்மைய சாதகமற்ற உலகலாவிய நிச்சயமற்றதன்மைகள் காணப்பட்ட போதிலும், உகந்த பேரண்டப் பொருளாதார நிலைமைகளினால் ஆதரவளிக்கப்பட்டு, மீளாய்விற்குரிய காலப்பகுதியில் வங்கித்தொழில் துறைக் கொடுகடன் குறிப்பிடத்தக்களவில் வளர்ச்சியடைந்தது.** 2023 இன் பின்னரைப்பகுதியிலிருந்து அவதானிக்கப்பட்ட கொடுகடன் வளர்ச்சி உத்வேகம், 2026இன் முதலரைப்பகுதியில்

**வரைபடம் 3.1** வங்கித்தொழில் ஆற்றல்வாய்ந்ததன்மைச் சுட்டெண்*




* மேல் 2 விலகலானது 2007 தொடக்கம் சராசரி சுட்டெண் பெறுமதிக்கு மேல் இரு நியம விலகல்களைக் காண்பித்து, சராசரியிலிருந்து அதிகூடிய ஏற்றுக்கொள்ளத்தக்க விலகல் மட்டத்தை எடுத்துக்காட்டுகின்றது. அதேபோன்று, கீழ் 2 விலகலானது 2007 தொடக்கம் சராசரி சுட்டெண் பெறுமதிக்குக் கீழ் இரு நியம விலகலைக் காண்பித்து, ஆகக் குறைந்த ஏற்றுக்கொள்ளத்தக்க விலகல் மட்டத்தினை அடையாளப்படுத்துகின்றது. இவ்விரு எல்லைகளுக்குள்ளும் வருகின்ற சுட்டெண் பெறுமதிகள் ஏற்றுக்கொள்ளத்தக்க வீச்சொன்றினுள் இருப்பதாகக் கருதப்படுகின்றன.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 3.3** கடன்கள் மற்றும் பெறுகைகள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

2 வங்கித்தொழில் ஆற்றல்வாய்ந்ததன்மைச் சுட்டெண் என்பது சொத்துத் தரம், திரவத்தன்மை, மூலதன போதுமாந்தன்மை, சந்தை இடர்நேர்விற்கான தாக்குப்பிடிக்கும்தன்மை, இலாபத்தன்மை மற்றும் வினைத்திறன் என்பவற்றில் அபிவிருத்திகளை அடிப்படையாகக் கொண்ட வங்கித்தொழில் துறையின் ஒட்டுமொத்த உறுதிப்பாட்டினைப் பிரதிபலிக்கின்ற கூட்டுக் குறிகாட்டி ஆகும். இச்சுட்டெண் ஒவ்வொரு வங்கியின் சந்தைப் பங்கினை அடிப்படையாகக் கொண்டு நிறையேற்றப்படுகின்றது. இவ்வங்கித்தொழில் ஆற்றல்வாய்ந்ததன்மைச் சுட்டெண், 2021இன் முதலாவது காலாண்டிலிருந்து இலங்கை நிதியியல் அறிக்கையிடல் தரநியமங்கள்-9 இனை அடிப்படையாகக் கொண்ட தரவுகளைப் பயன்படுத்தி தொகுக்கப்படுகின்றது.

தொடர்ந்ததுடன், 2025இன் இரண்டாம் காலாண்டின் இறுதியின் 11.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 23.6 சதவீத ஆண்டிற்காண்டு கொடுகடன் வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. மீளாய்வின் பெரும்பாலான காலப்பகுதியின் நிலவிய ஒப்பீட்டளவில் தளர்வான நாணய நிலைமைகளுக்கும் பொருளாதாரச் செயற்பாடுகளின் மீட்சிக்கும் மத்தியில், குறிப்பாக வாகனங்கள் மற்றும் தங்கத்தைப் பிணையாகக் கொண்ட வீட்டுத்துறைக் கடன்வழங்கலில் வலுவான விரிவாக்கங்களுடன் துறையின் கொடுகடன் வளர்ச்சி குறிப்பிடத்தக்களவில் வேகமடைந்தது. கடன்வழங்கலில் இத்தொடர்ச்சியான துரிதமடைதல், கொடுகடன் கேள்வியில் குறிப்பிடத்தக்க மீளெழுச்சியொன்றையும் வங்கித்தொழில் துறையின் கடன் வழங்குவதற்கான மேம்பட்ட முனைப்பையும் எடுத்துக்காட்டுகின்றது. எனினும், புதுப்பிக்கப்பட்ட பணவீக்க அழுத்தங்கள், சந்தை வட்டி வீதங்களின் மேல்நோக்கிய சீராக்கம், இறுக்கமடைந்த பேரண்டமுன்மதிமிக்க கொள்கை வழிமுறைகள், உயர்ந்தளவிலான வலு விலை மற்றும் புவிசார் நிச்சயமற்றதன்மைகள் என்பவற்றிற்கு மத்தியில் கொடுகடன் விரிவாக்கமானது மிதமடையக்கூடும். எவ்வாறாயினும், விரைவான கொடுகடன் விரிவாக்கமானது கொடுகடனின் வேகம், உள்ளமைப்பு மற்றும் தரம் என்பவற்றின் மீதான தொடர்ச்சியான கண்காணிப்பின் தேவையையும் எடுத்துக்காட்டுகின்றது.

**மீளாய்விற்குரிய காலப்பகுதியின் கொடுகடன் விரிவாக்கமானது ரூபா கொடுகடன் அதிகரிப்பொன்றால் பெரும்பாலும் ஆதரவளிக்கப்பட்டிருந்தது.** வங்கித்தொழில் துறையின் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட கொடுகடன் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 25.4 சதவீதத்தால் ஆண்டிற்காண்டு அதிகரித்ததுடன் மீளாய்வுக் காலப்பகுதியின் கொடுகடன் விரிவாக்கத்தின் 84.3 சதவீதத்திற்கு வகைகூறியது. அதேவேளை, வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட கொடுகடனும் மீளாய்வுக் காலத்தின் இறுதியில் ரூபா நியதிகளில் 17.2 சதவீதத்தால் ஆண்டிற்காண்டு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்ததுடன் துறையின் கொடுகடன் விரிவாக்கத்தின் 15.7 சதவீதத்திற்கு வகைகூறியது. ஐ.அ.டொலர் நியதிகளில், வெளிநாட்டு நாணய கொடுகடன் வளர்ச்சியானது 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் ஆண்டிற்காண்டு 4.4 சதவீதமாக மாத்திரம் விளங்கிய அதேவேளை, வெளிநின்ற வெளிநாட்டு நாணய கடன்வழங்கலின் 37.1 சதவீதம் கரைகடந்த நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும், கொடுகடன் விரிவாக்கம் பெரும்பாலும் உள்நாட்டு வங்கிகளால் முழுமையாக தூண்டப்பட்டதாக விளங்கியதுடன் அவற்றில் உள்நாட்டு முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம்வாய்ந்த வங்கிகள் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் வங்கித்தொழில் துறையின் கொடுகடன் விரிவாக்கத்தின் 73.8 சதவீதத்திற்கு வகைகூறிய அதேவேளை, ஏனைய உள்நாட்டு வங்கிகள் எஞ்சிய 26.2 சதவீதத்திற்கு வகைகூறின. எனினும்,

வரைபடம் 3.4 நாணயத்தின் அடிப்படையில் கொடுகடனில் காலாண்டு ரீதியான மாற்றம்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வெளிநாட்டு வங்கிகள் சிறிதளவிலான ஆண்டிற்காண்டு கொடுகடன் வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்ததுடன், கடந்த ஆண்டின் குறிப்பிட்ட காலப்பகுதிகளில் காலாண்டு ரீதியிலான சுருக்கங்களை எதிர்கொண்டன. இது வெளிநாட்டு வங்கியொன்றிலிருந்து சில்லறை வங்கித்தொழில் தொழிற்பாடுகளை வேறொரு உள்நாட்டு வங்கிக்கு மாற்றியதனை பகுதியளவில் வெளிப்படுத்தியதுடன் இவ்விரு வங்கி வகைகளுக்கிடையிலான தொடர்புபட்ட கொடுகடன் சொத்தப்பட்டியலையும் மாற்றியமைத்தது. 2026 யூலையில் பூர்த்திசெய்யப்பட்ட வெளிநாட்டு வங்கியொன்றிலிருந்து உள்நாட்டு வங்கியொன்றுக்கு சில்லறை வங்கித்தொழில் தொழிற்பாடுகளின் மற்றொரு மாற்றலானது வெளிநாட்டு வங்கிகளின் அறிக்கையிடப்பட்ட கொடுகடன் நிலையை 2026இன் மூன்றாம் காலாண்டில் மிதமடையச்செய்யும் அதேவேளை அதற்கேற்ப உள்நாட்டு வங்கிகளின் நிலையையும் அதிகரிக்கச்செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது

வரைபடம் 3.5 வங்கி வகை அடிப்படையில் கொடுகடனில் காலாண்டு ரீதியான மாற்றம்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 3.6
2026இன் 2ஆம் காலாண்டில் முடிவடைந்த ஆண்டுக்காலப் பகுதியில் கொடுகடனில் மாற்றத்திற்கு துறைவாரியான பங்களிப்பு




*நிதி அமைச்சுக்கு வழங்கப்பட்ட கடன்களை உள்ளடக்குகின்றது.
மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 3.7
முக்கிய பொருளாதாரத் துறைகளின் கொடுகடன் உள்ளமைப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**இக்காலப்பகுதியில் கொடுகடன் விரிவாக்கமானது நுகர்வு, வர்த்தகம், கரைகடந்த நிறுவனங்களுக்கான கடன்வழங்கல், நிதியியல் சேவைகள் மற்றும் கட்டடவாக்கம் போன்ற துறைகளில் பிரதானமாக செறிவடைந்து காணப்பட்டது.** அதற்கமைய, இவ் ஒவ்வொரு துறையும் பரிசீலனையின் கீழான காலப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் கொடுகடன் விரிவாக்கத்தில் 10 சதவீதத்திற்கும் அதிகமாக வகைகூறி, பொருளாதார நடவடிக்கையின் மீட்சியுடன் இணைந்த கடன்வழங்கலில் தொடர்ச்சியான விரிவாக்கத்தையும் எடுத்துக்காட்டியது. மேலும், துறையின் மொத்தக் கடனில் நுகர்வு, கட்டடவாக்கம், வர்த்தகம், தயாரிப்பு, வேளாண்மை மற்றும் கரைகடந்த நிறுவனங்களுக்கான கடன்வழங்கல் ஆகிய ஆறு துறைகளின் பங்கு 2025இன் இரண்டாம் காலாண்டின் இறுதியின் 71.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 72.9 சதவீதமாக அதிகரித்தமை, கடன் செறிவில் ஒரு சிறிய அதிரிப்பைக் காட்டுகிறது.

**வாகனங்களின் கொள்வனவிற்காக வழங்கப்பட்ட தனியாள் கடன்கள் உள்ளடங்கலாக, அடகுபிடித்தல் மற்றும் தனியாள் கடன்களினால் முதன்மையாகத் தூண்டப்பட்டு பாரியளவிலான கொடுகடன் பிரிவாகக் காணப்பட்ட நுகர்வுக் கடன்கள் துரிதமாக விரிவடைந்தன.** நுகர்வுக் கடன்கள், 2025இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 11.0 சதவீத வளர்ச்சியொன்றுடன் ஒப்பிடுகையில் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 29.1 சதவீத ஆண்டிற்காண்டு குறிப்பிடத்தக்க வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தன. அடகுபிடித்தல் வசதிகள் மற்றும் தனியாள் கடன்கள் என்பன முறையே 49.2 சதவீதத்தினாலும் 21.3 சதவீதத்தினாலும் குறிப்பிடத்தக்களவில் வளர்ச்சியடைந்தன. அடகுபிடித்தல் வசதிகளில் இக்குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு தங்கத்தின் விலைகளின் அதிகரிப்பு பங்களித்திருக்கக்கூடியதாயிருந்திருப்பது டன், உலகளாவிய தங்கத்தின் விலைகளில் குறிப்பிடத்தக்க கீழ்நோக்கிய சீராக்கங்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் சந்தை இடர்நேர்விற்கான வெளிப்படுத்துகையையும் மீள்செலுத்துகையிலிருந்து தோன்றுகின்ற சாத்தியமான பிணையுறுதி இடர்நேர்வுகளையும் அதிகரிக்கலாம். எனினும், மத்திய வங்கி, மேற்படி எடுத்துக்காட்டப்பட்ட இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கு 2026 மே மாதத்திலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில், தங்க பிணையுறுதியால் பிணையளிக்கப்பட்ட கொடுகடன் வசதிகளின் மீது உயர்ந்தபட்சம் 70 சதவீத பெறுமதிக்கான கடன் விகிதமொன்றை அறிமுகம் செய்தது. இத்தேவைப்பாடு தங்க விலைகளின் ஏற்றவிறக்கங்களுக்கு எதிரான பிணையுறுதிசார் தாங்கியிருப்பொன்றை வழங்குவதுடன் முன்மதிமிக்க கடன்வழங்கல் நடைமுறைகளை வலுப்படுத்துகின்றது.

**கரைகடந்த நிறுவனங்கள் மற்றும் நிதியியல் சேவைகள் என்பவற்றிற்கான கொடுகடனில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பானது வெளிநாட்டு நாணய திரவத்தன்மை**

வரைபடம் 3.8
நுகர்வுக்கான கொடுகடன்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 3.9 நுகர்வுக் கொடுகடன் செறிவு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 3.11 நிதியியல் சேவை துறைக்கான கொடுகடன்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**நியதிகளில் சாத்தியமான இடர்நேர்வு கட்டியெழுப்புகை, வெளிநாட்டு அதிர்வுகளுக்கான உயர்வடைந்த பாதிக்கப்படும்தன்மை, அதேபோன்று நிதிக்கம்பனிகள் துறையுடனான அதிகரித்த ஒன்றுடனொன்று இணைந்ததன்மை என்பவற்றை சமிக்ஞைப்படுத்தியது.** வெளிநாட்டுக் கிளைகள் அதேபோன்று உள்நாட்டு வங்கித்தொழில் கிளைகள் ஆகிய இரு கடன்வழங்கலையும் உள்ளடக்குகின்ற கரைகடந்த நிறுவனங்களுக்கான கடன்வழங்கல்கள் ஓராண்டுக்கு முன்னரான 32.3 சதவீதத்திலிருந்து 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் ஆண்டுக்காண்டு 51.9 சதவீத வளர்ச்சிக்கு துரிதமடைந்தமை நாடு சார்ந்த, வெளிநாட்டுச் செலாவணி மற்றும் எல்லைகளுக்கிடையிலான இடர்நேர்வுகளுக்கு வங்கிகளை ஆட்படுத்தக்கூடும். நிதியியல் சேவைகளுக்கான கொடுகடனும் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் ஆண்டிற்காண்டு 52.9 சதவீதமளவில் வலுவாக அதிகரித்து, நிதிக்கம்பனிகளுக்கான குறிப்பிடத்தக்க கடன்வழங்கலை முதன்மையாகப் பிரதிபலித்ததுடன், வங்கித்தொழில் துறை மற்றும் நிதிக்கம்பனிகள் துறைக்கிடையிலான ஒன்றுடனொன்று இணைந்ததன்மையையும் அதிகரித்தது. எனினும், கரைகடந்த நிறுவனங்கள் மற்றும் நிதியியல் சேவைகள் என்பவற்றிற்கான கடன்வழங்கலின் ஆண்டிற்காண்டு கொடுகடன் வளர்ச்சி 2026இன் முதலாம் காலாண்டின் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் சற்று மிதமடைந்தது.

**வங்கித்தொழில் துறையின் கட்டம் 3 கடன்கள் விகிதம் (எடுப்பனவு செய்யப்படாத தொகைகள் உள்ளடங்கலாக) குறிப்பிடத்தக்க கொடுகடன் விரிவாக்கத்திற்கு மத்தியில் 2025 இறுதியிலிருந்து ஒற்றை இலக்க மட்டமொன்றுக்கு**

வரைபடம் 3.10 கரைகடந்த நிறுவனங்களுக்கான கொடுகடன்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 3.12 கட்டம் 3 மற்றும் கட்டம் 2 கடன் விகிதங்கள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 3.13
கடன்களின் கட்டம் வாரியான உள்ளமைப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 3.14
வங்கிவாரியாக கட்டம் 3 கடன் விகிதம்*




*சிறப்பாக எடுத்துரைப்பதற்காக உயர்வான கட்டம் 3 கடன் விகிதங்களுடைய மூன்று சிறிய உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள் வரைபடத்தில் உள்ளடக்கப்படவில்லை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**வீழ்ச்சியடைந்தது.** துறையின் கட்டம் 3 கடன்கள் விகிதம், 2025இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 11.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 9.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இம்மேம்பாடானது முதன்மையாக காலப்பகுதியின் குறிப்பிடத்தக்க கொடுகடன் விரிவாக்கத்துடன் இணைந்த 5.8 சதவீத ஆண்டிற்காண்டு கட்டம் 3 கடன்களின் வீழ்ச்சியொன்றுடன் வெளிப்பட்டது. எனினும் டித்வாவின் தாக்கத்தைத் தொடர்ந்தும், மத்திய கிழக்குப் போரிலிருந்து எழுகின்ற உயர்வடைந்த எரிபொருள் விலைகள் மற்றும் புவிசார் அரசியல் நிச்சயமற்றதன்மைகள் என்பவற்றுடன் இணைந்து துறையின் கட்டம் 3 கடன்கள் 2026இன் முதலாம் மற்றும் இரண்டாம் காலாண்டுகளின் இறுதியில் சிறிதளவிலான அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. மேலும், துறையின் கட்டம் 2 கடன்கள் 2026இன் முதலாம் காலாண்டின் இறுதியுடன் ஒப்பிடுகையில் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 10.4 சதவீதத்தால் அதிகரித்தது. கட்டம் 2 கடன்களின் இவ் அதிகரிப்பானது கரைகடந்த நிறுவனங்கள், வர்த்தகம் மற்றும் சுற்றுலாத் துறைகளுக்கான கடன்வழங்கலில் செறிவடைந்து காணப்பட்டு, மத்திய கிழக்கின் மோதலிலிருந்து எழுகின்ற பாதகமான பொருளாதார கசிவுத்தாக்கங்களையும் எல்லைகளுக்கிடையிலான பாதிக்கப்படும்தன்மைகளில் அதிகரிப்பையும் பிரதிபலித்தது. மேலும், காலாண்டின் போது கணிசமானளவிலான கடன்களின் கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிட்டத்தக்க அதிகரிப்பொன்று இடம்பெற்றதை எடுத்துக்காட்டுவதுடன் கடன்பாட்டாளர்களின் மீள்செலுத்தல் இயலாற்றல் நலிவடையுமாயின், இவை கட்டம் 3 இற்கு எதிர்காலத்தில் மாறுவதற்கான சாத்தியத்தன்மையையும் குறித்துக்காட்டுகின்றது.

**கட்டம் 3 கடன்களில் வீழ்ச்சியொன்றுடன் பெறுமதியிழப்புக்களின் வளர்ச்சியினால் தூண்டப்பட்டு, கட்டம் 3 பெறுமதியிழப்புக் காப்பு விகிதம் 2025இன் இரண்டாம் காலாண்டின் இறுதியுடன் ஒப்பிடுகையில் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் மேம்பாடொன்றைப் பதிவுசெய்தது.** துறையின் கட்டம் 3 இற்கான பெறுமதியிழப்பு காப்பு விகிதம், 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 5.8 சதவீதமளவிலான கட்டம் 3 கடன்களின் சுருக்கத்துடன் இணைந்து, பிரதானமாக ஆண்டிற்காண்டு 5.2 சதவீதமளவிலான கட்டம் 3 இற்கான பெறுமதியிழப்பின் வளர்ச்சியொன்றின் கரணமாக, முன்னைய ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியின் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 54.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 61.3 இற்கு குறிப்பிடத்தக்களவில் மேம்பட்டது. பெறுமதியிழப்பின் அதிகரிப்பானது ஏதேனும் எதிர்கால கொடுகடன் இழப்புக்களை உள்ளீர்ப்பதற்கு வங்கிகளுக்கு மேலதிக தாங்கியிருப்பொன்றை வழங்குவதுடன் அதனூடாக சாத்தியமான சொத்துத் தரம் மோசமடைவதற்கெதிரான அவற்றின் தாக்குப்பிடிக்கும்தன்மையை வலுப்படுத்துகின்றது.

வரைபடம் 3.15
பெறுமதியிழப்புக் காப்பு விகிதங்கள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 3.16 கட்டம் 3 கடன்கள் மற்றும் கட்டம் 3 கடன்களுக்கான பெறுமதியிழப்பினாலான மாற்றம்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 3.18 பொதுவான பங்குரிமை மூலதன அடுக்கு 1 மூலதனத்திற்கான தேறிய கட்டம் 3 கடன்கள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

மேலும், உயர்ந்தளவிலான பெறுமதியிழப்பு காப்பு விகிதம், வங்கிகளின் முன்மதிமிக்கதும் செயலூக்கமிக்கதுமான இடர்நேர்வு முகாமைத்துவ அணுகுமுறையொன்றைப் பிரதிபலிக்கின்றது. மற்றும் கட்டம் 3 பெறுமதியிழப்பு காப்பு

**பொதுவான பங்குரிமை மூலதன அடுக்கு 1 மூலதன விகிதத்திற்கான தேறிய கட்டம் 3 கடன்கள் விகிதம் பொதுவான பங்குரிமை மூலதன அடுக்கு 1 மூலதனத்தில் வளர்ச்சியொன்றின் காரணமாக ஓராண்டுக்கு முன்னைய நிலையுடன் ஒப்பிடுகையில் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்த அதேவேளை தேறிய கட்டம் 3 கடன்கள் குறிப்பிடத்தக்களவில் சுருக்கமடைந்தன.** பெறுமதியிழப்பினால் உள்ளடக்கப்பட்டிராத தவணைதவறுதல்களிலிருந்தான சாத்தியமான இழப்புக்களை உள்ளீர்ப்பதற்கு தரமான மூலதனத்தின் இயலளவை அளவிடுகின்ற பொதுவான பங்குரிமை மூலதன அடுக்கு 1 மூலதன விகிதத்திற்கான தேறிய கட்டம் 3 கடன்கள், 2025இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 40.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 28.3 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவில் விழ்ச்சியடைந்தன. காலப்பகுதியின் இறுதியில் 19.3 சதவீத அளவிலான தேறிய கட்டம் 3 கடன்களின் சுருக்கத்திற்கு மத்தியில் 14.5 சதவீத அளவிலான ஆண்டிற்காண்டு பொதுவான பங்குரிமை மூலதன அடுக்கு 1 மூலதனத்தின் வளர்ச்சியானது விகிதத்தின் வீழ்ச்சிக்குப் பங்களித்ததுடன், பெறுமதியிழப்பினால் உள்ளடக்கப்படாத சாத்தியமான கொடுகடன் இழப்புக்களுக்கு எதிரான மேம்பட்ட தாக்குப்பிடிக்கும்தன்மையை எடுத்துக்காட்டியது.

**வங்கித்தொழில் துறையின் ஒட்டுமொத்த கட்டம் 3 கடன்கள் விகிதத்தில் வீழ்ச்சி ஏற்பட்ட போதிலும், 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் குறிப்பிட்ட பொருளாதாரத் துறைகளின்**

வரைபடம் 3.17 வங்கிவாரியாக கட்டம் 3 கடன்கள் மற்றும் கட்டம் 3 கடன்களுக்கான பெறுமதியிழப்புக் காப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 3.19 உயர் கட்டம் 3 கடன்கள் விகிதங்களுடைய பொருளாதாரத் துறைகள




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 3.20 கடன்பாட்டாளர் வகைப்பாட்டு ரீதியிலான கொடுகடன்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**சொத்துத் தரம் பாதிக்கப்படும் தன்மைகள் கொண்டவையாக தொடர்ந்தும் காணப்பட்டன.** வங்கித்தொழில் துறையின் மொத்த கொடுகடனின் தலா 10 சதவீதத்திற்கும் அதிகமாக வகைகூறுகின்ற தயாரிப்பு, வர்த்தகம் மற்றும் கட்டடவாக்கம் ஆகியவை ஒப்பீட்டளவில் உயர்ந்தளவிலான கட்டம் 3 கடன்கள் விகிதங்களை தொடர்ச்சியாக பதிவுசெய்தமை ஒட்டுமொத்த பொருளாதாரத்திற்கான முக்கியமான சில துறைகளிடையே கொடுகடன் இடர்நேர்வு உயர்வடைந்து காணப்பட்டன என்பதை எடுத்துக்காட்டியது. எவ்வாறாயினும், 2025இன் இரண்டாம் காலாண்டின் இறுதியுடன் ஒப்பிடுகையில் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் இத்துறைகளில் கட்டம் 3 கடன்கள் விகிதத்தின் கீழ்நோக்கிய போக்குகள் அவதானிக்கப்பட்டன. போக்குவரத்து துறையின் கட்டம் 3 கடன்கள் விகிதமும் வீழ்ச்சியடைந்த போதிலும், குறிப்பாக ஒரு முக்கிய அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சியொன்றின் நிலுவையிலுள்ள வசதிகளின் கராணமாக 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 45.2 சதவீதம் என்கின்ற குறிப்பிடத்தக்களவு உயர்ந்தளவிலேயே காணப்பட்டது. மேலும், சுற்றுலாத் துறைக்கான கடன்வழங்கலின் தவணைதவறுதல் இடர்நேர்வு 2022இன் பின்னரைப்பகுதியிலிருந்து தொடர்ச்சியாக உயர்வடைந்து காணப்பட்டது எனினும், சுற்றுலா துறை தொடர்புபட்ட கடன்களின் கட்டம் 3 கடன்கள் விகிதம் 2025இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 38.3 சதவீதத்திலிருந்து 2026இன் இரண்டாவது காலாண்டு இறுதியில் 28.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எவ்வாறாயினும், போக்குவரத்து மற்றும் சுற்றுலாத் துறைகளின் கடன்கள், வங்கித்தொழில் துறையின் மொத்த கொடுகடன் சொத்தப்பட்டியலின் முறையே 2.2 சதவீதத்தையும் 3.1 சதவீதத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தியமை, ஒப்பீட்டளவில் தாழ்ந்தளவிலான முறைமை ரீதியான தாக்கத்தை எடுத்துக்காட்டியது.

**அரசாங்கம் மற்றும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான வங்கித் துறையின் கடன் வெளிப்படுத்துகையானது 2026இன் இரண்டாம் காலாண்டிறுதியில் ஒற்றை இலக்க மட்டத்திற்கு குறைந்ததுடன், அதனுடன் தொடர்புடைய தவணைதவறுதல் இடர்நேர்வும் மிதமடைந்தது**[3]. பிரதானமாக நிதியல்லா கூட்டாண்மைகளுக்கான அதிகரித்த கடன்வழங்கலின் காரணமாக வங்கித்தொழில் துறையின் மொத்த கொடுகடனில் அனைத்து தனியார் துறை நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கொடுகடனின் பங்கு, 2025இன் இரண்டாம் காலாண்டு இறுதியின் 51.2 சதவீதத்திலிருந்து 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 52.1 சதவீதத்திற்கு சற்று அதிகரித்தது. இதற்குமாறாக, அரசாங்கம் மற்றும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட கொடுடன் வீழ்ச்சியடைந்து, மொத்த வங்கித்தொழில் துறை கொடுகடனில் அதன் பங்கு 2025இன் இரண்டாவது காலாண்டு இறுதியின் 12.2 சதவீதத்திலிருந்து 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 9.4 சதவீதத்திற்கு குறைவடைந்தது. அதேவேளை, தனியார் துறை நிறுவனங்களுக்கான கட்டம் 3 கடன்கள் விகிதமானது ஒட்டுமொத்த வங்கித்தொழில் துறையினைப் பார்க்கிலும் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 11.2 சதவீதத்தில் உயர்ந்தளவில் விளங்கியதுடன், தவணைதவறுதல் இடர்நேர்வு இந்நிறுவனங்களில் ஒப்பீட்டளவில் செறிவடைந்து காணப்பட்டதை வெளிப்படுத்தியது. எவ்வாறாயினும், இது ஓராண்டுக்கு முன்னர் பதிவுசெய்யப்பட்ட 15.2 சதவீத கட்டம் 3 கடன் விகிதத்துடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியொன்றைக் குறித்தது. மேலும், அரசாங்கம் மற்றும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் தவணைதவறுதல் இடர்நேர்வு, முன்னைய ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியின் இறுதியில் காணப்பட்ட 11.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வு காலப்பகுதியின் இறுதியில் 10.2 சதவீதத்திற்கு சிறிதளவில் வீழ்ச்சியடைந்திருப்பினும் இன்னமும் உயர்வடைந்த மட்டமொன்றிலேயே காணப்பட்டது.

3 அரசாங்கம் மற்றும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் என்பன மத்திய அரசாங்கம், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் மற்றும் அரசாங்கம் தொடர்பான வேறு ஏதேனும் நிறுவனங்கள் என்பவற்றிற்கான கடன்களை பிரதிநிதித்துவம்செய்கின்றன.

வரைபடம் 3.21 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் கடன்பாட்டாளர் வகைப்பாடு ரீதியிலான தவணை-தவறுதல் இடர்நேர்வு*




* குமிழியின் அளவு கட்டம் 3 கடன்களின் தொகையைப் பிரதிபலிக்கிறது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**வேளாண்மை மற்றும் வர்த்தகத்துடன் தொடர்புபட்ட நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கான[4] கடன்வழங்கலானது மீளாய்விற்குரிய காலப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகள் துறையின் கொடுகடன் விரிவாக்கத்திற்கு முதன்மையாகப் பங்களித்தது.** அதற்கமைய, இவ்விரு துறைகளும் தொடர்புபட்ட காலப்பகுதியில் போது நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கான வங்கித்தொழில் துறைக் கொடுகடனின் அதிகரிப்பில் 60.8 சதவீதத்திற்கு வகைகூறின. மேலும், நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளிற்கு வழங்கப்பட்ட கொடுகடனில் 72.8 சதவீதமானது 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் வர்த்தகம், வேளாண்மை, தயாரிப்பு மற்றும் கட்டடவாக்கம் மற்றும் உட்கட்டமைப்பு ஆகிய நான்கு துறைகளில் செறிவடைந்து காணப்பட்டமை, உயர்ந்தளவிலான துறைசார் செறிவடைதல் இடர்நேர்வொன்றை எடுத்துக்காட்டியது. இதற்கு மேலதிகமாக, அநேகமான நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகள் துறைகள், உயர்வடைந்த கட்டம் 3 கடன்கள் விகிதங்களைத் தொடர்ச்சியாக காண்பித்த போதிலும், முன்னைய ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதிகளுடன் ஒப்பிடுகையில் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. எவ்வாறாயினும், சுற்றுலா மற்றும் கட்டடவாக்கம் சம்பந்தமான நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகள் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 20.0 சதவீதத்திற்கு மேலான கட்டம் 3 கடன்கள் விகிதத்தைத் தொடர்ந்து பதிவுசெய்தமை, இத்துறைகளில் தொடர்ச்சியான மீள்கொடுப்பனவு சவால்களைப் பிரதிபலித்தது.

4. நுண்பாக - புரள்வு ரூ. 15 மில்லியனை விட குறைவான அல்லது சமமானவைகள் சிறிய - வருடாந்த புரள்வு ரூ. 15 மில்லியனை விட அதிகமான அல்லது ரூ. 250 மில்லியனை விட குறைவான அல்லது சமமானவைகள் மற்றும் நடுத்தரளவிலான - வருடாந்த புரள்வு ரூ. 250 மில்லியனை விட அதிகமான அல்லது ரூ. 1 பில்லியனை விட குறைவான அல்லது சமமானவைகள்

வரைபடம் 3.22
நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கான துறை வாரியான கொடுகடன் செறிவு மற்றும் தவணைதவறுதல் இடர்நேர்வு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 3.23
அரசாங்கம் மற்றும் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான வெளிப்படுத்துகை




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**2026இன் இரண்டாம் காலாண்டில் முடிவடைந்த ஆண்டின் இறுதியில் அரசிற்கான வெளிப்படுத்துகை[5] , வீழ்ச்சியடைந்த போதிலும் வங்கித்தொழில் துறைச் சொத்துக்களின் கணிசமானளவிலான பங்கொன்றாக விளங்கியது.** அரசிற்கான வெளிப்படுத்துகையானது முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 13.2 சதவீத வளர்ச்சியொன்றுடன் ஒப்பிடுகையில் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் ஆண்டிற்காண்டு 8.1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. அதற்கமைய, வங்கித்தொழில் துறையின் மொத்த சொத்துக்களின் பங்கொன்றாக அரசிற்கான வெளிப்படுத்துகை ஓராண்டுக்கு முன்னரான 45.0 சதவீதத்திலிருந்து 37.9 சதவீதத்திற்கு சரிவடைந்து, அரசிற்கான செறிவடைதல் இடர்நேர்வில் சில தளர்த்தலை எடுத்துக்காட்டிய போதிலும், வெளிப்படுத்துகை கணிசமானளவில் காணப்பட்டது. இச்சுருக்கம் பிரதானமாக வங்கிகளின் திறைசேரி உண்டியல் வைத்திருப்புக்களில் ஏற்பட்ட 38.7 சதவீத ஆண்டிற்காண்டு வீழ்ச்சியால் ஏற்பட்டதுடன், இது ஒப்பீட்டளவில் குறைந்த வருவாயளிக்கும் குறுங்கால அரசாங்கப் பிணையங்களிலிருந்து தனியார் துறைக்கான கடன்வழங்கலுக்கு நிதி மீளொதுக்கப்பட்டமையையும், அரசாங்கம் போதுமான இறைத் தாங்கியிருப்புக்களைக் கொண்டிருந்த நிலையில் நிலுவையிலுள்ள திறைசேரி உண்டியல்களின் தொகை குறைந்தமையையும் சுட்டிக்காட்டுகிறது. அரசாங்கம் மற்றும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட கொடுகடன்

5 2026இன் இரண்டாவது காலாண்டு இறுதியில், வங்கித் தொழில் துறையில் நாட்டிற்கான வெளிப்படுத்துகையானது வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட மீள்கட்டமைக்கப்பட்ட முறிகள் (முன்னர் நாட்டிற்கான பன்னாட்டு முறிகள்), திறைசேரி முறிகள், திறைசேரி உண்டியல்கள், உள்நாட்டு டொலர் முறிகள் மற்றும் ரூபாக்கள் மற்றும் வெளிநாட்டு நாணயம் இரண்டிலும் அரசாங்கம் மற்றும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கு உரிமம்பெற்ற வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் என்பவற்றில் உரிமம்பெற்ற வங்கிகளால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளை உள்ளடக்கியது.

வசதிகளும் காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவில் சுருக்கமடைந்தன. இதற்குமாறாக, குறுங்கால சாதனங்களைப் பார்க்கிலும் உயர்ந்தளவிலான விளைவுவீதங்களை வழங்குகின்ற நீண்ட கால அரசாங்கப் பிணையங்களை நோக்கி வங்கிகள் நகர்ந்தமையால் திறைசேரி முறிகளில் முதலீடுகள் அதிகரித்தன. அதேவேளை, காலப்பகுதியின் போது செலாவணி வீத பெறுமதித்தேய்வின் தாக்கத்தை முதன்மையாகப் பிரதிபலித்து, அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட கொடுகடன் வசதிகளின் ரூபா பெறுமதியானது அதிகரித்தது.

### திரவத்தன்மை இடர்நேர்வு

**துரிதமான கொடுகடன் விரிவாக்கத்தைப் பிரதிபலித்து, வங்கித்தொழில் துறையின் திரவத்தன்மை விகிதங்கள் 2025இன் ஆரம்பத்திலிருந்து தொடர்ந்து வீழ்ச்சியடைந்திருப்பினும் குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு நன்கு மேல் காணப்பட்டது.** ரூபா திரவத்தன்மை காப்பு விகிதம் 2025இன் இரண்டாம் காலாண்டின் இறுதியளவில் 328.5 சதவீதத்திலிருந்து 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியளவில் 272.5 சதவீதத்திற்கு குறைவடைந்தது. 2025இன் இரண்டாம் காலாண்டின் இறுதியளவில் 283.7 சதவீதத்திலிருந்து 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியளவில் 229.7 சதவீதத்திற்கு குறைவடைந்த அனைத்து நாணய திரவத்தன்மை காப்பு விகிதத்தில் ஒத்த போக்கொன்று அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், இரு விகிதங்களும் 100 சதவீதமான குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாட்டிற்கு நன்கு மேல் காணப்பட்டமையானது, குறுங்கால திரவத்தன்மை அழுத்த சூழ்நிலைகளுக்கு ஈடுகொடுப்பதற்கு வங்கித்தொழில் துறை போதியளவிலான திரவத்தன்மை தாங்கியிருப்புக்களைப் பேணியதை எடுத்துக்காட்டியது. மேலும், நிலவும் திரவத்தன்மை தாங்கியிருப்புக்கள் ஐந்தொகை விரிவாக்கத்தையும் நிதியியல் இடையேற்பாட்டையும் வங்கிகள் தொடர்ந்து மேற்கொள்வதற்கான பாதுகாப்பொன்றை வழங்குகின்றது. தேறிய உறுதியான நிதியிடல் விகிதமும் ஓராண்டிற்கு முன்னரான 162.7 சதவீதத்திலிருந்து 2026இன் இரண்டாவது காலாண்டு இறுதியில் 148.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருப்பினும், 100 சதவீதமான குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாட்டிற்கு நன்கு மேல காணப்பட்டு, வங்கிகள் அவற்றின் சொத்துப்பட்டியலுக்கேற்ப போதியளவிலான உறுதியான நிதியிடலைப் பேணியதுடன் நீண்டகால நிதியிடல் அழுத்தங்களை ஈடுகொடுப்பதற்கு சிறந்த நிலையில் காணப்பட்டன என்பதையும் வெளிப்படுத்துகின்றது.

**வங்கிகள் கொடுகடன் விரிவாக்கத்திற்காக நிதிகளை மீளொதுக்கியதால் உயர்தரத் திரவச் சொத்துக்கள் குறைவடைந்தமையே, திரவத்தன்மைக் காப்பு விகிதங்கள் மிதமடைந்தமைக்கு பிரதான காரணமாக அமைந்தது.** உயர் தரத்திலான திரவத்தன்மைச் சொத்துக்கள் 2025இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 27.0 சதவீத வளர்ச்சியொன்றுடன் ஒப்பிடுகையில் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியளவில் 15.1 சதவீதமளவில் ஆண்டிற்காண்டு சுருக்கமடைந்தது. இச்சுருக்கமானது, 2023 நடுப்பகுதியிலிருந்தான தளர்வடைந்த நாணயக் கொள்கை, 2025இன் ஆரம்பத்திலிருந்து மோட்டார் வாகன இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகளை தளர்த்துதல் மற்றும் 2025இன் இரண்டாம் அரைப்பகுதியிலிருந்து தங்கத்தின் விலைகளில் ஏற்பட்ட துரித அதிகரிப்பு என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு, கொடுகடன் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க துரிதமடைதலுக்குப் பங்களித்த நிலையில், அரசாங்கப் பிணையங்களிலிருந்து கடன்வழங்கலை நோக்கிய வங்கிகளின் சொத்து ஒதுக்கீட்டில் மாற்றமொன்றை பெருமளவில் பிரதிபலித்தது. இதற்கு மேலதிகமாக, அரசாங்கமானது போதியளவிலான இறைசார் தாங்கியிருப்புக்களைப் பேணியமையால், திறைசேரி உண்டியல்களின் வெளிநின்ற இருப்பு ஆண்டுகாலப் பகுதியின் போது வீழ்ச்சியடைந்தமை மூலம், முதலீட்டிற்கான திறைசேரி உண்டியல்களின் கிடைப்பனவு குறைவடைந்தது.

**இறக்குமதியின் அதிகரிப்பினை வசதிப்படுத்துவதற்கான வெளிநாட்டுச் செலாவணி விற்பனைகள் அதேபோன்று மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகள் என்பனவற்றுக்கு மத்தியில், வெளிநாட்டு நாணய முதலீடுகளில் ஏற்பட்ட சுருக்கம் காரணமாக, 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியளவில் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டு நாணயச் சொத்துகளின் வளர்ச்சி குறிப்பிடத்தக்களவில் மெதுவடைந்தது.** துறையின் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களின் வளர்ச்சியானது 2025இன் இரண்டாம் காலாண்டின் இறுதியின் 10.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் ஆண்டிற்காண்டு 1.3 சதவீதத்திற்கு குறைவடைந்தது. வெளிநாட்டு நாணயச் சொத்துக்களின் அதிகரிப்பானது பிரதானமாக ஆண்டிற்காண்டு 4.4 சதவீத வளர்ச்சியினைப் பதிவுசெய்த வெளிநாட்டு நாணயக் கொடுகடனினால் ஆதரவளிக்கப்பட்ட, அதேவேளை

வரைபடம் 3.24 ரூபாய் திரவத்தன்மை காப்பு விகிதம்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 3.25 அனைத்து நாணய திரவத்தன்மை காப்பு விகிதம்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வெளிநாட்டு நிதியியல் நிறுவனங்களுடனான நிலுவைகளும் 13.2 சதவீதத்தினால் விரிவடைந்தன. எனினும், முதன்மையாக பல்வேறு வங்கிகளினால் வெளிநாட்டு அரச பிணையங்களின் வைத்திருப்புக்களில் ஏற்பட்டுள்ள குறைப்பின் காரணமாக வங்கிகளின் வெளிநாட்டு நாணய முதலீடுகள் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் ஆண்டிற்காண்டு 20.7 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தன. வெளிநாட்டு நாணயத்தில் ஏற்பட்டுள்ள இக்குறைப்பானது குறிப்பிடத்தக்க எல்லை தாண்டிய கடன்வழங்கல் உள்ளிட்ட கடன்வழங்கலை நோக்கிய வெளிநாட்டு நாணய நிதியங்களின் மீள் ஒதுக்கீட்டினைப் பகுதியளவில் பிரதிபலிக்கக்கூடும். எனினும், வங்கித்தொழில் துறையின் இத்தகைய தீவிரமான எல்லை தாண்டிய பரந்தளவிலான கடன்வழங்கலின் விரிவாக்கமானது எல்லை தாண்டிய கொடுகடன் இடர்நேர்வு மற்றும் வெளிநாட்டு நாணய திரவத்தன்மை இடர்நேர்வு என்பவற்றுக்கு துறையை ஆட்படுத்தக்கூடும்.

**வெளிநாட்டு நாணயப் பொறுப்புக்கள், வெளிநாட்டு நாணயச் சொத்துக்களை விடவும் விரைவாக வளர்ச்சியடைந்து, தேறிய வெளிநாட்டு நாணயச் சொத்துக்களில் சுருக்கமொன்றுக்கு பங்களித்ததுடன் வெளிநாட்டு நாணய நிதியிடலுக்காக வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீது வங்கித்தொழில் துறை பெரிதும் தங்கியிருப்பதை எடுத்துக்காட்டுகின்றது.** 2025இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 7.6 சதவீதமாகப் பதிவாகியிருந்த வெளிநாட்டு நாணயப் பொறுப்புகளின் ஆண்டிற்காண்டு வளர்ச்சி, 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 4.0 சதவீதமாக மெதுவடைந்தது. இவ்வளர்ச்சியானது ஆண்டுகாலப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்களின் உயர்வடைந்த மட்டத்தினால் பகுதியளவில் ஆதரவளிக்கப்பட்டு ஆண்டிற்காண்டு 5.1 சதவீத வளர்ச்சியினைப் பதிவுசெய்த வெளிநாட்டு நாணய வைப்புக்களினால் பிரதானமாகத் தூண்டப்பட்டது. அதேவேளை, முன்னைய ஆண்டுகளில் குறிப்பிடத்தக்கச் சுருக்கங்களைப் பதிவுசெய்த வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் 2025இன் இறுதி தொடக்கம் ஆண்டிற்காண்டு அடிப்படையில் விரிவடையத் தொடங்கின. இதற்கமைவாக, இது 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 2.2 சதவீதமளவில் ஆண்டிற்காண்டு அதிகரித்தது. மேலும், மொத்த வெளிநாட்டு நாணயச் சொத்துக்களின் வளர்ச்சியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவில் மந்தமடைந்ததன் காரணமாக, வங்கித்தொழில் துறையின் தேறிய வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் முன்னைய ஆண்டின் 43.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2026இன் இரண்டாம் காலாண்டு இறுதியில் 22.6 சதவீதத்தினால் ஆண்டிற்காண்டு கணிசமானளவு சுருக்கமடைந்தன.

**வங்கித்தொழில் துறையானது சில்லறை நிதியிடலில்[6] தொடர்ந்தும் பெருமளவு தங்கியிருந்தபோதிலும், பிணையமற்ற மொத்த நிதியிடல்[7] விரைவான வேகத்தில்**

6 கேள்வி, சேமிப்புக்கள் மற்றும் கால வைப்புக்கள் (30 நாட்களை விடவும் குறைவாக முதிர்ச்சியடையும்) மற்றும் 30 நாட்களுக்கும் அதிகமான மீதமுள்ள முதிர்ச்சிக் காலத்துடனான கால வைப்புக்கள் போன்றவற்றை இது உள்ளடக்குகின்றது.

7 தீர்ப்பனவுசெய்தல், கட்டுக்காவல் மற்றும் காசு முகாமைத்துவ நடவடிக்கைகள் போன்றவற்றின் மூலம் உருவாக்கப்பட்ட தொழிற்பாட்டு வைப்புக்கள் நிறுவன ரீதியிலான வலையமைப்பிலுள்ள கூட்டுறவு வங்கிகள் (மையப்படுத்தப்பட்ட நிறுவனத்திலுள்ள தகைமையுடைய வைப்புக்கள்) நிதியல்லாக் கூட்டாண்மைகள், நாட்டிற்கானவைகள், மத்திய வங்கிகள், பல்தரப்பு அபிவிருத்தி வங்கிகள் மற்றும் பொதுத் துறை தொழில்முயற்சிகள் மற்றும் ஏனைய சட்ட நிறுவன வாடிக்கையாளர்கள் போன்றோரை இது உள்ளடக்குகின்றது.

வரைபடம் 3.26 தேறிய நிலையான நிதியிடல் விகிதம்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 3.27 உயர்தர திரவச் சொத்துக்களின் உள்ளமைப்பு*




* ரூபா மற்றும் வெளிநாட்டு நாணயங்கள் இரண்டிலும் குறிக்கப்பட்டுள்ள உயர்தர திரவச் சொத்துக்கள்

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 3.28 வெளிநாட்டு நாணயச் சொத்துகளின் உள்ளமைப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 3.30 வெளிநாட்டு நாணயப் பொறுப்புகளின் உள்ளமைப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**வளர்ச்சியடைந்ததுடன் வெளிநாட்டு வங்கிகளிடையே தொடர்ந்தும் அவை குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தன.** சில்லறை நிதியிடல், 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் ஆண்டிற்காண்டு 6.7 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளை பிணையமற்ற மொத்த விற்பனை நிதியிடல் 11.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. உள்நாட்டு முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம்வாய்ந்த வங்கிகள் மற்றும் ஏனைய உள்நாட்டு வங்கிகளுக்கான சில்லறை நிதியிடல், ஒட்டுமொத்த நிதியிடலின்[8] முறையே 66.9 சதவீதத்தையும் 73.2 சதவீதத்தையும் பிரதிபலித்த அதேவேளை வெளிநாட்டு வங்கிகள் பிணையமற்ற மொத்த நிதியிடலில் பிரதானமாக தங்கியிருந்ததுடன் அதன் பங்கு ஓராண்டுக்கு முன்னர் காணப்பட்ட 74.8 சதவீதத்திலிருந்து 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில், 91.6 சதவீதமாகக் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தமை, இக்காலப்பகுதியில் ஒரு வெளிநாட்டு வங்கியின் சில்லறை வங்கிச் செயற்பாடுகள் ஓர் உள்நாட்டு வங்கிக்கு மாற்றப்பட்டமையைப் பெருமளவில் பிரதிபலித்தது. சில்லறை வைப்புக்களின் ஆதிக்கம் நிதியிடல் உறுதிப்பாட்டிற்கு ஆதரவளிக்கின்ற அதேவேளை மொத்த நிதியிடல் மீதான வெளிநாட்டு வங்கிகளின் தொடர்ச்சியான தங்கியிருத்தலானது மட்டுப்படுத்தப்பட்ட உள்நாட்டு வைப்புத் திரட்டலைக் கொண்ட அவற்றின் வியாபார மாதிரியுடன் ஒத்திசைவாகக் காணப்பட்டது. எவ்வாறெனினும், குறிப்பாகச் சந்தை அழுத்தக் காலப்பகுதிகளில் இவை வங்கிகளை நிதியிடல் செறிவடைதல் மற்றும் மறுசுழற்சி இடர்நேர்வுகளுக்கு உள்ளாக்கக்கூடும் என்பதால், அத்தகைய நிதியிடல் மூலங்களை உன்னிப்பாகக் கண்காணிக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது. எனினும், 2026இன் இரண்டாம் காலாண்டில் துறையின் மொத்த நிதியிடலில் குறிப்பிடத்தக்க குறைவடைதல் அவதானிக்கப்பட்டது.

8 சில்லறை நிதியிடல் மற்றும் பிணையமற்ற மொத்த நிதியிடல் ஆகியவற்றின் கூட்டுத்தொகை

வரைபடம் 3.29 வெளிநாட்டு நாணய முதலீடுகளின் உள்ளமைப்பு




*2023 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டு வரை இலங்கை அபிவிருத்தி முறிகளையும், 2025 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டிலிருந்து உள்நாட்டு டொலர் முறிகளையும் உள்ளடக்குகிறது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**2026இல், குறுங்கால முதிர்ச்சி பொருத்தமின்மைகள் விரிவடைந்தமையானது எதிர்பார்க்கப்படாத அழுத்த நிலைமைகளின் கீழ் சாத்தியமான மீள்நிதியிடல் மற்றும் திரவத்தன்மை அழுத்தங்களை அதிகரிக்கச்செய்தது.** 7 நாட்கள், 28 நாட்கள், 3 மாதங்கள், 6 மாதங்கள் மற்றும் 12 மாதங்கள் வரையான குறுங்கால முதிர்வுக் காலப் பிரிவுகளில் வங்கித்தொழில் துறையின் திரண்ட எதிர்க்கணிய முதிர்ச்சி இடைவெளிகள், உண்மை நியதிகளிலும் மொத்தச் சொத்துக்களுடன் ஒப்பீட்டளவிலும் பொதுவாக விரிவடைந்து காணப்பட்டமையானது ஓராண்டு வரையறையினுள் எதிர்பார்க்கப்படும் காசு உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்களுக்கிடையிலான அதிகரித்துவரும் சமமின்மைகளை எடுத்துக்காட்டின. நீண்டகாலப் பகுதிகளில் திரண்ட இடைவெளிகள் விரிவடைகின்றமையானது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்ச்சி தோற்றப்பாடுகளுக்கிடையிலான அதிக தொடர்ச்சியான கட்டமைப்புசார் பொருத்தமின்மை இருப்பதையும் சுட்டிக்காட்டுவதுடன் இந்நிலை நீடிக்குமாயின், மீள்நிதியிடல்

வரைபடம் 3.31 தேறிய வெளிநாட்டு நாணயச் சொத்துகள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 3.33 வங்கி வகை வாரியான சில்லறை மற்றும் மொத்த விற்பனை நிதியங்கள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

மற்றும் நிதியிடல் செலவுகளை உயர்த்தக்கூடும். மேலும் ஓராண்டு வரையிலான திரண்ட எதிர்மறை இடைவெளியை விஞ்சிய உயர்தரத் திரவச் சொத்துக்கள், 2025இன் இரண்டாம் காலாண்டின் இறுதியிலிருந்த ரூ.5.0 ரில்லியனிலிருந்து 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் ரூ.2.6 ரில்லியனாகக் குறைந்தமை, கிடைக்கக்கூடிய திரவச் சொத்துக் காப்புகள் குறைந்த நிலைமைக்கு மத்தியில் குறுங்கால ஒப்பந்தரீதியான பொருத்தமின்மைகள் அதிகரித்தமையைக் எடுத்துக்காட்டுகின்றது. இப்போக்கு தொடர்ந்தால், குறிப்பாகத் திரவத்தன்மை அழுத்தம் நிலவும் சூழலில் வங்கிகள் வைப்புக்கள் மீளப்பெறப்படுத்தல், சந்தையை அணுகும் வாய்ப்புக்கள் குறைதல் அல்லது உயர்தரத் திரவச் சொத்துக்களை விற்றுப் பணமாக்க வேண்டிய அழுத்தம் ஆகியவற்றை வங்கிகள் எதிர்கொள்ளும் பட்சத்தில், குறுங்காலத்தின் கடன் மறுசுழற்சி மற்றும் மீள்நிதியிடல் இடர்நேர்வுகளை உயர்த்தக்கூடும்.

**2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகைகள் குறிப்பிடத்தக்களவில் விரிவடைந்தமையானது அழுத்த நிலைமைகளில் ஏற்படக்கூடிய சாத்தியமான எதிர்பாராத திரவத்தன்மை மற்றும் கொடுகடன் இடர்நேர்வுகள் என்பவற்றை எடுத்துக்காட்டுகின்றன.** மொத்த ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகைகள் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் ஆண்டிற்காண்டு 19.3 சதவீதத்தால் அதிகரித்த அதேவேளை ஐந்தொகைப் பொறுப்புக்களின் பங்கொன்றாக ஐந்தொகைக்கு வெளியேயான விடயங்கள் முன்னைய ஆண்டின் 30.5 சதவீதத்திலிருந்து 33.5 சதவீதத்திற்கு அதிகரித்தன. எடுப்பனவு செய்யப்படாத கொடுகடன் வசதிகளுடன் தொடர்புடைய கடப்பாடுகள் மொத்த ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகைகளின் 35.4 சதவீதத்திற்கு வகைகூறிய பாரியளவிலான கூறாகக் காணப்பட்டதுடன் கொடுகடன் விரிவாக்கத்திற்கமைவாக, ஆண்டிற்காண்டு 10.1 சதவீதத்தினால் அதிகரித்தன. வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்களும் கணிசமானளவு

வரைபடம் 3.32 சில்லறை மற்றும் மொத்த விற்பனை நிதியங்கள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 3.34 முதிர்வு இடைவெளி




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 3.35 குறுங்கால முதிர்வு இடைவெளி எதிர் உயர்தரத் திரவச் சொத்துகள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

காணப்பட்டு, ஆண்டிற்காண்டு 15.7 சதவீதத்தினால் அதிகரித்தன. பிரதானமாக ஆவணக் கொடுகடன்கள் மற்றும் உத்தரவாதங்கள்.'.முறிகள் என்பனவற்றினால் தூண்டப்பட்டு, எதிர்பாராத நிகழ்வுசார் கடப்பாடுகள் 25.3 சதவீதத்தால் ஆண்டிற்காண்டு அதிகரித்து, வர்த்தகம்சார்ந்த மற்றும் உத்தரவாத வெளிப்படுத்துகைகள் அதிகரித்தமையை எடுத்துக்காட்டுகின்றது. நெருக்கடியான காலப்பகுதியில் வாடிக்கையாளர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கடன் வசதிகளை பயன்படுத்தத் தொடங்குவார்களாயின், பயன்படுத்தப்படாத கொடுகடன் வரம்புகளின் விரிவாக்கமானது வங்கிகளுக்கு உயர்ந்தளவான திரவத்தன்மை கேள்விகளை ஏற்படுத்தக்கூடிய அதேவேளை வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்களின் அதிகரிப்பு, குறிப்பாக சந்தை நிலைமைகள் தளம்பலுடன் காணப்படும் போது, இணைத்தரப்பினர், தீர்ப்பனவு, மற்றும் செலாவணி வீதத்துடன் தொடர்புடைய இடர்நேர்வுகள் என்பனவற்றில் அதிகரிப்பை ஏற்படுத்தக்கூடும். மேலும், உத்தரவாதங்கள் அல்லது ஆவணக் கடன்கள் கோரப்படுமாயின், எதிர்பாராத நிகழ்வுகளின் அதிகரிப்பானது கொடுகடனை ஐந்தொகை மீதான கடன் வெளிப்பாடுகளாக மாற்றுவதற்கான சாத்தியப்பாட்டினை உயர்த்தக்கூடும். ஆகையினால், ஐந்தொகைக்கு வெளியேயான நடவடிக்கைகளின் தொடர்ச்சியான விரிவாக்கமானது குறிப்பாக, வங்கிகளின் திரவத்தன்மை தாங்கிருப்புக்கள், இணைத்தரப்பினர் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் கொடுகடன் மாற்று இடர்நேர்வுகளுக்கான மூலதனப் போதுமாந்தன்மை என்பன தொடர்பில் உன்னிப்பாகக் கண்காணிப்பதை தேவைப்படுத்துகின்றது.

வரைபடம் 3.36 ஐந்தொகைக்கு வெளியேயான செயற்பாடுகள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### இலாபத்தன்மை

**வங்கித்தொழில் துறையின் இலாபத்தன்மையானது 2026இன் முதலாம் அரையாண்டுப்பகுதியில் மேம்பட்ட போதிலும் அதன் வளர்ச்சி வேகம் 2025இன் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் மிதமடைந்து காணப்பட்டது.** இத்துறையானது 2026இன் முதலாம் அரையாண்டுப் பகுதியில் ரூ.208.7 பில்லியன் வரிக்கு பின்னரான இலாபத்தை அறிக்கையிட்டு 12.9 சதவீத ஆண்டிற்காண்டு வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. எவ்வாறாயினும், தளர்வடைந்த நாணயக் கொள்கை காலகட்டத்திற்கு மத்தியில், பிரதானமாக வட்டிச் செலவினங்களில் ஏற்பட்ட துரிதமான வீழ்ச்சியின் காரணமாக தேறிய வட்டி வருமானத்தின் சடுதியான அதிகரிப்பினால் ஆதரவளிக்கபட்டு, இலாப வளர்ச்சியானது 2025இன் முதலாம் அரையாண்டுப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 67.2 சதவீத வளர்ச்சியைக் காட்டிலும் கணிசமானளவு குறைவாகக் காணப்பட்டது. 2026இன் முதலாம் அரையாண்டுப்பகுதியில், தேறிய வட்டி வருமானம், 11.3 சதவீதத்தினால் ஆண்டிற்காண்டு அதிகரித்ததுடன் துறையின் இலாபத்தன்மையில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு முக்கிய பங்காளராக காணப்பட்டது. வர்த்தக நடவடிக்கைகளிலிருந்தான தேறிய ஈட்டல்கள் மற்றும் தேறிய கட்டண அடிப்படையிலான வருமானம் என்பனவும் முறையே 105.7 சதவீத மற்றும் 19.2 சதவீதமான குறிப்பிடத்தக்க ஆண்டிற்காண்டு வளர்ச்சிகளைப் பதிவுசெய்தன. எனினும், தொழிற்பாட்டுச் செலவினங்களும் பெறுமதியிழப்புக் கட்டணங்களும் கணிசமானளவு அதிகரித்து, இவ் ஈட்டல்களை பகுதியளவில் எதிரீடு செய்தன.

**2026இன் முதலாம் அரையாண்டுப்பகுதியில், வங்கித்தொழில் துறையின் இலாபத்தன்மை முன்னேற்றத்திற்கு உள்நாட்டு முறைமைசார் முக்கியத்துவம்வாய்ந்த வங்கிகளின் உயர்ந்தளவிலான இலாபங்கள் முதன்மையாக ஆதரவளித்தன.** உள்நாட்டு முறைமைசார் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளின் வரிக்கு பின்னரான இலாபமானது தேறிய வட்டி வருமானத்தின் கணிசமானளவு அதிகரிப்பினால் தூண்டப்பட்டு, 2026இன் முதலாம் அரையாண்டுப்பகுதியில் ஆண்டிற்காண்டு 11.7 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டதுடன்

வரைபடம் 3.37 வரிக்குப் பின் இலாபம் (அரையாண்டு)




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபு 3.38 வரிக்கு பின்னரான இலாபத்தின் கூறுகள்




* இலாபம் அல்லது இழப்பினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நிதியியல் சாதனங்களிலிருந்தான தேறிய சீர்மதிப்புப் பெறுமதி ஈட்டல்கள், நிதியியல் சொத்துக்களின் விலக்கலிலிருந்து ஈட்டப்பட்ட தேறிய ஈட்டல்கள், இணைக்கம்பனிகள் மற்றும் கூட்டு முயற்சிகளின் இலாபப்பங்கு என்பவற்றை ஏனைய வருமானம்/செலவுகள் உள்ளடக்குகின்றன.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

துறையின் ஒட்மொத்த இலாப அதிகரிப்பில் 58.6 சதவீதத்திற்கு வகைகூறியது. அதேவேளை, வெளிநாட்டு வங்கிகளின் வரிக்கு பின்னரான இலாபமும் ஆண்டிற்காண்டு 43.4 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தமைக்கு ஆண்டுகாலப்பகுதியில் வெளிநாட்டு வங்கியொன்று அதன் சில்லறை வங்கித்தொழில் வணிகத்தை ஒரு உள்நாட்டு வங்கிக்கு விற்பனை செய்ததன் மூலம் கிடைத்த ஏனைய தொழிற்பாட்டு வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக அமைந்தது. மேலும், அதிகரித்த தேறிய வட்டி வருமானம், வர்த்தகப்படுத்தலிலிருந்தான தேறிய இலாபங்கள், தேறிய கட்டண அடிப்படையிலான வருமானம் மற்றும் குறிப்பிடப்பட்ட வெளிநாட்டு வங்கியின் சில்லறை வங்கித்தொழில் வணிகத்தை கையகப்படுத்திய வங்கியின் கூட்டு வருமானவரிக்கான கீழ்நோக்கிய திருத்தம் என்பனவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு, ஏனைய உள்நாட்டு வங்கிகள் ஆண்டிற்காண்டு 6.2 சதவீத வரிக்கு பின்னரான இலாப அதிகரிப்பை பதிவுசெய்தன. எனினும், தொழிற்பாட்டுச் செலவுகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு மற்றும் ஏனைய தொழிற்பாட்டு வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பவற்றுடன் இணைந்து அதிகரித்த பெறுமதியிழப்புக் கட்டணங்கள், ஏனைய உள்நாட்டு வங்கிகள் வகையின் இலாப வளர்ச்சியை மிதமடையச் செய்தன.

**தேறிய வட்டி வருமானத்தின் வளர்ச்சியானது பிரதானமாக உள்நாட்டு முறைமையியல் ரீதியாக முக்கியத்துவம்வாய்ந்த வங்கிகளினால் தூண்டப்பட்ட அதேவேளை வெளிநாட்டு வங்கிகள் கடன்வழங்கல் நடவடிக்கைகளிலிருந்து மெதுவடைந்த ஈட்டல்களை தொடர்ந்தும் பதிவுசெய்தன.** உள்நாட்டு முறைமைசார் முக்கியத்துவம்வாய்ந்த வங்கிகளின் தேறிய வட்டி வருமானம், 2026இன் முதலரைப் பகுதியில் ஆண்டிற்காண்டு 13.4 சதவீதமளவில் அதிகரித்ததுடன் துறையின் தேறிய வட்டி வருமானத்தில் 66.0 சதவீதத்திற்கு வகைகூறியது. ஏனைய உள்நாட்டு வங்கிகளும் ஆண்டிற்காண்டு 9.2 சதவீத தேறிய வட்டி வருமானத்தைப் பதிவுசெய்த அதேவேளை வெளிநாட்டு வங்கிகளின் தேறிய வட்டி வருமானம் 1.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமை அண்மைய ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட கீழ் நோக்கியப் போக்கைத் தொடர்வதாக அமைந்தது. வட்டி வருமானம் ஈட்டுவது பெருமளவில் உள்நாட்டு வங்கிகளிடம் செறிவடைந்திருப்பதை வங்கி வகைகளுக்கிடையிலான தேறிய வட்டி வருமானத்தின் வேறுபாடு எடுத்துக்காட்டுகின்றது.

**வர்த்தகப்படுத்தலிலிருந்தான உயர்வான தேறிய ஈட்டல் மற்றும் அதிகரித்த கட்டண அடிப்படையிலான மற்றும் ஏனைய தொழிற்பாட்டு வருமானம் என்பனவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு, மொத்த வருமானத்தின் பங்கொன்றாக வட்டியல்லா வருமானம் 2025இன் முதலாம் அரையாண்டுப் பகுதியுடன் ஒப்பிடுகையில் 2026இன் முதலாம் அரையாண்டுப்பகுதியில் அதிகரித்தது.** இதற்கமைவாக, மொத்த வருமான விகிதத்திற்கான வட்டியல்லா வருமானமானது முன்னைய ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியின் 21.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2026இன் முதலாம் அரையாண்டுப்பகுதியில் 24.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. வர்த்தகப்படுத்தலிலிருந்தான தேறிய இலாபங்கள் ஆண்டிற்காண்டு 105.7 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றைப் பதிவுசெய்த அதேவேளை தேறிய கட்டண மற்றும் தரகு வருமானம் மற்றும் தேறிய ஏனைய தொழிற்பாட்டு வருமானம் என்பன முறையே 19.2 சதவீதத்தினாலும் 56.9 சதவீதத்தினாலும் அதிகரித்தன.

**வை2026இன் முதலாம் அரையாண்டுப்பகுதியில் புதிய பெறுமதியிழப்புக் கட்டணங்கள் வங்கித்தொழில் துறையின் இலாபத்தன்மையில் பாதகமான தாக்கத்தைச் செலுத்தின.** கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள், முதலீடுகள் மற்றும் ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகைகள்

**வரைபடம் 3.39** வங்கி வகை வாரியான வரிக்குப் பின் இலாபம்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 3.41** வட்டியல்லா வருமானம்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

என்பன மீதான புதிய பெறுமதியிழப்பு ஏற்பாடுகளை உள்ளடக்குகின்ற புதிய பெறுமதியிழப்புக் கட்டணங்கள் 2025இன் முதலாம் அரையாண்டுப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 29.5 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2026இன் முதலாம் அரையாண்டுப்பகுதியில் ஆண்டிற்காண்டு 104.7 சதவீதத்தினால் அதிகரித்தன. துறையின் உயர்வடைந்த கொடுகடன் விரிவாக்கத்திற்கு மத்தியில், பிரதானமாக கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் மீதான பெறுமதியிழப்புக் கட்டணங்களினால் இது தூண்டப்பட்டது.

**முன்னைய ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் முக்கிய இலாபத்தன்மை விகிதங்கள் 2026இன் முதலாம் அரையாண்டுப்பகுதியில் மிதமான வீழ்ச்சியினைப் பதிவுசெய்தன.** துறையின் பங்குரிமை மூலதனம் மீதான வருவாய், சொத்துக்கள் மீதான வருவாய் மற்றும் தேறிய வட்டி எல்லை என்பன 2025இன் முதலாம் அரையாண்டுப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட முறையே 18.2 சதவீதம் 2.6 சதவீதம் மற்றும் 4.5 சதவீதம் என்பவற்றுடன் ஒப்பிடுகையில் 2026இன் முதலாம் அரையாண்டுப்பகுதியில் 17.5 சதவீதம் 2.5 சதவீதம் மற்றும் 4.4 சதவீதம் என்பவற்றிற்கு வீழ்ச்சியடைந்தன.

**கடன்களிலிருந்தான அதிகரித்த வட்டி வருமானத்தின் காரணமாக வங்கித்தொழில் துறையின் தேறிய வட்டி எல்லையானது உயர்வடைந்து காணப்பட்டபோதும், ஏனைய நிதியியல் சொத்துக்களிலிருந்து வீழ்ச்சியடைந்த வட்டி வருமானம் விகிதத்திற்கான கீழ்நோக்கிய அழுத்தத்தை ஏற்படுத்தியது.** வங்கித்தொழில் துறையின் தேறிய வட்டி எல்லையானது 2025இன் முதலாம் அரையாண்டுப்பகுதியின் 4.5 சதவீதத்திலிருந்து 2026இன் முதலாம் அரையாண்டுப்பகுதியில் 4.4 சதவீதத்திற்கு சிறிதளவில் வீழ்ச்சியடைந்திருந்த போதிலும் அது 3.8 சதவீதமான 10 ஆண்டுகால சராசரிக்கு மேலேயே காணப்பட்டது. பொருளாதார

**வரைபடம் 3.40** வங்கி வகை வாரியான தேறிய வட்டி வருமானம்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 3.42** சொத்துக்கள் மீது அறவிடப்பட்ட புதிய பெறுமதியிழப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 3.43 இலாபத்தன்மை விகிதங்கள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 3.45 தேறிய வட்டி எல்லையின் கூறுகளாக்கம்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

நெருக்கடி காலப்பகுதியில் நிலவிய உயர்ந்தளவான விளைவுகள் காரணமாக வங்கிகள் அரச பிணையங்களில் மேற்கொண்ட குறிப்பிடத்தக்க முதலீடுகளினால் ஆதரவளிக்கப்பட்டு, துறையின் தேறிய வட்டி எல்லை 2022இல் ஒரு மிகையினைப் பதிவுசெய்தது. மேலும், 2023இன் நடுப்பகுதியில் தொடங்கப்பட்ட தளர்வடைந்த நாணயக் கொள்கைக் காலக்கட்டத்தில் கடன்வழங்கல் வீதங்களுடன் ஒப்பிடுகையில் வைப்பு வீதங்களில் மேற்கொள்ளப்பட்ட விரைவான மற்றும் சமச்சீரற்ற சீராக்கத்தின் மூலம் துறையின் தேறிய வட்டி எல்லையை நீடிக்கவைத்தது. அதனைத்தொடர்ந்து கடன்வழங்கல் சொத்துப்பட்டியலில் ஏற்பட்ட விரிவாக்கமும் கடன்வழங்கலிலிருந்து கிடைக்கும் வட்டி வருமானத்தை வலுப்படுத்தியது. எவ்வாறாயினும், 2025ஆம் ஆண்டின் இரண்டாவது அரையாண்டு தொடக்கம் முதல், ஏனைய நிதியியல் சொத்துகளிலிருந்து, குறிப்பாக அரச பிணையங்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தில் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டமை அதிகரித்த கொடுகடன் கேள்விக்கு ஆதரவளிப்பதற்காக, அரச பிணையங்களின் தாழ்ந்த மட்டத்திலான விளைவுடன் இணைந்து, அரச பிணையங்களிலிருந்து பெறப்பட்ட நிதியங்களை மீளொதுக்கீடு செய்யப்படுவதை சாத்தியமானளவில் பிரதிபலிக்கின்றது. ஏனைய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானத்தில் ஏற்பட்ட இச்சரிவானது 2026இன் முதலாம் அரையாண்டுப்பகுதியில் தேறிய வட்டி எல்லை மீது சில அழுத்தங்களை ஏற்படுத்தியிருந்த போதும் கடன்வழங்கல் சொத்துப்பட்டியலின் விரிவாக்கம், வரலாற்றுச் சராசரியுடன் ஒப்பிடுகையில் தேறிய வட்டி எல்லையை ஒப்பீட்டளவில் உயர்ந்த மட்டத்தில் நீடிப்பதற்கு ஆதரவளித்தது.

வரைபடம் 3.44 வங்கி வாரியான தேறிய வட்டி எல்லை மற்றும் பங்குரிமை மூலதனம் மீதான வருவாய் என்பனவற்றின் பகிர்ந்தளிப்பு*




* வட்ட அளவு ஒவ்வொரு வங்கியின் சந்தைப் பங்கினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## சந்தை இடர்நேர்வு

**சந்தை வட்டி வீத நிலைமைகள் அதிகரித்து வருவதற்கு மத்தியில், ஒரு மாதம் வரையான காலப்பகுதியில் வட்டி ஈட்டுகின்ற சொத்துக்கள் வட்டி ஈட்டும் பொறுப்புக்களை விடவும் அதிகமாகக் காணப்பட்டமையினால், வங்கித்தொழில் துறையின் அண்மைக் கால மீள்விலையிடல் சொத்துப்பட்டியல் 2026இன் இரண்டாவது காலாண்டு இறுதியில் மேம்பட்டு காணப்பட்டது.** எனினும், ஒரு மாதத்திற்கு மேலான கால இடைவெளிகளில் கணிசமான எதிர்மறை இடைவெளிகள் தொடர்ந்தும் காணப்பட்டன. ஒரு மாதத்திற்குள்ளான மொத்த நிலைமையானது 2025இன் இரண்டாவது காலாண்டு இறுதியில் ரூ.111.2 பில்லியன் கொண்ட எதிர்க்கணியத்திலிருந்து 2026இன் இரண்டாவது காலாண்டு இறுதியில் ரூ.457.3 பில்லியன் கொண்ட நேர்க்கணியத்திற்கு மாற்றமடைந்த அதேவேளை மூன்று மற்றும் ஆறு மாதங்களுக்குள்ளான எதிர்க்கணிய நிலைமைகள் 2026இன் இரண்டாவது காலாண்டு இறுதியில் முறையே ரூ.277.7 பில்லியனிற்கும் ரூ.709.0 பில்லியனிற்கும் கணிசமானளவு குறுக்கமடைந்தன. பன்னிரண்டு மாதங்களுக்குள்ளான

வரைபடம் 3.46 வட்டி வருமானத்தின் உள்ளமைப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 3.48 ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்திற்கான தேறிய வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகை




மூலம்: இலங்கை மத்திய வங்கி

ஒன்றுசேர்ந்த எதிர்க்கணிய நிலைமையும் ரூ.2.7 றில்லியனிலிருந்து ரூ.2.5 றில்லியனிற்கு குறுக்கமடைந்தது. ஒரு மாத காலத்திற்கு அப்பால், அதிகளவில் வட்டி வீத உணர்திறன் கொண்ட சொத்துக்களுடன் ஒப்பிடுகையில் பொறுப்புகள் மீள்விலையிடலுக்கு உட்பட்டிருந்தன என்பதை இது சுட்டிக்காட்டப்படுகின்றது. 2026 மே மாதத்தில் ஓரிரவு கொள்கை வீதம் 100 அடிப்படைப் புள்ளிகளினால் அதிகரித்ததன் பின்னர், தொடர்ந்து காணப்படும் எதிர்க்கணிய மீள்நிதியிடல் இடைவெளிகள் காரணமாக, சொத்துக்களுடன் ஒப்பிடுகையில் பொறுப்புகளின் மீள்விலையிடல் வேகமாக இருக்கக்கூடும் என்பதோடு இது தேறிய வட்டி எல்லையில் ஓரளவு மிதமடைதலை ஏற்படுத்தக்கூடும். எனினும், தேறிய வட்டி எல்லை உயர்வடைந்த நிலையில் காணப்படுவதனைக் கருத்திற்கொள்கையில், அத்தகைய மிதமடைதலானது துறையின் இலாபத்தன்மைக்கான உடனடிக் கரிசனையாக இருக்காது.

வரைபடம் 3.47 திரண்ட வட்டி ஈட்டுகின்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்*




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**2026 இரண்டாம் காலாண்டின் இறுதியிலுள்ளவாறு வங்கித்தொழில் துறையின் தேறிய வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகையானது அதிகரித்தமையானது செலாவணி வீத அசைவுகளுக்கான உணர்திறன் அதிகரித்துள்ளமையை எடுத்துக்காட்டியது.** ஐந்தொகைக்குள்ளேயான மற்றும் ஐந்தொகைக்கு வெளியேயான நிலைமைகளை உள்ளடக்குகின்ற தேறிய வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகை, 31.0 சதவீதமளவில் ஆண்டிற்காண்டு அதிகரித்து, 2026இன் இரண்டாவது காலாண்டு இறுதியில் ரூ.504.3 பில்லியன் கொண்ட (ஐ.அ.டொலர் 1,499.9 மில்லியன்) நீள்நிலைமையை அடைந்தது. இதற்கமைவாக, ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதன விகிதத்திற்கான தேறிய வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகை, 2025இன் இரண்டாம் காலாண்டின் இறுதியின் 18.9 சதவீதத்திலிருந்து 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 21.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. ஐந்தொகைக்குள்ளேயான நிலைமைகள் 2025இன் இரண்டாவது காலாண்டு இறுதியில் காணப்பட்ட ரூ.51.5 பில்லியன் கொண்ட தேறிய சொத்து நிலைமையிலிருந்து 2026இன் இரண்டாவது காலாண்டு இறுதியில் ரூ.106.8 பில்லியன் கொண்ட தேறிய பொறுப்பு நிலைமைக்கு மாற்றமடைந்திருந்தபோதும், இது ஐந்தொகைக்கு வெளியேயான தேறிய நீள்நிலைமையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பினால் எதிரீடுசெய்யப்பட்டது. நாணய நியதிகளில், ஒட்டுமொத்த நிலையில் ஐ.அ.டொலர் வெளிப்படுத்துகை தொடர்ந்தும் ஆதிக்கம்செலுத்தியபோதும், ஏனைய நாணயங்களுக்கான வெளிப்படுத்துகைகள் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைப் பதிவுசெய்தன. பாரியளவிலான ஒட்டுமொத்த நீள்நிலைமையானது இலங்கை ரூபாய் பெறுமதி மேலும் தேய்வடையும்பட்சத்தில் மதிப்பீட்டு இலாபங்களை அதிகரிக்கக்கூடியதாகவிருப்பினும் ரூபாய் உயர்வடையும்பட்சத்தில் வங்கிகள் இழப்புக்களை எதிர்கொள்ள நேரிடும்.

வரைபடம் 3.49
நாணய ரீதியிலான தேறிய வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகை




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 3.50
பங்குரிமை மூலதன முதலீடுகள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**வங்கித்தொழில் துறையின் பங்குரிமை இடர்நேர்விற்கான வெளிப்படுத்துகை, 2026இன் இரண்டாவது காலாண்டு இறுதியில் மிதமாக அதிகரிப்பினைப் பதிவுசெய்திருந்த போதும், பங்குரிமை முதலீடுகள் ஒப்பீட்டளவில் சிறிதளவாகக் காணப்பட்டன.** பட்டியலிடப்பட்ட பங்குரிமை முதலீடுகள், 2026இன் இரண்டாவது காலாண்டு இறுதியில் ரூ.80.4 பில்லியனிற்கு 16.3 சதவீதமளவில் ஆண்டிற்கு ஆண்டு அதிகரித்தன. அதேவேளை, துறையின் மொத்த முதலீடுகள் 2026இன் இரண்டாவது காலாண்டு இறுதியில் ரூ.8,925.6 பில்லியனிற்கு 9.9 சதவீதமளவில் ஆண்டிற்கு ஆண்டு சுருக்கமடைந்தமையால், மொத்த முதலீடுகளில் பங்குரிமை முதலீடுகளின் பங்கு, 2025இன் இரண்டாவது காலாண்டு இறுதியின் 0.7 சதவீதத்திலிருந்து 2026இன் இரண்டாவது காலாண்டு இறுதியில் 0.9 சதவீதத்திற்கு அதிகரித்தது. எவ்வாறெனினும், ஒட்டுமொத்த முதலீட்டுச் சொத்துப்பட்டியலில் பட்டியலிடப்பட்ட பங்குரிமை முதலீடுகளின் பங்கு சிறிதாக இருந்தமை பங்குச் சந்தைத் தளம்பல்களுக்கான வங்கித்தொழில் துறையின் நேரடி வெளிப்படுத்துகையை கட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

### மூலதனப் போதுமாந்தன்மை

**ஆண்டுகாலப்பகுதியில் உயர்ந்தளவான கொடுகடன் விரிவாக்கத்தை எடுத்துக்காட்டியதன் காரணமாக மூலதனப் போதுமாந்தன்மை வீழ்ச்சியடைந்திருந்தபோதும் வங்கித்தொழில் துறையானது ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளை விட அதிகமாக இவ்விகிதங்களைப் பேணியிருந்தது.** வங்கித்தொழில் துறை, 2025இன் இரண்டாம் காலாண்டின் இறுதியின் 19.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 18.2 சதவீதம் கொண்ட மொத்த மூலதனப் போதுமாந்தன்மை விகிதத்தைப் பதிவுசெய்தது. 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் ஆண்டிற்காண்டு 15.9 சதவீதமளவில் பதிவுசெய்யப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தில் ஒப்பீட்டளவில் தாழ்ந்தளவிலான வளர்ச்சிக்கு எதிராக, இக்காலப்பகுதியில் கொடுகடனில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தைப் பாரியளவில் பிரதிபலித்து, இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் ஆண்டிற்கு ஆண்டு 23.8 சதவீதத்தினால் அதிகரித்தமை இதற்குப் பிரதானமாக காரணமாக அமைந்தது. மேலும், துறையின் பொது பங்குரிமை மூலதன அடுக்கு 1 விகிதமானது, முன்னைய ஆண்டின் 15.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2026இன் இரண்டாம் காலாண்டில் 14.6 சதவீதத்திற்கு குறைவடைந்தமையானது அதன் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களுடன் ஒப்பிடுகையில் துறையின் உயர்தர மூலதனத் தாங்கிருப்பு மிதமடைந்ததை எடுத்துக்காட்டுகின்றதுடன், இது எதிர்பாரா இழப்புக்களுக்கான துறையின் பாதிக்கப்படக்கூடிய தன்மை அதிகரித்தது.

**ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்துடன் ஒப்பிடுகையில், இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் துறை முழுவதும் அதிகரித்ததைப் பிரதிபலிக்கும் வகையில், மூலதனப் போதுமாந்தன்மை விகிதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி அனைத்து வங்கி வகைகளிலும் பரவலாகக் காணப்பட்டது.** உள்நாட்டு முறைமைசார் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளின் மொத்த மூலதனப் போதுமாந்தன்மை விகிதம், 2025இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட முறையே 18.3 சதவீதத்துடனும் 17.4 சதவீதத்துடனும் ஒப்பிடுகையில் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் முறையே 17.2 சதவீதத்திற்கும் 16.4 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தன. உள்நாட்டு முறைமைசார் முக்கியத்துவம்வாய்ந்த வங்கிகளின் மொத்த ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனம், 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் ஆண்டிற்காண்டு 19.6 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளை அவற்றின் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் 27.4 சதவீதத்தினால் கணிசமானளவு வேகமாக விரிவடைந்தன. இதேபோன்று, 2026இன் இரண்டாம் காலாண்டின்

**வரைபடம் 3.51** மூலதனப் போதுமாந்தன்மை விகிதங்கள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 3.52** வங்கி வகை வாரியான மூலதனப் போதுமாந்தன்மை




மூலம்: இலங்கை மத்திய வங்கி

இறுதியில், ஏனைய உள்நாட்டு வங்கிகளின் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களில் 21.3 சதவீத அதிகரிப்புக் காணப்பட்ட நிலையில் மொத்த ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனம், ஆண்டிற்கு ஆண்டில் 14.2 சதவீதத்தினால் அதிகரித்தது. வெளிநாட்டு வங்கிகளைப் பொறுத்தவரையில், மொத்த மூலதனப் போதுமை விகிதம், முன்னைய ஆண்டின் 35.0 சதவீதத்திலிருந்து 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 34.8 சதவீதத்திற்கு சிறிதளவில் வீழ்ச்சியடைந்ததுடன் மொத்த ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் முறையே 4.3 சதவீதத்தையும் 4.8 சதவீதத்தையும் கொண்ட ஒப்பீட்டளவில் மிதமான வளர்ச்சிகளைப் பதிவுசெய்தன. வெளிநாட்டு வங்கியொன்றிலிருந்து சில்லறை வங்கித்தொழில் தொழிற்பாடுகள் உள்நாட்டு வங்கியொன்றிற்கு மாற்றப்பட்டமையானது ஏனைய உள்நாட்டு வங்கி வகையின் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களில் உயர்ந்தளவு அதிகரிப்பு ஏற்படுவதற்கு வழிவகுத்த அதேவேளை அக்குறித்த வெளிநாட்டு வங்கியின் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களில் ஏற்பட்ட குறைவடைதலானது வெளிநாட்டு வங்கிகளிடையே இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் வளர்ச்சியை மிதமடையச்செய்தது. எவ்வாறெனினும், உள்நாட்டு வங்கிகளிடையே ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதன வளர்ச்சிக்கும் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் வளர்ச்சிகுமிடையிலான குறிப்பிடத்தக்க இடைவெளியானது இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட வெளிப்படுத்துகைகளின் விரிவாக்கத்திற்கு ஏற்ப மூலதனத் திரட்சி போதுமான கதியில் நடைபெறவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

**மொத்த ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தின் வளர்ச்சியானது முதன்மையாக நிறுத்தி வைக்கப்பட்ட ஈட்டல்களினால் ஆதரவளிக்கப்பட்டமையானது மூலதனத்தைப் பெருக்குவதற்காக உள்ளக மூலதன உருவாக்கம் மீது அதிகளவில் சார்ந்திருப்பதை எடுத்துக்காட்டுகின்றது.** மொத்த மூலதனம் 2025இன் இரண்டாம் காலாண்டின் இறுதியின் 21.6 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் ஆண்டிற்காண்டு 15.9 சதவீதமளவில் அதிகரித்தது. பிரசுரிக்கப்பட்ட நிறுத்திவைக்கப்பட்ட ஈட்டல்கள் ஆண்டிற்காண்டு 28.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியினைப் பதிவுசெய்ததுடன் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தில் ஏற்பட்ட அதிகரிப்பில் 69.6 சதவீதத்திற்கு பங்களித்தது. மேலும், ஆண்டிற்காண்டு முறையே 30.5 சதவீதத்தினாலும் 14.5 சதவீதத்தினாலும் அதிகரித்த அடுக்கு 2 மூலதனச் சாதனங்கள், பொது மற்றும் ஏனைய ஒதுக்குகள் என்பனவும் ஆண்டு காலப்பகுதியில் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு குறிப்பிடத்தக்களவில் பங்களித்தன. குறிப்பாக, வங்கிகள் துணைநிலை தொகுதிக்கடன்களை வழங்கியதன் முதன்மை காரணமாக அடுக்கு 2 மூலதனம் தொடர்ந்தும் அதிகரித்தது.

**வரைபடம் 3.53** வங்கி வகை வாரியான மொத்த மூலதனம் மற்றும் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 3.54
**ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தில் ஏற்பட்ட மாற்றத்தின் மீது தாக்கம்செலுத்திய காரணிகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 3.56
**வங்கி வகை ரீதியிலான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் அடர்த்தி**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**கொடுகடன் இடர்நேர்வு வெளிப்படுத்துகைகளுக்கான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் விரிவடைந்தமைக்கு கூட்டாண்மைக் கோரல்கள்[9] மற்றும் சில்லறைக் கோரல்கள்[10] என்பனவற்றில் ஏற்பட்ட கணிசமானளவு அதிகரிப்பு காரணமாக அமைந்தது.** மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களில் 88.1 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கொடுகடன் இடர்நேர்வு வெளிப்படுத்துகைகளுடன் தொடர்புடைய இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் ஆண்டிற்கு ஆண்டில் 25.6 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு கூட்டாண்மைக் கோரல்களிலும் சில்லறைக் கோரல்களிலும் ஏற்பட்ட கணிசமானளவு அதிகரிப்பு காரணமாக அமைந்தது. கொடுகடன் இடர்நேர்விற்கான மொத்த நிறையேற்றப்பட்ட சொத்துக்களில் கூட்டாண்மைகள் மீதான கோரல்கள் 40.5 சதவீதமாகக் காணப்பட்டதுடன் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் ஆண்டிற்காண்டு 29.7 சதவீதத்தினால் அதிகரித்தது. சில்லறைக் கோரல்களின் அதிகரிப்பானது இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் அதிகரிப்பிற்கு மேலும் உந்துதலளித்ததுடன் இது கொடுகடன் இடர்நேர்விற்கான மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களில் 29.5 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியதுடன் ஆண்டிற்கு ஆண்டு 33.6 சதவீதத்தால் அதிகரித்தது. எனினும், செயற்படா சொத்துக்களுக்கான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் ஆண்டுகாலப்பகுதியில் வீழ்ச்சியடைந்து துறையின் மேம்பட்ட சொத்துத் தரத்தை எடுத்துக்காட்டுகின்றன.

9 கூட்டிணைக்கப்பட்ட நிறுவனங்கள், அமைப்புக்கள், பங்குடைமைகள், தனியுரிமைக் கம்பனி, நம்பிக்கைப் பொறுப்பு, நிதியங்கள், மற்றும் இதுபோன்ற அம்சங்களைக் கொண்ட ஏனைய நிறுவனங்கள் (கொடுகடன் இடர்நேர்விற்கான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் வங்கித்தொழில் மேற்பார்வை தொடர்பான பாசல் குழு ஊசுநு20.41) போன்றவற்றுக்கான வெளிப்படுத்துகைகள் (கடன்கள், முறிகள், பெறத்தக்கவைகள் போன்றன) உள்ளடங்கலாக கூட்டாண்மைகளுக்கான வெளிப்படுத்துகைகளை கூட்டாண்மைக் கோரல்கள் உள்ளடக்குகின்றன.

10 தனிப்பட்ட நபருக்கான அல்லது நபர்களுக்கான வெளிப்படுத்துகைகள் சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கான வெளிப்படுத்துகைகள் (கொடுகடன் இடர்நேர்விற்கான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் என்பனவற்றுக்கான வங்கித்தொழில் மேற்பார்வை தொடர்பான பாசல் குழுவின் கணிப்பீடு) - ஊசுநு20.63

வரைபடம் 3.55
**கொடுகடனிற்கான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் உள்ளமைப்பு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**வியாபார மாதிரியில் ஏற்பட்ட வேறுபாடுகளைப் பிரதிபலித்து, வெளிநாட்டு வங்கிகளின் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் அடர்த்தி[11] உள்நாட்டு வங்கிகளுடன் ஒப்பிடுகையில், 2026இன் இரண்டாவது காலாண்டு இறுதியில் உயர்வாகக் காணப்பட்டது.** வெளிநாட்டு வங்கிகளின் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் அடர்த்தியானது 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 64.9 சதவீதமாகக் காணப்பட்டதுடன் உள்நாட்டு வங்கிகளின் அடர்த்தியை விடக் குறிப்பிடத்தக்களவில் உயர்வாக இருந்தது. உள்நாட்டு வங்கிகளுடன் ஒப்பிடுகையில், 0 சதவீத இடர்நேர்வு நிறையேற்றங்களைக் கொண்ட அரச பிணையங்களில் அவற்றின் முதலீடுகள் குறைவாகக் காணப்பட்டமை இதற்கு

11 இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் அடர்த்தியானது மொத்தச் சொத்துக்களுக்கான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் சதவீதமாகக் கணிப்பிடப்படுகின்றது.

வரைபடம் 3.57 மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் பங்காகக் கொடுகடன் இடர்நேர்விற்கான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 3.59 முடுக்கி விகிதம்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

காரணமாக அமைந்தது. எனினும், இவ் உயர்வான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் அடர்த்தியானது வெளிநாட்டு வங்கிகளின் கொடுகடன் வளர்ச்சிக் குறைவாகக் காணப்பட்டமையின் காரணமாக, கடன்வழங்கல் மூலம் அவற்றுக்கு வலுவான வருமானத்தை ஈட்டித்தரவில்லை என்பதோடு கரிசனைக்குட்பட்ட காலப்பகுதியில் அவற்றின் நலிவடைந்த தேறிய வட்டி வருமானச் செயலாற்றத்தின் மூலம் இது பிரதிபலிக்கப்பட்டது.

**குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்பட்ட வங்கித்தொழில் துறையின் மிகையான மூலதனம், 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது.** துறையின் மிகையான மூலதனம், 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் ஆண்டிற்கு ஆண்டில் 4.9 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. குறிப்பாக, மீளாய்விற்குரிய காலப்பகுதியில் கொடுகடன் விரிவாக்கத்தைப் பிரதிபலித்து, உள்நாட்டு முறைமைசார் முக்கியத்துவம்வாய்ந்த வங்கிகளினதும் மற்றும் ஏனைய உள்நாட்டு வங்கிகளினதும் மிகை மூலதனம் முறையே 11.1 சதவீதத்தினாலும் 4.2 சதவீதத்தினாலும் சிறிதளவில் சுருக்கமடைந்தன.

**வங்கித்தொழில் துறை, 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் உயர்ந்தளவு முடுக்கி விகிதத்தைத்[12] தொடர்ந்தும் பதிவுசெய்தது.** வங்கித்தொழில் துறையின் முடுக்கி விகிதம், 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 7.2 சதவீதமாகக் காணப்பட்டு, 3 சதவீதம் கொண்ட

12 மொத்த வெளிப்படுத்துகைகளுக்கான அடுக்கு 1 மூலதனமாகக் கணிப்பிடப்படும் முடுக்கி விகிதம், சொத்துக்கள் சொந்த நிதியங்களைத் தவிர மற்றவற்றால் எந்தளவிற்கு நிதியளிக்கப்படுகின்றன என்பதை எடுத்துக்காட்டுகின்றது. இதன் தொகுதி, பாசல் ஐஐஐ-இன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள அடுக்கு 1 மூலதனமாகும், அதேவேளை இதன் பகுதி அனைத்து ஐந்தொகைச் சொத்துக்கள், பெறுதி வெளிப்படுத்துகைகள், பிணைய நிதியளிப்பு கொடுக்கல்வாங்கல் வெளிப்படுத்துகைகள் மற்றும் ஐந்தொகைக்கு வெளியேயான விடயங்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றது (நிதியியல் ஆற்றல்வாய்ந்த தன்மைக் குறிகாட்டிகளின் தொகுப்பு வழிகாட்டல், 2019).

வரைபடம் 3.58 தூண் 1இன் கீழ் குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாட்டிற்கு மிகையான மூலதனம்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 3.60 வங்கி வகை வாரியான முடுக்கி விகிதம்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாட்டிற்கு நன்கு மேலே காணப்பட்டது. உள்நாட்டு முறைமைசார் முக்கியத்துவம்வாய்ந்த வங்கிகள், 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 6.0 சதவீதம் கொண்ட குறைந்தளவு முடுக்கி விகிதத்தைப் பதிவுசெய்ததுடன் 2025இன் இரண்டாம் காலாண்டின் இறுதியுடன் ஒப்பிடுகையில் சிறிதளவு அதிகரிப்பாகக் காணப்பட்டது. ஏனைய உள்நாட்டு வங்கிகளின் முடுக்கி விகிதமானது 2025இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 7.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 7.2 சதவீத வீழ்ச்சியினைப் பதிவுசெய்தமைக்கு,ஸ்தம்பித்த அடுக்கு 1 மூலதனத்திற்கு எதிராக வெளிப்படுத்துகை அளவுகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சி முதன்மைக் காரணமாக அமைந்தது. கொடுகடனில் ஏற்பட்ட தாழ்ந்தளவு வளர்ச்சிக் காரணமாக கணிசமாக தாழ்வாகக் காணப்பட்ட வெளிப்படுத்துகை அளவின் வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் அடுக்கு 1 மூலதனத்தின் உயர்ந்தளவு வளர்ச்சியினால் தூண்டப்பட்டு, வெளிநாட்டு வங்கிகள், 2026இன் இரண்டாவது காலாண்டு இறுதியில் 19.9 சதவீதம் கொண்ட ஒப்பீட்டளவில் வலுவான முடுக்கி விகிதத்தைப் பேணியது. உயர்ந்தளவான முடுக்கி விகிதமானது ஐந்தொகைக்குள்ளேயான மற்றும் ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகைகளுடன் ஒப்பிடுகையில், உயர் மட்டத்திலான மூலதனத் தாங்கிருப்புக்கள் இருப்பதை எடுத்துக்காட்டுவதுடன் இது நிதியியல் அதிர்வுகளுக்கான துறையின் தாக்குபிடிக்கும் தன்மையை அதிகரிக்கின்றது.

## 3.2 நிதிக் கம்பனிகள் துறை

**ஐந்தொகையின் விரைவான விரிவடைதலிற்கு மத்தியில், நிதிக் கம்பனிகள் துறையின் ஒட்டுமொத்த ஆற்றல்வாய்ந்ததன்மைச் சுட்டெண்ணானது 2026இன் இரண்டாம் காலாண்டு இறுதியில் சிறிதளவு வீழ்ச்சியடைந்த போதிலும், இத்துறையானது தொடர்ந்தும் தாக்குப்பிடிக்குந்தன்மையுடன் காணப்பட்டது.** ஒட்டுமொத்த ஆற்றல்வாய்ந்ததன்மைச் சுட்டெண்ணின் வீழ்ச்சியானது திரவத்தன்மை, இலாபத்தன்மை, மூலதனப் போதுமாந்தன்மை மற்றும் சந்தை இடர்நேர்வு ஆகியவற்றில் பாரியளவில் பிரதிபலிக்கப்பட்டது. துறையின் திரவத்தன்மை மற்றும் மூலதனப் போதுமாந்தன்மை என்பன முன்னைய ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் சிறிதளவு மோசமடைந்திருந்த போதிலும், அவை 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு நன்கு மேலாகக் காணப்பட்டன. இருப்பினும், துறையின் சொத்துத் தரம் பரிசீலனையிற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு மேம்பட்ட அதேவேளை, வினைத்திறனும் ஒரு சிறிதளவு மேம்பாட்டைப் பதிவுசெய்தது.

வரைபடம் 3.61 நிதிக் கம்பனிகள் ஆற்றல்வாய்ந்ததன்மை வரைபடம்*




* மையத்திலிருந்தான விலகலானது நேர்க்கணியத் தாக்கமொன்றினைக் குறித்துக்காட்டுகின்றது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

### கொடுகடன் இடர்நேர்வு

**நிதிக் கம்பனிகள் துறைக் கடன்வழங்கல் நடவடிக்கைகள் 2026இன் நடுப்பகுதியளவில் தொடர்ந்து குறிப்பிடத்தக்களவு விரிவடைந்தன.** துறையின் மொத்தக் கடன்களும் முற்பணங்களும் முன்னைய ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியின் இறுதியில் அறிக்கையிடப்பட்ட 35.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியொன்றுடன் ஒப்பிடுகையில் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 45.0 சதவீதத்தினால் ஆண்டிற்காண்டு குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியடைந்தன. இருப்பினும், 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட கொடுகடன் வளர்ச்சியானது 52.4 சதவீதம் கொண்ட முன்னைய காலாண்டின் வளர்ச்சியிலிருந்து மிதமடைந்தது. மோட்டார் வாகனங்களின் இறக்குமதிக்கான தேங்கிய கேள்வியின் தளர்வடைதல் மற்றும் வரி விதிப்புக் கண்ணோட்டத்தில் சமூகப் பாதுகாப்புப் பங்களிப்புத் தீர்வையில் ஏற்பட்ட மாற்றத்திலிருந்து வாகன விலைகளில் ஏற்பட்ட மேல்நோக்கியதொரு சீராக்கம், 2026இன் முதலரைப் பகுதியில் ஏற்பட்ட செலாவணி வீதப் பெறுமதித்தேய்வு மற்றும் மோட்டார் வாகன இறக்குமதிக்கான சுங்க இறக்குமதித் தீர்வை மீதான தற்காலிக மிகைக் கட்டணமொன்றின் நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றுடன் இணைந்து, 2026 மே மாதத்தில் மோட்டார் வாகன நிதியளித்தல் மீதான உயர்ந்தபட்ச பெறுமதிக்கான கடன் விகிதம் குறித்த மத்திய வங்கியின் இறுக்கமடைதலினைத் தொடர்ந்து வாகனத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கலில் ஏற்பட்ட மெதுவான விரிவாக்கத்தினை இம்மிதமடைதலானது பிரதிபலித்தது. 2026 மே மாதத்தில் தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கொடுகடன் வசதிகள் மீதான பெறுமதிக்கான கடன் விகிதத்தின் அறிமுகத்தினைத் தொடர்ந்து தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கலின் விரிவாக்கமும் மெதுவடைந்தது. மேலும், 2026 மே மாதத்தில் கொள்கை வீதச் சீராக்கத்தினைத் தொடர்ந்து கடன்வழங்கல் வீதங்களில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு மற்றும் மோட்டார் வாகனங்களின் இறக்குமதி மீதான தற்காலிக மிகைக் கட்டணத்தினை

2026இன் இறுதி வரை நீடித்தல் ஆகியவற்றுடன் இணைந்து, வாகனங்களுக்காக வழங்கப்படுகின்ற கொடுகடன் வசதிகளின் வளர்ச்சியானது அடுத்துவருகின்ற காலாண்டுகளில் மேலும் மெதுவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்கள் மீதான உயர்ந்தபட்ச பெறுமதிக்கான கடன் விகிதத்தின் அறிமுகப்படுத்தலிற்கு மேலதிகமாக, மூலதனப் போதுமாந்தன்மைத் தேவைப்பாடுகளைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காக அத்தகைய வசதிகள் மீதான இடர்நேர்வு நிறையேற்றங்களை மத்திய வங்கி அதிகரித்து, 2026 செத்தெம்பரிலிருந்து அமுலாக்கும் வகையில் நடைமுறைப்படுத்தியமையானது எதிர்வரும் காலாண்டுகளில் தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கலின் வளர்ச்சியில் மேலதிக மிதமடைதலொன்றிற்கு வழிவகுத்து அதன்மூலம், துறையின் ஒட்டுமொத்த கொடுகடன் வளர்ச்சியை மெதுவடையச்செய்யலாம்.

**2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் நிதிக் கம்பனிகள் துறையின் கொடுகடன் வளர்ச்சியானது முக்கியமாக, வாகன மற்றும் தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கலின் விரிவாக்கத்தினால் தூண்டப்பட்டது.** துறையின் வாகனத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்கள் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 46.3 சதவீதத்தினால் ஆண்டிற்காண்டு வளர்ச்சியடைந்து, முன்னைய ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியின் 33.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியொன்றிலிருந்து துரிதமடைந்தன. இதன்விளைவாக, வாகனத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கலானது 2026இன் இரண்டாம் காலாண்டில் முடிவடைந்த ஆண்டு காலப்பகுதியில் துறையின் மொத்தக் கொடுகடன் அதிகரிப்பில் 65.0 சதவீத அதிகரிப்பிற்குப் பங்களித்தது. மேலும், தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்கள் ஓராண்டிற்கு முன்னர் பதிவுசெய்யப்பட்ட 43.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 59.8 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க ஆண்டிற்காண்டு வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்ததுடன் அதே காலப்பகுதியில் நிதிக் கம்பனிகள் துறையின் கொடுகடன் அதிகரிப்பில் 25.8 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தின. தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கலில் ஏற்பட்ட இக்கணிசமான அதிகரிப்பானது உலகளாவிய சந்தையில் நிலவிய உயர்வடைந்த தங்க விலைகளினால் ஆதரவளிக்கப்பட்டிருந்தது.

வரைபடம் 3.62 மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள்




வரைபடம் 3.63 2026இன் இரண்டாம் காலாண்டில் முடிவடைந்த காலப்பகுதியின் கொடுகடன் விரிவாக்கத்திற்கான ஆண்டுவாரியான பங்களிப்பு




**பரிசீலனையிற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் வாகன மற்றும் தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கலில் ஏற்பட்ட கணிசமானளவிலான விரிவாக்கத்தைத் தொடர்ந்து, பிணையுறுதியளிக்கப்பட்ட கடன்வழங்கல் மீதான நிதிக் கம்பனிகள் துறையின் கொடுகடன் செறிவடைதலானது மேலும் அதிகரித்து, பிணையுறுதிப் பெறுமதிகளின் பாதகமான அசைவுகளுக்கான அதன் பாதிப்படையக்கூடியதன்மையினை உயர்வடையச்செய்தது.** 2026இன் இரண்டாம் காலாண்டின் முடிவிலுள்ளவாறு, வாகன மற்றும் தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கல் இணைந்து, நிதிக் கம்பனிகள் துறையின் மொத்தக் கொடுகடன்களில் 85.2 சதவீதத்திற்கு வகைகூறி, ஓராண்டிற்கு முன்னர் பதிவுசெய்யப்பட்ட 82.6 சதவீதத்திலிருந்து மேலும் அதிகரித்தது. அதேவேளை, தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்கள் மொத்தக் கொடுகடனின் 21.4 சதவீதத்திற்கு வகைகூறி, ஓராண்டிற்கு முன்னர் பதிவுசெய்யப்பட்ட 19.4 சதவீதத்திலிருந்து அதிகரித்தது. வரையறுக்கப்பட்ட பிணையுறுதி வகைகளின் மீதான இவ்வதிகரித்தளவிலான தங்கியிருத்தலானது குறிப்பாக, நிலவுகின்ற புவிசார் அரசியல் நிச்சயமற்றதன்மைகளுக்கு மத்தியில் பிணையுறுதிப் பெறுமதிகளில் வீழ்ச்சியொன்று ஏற்படும் பட்சத்தில், குறிப்பிடத்தக்க பிணையுறுதிச் செறிவடைதல்சார் இடர்நேர்வொன்றினை உருவாக்கின்றது.

வரைபடம் 3.64
மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களின் உள்ளமைப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

எவ்வாறாயினும், வாகனத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்கள் மீதான உயர்ந்தபட்ச பெறுமதிக்கான கடன் விகிதத்தினை இறுக்கமடையச்செய்தமை மற்றும் தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்கள் மீதான உயர்ந்தபட்ச பெறுமதிக்கான கடன் விகிதமொன்றினை நடைமுறைப்படுத்தியமையினால் பிணையுறுதிப் பெறுமதிகளின் பாதகமான அசைவிலிருந்து தோன்றக்கூடிய சாத்தியமான இடர்நேர்வுகள் தொடர்ந்தும் மந்தமடைந்து காணப்பட்டன.

**மீளாய்விற்குட்பட்ட காலப்பகுதியில் நிதிக் கம்பனிகள் துறையின் கட்டம் 3 கடன்கள் விகிதமானது[13] முக்கியமாக, கொடுகடனில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவிலான விரிவடைதலுடன் இணைந்து வெளிநின்ற கட்டம் 3 கடன்களின் அளவில் ஏற்பட்ட வீழ்ச்சியொன்றின் காரணமாக ஒட்டுமொத்த வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.** 45.0 சதவீதம் கொண்ட ஆண்டிற்காண்டு உயர்ந்தளவிலான கொடுகடன் வளர்ச்சி மற்றும் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 10.5 சதவீதத்தினால் வெளிநின்ற கட்டம் 3 கடன்களில் ஏற்பட்டதொரு சுருக்கம் ஆகியவற்றின் காரணமாக, துறையின் கட்டம் 3 கடன்கள் விகிதமானது ஓராண்டிற்கு முன்னர் பதிவுசெய்யப்பட்ட 8.3 சதவீதத்திலிருந்து 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 5.1 சதவீதத்திற்குக் குறைவடைந்தது. துறையின் கட்டம் 3 கடன்கள் பரிசீலனையிற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் ஒட்டுமொத்த வீழ்ச்சியொன்றினை அறிக்கையிட்ட போதிலும், வாகன மற்றும் தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கட்டம் 3 கடன்களால் தூண்டப்பட்டு, 2026இன் முதலாம் காலாண்டின் முடிவுடன் ஒப்பிடுகையில் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் ரூ. 23.6 பில்லியனாலான கட்டம் 3 கடன்களின் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டமையானது புவிசார் அரசியல் நிச்சயமற்றதன்மைகளின் பரந்தளவிலான தாக்கங்களைப் பிரதிபலித்தது.

13 கட்டம் 3 கடன்கள் விகிதமானது மொத்த கட்டம் 3 கடன்கள் விகிதத்தைக் குறிக்கின்றது.

**சொத்துத் தரத்தில் மேம்பாடொன்றினைப் பிரதிபலிக்கின்ற வகையில் துறையின் மொத்தக் கட்டம் 3 கடன்கள் காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்த போதிலும், துறையின் கட்டம் 2 கடன்களில் ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க அதிகரிப்பானது நிதிக் கம்பனிகள் துறையில் கொடுகடன் இடர்நேர்வின் சாத்தியமான கட்டியெழுப்பலொன்றினை சமிக்ஞை செய்வதனால், உன்னிப்பான கண்காணிப்பினைத் தேவைப்படுத்துகின்றது.** துறையின் மொத்தக் கட்டம் 2 கடன்கள் முன்னைய ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 0.9 சதவீத சுருக்கமொன்றுடன் ஒப்பிடுகையில், 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 92.1 சதவீதத்தினால் ஆண்டிற்காண்டு கணிசமானளவு உயர்வடைந்தன. இதன்விளைவாக, துறையின் கட்டம் 2 கடன்கள் விகிதமும் ஓராண்டிற்கு முன்னர் அறிக்கையிடப்பட்ட 11.6 சதவீதத்திலிருந்து 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 15.4 சதவீதத்திற்கு அதிகரித்தது. இவ்வதிகரிப்பானது குறிப்பாக, டித்வா புயல் மற்றும் மத்திய கிழக்கு மோதல் என்பவற்றின் தாக்கத்தைத் தொடர்ந்து வருமான உருவாக்கம் மற்றும் உயர்ந்தளவிலான செலவு அழுத்தங்கள் ஆகியவற்றிலான இடையூறுகளின் ஊடாக குறித்த சில கடன்பாட்டாளர்களின் பலவீனமடைகின்ற மீள்கொடுப்பனவு இயலளவினைப் பகுதியளவில் பிரதிபலிக்கலாம். மேலும், வாகனத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்களுக்கான கட்டம் 2 கடன்கள் 75.5 சதவீதத்தினால் ஆண்டிற்காண்டு அதிகரித்து, துறையின் மொத்தக் கட்டம் 2 கடன்களின் அதிகரிப்புக்கான முதன்மைப் பங்களிப்பாளராக விளங்கிய வேளையில், தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்களுக்கான கட்டம் 2 கடன்கள் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 279.2 சதவீதத்தினால் ஆண்டிற்காண்டு குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியடைந்தன. இதற்கமைய, கட்டம் 2 கடன்களின் தற்போதைய அதிகரிப்பானது துறையினுள் கொடுகடன் இடர்நேர்வின் சாத்தியமான கட்டியெழுப்பலொன்றினைப்

வரைபடம் 3.65
கட்டம் 3 கடன்கள் விகிதங்கள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 3.66** சாதனங்கள் வாரியான கொடுகடன் வளர்ச்சி மற்றும் கட்டம் 3 கடன்கள் விகிதம்*




*ஒவ்வொரு குமிழியின் அளவும் 2026ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டின் இறுதியில் அக்கடன் வகையின் சந்தைப் பங்கைப் பிரதிபலிக்கிறது.

மூலம்: இலங்கை மத்தியவங்கி

பிரதிபலிப்பதுடன் கடன்பாட்டாளர் மீள்செலுத்துகை இயலளவில் மேலும் ஏற்படும் மோசமடைதலொன்று, எதிர்வருகின்ற காலப்பகுதிகளில் இவ்வெளிப்பாடுகளைக் கட்டம் 3இற்கு மாற்றமடையச் செய்யக்கூடுமென்பதனால் நிதிக் கம்பனிகளினால் செயலூக்கமிக்க இடர்நேர்வுத் தணிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதோடு தொடர்ச்சியான கண்காணிப்பும் அவசியமாகும்.

**துறையின் கட்டம் 3 பெறுமதியிழப்புக் காப்பு விகிதமானது கட்டம் 3 கடன்களுக்கான பெறுமதியிழப்பில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணத்தினால் ஓராண்டிற்கு முன்னைய மட்டத்துடன் ஒப்பிடுகையில் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் பாரியளவில் வீழ்ச்சியடைந்தது.** முன்னைய ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியின் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 46.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் கட்டம் 3

**வரைபடம் 3.67** கட்டம் வாரியான கடன்களின் உள்ளமைப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 3.68** பெறுமதியிழப்புக் காப்பு விகிதங்கள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

பெறுமதியிழப்புக் காப்பு விகிதம் 41.0 சதவீதத்திற்குக் குறைவடைந்தது. மேலும், காலப்பகுதியில் கட்டம் 2 கடன்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பின் முக்கிய காரணமாக, துறையின் கட்டம் 2 பெறுமதியிழப்புக் காப்பு விகிதமும் ஓராண்டிற்கு முன்னர் பதிவுசெய்யப்பட்ட 3.9 சதவீதத்திலிருந்து 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 2.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. கட்டம் 2 வெளிப்பாடுகளுடன் தொடர்புடைய ஒப்பீட்டளவில் உயர்ந்தளவிலான இடர்நேர்வைக் கருத்திற்கொண்டு, கொடுகடன் தரம் மேலும் மோசமடையும் பட்சத்தில் சாத்தியமான இழப்புக்களை உள்ளீர்ப்பதற்கு நிதிக் கம்பனிகள் விழிப்புடன் செயற்பட்டு, மீட்சிகளை வலுப்படுத்துகின்ற வேளையில், கட்டம் 2 கடன்களுக்கான போதியளவிலான பெறுமதியிழப்புக் காப்பினைப் பேண வேண்டும்.

## திரவத்தன்மை இடர்நேர்வு

**ஐந்தொகை விரிவடைந்தமையினால் திரவத்தன்மை விகிதங்களும் மிகைத் திரவத்தன்மைச் சொத்துக்களும் வீழ்ச்சியடைந்த போதிலும், நிதிக் கம்பனிகள் துறையின் திரவத்தன்மை நிலைமையானது குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாட்டிற்கு நன்கு மேலாகக் காணப்பட்டது.** துறையின் மொத்தச் சொத்துக்களுக்கான திரவச் சொத்துக்கள் விகிதம் மற்றும் வெளிவாரி நிதியங்களுக்கான[14] திரவச் சொத்துக்கள் விகிதம் ஆகிய இரண்டும் 2025இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட முறையே, 10.8 சதவீதம் மற்றும் 15.0 சதவீதம் என்பவற்றுடன் ஒப்பிடுகையில், 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் முறையே, 8.5 சதவீதத்திற்கும் 10.9 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தமையானது முதன்மையாக, மொத்தச் சொத்துக்களும் வெளிவாரி நிதியங்களும் திரவச் சொத்துக்களிலும் பார்க்க

14 நிதிக் கம்பனிகள் துறையின் வெளிவாரி நிதியங்களானவை வைப்புக்கள் மற்றும் கடன்பாடுகள் ஆகியவற்றினைக் கொண்டுள்ளன.

வரைபடம் 3.69 வெளிவாரி நிதியங்கள் மற்றும் மொத்தச் சொத்துக்களிற்கான ஒழுங்குமுறைப்படுத்தல் திரவச் சொத்துக்கள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 3.71 வைப்புக்கள் மற்றும் கடன்பாடுகள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

விரைவான வேகமொன்றில் விரிவடைந்தமையினால் ஏற்பட்ட பகுதியெண் விளைவொன்றினைப் பிரதிபலித்தது. மேலும், துறையானது 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியளவில் ரூ. 100.5 பில்லியனிலான திரவத்தன்மை மிகையொன்றினைப் பதிவுசெய்த போதிலும், இது 2025இன் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 12.3 சதவீத வீழ்ச்சியொன்றாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், துறையின் மொத்தத் திரவச் சொத்துக்கள் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 10.4 சதவீதத்தினால் ஆண்டிற்காண்டு அதிகரித்தன. மீள்கொள்வனவுகள், வைப்புக்கள் மற்றும் வங்கிகளுடனான நடைமுறைக் கணக்கு மீதிகள் ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் வளர்ச்சியில் அதிகரிப்புக்கு முக்கிய காரணமாயமைந்தது.

**கொடுகடன் விரிவாக்கத்திற்கு ஆதரவளிப்பதற்கான மாற்று நிதியிடல் மூலமொன்றாக வங்கித்தொழில் துறையிடமிருந்தான கடன்பாடுகள் மீது துறை அதிகரித்தளவில் தங்கியிருந்தமையினால் நிதிக் கம்பனிகள் துறையின் கடன்பாடுகள் தொடர்ந்தும் உயர்வடைந்து காணப்பட்டன.** நிதிக் கம்பனிகள் துறையின் கடன்பாடுகள் 2025இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 75.9 சதவீத வளர்ச்சியொன்றுடன் ஒப்பிடுகையில் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 124.0 சதவீதத்தினால் ஆண்டிற்காண்டு குறிப்பிடத்தக்களவு அதிகரித்ததெனினும், அண்மைய காலாண்டுகளில் வளர்ச்சியின் வேகம் படிப்படியாக மிதமடைந்துள்ளது. மேலும், ஒப்பீட்டளவில் மிகவும் உறுதிமிக்க நிதியிடல் மூலமொன்றான வைப்புக்கள் ஓராண்டிற்கு முன்னர் அறிக்கையிடப்பட்ட 16.3 சதவீத வளர்ச்சியொன்றுடன் ஒப்பிடுகையில் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 22.9 சதவீதத்தினால் ஆண்டிற்காண்டு அதிகரித்தன. இம்மேம்பாடுகளைத் தொடர்ந்து, மொத்த நிதியிடலின் பங்கொன்றாகக் கடன்பாடானது ஓராண்டிற்கு

வரைபடம் 3.70 திரவச் சொத்துக்களின் உள்ளமைப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 3.72 நிதியிடல் கட்டமைப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 3.73 கடன்பாடுகளின் உள்ளமைப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 3.74 காலாண்டு வாரியிலான வரிக்குப் பின் இலாபம்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

முன்னர் பதிவுசெய்யப்பட்ட 20.7 சதவீதத்திலிருந்து 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 32.9 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில், குறித்த அதே காலப்பகுதியில் மொத்த நிதியிடலின் பங்கொன்றாக வைப்புக்கள் 51.1 சதவீதத்திலிருந்து 44.6 சதவீதத்திற்குக் கணிசமானளவு குறைவடைந்தன. குறிப்பாக, இறுக்கமடைந்த சந்தைத் திரவத்தன்மை அல்லது உயர்ந்தளவிலான நிதியிடல் செலவு என்பன காலப்பகுதியொன்றின் நிதியிடல் தேவைகளை உயர்வடையச்செய்யுமாயின் வைப்புக்களுடன் ஒப்பிடுகையில் கடன்பாடுகள் மீதான இவ்வதிகரித்த தங்கியிருக்குந்தன்மையானது மீள்நிதியளித்தல் இடர்நேர்விற்கான துறையின் வெளிப்பாட்டை அதிகரிக்கக்கூடும். மேலும், வங்கி நிதியிடல் மீதான தங்கியிருக்குந்தன்மையானது வங்கித்தொழில் துறையுடன் நிதிக் கம்பனிகள் துறை கொண்டுள்ள ஒன்றுடனொன்று இணைந்ததன்மையின் அதிகரித்த அளவொன்றினைக் குறிக்கின்றது. அதேவேளை, துறையின் கடன்பாடுகள் முதன்மையாகத் தவணைக் கடன்கள் ஊடாக நிதியிடப்பட்டு, 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் மொத்தக் கடன்பாடுகளில் 66.9 சதவீதத்திற்கு வகைகூறின. எவ்வாறாயினும், கொடுகடனில் எதிர்பார்க்கப்படுகின்ற மிதமடைதலுடன் இசைந்து செல்லும் விதத்தில் நிதிக் கம்பனிகள் துறையின் கடன்பாட்டு வளர்ச்சியானது எதிர்வருகின்ற காலாண்டுகளில் மேலும் மெதுவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## இலாபத்தன்மை

**இலாப வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க மிதமடைதலுடன், 2026/27 நிதியாண்டின்[15] முதலாவது மூன்று மாத காலப்பகுதியில் (2026இன் இரண்டாம் காலாண்டு) நிதிக் கம்பனிகள் துறையின் வரிக்குப் பின்னரான இலாபம் தொடர்ந்து மேம்பட்டது.** துறையானது 2026இன் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் ரூ. 21.0 பில்லியனிலான வரிக்குப் பின்னரான இலாபமொன்றினைப் பதிவுசெய்து, முன்னைய ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 59.3 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியொன்றிலிருந்து வீழ்ச்சியடைந்து, 16.4 சதவீத ஆண்டிற்காண்டு வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. துறையின் இலாபத்தன்மையின் மேம்பாட்டிற்கு முக்கியமாக பங்களிப்புச் செய்யும் வகையில், துறையின் தேறிய வட்டி வருமானம் 2026இன் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் 27.6 சதவீத ஆண்டிற்காண்டு வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. அதேவேளை, பெறுமதியிழப்புக் கட்டணங்களின் அதிகரிப்புடன் இணைந்து, முதன்மையாக ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து தோற்றம்பெறுகின்ற உயர் தொழிற்பாட்டுச் செலவுகள் பரிசீலனையிற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் வரிக்குப் பின்னரான இலாபத்தின் மீது கீழ்நோக்கிய அழுத்தத்தினை ஏற்படுத்தின. அதற்கமைய,

வரைபடம் 3.75 வரிக்குப் பின் இலாபத்தின் கூறுகள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

15 பெரும்பான்மையான நிதிக் கம்பனிகளின் நிதியாண்டானது கருத்திற்கொள்ளப்பட்ட ஆண்டின் ஏப்பிறல் 01 தொடக்கம் தொடர்ந்து வருகின்ற ஆண்டின் மாச்சு 31 வரை நீடிக்கின்றது.

வரைபடம் 3.76 தேறிய வட்டி வருமானத்தின் உள்ளமைப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 3.77 வட்டிச் செலவுகளின் உள்ளமைப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

தொழிற்பாட்டுச் செலவுகள் 22.7 சதவீதத்தினால் ஆண்டிற்காண்டு அதிகரித்த வேளையில், பெறுமதியிழப்புக் கட்டணங்கள் 2026இன் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் 282.3 சதவீதமளவினால் ஆண்டிற்காண்டு கணிசமாக வளர்ச்சியடைந்தன.

**2026இன் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் நிதிக் கம்பனிகள் துறையின் வட்டிச் செலவுகள், வட்டி வருமானத்தினை விட கணிசமான அதிக வேகத்தில் வளர்ச்சியடைந்தன.** துறையின் வட்டி வருமானத்தின் வளர்ச்சியானது முக்கியமாக, கொடுகடன் சொத்துப்பட்டியலில் ஏற்பட்ட விரிவாக்கத்துடன் கடன்கள் மற்றும் முற்பணங்களிலிருந்து ஈட்டப்பட்ட உயர்ந்தளவிலான வட்டி வருமானத்தினால் தூண்டப்பட்டு, 2025இன் இரண்டாம் காலாண்டின் 14.2 சதவீதத்திலிருந்து 2026இன் இரண்டாம் காலாண்டில் 41.5 சதவீதத்திற்கு ஆண்டிற்காண்டு குறிப்பிடத்தக்களவு துரிதமடைந்தது. எவ்வாறாயினும், முன்னைய ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 2.0 சதவீத சுருக்கமொன்றுடன் ஒப்பிடுகையில் 2026இன் இரண்டாம் காலாண்டில் 62.3 சதவீத ஆண்டிற்காண்டு வட்டிச் செலவுகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பினால் இம்மேல்நோக்கிய போக்கு பெருமளவில் எதிரீடுசெய்யப்பட்டது. துறையின் வட்டிச் செலவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பானது முதன்மையாக, கடன்பாட்டுச் செலவுகளின் அதிகரிப்பினால் தூண்டப்பட்டு, ஆண்டிற்காண்டு 181.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த வேளையில், பரிசீலனையிற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் வைப்புக்களுக்கான வட்டிச் செலவுகளும் 26.2 சதவீதத்தினால் அதிகரித்தன.

**நிதிக் கம்பனிகள் துறையின் பங்குரிமை மூலதனத்தின் மீதான வருவாய் ஓராண்டிற்கு முன்னைய மட்டத்துடன் ஒப்பிடுகையில் 2026இன் இரண்டாம் காலாண்டில் ஓரளவு மேம்பட்ட போதிலும், இலாப வளர்ச்சியினை விஞ்சிய சொத்துத் தளத்தின் துரித விரிவாக்கத்தின் பகுதியளவிலான காரணத்தினால் தேறிய வட்டி எல்லை மற்றும் சொத்துக்கள் மீதான வருவாய் ஆகியவை மிதமடைந்தன.** துறையின் பங்குரிமை மூலதனத்தின் மீதான வருவாய் 2025இன் இரண்டாம் காலாண்டில் பதிவுசெய்யப்பட்ட 15.2 சதவீதத்திலிருந்து 2026இன் இரண்டாம் காலாண்டில் 15.6 சதவீதத்திற்குச் சிறிதளவு அதிகரித்தது. இருப்பினும், ஓராண்டிற்கு முன்னர் பதிவுசெய்யப்பட்ட 6.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் துறையின் சொத்துக்கள் மீதான வருவாய் 2026இன் இரண்டாம் காலாண்டில் 5.7 சதவீதத்திற்குக் குறைவடைந்தது. இதனையொத்த போக்கொன்றினைப் பின்பற்றி, துறையின் தேறிய வட்டி எல்லையும் குறித்த அதே காலப்பகுதியில் 11.5 சதவீதத்திலிருந்து 10.4 சதவீதத்திற்குக் குறைவடைந்தது. அதற்கமைய, கடன்பாடுகளால் நிதியிடப்பட்ட சொத்துக்களின் துரித விரிவாக்கமானது வட்டி எல்லையின் மீது அழுத்தத்தை ஏற்படுத்தியமையினால், 2026இன் இரண்டாம் காலாண்டில் துறையின் இலாபத்தன்மைக் குறிகாட்டிகள் கலப்புச் செயலாற்றத்தினை எடுத்துக்காட்டின.

வரைபடம் 3.78 இலாபத்தன்மைக் குறிகாட்டிகள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியிலுள்ள வட்டி வீத உணர்திறன் தொகுப்பின் அடிப்படையில், நிதிக் கம்பனிகள் துறையானது அண்மைக் காலத்தில் இலாபத்தன்மையைத் தொடர்ந்து ஈட்டுவதற்கேற்ப நன்கு நிலைப்படுத்தப்பட்டுள்ளதாகப் புலப்படுகின்றது.** ஓராண்டு வரையிலான அனைத்து மீள்விலையிடல் காலப்பகுதிகளிலும் வட்டி வீத உணர்திறன் சொத்துக்களானவை வட்டி வீத உணர்திறன் பொறுப்புக்களினை விஞ்சிக் காணப்பட்டு, ஓராண்டிற்குள் ரூ. 128.7 பில்லியன் தொகைக்கு மிதமடைவதற்கு முன்னர் ஆறு மாதங்களினுள் ரூ. 298.7 பில்லியன் தொகையிலான உச்ச நேர்க்கணியத் திரண்ட தேறிய வட்டி வீத உணர்திறன் சொத்து நிலைமையினை எட்டியது. நேர்க்கணிய மீள்விலையிடல் இடைவெளியானது வட்டியுள்ள பொறுப்புக்களைவிட வட்டி ஈட்டுகின்ற சொத்துக்களின் பாரியளவிலானதொரு விகிதாசாரம் எதிர்வருகின்ற மாதங்களில் மீள்விலையிடலிற்கு உட்படுத்தப்படவுள்ளதைக் குறிக்கின்றது. அதற்கமைய, சொத்துக்கள் பொறுப்புக்களைவிட மிகவும் விரைவாக மீள்விலையிடப்படுவதனால் சந்தை வட்டி வீதங்களில் ஏற்படும் அதிகரிப்பொன்று தேறிய வட்டி வருமானத்திற்கு ஆதரவளிக்கின்ற அதேவேளை, வட்டி வீதங்களில் ஏற்படும் வீழ்ச்சியொன்று அதே வழிமுறையின் ஊடாக தேறிய வட்டி வருமானத்தின் மீது அழுத்தத்தை ஏற்படுத்தக்கூடும். கணிசமானளவிலான நேர்க்கணிய இடைவெளி மற்றும் வாகன மற்றும் தங்கம் என்பவற்றினால் பிணையளிக்கப்பட்ட கடன்கள் போன்ற வட்டி வீத உணர்திறன் வருவாயீட்டுகின்ற சொத்துக்களில் துறையின் வலுவான செறிவடைதல் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, இலாபத்தன்மையானது அண்மைக் காலத்தில் தொடர்ந்தும் தாக்குப்பிடிக்குந்தன்மையுடன் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும், எல்லை இயக்கவாற்றல்கள் வட்டி வீதங்களின் எதிர்காலப் பாதை மற்றும் போட்டித்தன்மை வாய்ந்த நிதியிடல் நிலைமைகள் என்பன மீது தொடர்ந்தும் தங்கியிருக்கும்.

வரைபடம் 3.79
தேறிய வட்டி எல்லை எதிர் சொத்துத் தளம்*




*ஒவ்வொரு குமிழியின் அளவும் 2026ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் அந்நிதிக் கம்பனி அறிக்கையிட்ட வரிக்குப் பின் இலாபத்தைப் பிரதிபலிக்கிறது. அதே காலப்பகுதியில் நட்டங்களைப் பதிவு செய்த மூன்று நிதிக் கம்பனிகள் இவ்வரைபடத்தில் உள்ளடக்கப்படவில்லை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 3.80
சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வட்டி வீத உணர்திறன்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

## மூலதனப் போதுமாந்தன்மை

**குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனப் போதுமாந்தன்மைத் தேவைப்பாடு மற்றும் குறைந்தபட்ச மைய மூலதனத் தேவைப்பாடு ஆகிய இரண்டினதும் அடிப்படையில், 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் நிதிக் கம்பனிகள் துறையின் மூலதன நிலைமை தொடர்ந்தும் தாக்குப்பிடிக்குந்தன்மையுடன் காணப்பட்டது.** 3.0 சதவீத சந்தைப் பங்கைக் கொண்டிருந்த மூன்று கம்பனிகளைத் தவிர, ஏனைய அனைத்து நிதிக் கம்பனிகளும் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியிலுள்ளவாறு ஒழுங்குமுறைப்படுத்தல் குறைந்தபட்ச மொத்த மூலதனப் போதுமாந்தன்மைத் தேவைப்பாடுகளுடன் தொடர்ந்தும் ஒத்திசைந்து காணப்பட்டன. மேலும், ஒரு நிதிக் கம்பனியைத் தவிர, ஏனைய அனைத்து நிதிக் கம்பனிகளும் குறித்த அதே காலப்பகுதியில் ரூ. 2.5 பில்லியனான குறைந்தபட்ச மைய மூலதனத் தேவைப்பாட்டுடன் ஒத்திசைந்து காணப்பட்டன.

**குறிப்பிடத்தக்க கொடுகடன் விரிவாக்கத்தினால் உந்தப்பட்ட இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் அதிகரிப்பின் முக்கிய காரணத்தினால், நிதிக் கம்பனிகள் துறையின் மூலதனப் போதுமாந்தன்மை விகிதங்கள் முன்னைய ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் வீழ்ச்சியடைந்தன.** அதற்கமைய, துறையின் மொத்த மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் மற்றும் அடுக்கு 1 மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் என்பன 2025இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் அறிக்கையிடப்பட்ட முறையே 22.0 சதவீதத்துடனும் 20.8 சதவீதத்துடனும் ஒப்பிடுகையில், 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் முறையே 19.3 சதவீதத்திற்கும் 17.3 சதவீதத்திற்கும்

வரைபடம் 3.81 மூலதனப் போதுமாந்தன்மை விகிதங்கள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 3.83 கொடுகடன் இடர்நேர்வுக்கான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வீழ்ச்சியடைந்தன. இருப்பினும், ஒட்டுமொத்தத் துறை அடிப்படையில், பரிசீலனையிற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் இவ்விகிதங்கள் ஒழுங்குமுறைப்படுத்தல் குறைந்தபட்சத் தேவைப்பாட்டிற்கு மேலேயே காணப்பட்டன. இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் 20.8 சதவீதம் கொண்ட ஒப்பீட்டளவில் மெதுவான மூலதன வளர்ச்சியொன்றுடன் ஒப்பிடுகையில் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 37.6 சதவீதத்தினால் ஆண்டிற்காண்டு கணிசமானளவு வளர்ச்சியடைந்து, மூலதனப் போதுமாந்தன்மை விகிதத்தின் மீது கீழ்நோக்கிய அழுத்தத்தைத் தோற்றுவித்தது.

**நிறுத்திவைக்கப்பட்ட வருவாய்கள் மற்றும் அடுக்கு 2 மூலதனம் என்பவற்றின் அதிகரிப்பினால் ஆதரவளிக்கப்பட்டு, துறையின் மொத்த மூலதனமானது காலப்பகுதியில் மேலும் வலுவடைந்தது.** ஓராண்டிற்கு முன்னர் பதிவுசெய்யப்பட்ட 18.0 சதவீத ஆண்டிற்காண்டு வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில்

வரைபடம் 3.82 மொத்த ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தின் மாற்றம்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் மொத்த மூலதனமானது 20.8 சதவீத ஆண்டிற்காண்டு வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. துறையின் மொத்த மூலதனத்தின் அதிகரிப்பானது முதன்மையாக 2025∴26 நிதியாண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட இலாபங்கள் உள்ளடக்கப்பட்டதனால் அதிகரித்த நிறுத்திவைக்கப்பட்ட வருவாய்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பிணையமற்ற கீழ்நிலைக் கடன் கருவிகள் மூலம் அடுக்கு 2 மூலதனம் உட்செலுத்தப்பட்டமையால் தூண்டப்பட்டது.

**கொடுகடன் சொத்துப்பட்டியலில் வலுவான விரிவாக்கத்தினைப் பிரதிபலிக்கும் வகையில், நிதிக் கம்பனிகள் துறையின் கொடுகடன் இடர்நேர்வு வகையின் கீழான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியளவில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தன.** அதற்கமைய, துறையின் மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களில் 89.5 சதவீதத்திற்கு வகைகூறிய கொடுகடன் இடர்நேர்விற்கான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் 2025இன் இரண்டாம் காலாண்டின் இறுதியின் 30.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 39.7 சதவீதத்தினால் ஆண்டிற்காண்டு அதிகரித்தன. இந்த அதிகரிப்பானது குறிப்பாக வாகனம் மற்றும் தங்கத்தால் பிணையளிக்கப்பட்ட கடன்கள் காரணமாக செயற்படுகின்ற சில்லறைக் கோரல்களின் வளர்ச்சியினால் முதன்மையாகத் தூண்டப்பட்டதுடன் இது ஓராண்டிற்கு முன்னர் காணப்பட்ட 47.5 சதவீதத்திலிருந்து 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் ஆண்டிற்காண்டு 49.3 சதவீதத்திற்குத் துரிதமடைந்தது. அதற்கமைய, சில்லறை வெளிப்பாடுகளின் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் வளர்ச்சியடைந்து வருகின்ற செறிவடைதலானது துறையின் கடன்வழங்கல் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அதிகரித்துச் செல்கின்ற மூலதனத் தேவைப்பாடுகளை எடுத்துக்காட்டுகின்றது.

வரைபடம் 3.84 மிகை மூலதனம்*




* 2026ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டின் இறுதியில் செயற்பட்ட 31 நிதிக் கம்பனிகளை (நேசன் லங்கா பினான்ஸ் பிஎல்சி தவிர்த்து) இப்பகுப்பாய்வு உள்ளடக்குகிறது. மேலும், ஒவ்வொரு காலாண்டிலும், கிடைக்கக்கூடிய அண்மைய கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுகளின் அடிப்படையில் மொத்தச் சொத்துகள் ரூ. 100 பில்லியனை விஞ்சும் நிதிக் கம்பனிகள் பாரிய நிதிக் கம்பனிகளாகவும், ஏனையவை ஏனைய நிதிக் கம்பனிகளாகவும் வகைப்படுத்தப்படுகின்றன. அதன்படி, 2026ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 08 நிதிக் கம்பனிகள் பாரிய நிதிக் கம்பனிகளாக வகைப்படுத்தப்பட்டன.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 3.85 மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணத்தின் வளர்ச்சி (ஆண்டிற்காண்டு)




இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு

**நிதிக் கம்பனிகள் துறையின் மொத்த மிகை மூலதனமானது 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் ஆண்டிற்காண்டு சுருக்கமொன்றினைப் பதிவுசெய்தமையானது ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தில் அதிகரிப்பொன்றிற்கு மத்தியில் மூலதனத் தாங்கியிருப்புக்களின் சுருக்கமடைதலொன்றினைப் பிரதிபலித்தது.** அதற்கமைய, துறையின் மிகை மூலதனமானது முன்னைய ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியின் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 5.9 சதவீத விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில், 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 8.0 சதவீதத்தினால் ஆண்டிற்காண்டு குறைவடைந்தது. மேலும், மூலதனத் தாங்கியிருப்புக்களின் சுருக்கமடைதலானது தொடர்ச்சியான கொடுகடன் வளர்ச்சிக்கு மத்தியில் துறையின் மூலதன நிலைமையை உன்னிப்பாகக் கண்காணிக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துக்காட்டுகின்றது. இருப்பினும், துறையானது 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் ரூ. 156.8 பில்லியன் மிகை மூலதனமொன்றினைக் கொண்டிருந்தமையானது உயர்வடைந்த கொடுகடன் கேள்விக்கு ஆதரவளிக்கும் பொருட்டு மேலதிக இயலளவினைத் துறை கொண்டுள்ளதைக் குறித்துக்காட்டுகின்றது.

## 3.3 காப்புறுதித் துறை

**பொருளாதார நடவடிக்கைகளின் தொடர்ச்சியான மீட்சிக்கு மத்தியில், 2025இன் முதலாம் அரையாண்டுடன் ஒப்பிடுகையில் 2026இன் முதலாம் அரையாண்டுப் பகுதியில் நாட்டில் காப்புறுதி ஊடுருவல் மேம்பட்டது.** மொத்த உள்நாட்டு உற்பத்தியின்[16] சதவீதமொன்றாக ஆண்டின் அடிப்படையில் மாற்றப்பட்ட மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணத்தினால்[17] அளவிடப்பட்டவாறான காப்புறுதி ஊடுருவலானது 2025இன் முதலாம் அரையாண்டின் இறுதியில் காணப்பட்ட 1.3 சதவீதத்திலிருந்து 2026இன் முதலாம் அரையாண்டின் இறுதியில் 1.5 சதவீதத்திற்கு மேம்பட்டது.

**காப்புறுதித் துறையானது 2025இன் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2026இன் முதலாம் அரையாண்டுப் பகுதியில் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணத்தின் அடிப்படையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியொன்றினை எடுத்துக்காட்டியது.** காப்புறுதித் துறையின் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணமானது 2026இன் முதலாம் அரையாண்டுப் பகுதியில் 20.3 சதவீதத்தினால் ஆண்டிற்காண்டு அதிகரித்தது. நீண்ட காலக் காப்புறுதித் துணைத் துறையின் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணமானது 2026இன் முதலாம் அரையாண்டுப் பகுதியில் 19.3 சதவீதத்தினால் ஆண்டிற்காண்டு வளர்ச்சியடைந்த போதிலும், வளர்ச்சியின் வேகமானது 2025இன் தொடர்புடைய காலப்பகுதியின் 25 சதவீதத்திலிருந்து மிதமடைந்தது. பொதுக் காப்புறுதித் துணைத் துறையின் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணமும் 2025இன் முதலாம் அரையாண்டுப் பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 11.2 சதவீத வளர்ச்சியொன்றுடன் ஒப்பிடுகையில் 2026இன் முதலாம் அரையாண்டுப் பகுதியில் 21.8 சதவீதத்திற்கு ஆண்டிற்காண்டு குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. பொருளாதார நடவடிக்கைகளின் தொடர்ச்சியான மீளெழுச்சியுடன் குறிப்பாக, மோட்டார் காப்புறுதி மற்றும் வேலைநிறுத்தங்கள், கலகங்கள் மற்றும் சிவில் கலவரம் ஆகியவற்றிலிருந்தான அதிகரித்தளவிலான மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணத்துடன், பொதுக் காப்புறுதித் துணைத் துறையில் உள்ள அனைத்து வகைகளிலும் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் விரிவடைந்தது. 2025இன் முற்பகுதியில் வாகன இறக்குதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமையும் பொதுக் காப்புறுதித் துணைத் துறையின் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணத்தின் விரிவாக்கத்திற்குப் பங்களிப்புச்செய்தது.

16 2025இற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியானது கணிப்பிடப் பயன்படுத்தப்பட்டது.
17 மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணமானது மீள்காப்புறுதி அல்லது ஒப்படைப்புக் கட்டணங்களுக்கான கழிவுகளுக்கு முன்னர் காப்புறுதியளிப்பவரொருவரினால் ஒப்பந்தமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுமென எதிர்பார்க்கப்படுகின்ற மொத்த வருவாயாகும்.

வரைபடம் 3.86 துணைத் துறை வாரியான மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம்*




*2024ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டிலிருந்து, பொதுக் காப்புறுதித் துணைத் துறையின் கீழ் உள்ள வேலைநிறுத்தங்கள், கலகங்கள் மற்றும் சிவில் கலவரம் ஆகியவை அமைச்சரவை ஒப்புதல் விஞ்ஞாபன இலக்கம் MF/PE/007/CM/2024/098இற்கு அமைவாகத் தனியாக வழங்கப்பட்டுள்ளது.

மூலம்: இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு

வரைபடம் 3.87 சொத்துக்களின் வளர்ச்சி (ஆண்டிற்காண்டு)




மூலம்: இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு

**குறிப்பிடத்தக்க வியாபார விரிவாக்கமொன்றினால் ஆதரவளிக்கப்பட்டு, காப்புறுதித் துறையானது மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் வலுவான சொத்து வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது.** காப்புறுதித் துறையின் மொத்தச் சொத்துக்களில் நீண்ட காலக் காப்புறுதியானது 74.2 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் பொது மற்றும் மீள்காப்புறுதித் துணைத் துறைகள் 2026இன் முதலாவது அரையாண்டின் இறுதியில் முறையே, 25.1 சதவீதத்தினையும் 0.7 சதவீதத்தினையும் பிரதிநிதித்துவப்படுத்தின. காப்புறுதித் துறையின் மொத்தச் சொத்துக்கள் ஓராண்டிற்கு முன்னைய 15.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2026இன் முதலாவது அரையாண்டின் இறுதியில் 15.4 சதவீதத்தினால் ஆண்டிற்காண்டு வளர்ச்சியடைந்தன. நீண்ட காலக் காப்புறுதியின் 13.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் பொதுக் காப்புறுதிச் சொத்துக்கள் 24.1 சதவீத ஆண்டிற்காண்டு உயர்ந்தளவிலான வளர்ச்சி வீதமொன்றினைப் பதிவுசெய்த போதிலும், நீண்ட காலக் காப்புறுதிப் பகுதியானது காப்புறுதித் துறையின் சொத்துத் தளத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் 64.3 சதவீத பங்களிப்பினை வழங்கியது. அதேவேளை, காப்புறுதித் துறையின் சொத்துக்கள் படுகடன் பிணையங்களில் செறிவடைந்திருந்ததுடன் அவற்றுள் அரசாங்கப் பிணையங்கள் 2026இன் முதலாவது அரையாண்டின் இறுதியில் மொத்தச் சொத்துக்களில் 47.0 சதவீதத்திற்கு வகைகூறின. மேலும், குறிப்பாகப் பொதுக் காப்புறுதித் துணைத் துறையிலான மீள்காப்பீட்டுப் பெறத்தக்கவைகளில் ஏற்பட்ட ஓர் அதிகரிப்பின் காரணமாக, மொத்தச் சொத்துக்களில் அரசாங்க மற்றும் கூட்டாண்மைப் படுகடன் பிணையங்களின் ஒன்றிணைந்த பங்கானது 2025இன் முதலாவது அரையாண்டின் இறுதியில் 63.6 சதவீதத்திலிருந்து 2026இன் முதலாவது அரையாண்டில் 60.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமை நிலையான வருமானப் பிணையங்களில் துறையின் செறிவடைதலில் ஓரளவு மிதமடைதலினைக் குறித்துக்காட்டியது.

**டித்வா புயலிலிருந்து எழுகின்ற குறிப்பிடத்தக்க கோரல்களிற்கு மத்தியில், பொதுக் காப்புறுதித் துறையிலான கோரல் அழுத்தங்கள் 2026இன் முதலாவது அரையாண்டுப் பகுதியில் அதிகரித்தன.** மோட்டார் கோரல்களில் ஏற்பட்ட 40.8 சதவீத அதிகரிப்பொன்றினால் பாரியளவில் தூண்டப்பட்டு, பொதுக் காப்புறுதிக் கோரல்கள் 2026இன் முதலாவது அரையாண்டுப் பகுதியில் 21.4 சதவீதத்தினால் ஆண்டிற்காண்டு அதிகரித்தன. சுகாதாரக் காப்புறுதிக் கோரல்களும் 3.7 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளை, தீக் காப்புறுதிக் கோரல்கள் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, நீண்ட காலக் காப்புறுதிக் கோரல்கள் 1.5 சதவீதத்தினால் ஆண்டிற்காண்டு சிறிதளவு அதிகரித்தன. 2026இன் முதலாவது அரையாண்டின் இறுதியிலிலுள்ளவாறு ரூ. 57.0 பில்லியன் தொகையிலான டித்வா புயலுடன் தொடர்புடைய கோரல்கள் பெறப்பட்டதுடன் இது 2026இன் முதலாவது அரையாண்டுப் பகுதியில் செலுத்தப்பட்ட மொத்தப் பொதுக் காப்புறுதிக் கோரல்களில் 152.9 சதவீதத்திற்கு நிகராகக் காணப்பட்டது. இதில், 44.5 சதவீதம் செலுத்தப்பட்டிருந்த வேளையில், 49.5 சதவீதம் செலுத்தப்படாமல் நிலுவையில் காணப்பட்டதுடன், இதில் மோட்டார் அல்லாத கோரல்கள் பெறுமதியின் அடிப்படையில் நிலுவையிலுள்ள கோரல்களில் 97.2 சதவீதத்திற்கு வகைகூறின. அதற்கமைய, இக்கோரல்களின் தீர்ப்பனவு பொதுக் காப்புறுதியளிக்கின்ற நிறுவனங்களின் எழுத்துறுதிச் செயலாற்றம், திரவத்தன்மை மற்றும் மூலதன நிலைமைகள் ஆகியவற்றின் மீது குறிப்பிடத்தக்க அழுத்தத்தை ஏற்படுத்தக்கூடும்.

**துறையின் இலாபத்தன்மையானது 2026இன் முதலாம் அரையாண்டுக் காலப்பகுதியில் மிதமடைந்ததுடன் பொதுக் காப்புறுதித் துணைத் துறையானது ஒப்பீட்டளவில் சடுதியான வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது.** பொதுக் காப்புறுதித் துணைத் துறையின் சொத்துக்கள் மீதான வருவாய் 2025இன் முதலாவது அரையாண்டின் 8.6 சதவீதத்திலிருந்து

வரைபடம் 3.88 2026இன் முதலாம் அரையாண்டு இறுதியில் நீண்டகால மற்றும் பொதுக் காப்புறுதியின் சொத்துக்களின் உள்ளமைப்பு




மூலம்: இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு

வரைபடம் 3.90 2026இன் முதலாம் அரையாண்டுப்பகுதியில் செலுத்தப்பட்ட கோரல்கள்




மூலம்: இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு

2026இன் முதலாவது அரையாண்டில் 7.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த அதேவேளை, அதே காலப்பகுதியில் பங்குரிமை மூலதனத்தின் மீதான அதன் வருவாய் 20.2 சதவீதத்திலிருந்து 17.4 சதவீதத்திற்குக் குறைவடைந்தது. இருப்பினும், பொதுக் காப்புறுதியளிக்கின்ற நிறுவனங்கள் நீண்ட காலக் காப்புறுதியளிக்கின்ற நிறுவனங்களைவிட உயர்ந்தளவிலான இலாபத்தன்மையைத் தொடர்ந்து அறிக்கையிட்டனர். அதேவேளை, நீண்ட காலக் காப்புறுதித் துணைத் துறையின் சொத்துக்கள் மீதான வருவாய் மற்றும் பங்குரிமை மூலதனத்தின் மீதான வருவாய் ஆகியவை 2025இன் முதலாவது அரையாண்டின் முறையே, 3.2 சதவீதத்திலிருந்தும் 17.2 சதவீதத்திலிருந்தும் 2026இன் முதலாவது அரையாண்டில் முறையே, 3.0 சதவீதத்திற்கும் 16.8 சதவீதத்திற்கும் சிறிதளவு வீழ்ச்சியடைந்தன. குறிப்பாக, பொதுக் காப்புறுதியளிக்கின்ற நிறுவனங்களிடையே இலாபத்தன்மையில் தொடரும் மிதமடைதலானது டித்வா புயலுடன் தொடர்புடைய கோரல்களிலிருந்து எழுகின்ற எழுத்துறுதிச் செயலாற்றத்தின் மீதான சாத்தியமான அழுத்தத்திற்கு மத்தியில் கரிசனைகளை ஏற்படுத்துகின்றது.

**மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் சிறியளவிலான வீழ்ச்சிகள் பதிவுசெய்யப்பட்ட போதிலும், இரு காப்புறுதித் துணைத் துறைகளினதும் மூலதனப் போதுமாந்தன்மை விகிதங்கள் ஒழுங்குமுறைப்படுத்தல்சார் அடிப்படை அளவுகளுக்கு நன்கு மேலாகத் தொடர்ந்து காணப்பட்டன.** பொதுக் காப்புறுதித் துணைத் துறையின் மூலதனப் போதுமாந்தன்மை விகிதமானது 2025இன் இரண்டாம் காலாண்டின் இறுதியின் 296.6 சதவீதத்திலிருந்து 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 286.2 சதவீதத்திற்குச் சிறிதளவு வீழ்ச்சியடைந்த அதேவேளை, நீண்ட காலக் காப்புறுதித் துணைத் துறையின் மூலதனப் போதுமாந்தன்மை விகிதமும் 2025இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 344.9 சதவீதத்திலிருந்து 2026இன்

வரைபடம் 3.89 துணைத் துறை வாரியாக செலுத்தப்பட்ட கோரல்கள்




மூலம்: இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு

வரைபடம் 3.91 2026இன் முதலாம் அரையாண்டு இறுதியில் வகை மற்றும் நிலை வாரியான டித்வா புயல் தொடர்புடைய கோரல்கள்




மூலம்: இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு

வரைபடம் 3.92 சொத்துக்கள் மீதான வருவாயும் பங்குரிமை மூலதனம் மீதான வருவாயும்




மூலம்: இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு

வரைபடம் 3.94 காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதி நிறுவனங்களுக்கான வங்கித்தொழில் துறை கடன்வழங்கல்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

இரண்டாம் காலாண்டின் இறுதியில் 313.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இருப்பினும், இரு துறைகளினதும் மூலதனப் போதுமாந்தன்மை விகிதங்கள் 120.0 சதவீத குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனப் போதுமாந்தன்மை விகிதத் தேவைப்பாட்டினைத் தொடர்ந்து விஞ்சிக் காணப்பட்டன.

**முதன்மையாக, 2026இன் முதலாவது அரையாண்டின் இறுதியில் காப்புறுதியளிக்கின்ற நிறுவனங்களினால் வங்கிகளில் மேற்கொள்ளப்பட்ட வைப்பீடுகளால் வங்கித்தொழில் மற்றும் காப்புறுதித் துறைகளுக்கிடையிலான ஒன்றுடனொன்று இணைந்ததன்மை காணப்பட்டது.** காப்புறுதித் துறையால் வங்கிகளில் பேணப்பட்ட வைப்புக்கள் 2026இன் முதலாவது அரையாண்டின் இறுதியில் ரூ. 171.2 பில்லியனிற்கு 23.4 சதவீதத்தினால் ஆண்டிற்காண்டு அதிகரித்தன. இருப்பினும், காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதி நிறுவனங்களுக்கான வங்கிக் கடன்வழங்கல் ரூ. 9.9 பில்லியன் தொகைக்கு 9.6 சதவீதத்தினால் ஆண்டிற்காண்டு வீழ்ச்சியடைந்தது. அதற்கமைய, காப்புறுதியளிக்கின்ற நிறுவனங்கள் வங்கித்தொழில் துறைக்கான தேறிய நிதி வழங்குநர்களாகத் தொடர்ந்தும் திகழ்ந்த அதேவேளை, காப்புறுதியளிக்கின்ற நிறுவனங்களிற்கான வங்கிகளின் நேரடிக் கொடுகடன் வெளிப்பாடானது ஒப்பீட்டளவில் வரையறுக்கப்பட்டுக் காணப்பட்டது. எவ்வாறெனினும், மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில், காலநிலைசார் இடர்நேர்வு எவ்வாறு துறைகளுக்கிடையிலான ஒன்றுடனொன்று இணைந்ததன்மையினை இடையீடுசெய்யக்கூடுமென்பதை டித்வா புயல் எடுத்துக்காட்டியது. பேரழிவுகள் தொடர்பான பாரியளவிலான கோரல்களிற்கு மத்தியில் மீள்காப்புறுதிப் பெறுகைக்காகக் காத்திருக்கின்ற அதேவேளை, காப்புறுதியளிக்கின்ற நிறுவனங்கள் காசையும் வங்கி வைப்புக்களையும் பயன்படுத்துவதனைத் தேவைப்படுத்தலாம். 2026இன் முதலாவது அரையாண்டு இறுதியில் காப்புறுதித் துறையின் வைப்புக்களின் வளர்ச்சியின்

வரைபடம் 3.93 மூலதனப் போதுமாந்தன்மை விகிதம்




மூலம்: இலங்கையின் காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு

வரைபடம் 3.95 காப்புறுதித் துறையின் வங்கிகளுடனான வைப்புக்கள்




மூலம்: இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு

வீழ்ச்சியானது காப்புறுதியளிக்கின்ற நிறுவனங்களின் இந்த உயர்ந்தளவிலான திரவத்தன்மை பயன்பாட்டிற்குப் பகுதியளவில் காரணமாயமைந்திருக்கக்கூடும்.

### 3.4 நிதியியல் நிறுவனங்களின் இணையம் சார்ந்த இடர்நேர்வுகள் மற்றும் தொழிற்பாட்டு ரீதியிலான தாக்குப்பிடிக்குந்தன்மை

**இலங்கையின் நிதியியல் முறைமை முழுவதும் டிஜிட்டல்மயமாக்கல் தொடர்ந்து துரிதமடைகின்றமையினால், தொழிற்பாட்டு மற்றும் இணையப் பாதுகாப்புத் தாக்குப்பிடிக்குந்தன்மையினை வலுப்படுத்துவதானது ஒட்டுமொத்த நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பாதுகாப்பதற்கு முக்கியத்துவமிக்கதாகக் காணப்படுகின்றது.** நிதியியல் நிறுவனங்கள் டிஜிட்டல் நிதியியல் பணிகள் மற்றும் கொடுப்பனவு வழிமுறைகளைத் தொடர்ந்து விரிவுபடுத்தி, நிதியியல் பணிகளின் அணுகல், வினைத்திறன் மற்றும் வசதிப்படுத்தலினை மேம்படுத்தியுள்ளன. இருப்பினும், அதிகரித்தளவிலான டிஜிட்டல்மயமாக்கல், பாரியளவிலான ஒன்றுடனொன்று இணைந்ததன்மை மற்றும் தொழில்நுட்பம் மற்றும் மூன்றாம் தரப்புப் பணி வழங்குநர்களின் மீதான அதிகரித்துச் செல்கின்ற தங்கியிருத்தல் ஆகியவை இணைய மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வுகளுக்கான நிதியியல் முறைமை ஆட்கொள்ளப்படுவதனையும் விரிவுபடுத்தலாம். முறைமைசார் முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமொன்றினை அல்லது முக்கியமான நிதியியல் சந்தை உட்கட்டமைப்பைப் பாதிக்கின்ற குறிப்பிடத்தக்க இணையச் சம்பவமொன்று அத்தியாவசிய நிதியியல் பணிகளின் வழங்கலினை இடையூறிற்குட்படுத்தி, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுச் செயற்பாடுகளைப் பலவீனமடையச்செய்து, நிதியியல் முறைமை மீதான நம்பிக்கையினையும் பாதிப்படையச்செய்யக்கூடும் சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றன.

**இணையத் தாக்குதல்கள், பணையத்தீநிரல் (ransomware), தகவல் திருட்டு (ஃபிஷிங்), சமூகப் பொறியியல் மற்றும் மூன்றாம் தரப்பினரால் ஏற்படக்கூடிய பாதிப்படையக்கூடியதன்மைகள் என்பன உள்ளடங்கலாக பரிணமித்து வருகின்ற இணைய அச்சுறுத்தல்சார் தோற்றப்பாட்டிற்குப் பதிலிறுத்தும் வகையில், மத்திய வங்கியானது நிதியியல் துறை முழுவதும் அதன் இணையத் தாக்குப்பிடிக்குந்தன்மை மேற்பார்வைக் கட்டமைப்பினை வலுப்படுத்தியது.** ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வை முன்முயற்சிகளானவை இணைய இடர்நேர்வு ஆளுகையை வலுப்படுத்தல், சம்பவங்கள் குறித்த அறிக்கையிடலினை மேம்படுத்தல், முக்கியமான முறைமைகளை நவீனமயமாக்கல், மூன்றாம் தரப்புப் பணி வழங்குநர்களின் மேற்பார்வையை வலுப்படுத்தல் மற்றும் கிரமமான இணையத் தாக்குப்பிடிக்குந்தன்மை மற்றும் வியாபாரத் தொடர்ச்சி மற்றும் அனர்த்தத்திற்கான மீட்சி ஏற்பாடுகளை ஊக்குவித்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தின. நிதியியல் முறைமையின் தயார்நிலையையும் தொழிற்பாட்டு ரீதியிலான தாக்குப்பிடிக்குந்தன்மையினையும் மேம்படுத்தல், டிஜிட்டல்மயமாக்கலுடன் தொடர்புடைய தோற்றம்பெற்று வருகின்ற இடர்நேர்வுகளைத் தணித்தல் மற்றும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டிற்கு ஆதரவளித்தல் ஆகியவற்றை மேற்கொள்வதனை இந்த வழிமுறைகள் நோக்கமாகக் கொண்டுள்ளன.

**சம்பவங்களில் பெரும்பான்மையானவை டிஜிட்டல் மோசடிகள் மற்றும் தகவல் திருட்டுச் சம்பவங்களாக விளங்கியமையாக ஒழுங்குமுறைப்படுத்துநரிற்கு வழங்கப்பட்ட அறிக்கையிடல்கள் சுட்டிக்காட்டுகின்றன.** பெரும்பாலான சம்பவங்கள் நேரடி வியாபாரத் தாக்கமொன்றினை ஏற்படுத்தாத அதேவேளை, குறிப்பாக, வாடிக்கையாளர்களின் நம்பிக்கையினையும் விசுவாசத்தினையும் சிதைவடையச் செய்வதுடன் தொடர்பான சாத்தியமான நற்பெயர் சார்ந்த விளைவுகள் முக்கிய கரிசனைகளாகக் காணப்படுகின்றன. அதேவேளை, அறிக்கையிடப்பட்ட முறைமைச் செயலிழப்புக்கள் மற்றும் இடையூறுகள் முக்கியமான டிஜிட்டல் நிதியியல் பணிகளின் கிடைப்பனவு மற்றும் தொழிற்பாட்டு ரீதியிலான தாக்குப்பிடிக்குந்தன்மை என்பவற்றினைப் பேணுவதன் முக்கியத்துவத்தினையும் எடுத்துக்காட்டுகின்றன.

**இணையவழி வங்கித்தொழில் மோசடிகள், தகவல் திருட்டுடன் தொடர்புடைய தாக்குதல்கள், சமூகப் பொறியியல் திட்டங்கள் மற்றும் மோசடியான முதலீட்டு நடவடிக்கைகள் அதிகரித்துச் செல்கின்ற சூழ்நிலைக்கு மத்தியில், அதிகாரிகளும் தொழிற்துறை ஆர்வலர்களும் மோசடித் தடுப்பு மற்றும் வாடிக்கையாளர் பாதுகாப்பு வழிமுறைகளை வலுப்படுத்தினர்.** மேம்பட்ட உறுதிப்படுத்தல்சார் பொறிமுறைகள் ஊடாக கொடுக்கல்வாங்கல் பாதுகாப்பை மேம்படுத்தல், வளர்ச்சியடைந்து வரும் மோசடி இடர்களைக் கண்டறிந்து தடுப்பதற்கான தொலைத்தொடர்புப் பணி வழங்குநர்களுடனான கூட்டிணைப்பினை மேம்படுத்தல், மோசடிப் பதிலிறுப்பு துரித பொறிமுறைகள் மூலம் வாடிக்கையாளர் பாதுகாப்பினை

வரைபடம் 3.96 இலங்கையின் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டில் இணையம் சார்ந்த இடர்நேர்வுகளின் பொதுநோக்கு

| இடர்நேர்வு வகை | அவதானிக்கப்பட்ட அச்சுறுத்தல் மற்றும் பாதிப்படையக்கூடிய சூழ்நிலை |
|---|---|
| 1. தகவல் பாதுகாப்பு மற்றும் இணைய இடர்நேர்வு | சில்லறை வங்கித்தொழில் பயனர்களை இலக்காகக் கொண்ட பணையத்தீநிரல், தகவல் திருட்டு, சமூகப் பொறியியல், மேம்பட்ட தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள் (APTs) மற்றும் உள்நுழைவுசார் தகவல் திருட்டு ஆகியவற்றின் உயர்வடைந்த இடர்நேர்வு. |
| 2. தகவல் தொடர்பாடல் இடையூறு மற்றும் முறைமைத் தாக்குப்பிடிக் குந்தன்மைசார் இடர்நேர்வு | அதிகபட்ச கொடுக்கல்வாங்கல் நேரங்களில் மரபு ரீதியிலான மைய வங்கித்தொழில் தளங்களில் காணப்படும் இயலளவு வரையறைகள் மற்றும் இடைக்கிடையே ஏற்படும் எதிர்வினையாற்றாத்தன்மை. |
| 3. நிறைவேற்றம், செயன்முறை மற்றும் மோசடி இடர்நேர்வு | ஒரு தடவைக் கடவுச்சொல் தகவல் திருட்டு, ஆள்மாறாட்ட மோசடிகள் மற்றும் அங்கீகரிக்கப்படாத நிதிய மாற்றல்கள் காரணமாக வாடிக்கையாளர்களுக்கு ஏற்படும் இழப்புக்கள். |
| 4. மூன்றாம் தரப்பினர் மற்றும் வெளியிலிருந்தான பணிகளைப் பெற்றுக்கொள்ளலுடன் தொடர்புடைய இடர்நேர்வு | வெளிப்புற விற்பனையாளர் மென்பொருள், கிளவுட் இணையவழிச் சேமிப்பகங்கள் (cloud hosts) மற்றும் உலகளாவிய தொழில்நுட்ப நிரம்பல் சங்கிலிகள் மீதான அதிகரித்துச் செல்கின்ற தங்கியிருக்குந்தன்மை. |
| 5. ஒழுங்குமுறை இணங்குவிப்பு மற்றும் வெளிப்படைத்தன்மை இடர்நேர்வு | உயர்வடைந்த தொழில்நுட்ப இடர்நேர்வுக் கட்டமைப்புகளிற்கும் கடுமையான அறிக்கையிடல் காலவரையறைகளிற்கும் நிலைமாறுதல். |
| 6. உபாயங்கள் மற்றும் நிறுவனம் சார்ந்த இடர்நேர்வு | பரிணமிக்கின்ற வியாபார மாதிரிகளுக்கு மத்தியில், சிறப்பு வாய்ந்த இணையப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பத் திறமையாளர்களைப் பெறுவதற்கான கடுமையான போட்டி. |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

சிறப்புக் குறிப்பு 3

## இலங்கையின் வங்கித்தொழில் துறையில் செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு

உலகளாவிய நிதியியல் பணிகள் துறையிடையே செயற்கை நுண்ணறிவு வேகமாகப் பயன்படுத்தப்பட்டு வருவதானது தொடர்ச்சியான மேற்பார்வை அவதானத்தை ஈர்த்துள்ளது. குறிப்பாக, பகிர்ந்தளிக்கப்பட்ட தொழில்நுட்பங்களூடாக செயற்கை நுண்ணறிவானது வெளிப்படுத்துகின்ற அளவீடுசார் விளைவுகள் மூலம், பிரதானமாக இணையவழி இடர்நேர்வை தொழிற்பாட்டு ரீதியிலான கரிசனையிலிருந்து முக்கிய நிதியியல் உறுதிப்பாட்டுப் பிரச்சினையாக உயர்த்துகின்றது. இப்பின்னணியில், இலங்கை மத்திய வங்கியானது செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு, ஆளுகை, இடர்நேர்வு முகாமைத்துவம், தரவுத் தயார்நிலை மற்றும் உபாய முன்னுரிமைகள் பற்றி 2025 நவெம்பரில் அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளிடையேயும் ஆய்வு ஒன்றை மேற்கொண்டது. எனினும், செயற்கை நுண்ணறிவின் விரைவான பரிணாமத்தால், தற்போதைய நிலைமை சற்று வேறுபட்டிருக்கக்கூடும். இச்சிறப்புக் குறிப்பு முக்கிய கண்டறிவுகளை தொகுத்துவழங்குவதுடன் உரிமம்பெற்ற வங்கிகளின் இணையவழிப் பாதுகாப்பின் தாக்குப்பிடிக்கும்தன்மை மீதான குறிப்பான வலியுறுத்தலுடன் சாத்தியமான முறைமைசார் தாக்கங்களுடன் தோற்றம்பெற்று வருகின்ற இடர்நேர்வுகளை ஆராய்கின்றது.

### உரிமம்பெற்ற வங்கிகளின் செயற்கை நுண்ணறிவுப் பயன்பாட்டின் தற்போதைய நிலை

மொத்தமாக, உரிமம்பெற்ற வங்கிகளில் 69 சதவீதமானவை சில வடிவத்திலான செயற்கை நுண்ணறிவு நடவடிக்கையை ஆரம்பித்துள்ள போதிலும், பயன்பாட்டு வீச்சு குறைவடைந்த நிலையில் காணப்படுகின்றது. உரிமம்பெற்ற வங்கிகளில் 31 சதவீதமானவற்றினால் செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு மற்றும் உடனடித் திட்டங்கள் தொடர்பில் எதுவும் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. அதேவேளை, 31 சதவீதமானவை தொடக்க ஆய்வு அல்லது சாத்தியக்கூற்றுக் கட்டத்தில் காணப்பட்டதுடன் 17 சதவீதமானவை முன்னோடித் திட்டங்களைக் கொண்டிருந்தன. மேலும், 31 சதவீதமானவை நேரடிப் பயன்பாட்டிற்கும், 10 சதவீதமானவை வரையறுக்கப்பட்ட பகுதிகளிலும், 17 சதவீதமானவை பன்முக தொழிற்பாடுகளிலும், 4 சதவீதமானவை பரந்தளவிலான ஒருங்கிணைப்புடனும் நகர்வடைந்துள்ளன. எந்தவொரு வங்கியும் செயற்கை நுண்ணறிவு முதன்மைத் தொழிற்பாடுசார் மாதிரியை அறிக்கையிடவில்லை.

தற்போது உள்ள பயன்பாட்டுச் சூழ்நிலைகளானவை மோசடி மற்றும் பணம் தூயதாக்கலுக்கெதிரான கண்காணித்தல், கொடுகடன் புள்ளியிடல், வாடிக்கையாளர் உரையாடல் மென்பொருட்கள், ஆவணச் செயன்முறைப்படுத்தல் மற்றும் உள்ளக உற்பத்தித்திறன் செயலிகள் ஆகியவற்றுக்காக அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன. விரைவான சேவை விநியோகம், நாள் முழுவதுமான கிடைப்பனவு மற்றும் குறைந்தளவிலான சேவைச் செலவுகள் என்பன முதன்மை வாடிக்கையாளர் நன்மைகளாக அடையாளம்காணப்பட்ட அதேவேளை, செயற்கை நுண்ணறிவுப் பயன்பாட்டினைத் தெளிவாக வெளிப்படுத்தலானது அதிகம் எடுத்துக்காட்டப்பட்ட நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் வழிமுறையாக அமைந்திருந்தது. வாடிக்கையாளர் சேவையிலும் உள்ளக அறிவு முகாமைத்துவத்திலும் உருவாக்கமுறைச் செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடுகள் தோற்றம்பெற்றுவருகின்றன.

### ஆளுகை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகள்

செயற்கை நுண்ணறிவுக் கட்டமைப்புக்கள் இன்னும் உருவாக்கத்தின் ஆரம்ப கட்டங்களிலேயே உள்ளன. உரிமம்பெற்ற வங்கிகளில் 23 சதவீதமானவை தற்போதுள்ள இடர்நேர்வு குழுக்களுடனான ஒருமைப்பாடுடனும் பல்துறை தொழிற்பாடுசார் செயற் குழுக்களுடன் சமமான பங்கு ஊடாகவும் முகாமைசெய்கின்ற அதேவேளை 8 சதவீதமானவை பணிப்பாளர் சபை மட்டத்திலான செயற்கை நுண்ணறிவு மேற்பார்வைக் குழுவைத் தாபித்துள்ளதுடன் 15 சதவீதமானவை மூத்த முகாமைத்துவ செயற்கை நுண்ணறிவு வழிகாட்டல் குழுவினாலும் முகாமைசெய்கின்றன. உரிமம்பெற்ற வங்கிகளில் 17 சதவீதமானவற்றில் செயற்கை நுண்ணறிவு ஆளுகை ஏற்பாடுகள் இன்னும் உருவாக்கப்படவில்லை.

இடர்நேர்வு மதிப்பீட்டு நடைமுறைகள் ஒப்பிடத்தக்க நிலையொன்றை வெளிப்படுத்துகின்றன. தொழில்நுட்ப, தொழிற்பாட்டு, இணங்குவிப்பு

வரைபடம் 1
தற்போதைய செயற்கை நுண்ணறிவு நடைமுறைப்படுத்தல் நிலை




வரைபடம் 2
செயற்கை நுண்ணறிவு ஆளுகைக் கட்டமைப்பு



வரைபடம் 3 வெளியிலிருந்து பணிகளைப் பெறுதல் மற்றும் மூன்றாம் தரப்பு இடர்நேர்வு முகாமைத்துவம்




மற்றும் மாதிரி இடர்நேர்வு என்பவற்றின் மீது வங்கிகள் கவனம்செலுத்துகின்ற அதேவேளை கொடுகடன், சந்தை மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வு என்பன குறைந்த அவதானத்தைப் பெறுகின்றன. செயற்கை நுண்ணறிவானது தற்போது நிதியியல் இடர்நேர்வின் தூண்டுதலாக இருப்பதைப் பார்க்கிலும் தொழில்நுட்பசார் ஈடுபடுத்தல் விடயமாக கவனிக்கப்படுகின்றது.

## மூன்றாம் தரப்பில் தங்கியிருத்தலும் செறிவாக்கமும்

உரிமம்பெற்ற வங்கிகளில் 62 சதவீதமானவை பன்னாடுசார் தொழில்நுட்பவியல் கம்பனிகளின் சிறிய குழுவொன்றுடன் கூட்டாண்மைகளை அறிக்கையிட்டன. உள்நாட்டு தொழில்நுட்பவியல் நிறுவனங்கள் (24%), பிரதேச நிதியியல் தொழில்நுட்பவியல் கம்பனிகள் மற்றும் திறந்த வளத் தீர்வுகள் (ஒவ்வொன்றும் 21%), முறைமை ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆலோசனை நிறுவனங்கள் (ஒவ்வொன்றும் 17%) என்பவற்றுடனான ஈடுபாடு குறிப்பிடத்தக்களவில் குறைவாகக் காணப்படுகின்றது.

செயற்கை நுண்ணறிவு சேவை வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தங்களில் தரவுப் பாதுகாப்புத் தேவைப்பாடுகள் மீதான உரிய விழிப்புக்கவனம் 17 சதவீதத்திலும், சேவை மட்ட உடன்படிக்கைகள் 16 சதவீதத்திலும், வெளியேறல் உபாயங்கள் மற்றும் தரவுப் பெயர்வுத்திறன் பிரிவுகள் 14 சதவீதத்திலும், செயற்கை நுண்ணறிவு வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளவதற்கான சபை ஒப்புதல் மற்றும் சேவை வழங்குநர் வியாபாரத் தொடர்ச்சி ஏற்பாடுகள் 13 சதவீதத்தில் இருந்ததோடு சேவை வழங்குநர் தொழிற்பாடுகளைக் கணக்காய்வு செய்வதற்கான உரிமை 10 சதவீதத்தில் மாத்திரம் விளங்கியது. வலுப்படுத்த வேண்டிய தேவையுள்ள ஒப்பந்தக் கட்டுப்பாடுகளுடன் இணைந்திருக்கும் குறுகிய வழங்குநர் செறிவாக்கமானது ஆய்வின் முக்கிய விளைவுசார்ந்த பெறுபேறாக அமைந்திருந்தது.

## இணையவழிப் பாதுகாப்பு தாக்குப்பிடிக்கும் தன்மைக்கும் நிதியியல் உறுதிப்பாட்டிற்குமான தாக்கங்கள்

இணையவழிப் பாதுகாப்பு மற்றும் இடர்நேர்வு தொடர்பான கரிசனைகள் (15%), வரையறுக்கட்ட உள்நாட்டு செயற்கை நுண்ணறிவு திறமை (17%) மற்றும் உயர்ந்தளவிலான நடைமுறைப்படுத்தல் செலவுகள் (15%) ஆகியவை செயற்கை நுண்ணறிவை ஏற்றுக்கொள்வதில் குறிப்பிடத்தக்க மூன்று சவால்களாகும். இக்கரிசனை மிகவும் நியாயமானதொன்றாகும்.

முதன்மை முறைமையியல் இடர்நேர்வானது புதிய தாக்குதல் நுட்பங்களிலிருந்து அல்லாமல் பரந்தளவில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பங்களில் பாதிக்கப்படும் தன்மைகளை செயற்கை நுண்ணறிவு கண்டறிவதிலும், சுரண்டுவதிலுமான அனுமதிக்கின்ற வேகம், கால இடைவெளி மற்றும் வீச்சு ஆகியவற்றிலிருந்து உருவாகின்றது. செயற்கை நுண்ணறிவினால் இயலச்செய்யப்பட்ட எதிராளிகளின் மூலமான நடவடிக்கை 2024 மற்றும் 2025 இற்கிடையில் 89 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளை, பாதிக்கப்பட்ட வலையமைப்பொன்றினுள் பக்கவாட்டாக ஊடுருவி நகர்வதற்கு தாக்குதல்தாரர்களால் எடுத்துக்கொள்ளும் சராசரி நேரம் 29 நிமிடங்களாக 65 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்ததாக தொழிற்றுறைத் தரவுகள் எடுத்துக்காட்டுகின்றன. கண்டறிவதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான கால அவகாசம், இயந்திர வேகத்தை நோக்கி சுருங்கிக்கொண்டிருக்கின்றது.

வரைபடம் 4 செயற்கை நுண்ணறிவுப் பயன்பாட்டில் முக்கிய சவால்கள்



இவ் இயக்கவாற்றல்கள் உரிமம்பெற்ற வங்கிகளை நேரடியாகப் பாதிக்கின்றன. செயற்கை நுண்ணறிவானது வங்கிகள் மற்றும் அவற்றின் வாடிக்கையாளர்கள் மீதான தாக்குதல்களுக்கான செலவைக் குறைத்து, அவற்றின் பாதிப்பை அதிகரிக்கின்றன. உருவாக்க மாதிரிகள் சரளமான சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பெருமளவில் திருட்டு முயற்சி மற்றும் வியாபார மின்னஞ்சல் ஊடுருவலை இயலச்செய்கின்ற அதேவேளை, செயற்கைக் குரல் மற்றும் காணொளி என்பன வாடிக்கையாளர்களையும் மூத்த அலுவலர்களையும் போல் ஆள்மாறாட்டம் செய்ய அனுமதித்து, தொலைநிலைச் சேர்க்கை, காணொளி அடிப்படையிலான வாடிக்கையாளர் அடையாளம்காணல் மற்றும் கொடுப்பனவு அதிகாரமளித்தல் கட்டுப்பாடுகளுக்கு அச்சுறுத்தல் விடுக்கின்றன. இச்சூழ்நிலையில், உள்நாட்டு சில்லறைக் கொடுப்பனவு மார்க்கங்களில் மோசடி வகைப்பாடுகளுடன் தொடர்புடையதாகத் தோற்றம்பெற்றுவருகின்ற இடர்நேர்வை அவதானிக்க முடிகின்றது.

செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடானது தாக்குதல் பரப்பையும் விரிவுபடுத்துகின்றது. மாதிரி முடிவு மையங்கள், பயன்பாட்டு நிகழ்ச்சித்திட்ட இடைமுகங்கள், பயிற்சிவழங்கல் தரவு வைப்பகங்கள் மற்றும் திசையன் தரவுத்தளங்கள் என்பன பாரம்பரிய எல்லைக் கட்டுப்பாடுகளுக்கு அப்பால் அமைந்திருப்பதுடன், தூண்டுதல் ஊடுருவல்கள், பயிற்சியளித்தல் தரவுகளை நச்சுத்தன்மையாக்குதல் மற்றும் மாதிரி மாறுதலடையச்செய்தல் போன்ற செயற்கை நுண்ணறிவு முறைமைகளுக்கு உரித்தான தாக்குதல் வழிகள் நடைமுறையிலுள்ள கட்டுப்பாட்டு அடிப்படைகளால் நிவர்த்தி செய்யப்படுவதில்லை. பொது உருவாக்க செயற்கை நுண்ணறிவுக் கருவிகளை அதிகாரமளிக்கப்படாத ஊழியர்கள் பயன்படுத்துவதானது, இரகசியத் தரவுகள் வங்கியின் கட்டுப்பாட்டு எல்லையை விட்டு வெளியேறுவதற்கான மேலதிக வழியொன்றை உருவாக்குகின்றது.

செயற்கை நுண்ணறிவு நிதியியல் உறுதிப்பாட்டின் வெளிப்படையினை அதிகளவில் செறிவாக்குகின்றது. வங்கிகளானவை மேகக் கணணித் தொழில்நுட்பம் மற்றும் மாதிரி வழங்குநர்களின் ஒரே மாதிரியான வரையறுக்கப்பட்ட தொகுதியொன்றில் தங்கியிருக்கும் பட்சத்தில், தனித்துவமான வழங்குரொருவரிடம் ஏற்படும் ஊடுருவல் அல்லது சேவைத் தடையானது தனிப்பட்ட வங்கியின் சிக்கலாக எஞ்சியிருக்காமல், நிறுவனங்களிடையே ஏற்படும் பொதுவான வகை செயலிழப்பாக மாறுகின்றது. தோற்றம்பெற்றுவரும் சந்தைகளும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களும் விகிதாசாரமற்ற வகையில் அதிக இடர்நேர்விற்குள்ளாவதுடன் முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களைப் போலவே உலகளாவிய டிஜிட்டல் உட்கட்டமைப்பைப் பகிர்ந்துகொள்கின்றன. ஆனாலும், இவற்றிடம் குறைவான தற்காப்பு வளங்கள், மிகவும் வரையறுக்கப்பட்ட மேற்பார்வை இயலாற்றல் மற்றும் சிறியளவிலான வழங்குநர்கள் மீது அதிகரித்தளவிலான தங்கியிருத்தல் போன்றவை காணப்படுகின்றன. இச்சிறியளவிலான வழங்குநர்களின் பலவீனங்களைச் சரிசெய்வதற்கான சுழற்சிகளுக்கு அதிக காலத்தை எடுப்பதன் மூலம் தெரிந்த பாதிக்கப்படும் தன்மைகள் வெளிப்படையாக இருக்கக்கூடிய கால அவகாசத்தை நீடிக்கின்றன. இலங்கையைப் பொறுத்த வரையில், இது தொழிற்பாடுசார் எச்சரிக்கை ஆகும்.

இவ்இடர்நேர்வுக்குட்படுபவைகளை எதிரீடுசெய்யும் வகையில், முரண்பாடு கண்டறிதல், நடத்தைசார் பகுப்பாய்வு மற்றும் தன்னியக்க வகைப்படுத்தல் என்பவற்றின் ஊடாக செயற்கை நுண்ணறிவானது தற்காப்பு இயலாற்றலையும் வலுப்படுத்துகின்றது. எனவே, வருவாய் ஈட்டும் தொழிற்பாடுகளுக்காக செயற்கை நுண்ணறிவில் முதலீடுசெய்கின்ற வங்கிகள் அதற்கீடான முறையில் இயந்திர வேகத் தற்காப்பிலும் முதலீடுசெய்ய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றன என்பது மேற்பார்வை எதிர்பார்ப்பாகக் விளங்குகின்றது. தடுப்பு மாத்திரம் போதுமானதாக அமைந்திராது. பிரிவுபடுத்துதல், பூச்சிய நம்பிக்கைக் கட்டமைப்பு, ஊடுருவலொன்றின் அழிவு வீச்சு எல்லையைக் கட்டுப்படுத்தி, பக்கவாட்டு அசைவைக் கட்டுப்படுத்தும் வகையிலான வடிவமைப்பு நடைமுறைகளினூடாக ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட அணுகல் கட்டுப்பாடு மற்றும் பாதுகாப்பு என்பன தற்போது தாக்குப்பிடிக்கும்தன்மைக்கான மையமாக விளங்குகின்றன.

### மேற்பார்வை அணுகுமுறையும் முன்னோக்கிய பார்வையும்

தற்போதுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு கணிசமான அளவிலான காப்பீட்டை வழங்குகின்றது.

- ஆளுகை, தகவல் பாதுகாப்பு, மூன்றாம் தரப்பு இடர்நேர்வு மற்றும் வியாபாரத் தொடர்ச்சி என்பவற்றிற்கான தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவம், தாக்குப்பிடிக்கும்தன்மை, தொகுதி தேவைப்பாடுகள் மீதான 2021ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள்

- 2027 சனவரி 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் உரிமம்பெற்ற வங்கிகளின் வியாபாரத் தொழிற்பாடுகளை வெளியிலிருந்து பணிகளாகப் பெற்றுக்கொள்ளல், சபை பொறுப்புக்கூறல், உரிய விழிப்புக்கவனம், கணக்காய்வு உரிமைகள் அத்துடன் வெளியிலிருந்து பணியாகப் பெற்ற மற்றும் மேகக் கணணித் தொழில்நுட்பம் அடிப்படையிலான ஏற்பாடுகளுக்கான வெளியேறல் திட்டமிடல் என்பவற்றை வலுப்படுத்தல் மீதான 2026ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள்

- 2025ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க சுற்றறிக்கை, தகவல் தொழில்நுட்பம் மற்றும் இணையவழிப் பாதுகாப்புச் சம்பவங்கள் பற்றிய அறிக்கையிடலைத் தேவைப்படுத்துகின்றது.

- 2022ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டமானது மாதிரி அபிவிருத்தியில் பயன்படுத்தப்படும் தனிப்பட்ட தரவுகளை ஆளுகைசெய்கின்றது.

ஒழுங்குமுறைப்படுத்தல் நிச்சயத்தன்மை, மேகக் கணணித் தொழில்நுட்பம் மற்றும் உட்கட்டமைப்பு ஆதரவு அத்துடன் இயலாற்றல் விருத்தி ஆகியவற்றை தங்களது முதன்மைத் தேவைகளாக வங்கிகள் அடையாளப்படுத்தியுள்ளன. பணிப்பாளர் சபையின் பொறுப்புக்கூறல், மாதிரி இருப்புக்கள் மற்றும் தொடர்ந்து சரிபார்த்தல் விளைவை ஏற்படுத்தக்கூடிய தீர்மானங்களில் மனித மேற்பார்வை மற்றும் விளக்கமளிக்கும் திறன் ஆகியவற்றை உள்ளடக்கி, செயற்கை நுண்ணறிவின் பாதுகாப்பான மற்றும்

பொறுப்புவாய்ந்த பயன்பாடு பற்றிய வழிகாட்டலை வெளியிடும் செயன்முறையில் மத்திய வங்கி ஈடுபட்டுள்ளது. பன்னாட்டு பரிந்துரைகளுடன் ஒத்திசைந்துசெல்லும் விதத்தில், முக்கிய செயற்கை நுண்ணறிவு மற்றும் மேகக் கணனித் தொழில்நுட்பத்தில் தங்கியிருத்தலை அடையாளப்படுத்துதல் மற்றும் அவற்றின் பதிலீட்டுத்தன்மையை மதிப்பீடுசெய்தலை செயற்கை நுண்ணறிவினால் இயலச்செய்யப்பட்ட அச்சுறுத்தல் சூழ்நிலைகளை இணையவழித் தூண்டல் பயிற்சிகளுக்கு ஒருங்கிணைத்தல் மற்றும் செயற்கை நுண்ணறிவுசார் கட்டுப்பாட்டுச் சூழலுக்கு பரிசோதனைகளை விரிவுபடுத்துதல் ஆகியவற்றிற்கு மேற்பார்வைப் பணி விரிவடையும்.

### முடிவுரை

இலங்கை வங்கித்தொழில் துறையில் செயற்கை நுண்ணறிவின் பிரயோகம் என்பது நோக்கத்தில் பரந்தளவில் இருப்பதுடன், நிறைவேற்றுதல், ஆளுகை மற்றும் மூன்றாம் தரப்புக் கட்டுப்பாடுகளின் மீது அதிகளவிலான செயற்பாட்டை அவசியப்படுத்துகின்றது. எனவே, செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு பரந்தளவில் விரிவாக்கமடைவதற்கு முன்னர், மேற்பார்வை எதிர்பார்ப்புக்களை அமைக்கக்கூடிய கால அவகாசம் இன்னும் திறந்த நிலையில் காணப்படுகின்றது. இணையவழி அச்சுறுத்தலைக் கண்டறிவதனை மேம்படுத்துகின்ற அதே தொழில்நுட்பமானது எதிராளிகளுக்கும் ஆற்றலளித்து, ஒரு சில வெளியக வழங்குநர்களின் மீது தங்கியிருத்தலைச் செறிவாக்குதலானது இணையவழிப் பாதுகாப்பு தாக்குப்பிடிக்கும்தன்மைக்கான பிரதான தடையாக காணப்படுகின்றது. பணிப்பாளர் சபை மேற்பார்வை, செயற்கை நுண்ணறிவுச் சேவை வழங்குநர்கள் மீதான ஒப்பந்தசார் கட்டுப்பாடு, உட்கட்டமைப்பில் முதலீடுகள், சம்பவ அறிக்கையிடல் கட்டுப்பாடு மற்றும் செயற்கை நுண்ணறிவு சார்ந்த அச்சுறுத்தல்களுக்காக வடிவமைக்கப்பட்ட தாக்குப்பிடிக்கும்தன்மையைப் பரீட்சித்தல் போன்றவற்றை வலுப்படுத்துதலானது, செயற்கை நுண்ணறிவுப் பிரயோகம் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை மேம்படுத்துகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கு அத்தியவசியமானதாகும்.

---

1 அட்ரியன், டி., டி. கெய்டோஸ்ச், எம். மொரெட்டி, எம். குரேஷி மற்றும் ஆர். ரவி-குமார் (2026), நிதியியல் துறையில் செயற்கை நுண்ணறிவும் இணையவழிப் பாதுகாப்பும், பன்னாட்டு நாணய நிதியக் குறிப்பு 2026/005, யூன் நிதியியல் உறுதிப்பாட்டுச் சபை, செயற்கை நுண்ணறிவின் நிதியியல் உறுதிப்பாட்டுத் தாக்கங்கள் (நவெம்பர் 2024); சிங்கப்பூர் நாணய அதிகாரசபை, செயற்கை நுண்ணறிவு மாதிரி இடர்நேர்வு முகாமைத்துவம்: கருப்பொருள்சார் மீளாய்விலிருந்து பெறப்பட்ட அவதானங்கள் (திசெம்பர் 2024) மற்றும் இந்திய ரிசர்வ் வங்கி, FREE-செயற்கை நுண்ணறிவுக் குழு அறிக்கை (ஓகத்து 2025).

2 இவ் ஆய்வானது அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு வழங்கப்பட்டதுடன், நடைமுறைப்படுத்தல் நிலை, பயன்பாட்டுச் சூழல்கள், ஆளுகை, இடர்நேர்வு முகாமைத்துவம், தரவுத் தயார்நிலை, வழங்குநர்கள் ஏற்பாடுகள், வாடிக்கையாளர் தாக்கம் மற்றும் எதிர்கால உபாய முன்னுரிமைகள் ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தது. வேறுவகையில் குறிப்பிடப்படாவிட்டால் அன்றி, சதவீதங்கள் 29 உரிமம்பெற்ற வங்கிகளின் பங்கொன்றாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

3 இக்குறிப்பில் ஆராயப்பட்ட கண்டறிவுகள், ஆய்வுப் பதில்களில் இருந்து பெறப்பட்டவையாகும் என்பதுடன் அவை மத்திய வங்கியின் கருத்துக்களை வெளிப்படுத்த வேண்டுமென்ற அவசியமில்லை.

4 பன்னாட்டு நாணய நிதியக் குறிப்பு 2026/005இல் எடுத்துக்காட்டப்பட்டவாறு, கிரவுட்ஸ்ட்ரைக் (2026) உலகளாவிய அச்சுறுத்தல் அறிக்கை. உடைவு நேரம் என்பது ஆரம்ப ஊடுருவலுக்கும் வலையமைப்பினுள் பக்கவாட்டான அசைவிற்கும் இடையிலான கால இடைவெளியை அளவிடுகின்றது.

---

மேம்படுத்தல் மற்றும் டிஜிட்டல் நிதியியல் பணிகளிற்கான பாதுகாப்பான அணுகலினை ஊக்குவித்தல் ஆகியவற்றில் முயற்சிகள் கவனம் செலுத்தின. இந்த முன்முயற்சிகள் டிஜிட்டல் நிதியியல் பணிகள் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை வலுப்படுத்துவதையும் டிஜிட்டல் கொடுப்பனவு வழிமுறைகளைப் பாதுகாப்பான முறையில் தழுவிக்கொள்வதற்கு ஆதரவளிப்பதையும் நோக்காகக் கொண்டுள்ளன.

**முன்னோக்கிச் செல்கையில், நிதியியல் நிறுவனங்கள், கொடுப்பனவு முறைமைகள், தொழில்நுட்ப வழங்குநர்கள் மற்றும் ஏனைய முக்கியமான பணி வழங்குநர்களுக்கு இடையிலான அதிகரித்துச் செல்கின்ற ஒன்றுடனொன்று இணைந்ததன்மை தொடர்ச்சியான விழிப்புணர்வினைத் தேவைப்படுத்துகின்றது.** முறைமை ரீதியிலான இணையத் தாக்குப்பிடிக்குந்தன்மை, தகவல் பகிர்வு ஏற்பாடுகள், மூன்றாம் தரப்பு இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைந்த சம்பவப் பதிலிறுத்தல் ஆகியவற்றை வலுப்படுத்துவதானது தொழிற்பாட்டு இடையூறுகளிலிருந்தான சாத்தியமான தாக்கத்தின் பரவுகையினைக் கட்டுப்படுத்துவதற்கும் முக்கியமான நிதியியல் பணிகளின் தொடர்ச்சியினைப் பாதுகாப்பதற்கும் முக்கியமானதாகக் காணப்படும்.

# அத்தியாயம் 4

# வீட்டலகு மற்றும் கூட்டாண்மைத் துறைகள்



நிதியியல் முறைமையில், வீட்டலகு மற்றும் கூட்டாண்மைத் துறைகள்[1] நிதியியல் நிறுவனங்களுடனான நெருங்கிய தொடர்புகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு பங்களித்தல் மூலம் முக்கியப் பங்காற்றுகின்றன. வீட்டலகுகள் நுகர்விற்கும் சேமிப்பிற்கும் துணைபுரிகின்ற அதேவேளை உற்பத்தி, முதலீடு மற்றும் வேலைவாய்ப்பு போன்றவற்றை கூட்டாண்மைகள் முன்னெடுக்கின்றன. நிதியியல் முறைமையின் முக்கியக் கடன்பாட்டாளர்கள் என்ற வகையில், அவற்றின் நிதியியல் நிலைமைகளும் படுகடனைத் தீர்ப்பனவு செய்வதற்கான இயலாற்றலும் நிதியியல் நிறுவனங்களின் சொத்துத் தரத்திலும் இலாபத்தன்மையிலும் நேரடியாகத் தாக்கம்செலுத்துகின்றன. வீட்டலகு வருமானங்களில் அல்லது கூட்டாண்மை ஈட்டல்களில் ஏற்படும் பாதகமான அபிவிருத்திகள் கொடுகடன் இழப்புக்களை அதிகரிக்கச்செய்து கடன்வழங்கலைக் கட்டுப்படுத்தி, பொருளாதார நடவடிக்கைக்கான பரந்தளவிலான தாக்கங்களை ஏற்படுத்தலாம். இதற்கமைவாக, இத்துறைகளிலுள்ள பாதிக்கப்படக்கூடிய தன்மைகளை மதிப்பிடுவது நிதியியல் முறைமை உறுதிப்பாட்டில் ஏற்படக்கூடிய இடர்நேர்வுகளை முன்கூட்டியே அடையாளங்காண்பதற்கு முக்கியமானதாகும்.

வீட்டலகு[2] மற்றும் நிறுவனத்[3] துறைகளுக்கு வழங்கப்பட்ட கொடுகடன், முன்னேற்றமடைந்துவரும் பொருளாதார நடவடிக்கையினால் ஆதரவளிக்கப்பட்ட வலுவான கொடுகடன் கேள்வியினைப் பிரதிபலித்து, 2026இன் முதலரைப் பகுதியில் தொடர்ந்தும் வலுவாக விரிவடைந்தது. வீட்டலகுத் துறைக்கான கொடுகடன் வளர்ச்சியானது உயர்வடைந்து காணப்பட்டபோதிலும், முன்னைய இரு ஆண்டுகளுக்கு காணப்பட்ட நிலையான உயர்வடைதலின் பின்னர், அதன் விரிவாக்க வேகம் 2026இன் இரண்டாம் காலாண்டில் சிறிதளவு மிதமடைந்திருந்தது. முதன்மையாக, வங்கிக் கடன்வழங்கலினால் ஆதரவளிக்கப்பட்டு, நிறுவனத் துறைக்கான கொடுகடனும் வலுவான வளர்ச்சியைப் பதிவுசெய்தது. கொடுகடனின் விரிவாக்கம் நிதியியல் இடையீட்டினை வலுப்படுத்துகின்றபோதிலும், இது கொடுகடனின் வேகம், உள்ளமைப்பு மற்றும் தரம் போன்றவற்றைத் தொடர்ந்தும் கண்காணிப்பதன் அவசியத்தை வலியுறுத்துகின்றது. அதேவேளை, பெரும்பான்மையான கடன்பாட்டாளர்கள் தாழ்ந்த இடர்நேர்வு வகைகளினுள் காணப்பட்டதற்கமைய, வீட்டலகுத் துறைக் கடன்பாட்டாளர்களின் இடர்நேர்வு தோற்றப்பாடு 2026இன் முதலரைப் பகுதியில் மேலும் மேம்பட்டது. நிறுவனத் துறைக் கடன்பாட்டாளர்களும் பரந்தளவிலான ஆற்றல்வாய்ந்த கொடுகடன் இடர்நேர்வு தோற்றப்பாடொன்றை வெளிப்படுத்தியிருந்ததுடன், அவர்கள் தாழ்ந்த இடர்நேர்வு வகைகளிலேயே பெருமளவில் செறிவடைந்து காணப்பட்டனர். எவ்வாறெனினும், வங்கித்தொழில் துறையுடன் ஒப்பிடுகையில், வங்கியல்லா நிதியியல் நிறுவனத் துறையின் கடன்பாட்டாளர் இடர்நேர்வு தோற்றப்பாடுகள் ஒப்பீட்டளவில் தொடர்ந்தும் நலிவடைந்து காணப்படுவதோடு, நிதியியல் உறுதிப்பாட்டு கண்ணோட்டத்தில் தொடர்ச்சியான கண்காணிப்பினை அவசியப்படுத்துகின்றன. முன்னோக்கி நோக்குகையில் இறுக்கமான நாணய நிலைமைகள் மற்றும் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட பெறுமதிக்கான கடன் வழிமுறைகள்[4] என்பன குறிப்பாக வீட்டலகுத் துறையினுள் கொடுகடன் வளர்ச்சியினைப் படிப்படியாக மிதமடையச்செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், அண்மையில் பதிவுசெய்யப்பட்ட மீள்கொடுப்பனவுச் செயலாற்றம் மற்றும் கடன்பாட்டாளர் நம்பகத் தர முன்னேற்றங்கள் இரு துறைகளினதும் தாக்குப்பிடிக்கும் தன்மைக்கு ஓரளவிற்கு ஆதரவினை வழங்கக்கூடும்.

*2026இன் முதலரைப் பகுதியில், பட்டியலிடப்பட்ட நிதியல்லாக் கூட்டாண்மைகள் பெரும்பாலான துறைகளிடையே பரந்த அடிப்படையிலான வருமான வளர்ச்சியினால் ஆதரவளிக்கப்பட்டு, வலுவான வியாபார நடவடிக்கையினைப் பதிவுசெய்தன. ஊர்திகள், எரிசக்தி மற்றும் வலு மற்றும் தயாரிப்பு துறைகளில் பிரதானமாகத் தூண்டப்பட்டு, வருவாய் முன்னேற்றமானது சாதகமான குறிப்பிட்ட துறைசார் அபிவிருத்திகளையும் மேம்பட்ட வியாபார நிலைமைகளையும் பிரதிபலித்தது. வருவாய்களில் அதிகரிப்பு காணப்பட்டபோதிலும், ஒட்டுமொத்த தேறிய இலாபம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2026இன் முதலரைப் பகுதியில் வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. எனினும், பெரும்பான்மையான நிறுவனங்களிடையேயான தேறிய இலாபத்தின் இடை அதிகரித்தமை மற்றும் இலாப வளர்ச்சியில் பிரதிபலிக்கப்பட்டவாறு, நிதியல்லாக் கூட்டாண்மைகளிடையே அடிப்படை இலாபத்தன்மை நிலைமைகளில் முன்னேற்றத்திற்கான சமிக்ஞைகள் காணப்பட்டன. ஒட்டுமொத்த இலாபத்தன்மை வீழ்ச்சி முதன்மையாக ஒரு சில கூட்டாண்மைகளினால் ஏற்பட்டுள்ளது. இதன்விளைவாக, முக்கிய இலாபத்தன்மை குறிகாட்டிகள் நலிவடைந்து, கூட்டு வட்டி காப்பு விகிதம் காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்ததுடன், பட்டியலிடப்பட்ட நிதியல்லாக் கூட்டாண்மைகளின் ஒட்டுமொத்த கடன்தீர்ப்பனவு இயலாற்றலும் மிதமடைந்தது. எனினும், கடன்படு நிலைமைகள் ஓரளவிற்கு மேம்பட்டதுடன் கூட்டு வட்டி காப்பு விகிதம் ஒன்றுக்கு மேல் வசதியான மட்டத்தில் காணப்பட்டமையானது பட்டியலிடப்பட்ட நிதியல்லாக் கூட்டாண்மைகள் சராசரியாக அவற்றின் வட்டி கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கான போதியளவு இலாபங்களைத் தொடர்ந்தும் உருவாக்கின என்பதைக் குறித்துக்காட்டின. ஒட்டுமொத்தமாக, இலாபத்தன்மைப் போக்குகளின் கலப்பாகக் காணப்பட்ட போதும் பட்டியலிடப்பட்ட நிதியல்லாக் கூட்டாண்மைத் துறை தாக்குப்பிடிக்கும்தன்மையுடன் காணப்பட்டது. பெரும்பாலான நிறுவனங்கள் வலுவான படுகடன் தீர்ப்பனவு இயலாற்றினைப் பேணி, நிதியியல் நிறுவனங்களுக்கான ஒட்டுமொத்த கொடுகடன் இடர்நேர்வினை மட்டுப்படுத்தின.*

---

1 இவ் அத்தியாயத்தில் தரப்பட்டுள்ள தரவுகள் கொடுகடன் தகவல் பணியகம் மற்றும் கொழும்பு பங்கு பரிவர்த்தனையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டவையாகும். எனவே, இவ் அத்தியாயத்தில் அறிக்கையிடப்பட்ட நிதியியல் நிறுவனங்களினால் மத்திய வங்கிக்கு நிதியியல் தகவல்களை அறிக்கையிடுகின்ற முறைமையொன்றான நிதியியல் தகவல் வலையமைப்பு (FinNet) தரவு மையத்தை அடிப்படையாகக் கொண்ட தரவுகள் அத்தியாயம் 3 உடன் நேரடியாக ஒப்பிடக்கூடியவை அல்ல.

2 கொடுகடன் தகவல் பணியகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கூட்டுக் கொடுகடன் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு, இப் பகுப்பாய்வில் வழங்கப்பட்ட வீட்டலகுத் துறைப் படுகடனானது தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு இலக்கம் மூலம் அடையாளங்காணப்பட்ட தனிப்பட்டவர்கள் பெற்ற கடன்கள் மற்றும் முற்பணங்களை உள்ளடக்கியதாகும் அத்துடன், சில நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகள் உள்ளடங்கலாக வீட்டலகிற்குச் சொந்தமான ஒன்றிணைக்கப்படாத தொழில்முயற்சிகளினூடாக மேற்கொள்ளப்படும் வியாபார நடவடிக்கைகளுக்காக தனிப்பட்டவர்களின் கடன்பெறுகைகளும் இதில் உள்ளடங்கும்.

3 நிறுவனசார் துறைப் படுகடன்கள், வியாபார நிறுவனங்களாகப் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள் பெற்றுக்கொண்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள், அத்துடன் அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகள் மற்றும் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட நிதியுதவிகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

4 பெறுமதிக்கான கடன் தேவைப்பாடுகள் தொடர்பிலான மேலதிக விவரங்களுக்கு அத்தியாயம் 05 இனைப் பார்க்கவும்.

## 4.1 வீட்டலகு மற்றும் நிறுவனம்சார் துறைகளின் இடர்நேர்வு மதிப்பீடு

கொடுகடன் தகவல் பணியகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கூட்டுக் கொடுகடன் தரவுகளை[5] அடிப்படையாகக் கொண்டு, வீட்டலகு மற்றும் நிறுவன ரீதியிலான துறைகளில் சாத்தியமான நிதியியல் ரீதியில் பாதிக்கப்படக்கூடிய தன்மைகளை இப்பகுதி மதிப்பீடுசெய்கின்றது.

### வீட்டலகுத் துறைக்கான கொடுகடனின் இடர்நேர்வு மதிப்பீடு

**வீட்டலகுத் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன், 2026இன் முதலரைப் பகுதியில் தொடர்ந்து குறிப்பிடத்தக்க வளர்ச்சியினைப் பதிவுசெய்தபோதிலும் அதன் வளர்ச்சி வேகம் 2026இன் இரண்டாம் காலாண்டில் சிறிதளவு மிதமடைந்தது.** மொத்த முறைசார் நிதியியல் துறைக் கடன்வழங்கலில்[6] 41.8 சதவீதத்திற்கு வகைகூறிய வீட்டலகுத் துறைக் கொடுகடன், 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 25.4 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்ததுடன் இது 2025இன் இரண்டாம் காலாண்டிறுதியில் பதிவுசெய்யப்பட்ட 14.8 சதவீத ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியை விட கணிசமான அதிகரிப்பாக விளங்கியது. கடந்த இரு ஆண்டுகாலமாக வீட்டலகுத் துறைக்கான கொடுகடன் வளர்ச்சியில் ஏற்பட்ட நிலையான உயர்வடைதலைத் தொடர்ந்து, ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி வீதமானது 2026இன் முதலாம் காலாண்டிறுதியில் பதிவுசெய்யப்பட்ட 28.0 சதவீதத்திலிருந்து 2026இன் இரண்டாம் காலாண்டிறுதியில் 25.4 சதவீதத்திற்கு தளர்வடைந்தது. எனினும், கொடுகடன் வளர்ச்சி உயர்வடைந்து காணப்பட்டது. வீட்டலகுக்கான கொடுகடன் தொடர் விரிவாக்கமானது வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள்[7] ஆகிய இரண்டிலுமிருந்தான கடன்வழங்கலினால் ஆதரவளிக்கப்பட்டது. வீட்டலகுக்கான கொடுகடனின் முக்கிய மூலமாக வங்கித்தொழில் துறைக் காணப்பட்டு, 2026இன் இரண்டாம் காலாண்டிறுதியில் மொத்த வெளிநின்ற தொகையில் 62.5 சதவீதத்திற்கு வகைகூறியது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட கொடுகடன் பங்கு அதிகரித்து, வீட்டலகுத் துறைக் கடன்வழங்கலில் அவற்றின் வளர்ந்துவரும் பங்களிப்பினைப் பிரதிபலித்தது. முன்னோக்குகையில், மோட்டார் வாகன நிதியளித்தல் மற்றும் தங்கத்தினால் பிணையுறுதியளிக்கப்பட்ட கடன்வழங்கல்[8] மீது மேலும் கடுமையானப் பெறுமதிக்கான கடன் விகிதத்தை நடைமுறைப்படுத்துவதனூடாக பேரண்டப்பொருளாதார கொள்கை இறுக்கமான நாணய நிலைமைகள் மற்றும் என்பன வீட்டலகுத் துறைக் கொடுகடன் வளர்ச்சியின் படிப்படியான மிதமடைதலுக்கு பங்களிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், வீட்டலகுக் கொடுகடனின் இவ் உயர் விரிவாக்கம், கடந்த ஒவ்வொரு நான்கு காலாண்டுகளில் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி 20 சதவீதத்தை விஞ்சியமையானது வீட்டலகுகளின் படுகடன் சுமையையும் படுகடன் தீர்ப்பனவு இயலாற்றலையும் நிதியியல் உறுதிப்பாட்டு கண்ணோட்டத்திலிருந்து

5 ஒப்பீட்டு நோக்கங்களுக்காக, அடமான முற்பணங்கள்.்.தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்கள் மற்றும் வங்கி உத்தரவாதங்கள், நாணயக் கடிதங்கள் உள்ளிட்ட ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகைகள் பகுப்பாய்விலிருந்து விலக்கப்பட்டன. எனினும், கொடு-கடன் தகவல் பணியகத்தின் தரவுகள் குத்தகைச் சொத்தப்பட்டியல்களுடன் தொடர்புடைய ஈட்டப்படாத வட்டியை உள்ளடக்குகின்றதுடன் தனிப்பட்ட வாடிக்கையாளர்களின் கணக்கிலிருந்து நீக்கப்பட்ட கடன்களையும் உள்ளடக்கியிருக்கலாம்.

6 முறையான நிதியியல் துறை கடன்வழங்கல் உரிமம்பெற்ற வங்கிகள், நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக் கம்பனி போன்றவற்றின் கடன்வழங்கலை உள்ளடக்குகின்றது.

7 வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் நிதிக் கம்பனிகளையும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக் கம்பனியையும் உள்ளடக்குகின்றன. ,ந்தக் குத்தகை கம்பனியின் பதிவு யூன் 2026 >ல் ,ரத்து செய்யப்பட்டது.

8 தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கல் மீதான றுக்கமான பெறுமதிக்கான கடன் விகிதத் தேவைப்பாடுகள் வீட்டலகுக் கொடுகடன் வளர்ச்சியில் மிதமடைதலுக்குப் பங்களிக்குமென எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும், கொடுகடன் தகவல் பணியகம் அதன் தரவுதளத்தினுள் அடகுக்கடன் தொடர்பான தரவுகளை ,ணைக்கின்ற செயன்முறையில் ,ன்னும் ஈடுப்பட்டுள்ளமையினாலும் அத்தகைய தரவுகள் அனைத்து நிதியியல் நிறுவனங்களினாலும் தற்போது சீரான முறையில் அறிக்கையிடப்படவில்லை என்பதனாலும் தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்கள் தற்போதைய பகுப்பாய்வில் உள்ளடக்கப்படவில்லை.

வரைபடம் 4.1 வீட்டலகுத்துறை கொடுகடன்




மூலம்: இலங்கை கொடுகடன் தகவல் பணியகம்

வரைபடம் 4.2 வீட்டலகுத்துறை கொடுகடனின் உள்ளடக்கம் (%)




மூலம்: இலங்கை கொடுகடன் தகவல் பணியகம்

**வரைபடம் 4.3 மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான வீட்டலகுத்துறையின் கொடுகடன்கள்**




மூலம்: இலங்கை கொடுகடன் தகவல் பணியகம்
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

**வரைபடம் 4.5 வீட்டலகுத்துறை கொடுகடன் தரம்**




மூலம்: இலங்கை கொடுகடன் தகவல் பணியகம்

உன்னிப்பாக கண்காணிப்பதன் முக்கியத்துவத்தைக் காட்டுகின்றது.

**வீட்டலகுக் கொடுகடனில் நிலையான விரிவாகத்துடன் இணைந்து வீட்டலகுத் துறை கடன்சுமை அதிகரித்தபோதிலும், அது வரலாற்று ரீதியான சராசரிக்கு[9] கீழேயே காணப்பட்டது.** வீட்டலகுக் கடன்சுமையினைப் பரந்தளவில் குறிக்கும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான வீட்டலகுத் துறைக் கொடுகடன் விகிதம்[10], 2024 நடுப்பகுதியிலிருந்து அவதானிக்கப்பட்ட அதன் மேல்நோக்கிய போக்கினைத் தொடர்ந்தும் எடுத்துக்காட்டியது.

9 2021இன் முதலாம் காலாண்டு தொடக்கம் எண்கணித சராசரியானது மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான கொடுகடனின் வரலாற்றுச் சராசரியாகப் பயன்படுத்தப்படுகின்றது.

**வரைபடம் 4.4 2026 யூன் இறுதியில் வீட்டலகுத்துறை கடன்களின் புவியியல் பரம்பல்**




மூலம்: இலங்கை கொடுகடன் தகவல் பணியகம்

**வீட்டலகுக் கொடுகடனளவு புவியியல் ரீதியாக மேல் மாகாணத்தில் செறிவடைந்து காணப்பட்டது. மொத்த வீட்டலகுத் துறைக் கொடுகடனில் கிட்டத்தட்ட அரைப்பங்கிற்கு மேல் மாகாணம் தொடர்ந்தும் வகைகூறியதுடன் தலைக்குரிய வீட்டலகுக் கொடுகடனில் அனைத்து மாகாணங்களிடையே உயர்ந்தபட்சத்தினையும் பதிவுசெய்தது.** வட மாகாணம் மிகக் குறைந்த பங்கிற்கு வகைக்கூறியதுடன் மீதமுள்ள கொடுகடன் ஏனைய மாகாணங்களுக்கிடையில் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. இப்புவியியல் ரீதியிலான அமைப்பு பல ஆண்டுகளாக பரந்தளவில் மாற்றமின்றிக் காணப்படுகின்றது. ஆகையினால், தொடர்ச்சியாகக் காணப்படும் புவியியல் ரீதியிலான செறிவானது ஏனைய மாகாணங்களின் வீட்டலகுகளின் நிதியியல் வசதிக்குட்படுத்தல் மற்றும் வருமான மட்டத்தைப் பாதிக்கக்கூடும்.

**வீட்டலகுக் கடன்வழங்கலில் தொடர்ச்சியான விரிவாக்கத்திற்கு மத்தியில், வீட்டலகுத் துறையின் கடன் மீள்கொடுப்பனவு 2026இன் முதலரைப்பகுதியில் மேலும் மேம்பட்டது.** ஒரு நாளேனும் நிலுவையல்லாக் கடன்கள், பெரும்பான்மையான மொத்த வீட்டலகுத் துறைக்கான கடன்களுக்கு தொடர்ந்தும் வகைகூறியதுடன் இப்பங்கு, முன்னைய ஆண்டின் 65.0 சதவீதத்திலிருந்து 2026இன் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 67.7 சதவீதமாக அதிகரித்தது. அதற்கேற்ப, நிலுவையிலுள்ள கடன்களின் பங்கு வீழ்ச்சியடைந்து, வங்கித்தொழில் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறைகள் ஆகிய இரண்டினதும் மேம்பட்ட மீள்கொடுப்பனவுச் செயலாற்றத்தைப் பிரதிபலித்தது. வீட்டலகுத் துறைக்கான

10 வீட்டலகுத் துறையின் மொ.உ.உற்பத்திக்கான கொடுகடன் விகிதமானது வீட்டலகுத் துறைக்கு வழங்கப்பட்ட நிலுவையிலுள்ள கடன்களின் அளவை கடந்த நான்கு காலாண்டுகளின் பெயரளவு மொ.உ.உற்பத்தியின் மொத்தத்தினால் வகுத்து கணக்கிடப்படும் விகிதம் ஆகும்.

**வரைபடம் 4.6** வீட்டலகுத்துறை கடன்படுநர்களின் சராசரி கொடுகடன் மதிப்பெண்கள்




மூலங்கள்: மத்திய வங்கி கணிப்பீடுகள்
இலங்கை கொடுகடன் தகவல் பணியகம்

**வரைபடம் 4.7** கொடுகடன் தகவல் பணியகத்தின் மதிப்பெண்களின் ஒட்டுமொத்த நிறையேற்றப்பட்ட சராசரி




மூலங்கள்: மத்திய வங்கி கணிப்பீடுகள்
இலங்கை கொடுகடன் தகவல் பணியகம்

கொடுகடனில் தொடர்ந்து ஏற்பட்ட விரிவாக்கம், இதுவரையில், ஒட்டுமொத்தமாக கடன்பாட்டாளர்களின் மீள்கொடுப்பனவு இயலாற்றலில் பரவலான பாதிப்பை ஏற்படுத்தவில்லை என்பதை மீள்கொடுப்பனவு நடத்தையிலுள்ள இவ் அபிவிருத்திகள் சுட்டிக்காட்டுகின்றன.

**கடன்பாட்டாளர்களின் நிறையேற்றப்பட்ட சராசரிக் கொடுகடன் தகவல் பணியக மதிப்பெண்களினால்[11] அளவிடப்பட்டவாறு, வீட்டலகுத் துறையின் கடன்பாட்டாளரின் கடன் மீள்கொடுப்பனவு இயலாற்றல் 2026இன் முதலரைப் பகுதியில் மேலும் மேம்பட்டிருந்த போதிலும், ஒட்டுமொத்த கடன்பாட்டாளர் தோற்றப்பாடு உயர் இடர்நேர்வு வகையிலேயே காணப்பட்டது.** நிறையேற்றப்பட்ட சராசரி கொடுகடன் தகவல் பணியக மதிப்பெண் முன்னைய ஆண்டின் தொடர்புடைய காலாண்டில் பதிவுசெய்யப்பட்ட 511.6 இலிருந்து 2026இன் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் 538.2 ஆக அதிகரித்தது. சராசரி மதிப்பெண்களின் அதிகரிப்பானது வீட்டலகுத் துறைக் கடன்பாட்டளர்களின் கடன் மீள்கொடுப்பனவு இயலாற்றல்களில் ஏற்பட்ட படிப்படியான முன்னேற்றத்தை எடுத்துக்காட்டுகின்றது. வங்கித்தொழில் துறையினுள் கடன்பாட்டாளர்கள் ஒப்பீட்டளவில் வலுவான கொடுகடன் தோற்றப்பாடுகளைத் தொடர்ந்தும் காண்பித்ததுடன் 2026இன் இரண்டாம் காலாண்டிறுதியளவில் கொடுகடன் தகவல் பணியக மதிப்பெண் சராரியாக 557.2 ஆக அதிகரித்து, துறையினை சராசரி இடர்நேர்வு வகையினுள் நிலைநிறுத்தியது. இதற்கு புறம்பாக, அண்மைய காலாண்டுகளில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் கடன்பாட்டளர்கள் தொடர்ச்சியான முன்னேற்றத்தையடைந்திருப்பினும், 497.4இனைக் கொண்ட

11 கொடுகடன் தகவல் பணியக மதிப்பெண் என்பது கொடுகடன் தகவல் பணியகத்தினால் கணக்கிடப்படும் கொடுகடன் தரமிடலாகும். இது கொடுகடன் வரலாறு போன்ற பல்வேறு பிரமாணங்களின் அடிப்படையில் கடன்பாட்டாளர்களை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. மதிப்பெண் 250 தொடக்கம் 900 வரை இருக்கின்றது. 250-500 வரையான வீச்சில் கொடுகடன் மதிப்பெண்களைக் கொண்ட கடன்பாட்டளர்கள் மிகவும் உயர்ந்தளவு இடர்நேர்வுமிக்கவர்களாகவும் 500 முதல் 550 வரை உள்ளவர்கள் உயர் இடர்நேர்வுமிக்கவர்களாகவும் 550 முதல் 580 வரை உள்ளவர்கள் சராசரி இடர்நேர்வுமிக்கவர்களாகவும் 580 முதல் 610 வரை உள்ளவர்கள் குறைந்த இடர்நேர்வுமிக்கவர்களாகவும் கருதப்படுகின்றனர் அத்துடன் 610 முதல் 900 வரையான கொடுகடன் மதிப்பெண்ணைக் கொண்டவர்கள் மிகக் குறைந்த இடர்நேர்வுமிக்கவர்களாகவும் கருதப்படுகின்றனர். நிறையேற்றப்பட்ட சராசரிக் கொடுகடன் தகவல் பணியக மதிப்பெண், ஒவ்வொரு இடர்நேர்வு வகையின் கடன்பாட்டளர்களையும் கொடுகடன் தகவல் பணியகத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற ஒவ்வொரு இடர்நேர்வு வகையின் சராசரிக் கொடுகடன் மதிப்பெண்ணையும் அடிப்படையாகக் கொண்டு பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களத்தினால் கணிப்பிடப்படுகின்றது.

**வரைபடம் 4.8** கொடுகடன் மதிப்பெண்ணின் அசைவு - கா2 2025 எதிர் கா2 2026




கொடுகடன் தகவல் பணியக உயர் மதிப்பெண் புள்ளிகள் தாழ்ந்த கொடுகடன் இடர்நேர்வினைக் குறிக்கும்

மூலங்கள்: மத்திய வங்கி கணிப்பீடுகள்
இலங்கை கொடுகடன் தகவல் பணியகம்.

வரைபடம் 4.9 2026 யூன் இறுதியில் வீட்டலகுத்துறை கடன்படுநர்களின் கொடுகடன் இடர்நேர்வுப் பரம்பல்




மூலம்: இலங்கை கொடுகடன் தகவல் பணியகம்

தாழ்ந்தளவிலான சராசரி மதிப்பெண்ணைப் பதிவுசெய்து, மிக உயர் இடர்நேர்வு வகையினுள் காணப்பட்டனர். மேலும், சராசரிக் கொடுகடன் மதிப்பெண்கள் பல்வேறு இடர்நேர்வு வகைகளில் பொதுவாக மேம்பட்டமை, வீட்டலகுக் கடன்பாட்டாளர் கடன் மீள்கொடுப்பனவு இயலாற்றலில் பரந்த அடிப்படையிலான முன்னேற்றத்தை எடுத்துக்காட்டின. நிறையேற்றப்பட்ட சராசரி கொடுகடன் தகவல் பணியக மதிப்பெண்கள் 2025இன் இரண்டாம் காலாண்டிற்கும் 2026இன் இரண்டாம் காலாண்டிற்குமிடையிலான சராசரி இடர்நேர்வு வகையைத் தவிர ஏனைய அனைத்து இடர்நேர்வு வகைகளிலும் அதிகரித்து காணப்பட்டன. ஒட்டுமொத்தமாக, இம்மாற்றங்கள் பல்வேறு இடர்நேர்வு நிலைகளிலுள்ள கடன்பாட்டாளர்களின் கொடுகடன் தோற்றப்பாடுகளில் பொதுவான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டுகின்றன.

**வீட்டலகுத் துறைக் கடன்பாட்டாளர்களின் கொடுகடன் இடர்நேர்வு வகைகளிடையேயான பரவலானது வங்கித்தொழில் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறைகளுக்கிடையே தெளிவான வேறுபாடுகள் இருப்பதைத் தொடர்ந்தும் வெளிப்படுத்தியது.** வங்கித்தொழில் துறையினுள் வீட்டலகுத் துறை கடன்பாட்டாளர்களில் பெரும்பாலானோர், அவர்களது கொடுகடன் தகவல் பணியக மதிப்பெண்களின் அடிப்படையில் தாழ்ந்த மற்றும் மிகத் தாழ்ந்தளவிலான இடர்நேர்வு வகைகளில் செறிவடைந்து காணப்பட்டதோடு இது ஒப்பீட்டளவில் வலுவான கடன்பாட்டாளர் கொடுகடன் தோற்றப்பாட்டை எடுத்துக்காட்டியது. எனினும், வங்கித்தொழில் துறையினுள் 24.1 சதவீதக் கடன்பாட்டாளர்கள் உயர்ந்த மற்றும் மிக உயர்ந்த இடர்நேர்வு வகைகளில் காணப்பட்டமை, ஒப்பீட்டளவில் நலிவடைந்த கடன் மதிப்பெண்களைக் கொண்ட குறிப்பிடத்தக்க கடன்பாட்டாளர் பிரிவொன்று இருப்பதனை எடுத்துக்காட்டுகிறது. இதற்கு புறம்பாக, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையானது ஒப்பீட்டளவில் மிகவும் இடர்நேர்வுமிக்க கடன்பாட்டாளர் தோற்றப்பாட்டைத் தொடர்ந்து வெளிப்படுத்தியது. இதில், 52.4 சதவீதக் கடன்பாட்டாளர்கள் உயர்வான மற்றும் மிகவும் உயர்வான இடர்நேர்வுமிக்க வகைகளில் செறிவுபடுத்தப்பட்ட அதேவேளை 31.6 சதவீத கடன்பாட்டாளர்கள் மாத்திரமே தாழ்ந்த மற்றும் மிகத் தாழ்ந்த இடர்நேர்வு வகைகளில் வகைப்படுத்தப்பட்டிருந்தனர். ஒட்டுமொத்தமாக, வீட்டலகுத் துறை கடன்பாட்டாளர்களின் அவதானிக்கப்பட்ட பரவலானது இடர்நேர்வு வகைகளில் பரந்தளவில் நிலையாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், ஒப்பீட்டளவில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையில் காணப்படும் உயர்ந்த இடர்நேர்வு வகைகளின் பாரிய பங்கானது நிதியியல் உறுதிப்பாட்டின் கண்ணோட்டத்தில் கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயமாகத் தொடர்ந்தும் காணப்படுகிறது.

## நிறுவன ரீதியிலான துறைக்கான கொடுகடன் இடர்நேர்வு மதிப்பீடு

**நிறுவன ரீதியிலான துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன், 2026இன் முதலரைப் பகுதியில் குறிப்பிடத்தக்க வேகத்தில் தொடர்ந்தும் விரிவடைந்தது.** நிதியியல் துறையின் மொத்தக் கடன்வழங்கலில் 58.2 சதவீதத்திற்கு வகைகூறிய நிறுவன ரீதியிலான துறைக் கொடுகடனானது முன்னைய ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 16.3 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2026இன் இரண்டாம் காலாண்டிறுதியில் ஆண்டிற்கு ஆண்டு 24.9 சதவீதத்தினால் அதிகரித்தது. நிறுவன ரீதியிலான துறைக் கடன்வழங்கலில் வங்கிகள் தொடந்தும் ஆதிக்கம்செலுத்தி, 2026இன் இரண்டாம் காலண்டிறுதியில் மொத்த வெளிநின்றக் கொடுகடனில் 96.2 சதவீதத்திற்கு வகைகூறிய அதேவேளை வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் சிறிதளவிலான பங்கிற்கு மாத்திரம் வகைகூறின.

வரைபடம் 4.10 நிறுவனத்துறை கொடுகடன்




மூலம்: இலங்கை கொடுகடன் தகவல் பணியகம்

வரைபடம் 4.11 நிறுவனத்துறை கொடுகடன் உள்ளடக்கம் (%)




மூலம்: இலங்கை கொடுகடன் தகவல் பணியகம்

வரைபடம் 4.13 2026 யூன் இறுதியில் நிறுவன கடன்படுநர்களின் கொடுகடன் இடர்நேர்வுப் பரம்பல்




மூலம்: இலங்கை கொடுகடன் தகவல் பணியகம்

**கடன்வழங்கல் தொடர்ந்து விரிவடைந்தபோதிலும், 2026இன் முதலரைப் பகுதியில் நிறுவன ரீதியிலான துறையினுள் கடன் மீள்கொடுப்பனவு மேலும் மேம்பட்டது.** ஒரு நாளேனும் நிலுவையல்லாக் கடன்களின் பங்கு முன்னைய ஆண்டின் 75.2 சதவீதத்திலிருந்து 2026இன் இரண்டாம் காலாண்டிறுதியில் 79.2 சதவீதத்திற்கு அதிகரித்த அதேவேளை நிலுவைகளுடன் கூடிய கடன்களின் பங்கு தொடர்புடைய காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தது. நிறுவன ரீதியிலான துறைக் கொடுகடனில் தொடர்ச்சியான விரிவாக்கம், கடன்பாட்டாளர் கொடுகடன் தரத்தின் பரந்த அடிப்படையிலான நலிவடைதலுடன் தொடர்புபடவில்லையென இவ்வபிவிருத்திகள் எடுத்துக்காட்டுகின்றன.

**வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையை விட வங்கித்தொழில் துறையில் நிறுவன ரீதியிலான துறைக் கடன்பாட்டாளர்களின் கொடுகடன் இடர்நேர்வு பரவல் மேம்பட்டதாகக் காணப்பட்டது.** வங்கித்தொழில் துறையில் நிறுவன ரீதியிலான கடன்பாட்டளர்கள் பிரதானமாக தாழ்ந்த மற்றும் மிகவும் தாழ்ந்த இடர்நேர்வு வகைகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட அதேவேளை 21.6 சதவீதமானோர் உயர்ந்த மற்றும் மிகவும் உயர்ந்த இடர்நேர்வு வகைகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டனர். இதற்கு மாறாக, 53.9 சதவீதம் கொண்ட வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறைக் கடன்பாட்டாளர்கள் உயர்ந்த மற்றும் மிகவும் உயர்ந்த இடர்நேர்வு வகைகளில் காணப்பட்டதுடன் 32.3 சதவீதமானோர் மாத்திரம் தாழ்ந்த மற்றும் மிகவும் தாழ்ந்த இடர்நேர்வு வகைகளில் காணப்பட்டனர். ஒட்டுமொத்தமாக, 67.6 சதவீதம் கொண்ட நிறுவன ரீதியிலான துறைக் கடன்பாட்டாளர்கள் தாழ்ந்த மற்றும் மிகவும் தாழ்ந்த இடர்நேர்வு வகைகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டமை, கடன்பாட்டாளர் இடர்நேர்வு தோற்றப்பாடு பொதுவாக வலுவானதாக இருப்பதை எடுத்துக்காட்டுகின்றது.

வரைபடம் 4.12 நிறுவனத்துறை கொடுகடன் தரம்




மூலம்: இலங்கை கொடுகடன் தகவல் பணியகம்

## 4.2. பட்டியலிடப்பட்ட நிதியல்லாக் கூட்டாண்மைகளின் இடர்நேர்வு மதிப்பீடு

இப்பகுதி, நிதியல்லாக் கூட்டாண்மைத் துறையிலிருந்து தோற்றம்பெறக்கூடிய இடர்நேர்வுகள் மற்றும் சாத்தியமான பாதிப்பிற்குள்ளாகும் தன்மைகளையும் நிதியியல் உறுதிப்பாட்டின் மீது அவை ஏற்படுத்தும் தாக்கங்களையும் மதிப்பீடுசெய்கின்றது. இம்மதிப்பீடானது 2026 யூன் இறுதியிலுள்ளவாறு கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட 204 கம்பனிகளின் நிதியியல் செயலாற்றத்தினை அடிப்படையாகக் கொண்டதாகும். பட்டியலிடப்பட்ட கம்பனிகள் பரந்த நிதியல்லாக் கூட்டாண்மைத் துறையினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அளவுகோலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு,

அத்துறையில் தோற்றம்பெறக்கூடிய இடர்நேர்வுகள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய தன்மைகள் மற்றும் அவை நிதியியல் முறைமைக்கு ஊடுகடத்தக்கூடிய சாத்தியப்பாடு தொடர்பான நுண்ணோக்குகளை வழங்குகின்றன.

### 2026இன் முதலரைப் பகுதியில் பட்டியலிடப்பட்ட நிதியல்லாக் கூட்டாண்மைகளின் நிதியியல் செயலாற்றம்

**2026இன் முதலரைப் பகுதியில் பட்டியலிடப்பட்ட நிதியல்லாக் கூட்டாண்மைத் துறையானது வருவாயில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமொன்றைப் பதிவுசெய்து, வலுவான வியாபார நடவடிக்கையை எடுத்துக்காட்டியது.** பட்டியலிடப்பட்ட நிதியல்லாக் கூட்டாண்மைகளின் வருவாயானது முன்னைய ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 7.6 சதவீத ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2026இன் முதலரைப்பகுதியில் ஆண்டிற்கு ஆண்டு 22.0 சதவீதத்தினால் விரிவடைந்தது. மேலும், வருமானத்தில் வளர்ச்சியினைப் பதிவுசெய்த நிதியல்லாக் கூட்டாண்மைகளின் விகிதம், முன்னைய ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 59.8 சதவீதத்திலிருந்து 2026இன் முதலரைப் பகுதியில் 67.2 சதவீதத்திற்கு அதிகரித்து, வியாபார நடவடிக்கைகளின் தொடர்ச்சியான விரிவாக்கத்தினால் ஆதரவளிக்கப்பட்ட, துறையின் வருவாயின் முன்னேற்றம் ஒப்பீட்டளவில் பரந்த அடிப்படையில் காணப்பட்டதென எடுத்துக்காட்டியது.

**வருவாய் வளர்ச்சியானது 2026இன் முதலரைப் பகுதியில் ஊர்திகள், எரிசக்தி மற்றும் வலு தயாரிப்பு துறைகளினால் பிரதானமாக முன்னெடுக்கப்பட்டது.** வாகனத்துடன் தொடர்புடைய இறக்குமதிக் கட்டுப்பாடு தளர்ச்சியின் பின்னரான வியாபார நடவடிக்கையின் விரிவாக்கத்தினால் துணையளிக்கப்பட்டு ஊர்திகள் துறையானது ஒட்டுமொத்த வருவாய் வளர்ச்சிக்கு பாரியளவில் பங்களிப்புச்செய்து, 138.9 சதவீதம் கொண்ட மிக உயர்ந்த ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியனைப் பதிவுசெய்தது. உயர்வடைந்த புவிசார்அரசியல் பதற்றங்களுக்கு மத்தியில் அதிகரித்த வலு விலைகளைப் பிரதிபலித்து, எரிசக்தி மற்றும் வலுத் துறையும் வருவாய்க்கு குறிப்பிடத்தக்களவில் பங்களிப்புச் செய்தது. அதேவேளை, மீளாய்விற்குரிய காலப்பகுதியில் கட்டடவாக்கம் மற்றும் பொறியியல் துறைகள் தவிர்ந்த ஏனைய அனைத்து துறைகளும் ஒட்டுமொத்த வருவாய் வளர்ச்சிக்கு சாதமாகப் பங்களிப்புச்செய்ததோடு இதன்மூலம் பட்டியலிடப்பட்ட நிதியல்லாக் கூட்டாண்மைத் துறையினால் பதிவுசெய்யப்பட்ட வருவாயில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு ஆதரவளித்தது.

**2026இன் முதலரைப் பகுதியில் பட்டியலிடப்பட்ட நிதியல்லாக் கூட்டாண்மைகளிடையே கூட்டு இலாபத்தன்மை நலிவடைந்த அதேவேளை தேறிய இலாப வளர்ச்சி இடை சிறிதளவு மேம்பட்டு, இலாபச் செயலாற்றத்தில் சாதகமான மாற்றத்தை எடுத்துக்காட்டியது.** கூட்டுத் தேறிய இலாபமானது 2025இன் தொடர்புடைய காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 65.2 சதவீத[12] ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சிக்கு எதிராக 2026இன் முதலரைப் பகுதியில் ஆண்டிற்கு ஆண்டு 6.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. நிதியல்லாக் கூட்டாண்மைகளின் தேறிய இலாபத்தில் அதிகரிப்பொன்றைப் பதிவுசெய்த பங்கானது முன்னைய ஆண்டின் 56.4 சதவீதத்திலிருந்து 55.9 சதவீதத்திற்கு சிறிதளவில் வீழ்ச்சியடைந்தது. எவ்வாறெனினும், பெரும்பாலான நிதியல்லாக் கூட்டாண்மைகள் தேறிய இலாபத்தில் வளர்ச்சியினைப் பதிவுசெய்தன. எனினும், பல்வேறு பாரியளவிலான கூட்டாண்மைகள்

12 2025இன் முதலரைப் பகுதியில், தேறிய இலாபத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு பன்முகப்படுத்தப்பட்ட வியாபாரங்களைக் கொண்ட துறையின் பாரியளவிலான கூட்டாண்மையொன்றினால் பதிவுசெய்யப்பட்ட ஒரு முறை மாத்திரம் கிடைத்த இலாபத்தினால் பிரதானமாகத் தூண்டப்பட்டது.

வரைபடம் 4.14 நிதியல்லா கூட்டாண்மைகளின் வருமானம் மற்றும் வருமானத்தின் வளர்ச்சி




மூலம்: கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

வரைபடம் 4.15 வருமானத்தில் ஓர் அதிகரிப்பை அறிக்கையிட்ட நிதியல்லா கூட்டாண்மைகளின் பங்கு




மூலம்: கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

வரைபடம் 4.16 வருமான வளர்ச்சியில் துறைசார் பங்களிப்பு




மூலம்: கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

வரைபடம் 4.18 தேறிய இலாபத்தில் அதிகரிப்பை அறிக்கையிட்ட நிதியல்லா கூட்டாண்மைகளின் பங்கு




மூலம்: கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

பதிவுசெய்த இலாபச் சுருக்கங்கள் ஏனைய பல நிதியல்லாக் கூட்டாண்மைகளிடையே அவதானிக்கப்பட்ட இலாப மேம்பாட்டை விட அதிக தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதை கூட்டுத் தேறிய இலாபத்தில் ஏற்பட்ட ஒட்டுமொத்த வீழ்ச்சியானது எடுத்துக்காட்டுகிறது.

**2026இன் முதலரைப் பகுதியில் தொழிற்பாட்டு இலாபத்தன்மை சிறிதளவு வீழ்ச்சியடைந்தது.** வட்டி, வரிகள், பெறுமதித்தேய்வு மற்றும் மதிப்புக் குறைப்பு போன்றவற்றுக்கு முன்னைய வருமானம் 2026இன் முதலரைப் பகுதியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 0.4 சதவீதத்தினால் சிறிதளவு வீழ்ச்சியடைந்து, முன்னைய ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஆண்டிற்கு ஆண்டு 33.4 சதவீத வளர்ச்சியினால் திரும்பலடைந்திருந்தது. இச்சிறிதளவு வீழ்ச்சி இருந்தபோதிலும், வட்டி, வரிகள், பெறுமதித்தேய்வு மற்றும் மதிப்புக் குறைப்பு போன்றவற்றுக்கு முந்தைய வருமானங்களின் இடை 2026இன் முதலரைப் பகுதியில் சாதமாக வளர்ச்சியடைந்து, கூட்டுத் தொழிற்பாட்டு இலாபத்தன்மையின் வீழ்ச்சி பட்டியலிடப்பட்ட நிதியல்லாக் கூட்டாண்மைகளிடையே பரவலாக ஏற்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. தொழிற்பாட்டு இலாபத்தன்மையின் மிதமடைதலானது நிதியல்லாக் கூட்டாண்மைகளிடையே பரவலாகக் காணப்படாதபோதிலும், பாதிக்கப்படக்கூடிய கூட்டாண்மைகளிடையே நிலவும் தொடர்ச்சியான வருமான அழுத்தங்கள் அவற்றின் படுகடன் தீர்ப்பனவு இயலாற்றலை நலிவடையச்செய்து நிதியியல் துறையில் உயர்ந்த கொடுகடன் இடர்நேர்விற்கு பங்களிக்கும்.

**2026இன் முதலரைப் பகுதியில் தேறிய இலாபத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு உயர்ந்தளவான விற்பனைச் செலவுகளும் தொழிற்பாட்டுச் செலவுகளும் பிரதான காரணங்களாக**

வரைபடம் 4.17 நிதியல்லா கூட்டாண்மைகளின் தேறிய இலாபமும் தேறிய இலாப வளர்ச்சியும்




மூலம்: கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

வரைபடம் 4.19 நிதியல்லா கூட்டாண்மை நிறுவனங்களின் வட்டி , வரி, தேய்மானம் பெறுமதி குறைப்புக்கு முன்னரான வருமானம் மற்றும் அதன் வளர்ச்சி




மூலம்: கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

வரைபடம் 4.20 தேறிய இலாபத்திற்கான காரணிகள்




மூலம்: கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

வரைபடம் 4.22 சராசரிப் படுகடன்களின் சதவீதமாக வட்டி செலவினங்கள்




மூலங்கள் : கொழும்பு பங்குப் பரிவர்த்தனை
இலங்கை மத்திய வங்கி

**காணப்பட்டன.** இலாபத்தன்மையில் ரூ.199.0 பில்லியன் கொண்ட வருவாய் வளர்ச்சி சாதமானத் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்த போதிலும், விற்பனைச் செலவில் ஏற்பட்ட ரூ.152.3 பில்லியன் அதிகரிப்பினால் இது பாரியளவில் ஈடு செய்யப்பட்டது. அதிகரித்த விநியோக, நிர்வாக மற்றும் ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள் தேறிய இலாபத்தை மொத்தமாக ரூ.52.3 பில்லியனினால் மேலும் குறைத்தன. அதேவேளை, நிதி வருவாய் மற்றும் ஏனைய வருவாய்களிலிருந்தான சாதகமான பங்களிப்புக்கள் உயர்ந்தளவான தொழிற்பாட்டுச் செலவுகள், நிதிச் செலவுகள் மற்றும் வரிகள் போன்றவற்றின் மோசமான தாக்கங்களை ஈடு செய்வதற்கு போதுமானதாகக் காணப்படவில்லை. இதன்விளைவாக, கூட்டுத் தேறிய இலாபமானது 2025இன் முதலரைப் பகுதியில் ரூ.145.7 பில்லியனிலிருந்து 2026இன் முதலரைப் பகுதியில் ரூ.136.8 பில்லியனிற்கு வீழ்ச்சியடைந்தது.

வரைபடம் 4.21 இலாபத்தன்மை குறிகாட்டிகள்




மூலம்: கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

**நிதியல்லாக் கூட்டாண்மைகளிடையே இலாபத்தன்மை சீரற்றுக் காணப்பட்டதுடன் கூட்டு இலாபத்தன்மைக் குறிகாட்டிகள் 2026இன் முதலரைப் பகுதியில் ஓரளவு நலிவடைந்திருந்தன.** தேறிய இலாப எல்லை மற்றும் பங்குரிமை மீதான திரும்பல் 2026இன் முதலரைப் பகுதியில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்த அதேவேளை மொத்த இலாப எல்லையும் சொத்துக்கள் மீதான திரும்பலும் மிதமடைந்து காணப்பட்டன. அதேவேளை, சந்தை வட்டி வீதங்களில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு மத்தியில், சராசரிப் படுகடனில் நிதிச் செலவுகளின் பங்கு கூட்டு மற்றும் பரம்பலின் இடை ஆகிய இரு அளவுகளிலும் சிறிதளவில் அதிகரித்தது. இலாபத்தன்மை நலிவடைதலும் கடன்பாட்டுச் செலவுகள் அதிகரித்தலும் ஒரேநேரத்தில் நிகழ்கின்றமையானது நிதியியல் ரீதியாக பாதிக்கப்படக்கூடிய நிதியல்லாக் கூட்டாண்மைகளின் படுகடன் தீர்ப்பனவு இயலாற்றலை மேலும் குறைக்கக்கூடும்.

### கூட்டாண்மைத் துறை கடன்மீள்கொடுப்பனவு இயலாற்றல்

**முடுக்கி விகிதத்தில் சிறிதளவு முன்னேற்றம் காணப்பட்ட போதிலும், கூட்டு இலாபத்தன்மையின் மிதமடைதலுடன் இசைந்துசெல்லும் வகையில், பட்டியலிடப்பட்ட நிதியல்லாக் கூட்டாண்மைகளின் படுகடன் தீர்ப்பனவு இயலாற்றல் 2026இன் முதலரைப் பகுதியில் மிதமடைந்தது.** வட்டி காப்பு விகிதமானது 2025இன் முதலரைப் பகுதியின் 4.2 மடங்குகளிலிருந்து 3.7 மடங்குகளுக்கு வீழ்ச்சியடைந்து, பட்டியலிடப்பட்ட நிதியல்லாக் கூட்டாண்மைகளின் தொழிற்பாட்டு வருவாய்களிலிருந்து வட்டிக் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கான இயலாற்றல் மிதமடைந்துள்ளதை எடுத்துக்காட்டியது. படுகடன் கடப்பாடுகளுடன் தொடர்புடைய வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சியினைப் பிரதிபலித்து தேறிய இலாபமும் படுகடன் கடப்பாடுகளின் பங்கொன்றாக

குறைவடைந்தது. இதற்கு புறம்பாக, பங்குரிமைக்கான படுகடன் விகிதம் வீழ்ச்சியடைந்து, பட்டியலிடப்பட்ட நிதியல்லாக் கூட்டாண்மைத் துறையிடையே கடன் முடுக்கி நிலைமைகளில் சிறிதளவு முன்னேற்றத்தை எடுத்துக்காட்டியது. எவ்வாறெனினும், கூட்டு வட்டி காப்பு விகிதம் ஒன்றுக்கு மேல் போதியளவில் காணப்பட்டதோடு, பட்டியலிடப்பட்ட நிதியல்லாக் கூட்டாண்மைகள் அவற்றின் வட்டி கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு சராசரி அடிப்படையில் போதியளவு தொழிற்பாட்டு வருவாய்களை தொடர்ந்தும் ஈட்டி வருவதை எடுத்துக்காட்டியது.

**நிறுவன மட்டத்தில், பட்டியலிடப்பட்ட நிதியல்லாக் கூட்டாண்மைகளின் மூன்றில் ஒரு பங்கானது 2026இன் முதலரைப் பகுதியில் ஒன்றுக்கும் குறைவான வட்டி காப்பு விகிதமொன்றைப் பதிவுசெய்தது.** கூட்டு வட்டி காப்பு விகிதத்தில் ஏற்பட்ட மிதமடைதலுக்கமைவாக, 2025இன் முதலரைப் பகுதியில் ஒன்றுக்கும் குறைவான வட்டி காப்பு விகிதத்தைக் கொண்ட நிறுவனங்களின் பங்கு 33.8 சதவீதத்திலிருந்து 37.7 சதவீதத்திற்கு அதிகரித்தது. இதற்கமைவாக, பட்டியலிடப்பட்ட நிதியல்லாக் கூட்டாண்மைகளின் மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிகமானவை அவற்றின் வட்டிச் செலவுகளை முழுமையாக ஈடுசெய்வதற்கு போதுமான வட்டி, வரிகளுக்கு முந்தைய வருவாய்களை ஈட்டவில்லை. ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வட்டி காப்பு விகிதத்துடன் நிறுவனங்களின் பங்கு 66.2 சதவீதத்திலிருந்து 62.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருப்பினும், அத்தகைய நிறுவனங்கள் பெரும்பான்மையானவற்றுக்கு தொடர்ந்தும் வகைகூறின. நிதியியல் ரீதியாக பாதிக்கப்படும் தன்மையுடைய நிதியல்லாக் கூட்டாண்மைகள் பிரிவுகளிடையே வட்டித் தீர்ப்பனவு அழுத்தங்கள் தீவிரமடைந்தபோதிலும், பெரும்பாலான நிறுவனங்கள் அவற்றின் வட்டிக் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்குப் போதுமான வட்டி, வரிகளுக்கு முந்தைய வருவாய்களைத் தொடர்ந்தும் ஈட்டி வந்தன.

வரைபடம் 4.24
வட்டிக்காப்பு விகிதத்தின் பிரகாரம் கம்பனிகளின் பரம்பல்




மூலம்: கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

**துறைசார்ந்த வட்டி காப்பு விகிதங்கள், பட்டியலிடப்பட்ட நிதியல்லாக் கூட்டாண்மைத் துறையிடையே படுகடன் தீர்ப்பனவு நிலைமைகளில் உள்ள கணிசமானளவு வேறுபாட்டினை மேலும் எடுத்துக்காட்டின.** உணவு, குடிபானம், புகையிலை மற்றும் உண்மைச் சொத்து போன்றன மிக உயர்ந்த வட்டி காப்பு விகிதங்களைப் பதிவுசெய்து, வட்டிக் கடப்பாடுகளுடன் ஒப்பிடுகையில் வலுவான வருவாய்களைப் பிரதிபலித்தன. இதற்கு மாறாக, வர்த்தகம் மற்றும் விநியோகத் துறை மிகக் குறைந்த வட்டி காப்பு விகிதத்தைப் பதிவு செய்து, ஒன்றுக்கும் குறைவான வட்டி காப்பு விகிதத்தைக் கொண்ட ஒரே துறையாகவும்

வரைபடம் 4.23
பிரதான நிதியியல் செயற்றிறன் குறிகாட்டிகள்




மூலம்: கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

வரைபடம் 4.25
துறைசார் வட்டிக்காப்பு விகிதம்




கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

வரைபடம் 4.26 துறைசார் நிதியியல் செயற்றிறன் குறிகாட்டிகள்



மூலம்: கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

இருந்தது. இது, வட்டிச் செலவுகளை முழுமையாக ஈடுகட்ட ஒட்டுமொத்த வட்டி, வரிகளுக்கு முந்தைய வருவாய்கள் போதுமானதாக இல்லை என்பதை எடுத்தக்காட்டியது. வேறு சில துறைகளிலும் ஒப்பீட்டளவில் நலிவடைந்த வட்டி காப்பு அவதானிக்கப்பட்டதுடன் இது பட்டியலிடப்பட்ட நிதியல்லாக் கூட்டாண்மைத் துறையின் சில பிரிவுகளில் அதிகரித்த படுகடன் தீர்ப்பனவு அழுத்தங்களைச் சுட்டிக்காட்டுகின்றது.

**பட்டியலிடப்பட்ட நிதியல்லாக் கூட்டாண்மை துறையில் வட்டி காப்பு விகிதத்தில் அவதானிக்கப்பட்ட வேறுபாடுகளுக்கு துறைசார் இலாபத்தன்மையும் முடுக்கிக் குறிகாட்டிகளும் பரந்தளவில் ஆதரவளித்தன.** ஒப்பீட்டளவில் தாழ்ந்த படுகடன் பங்குரிமை விகிதங்களுடன் இணைந்து, உணவு, குடிபானம் மற்றும் புகையிலை, மற்றும் உண்மைச் சொத்து போன்ற துறைகள், படுகடன் கடப்பாடுகளுடன் ஒப்பிடுகையில் மிக உயர்ந்த தேறிய இலாபத்தைப் பதிவுசெய்ததோடு, இது அவற்றின் வலுவான வட்டி ஈட்டலினை மேலும் உறுதிப்படுத்துகிறது. இதற்கு மாறாக, வர்த்தகமும் விநியோகமும் அவற்றின் வட்டி காப்பு விகிதம் ஒன்றுக்கும் குறைவாக இருந்ததற்கு அமைவாக, படுகடன் கடப்பாடுகளின் பங்காக எதிர்மறையான தேறிய இலாபத்தைப் பதிவுசெய்தன. படுகடன் கடப்பாடுகளுடன் ஒப்பிடுகையில் தேறிய இலாபத்தின் தாழ்ந்த மட்டமொன்றுடன் இணைந்து, கட்டடவாக்கமும் பொறியியலும் மிக உயர்ந்த பங்குரிமைக்கான படுகடன் விகிதத்தைப் பதிவுசெய்து, ஒப்பீட்டளவில் உயர்ந்தளவான நிதியியல் பாதிக்கப்படக்கூடிய தன்மையை எடுத்துக்காட்டின. ஒட்டுமொத்தமாக, படுகடன் தீர்ப்பனவு அழுத்தங்கள் ஒப்பீட்டளவில் நலிவடைந்த சில துறைகளுக்குள்ளேயே குவிந்திருந்தன என்பதை இக்குறிகாட்டிகள் சுட்டிகாட்டுகின்றன.

# அத்தியாயம் 5

# நிதியியல் உறுதிப்பாட்டிற்கான கொள்கைகள்



*2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட பேரண்டமுன்மதியுடைய அதிகாரசபையாக, மத்திய வங்கியானது மீளாய்விற்குரிய காலப்பகுதியில் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள துரிதமான கொடுகடன் விரிவாக்கத்தின் பின்னணிக்கு எதிராக பேரண்டமுன்மதியுடைய கருவிகளுடன் இணைந்து ஏனைய முன்மதியுடைய வழிமுறைகளைப் பயன்படுத்தியது. தொடர்புடைய பிணையுறுதிகளின் விலைத் தளம்பலுடன் இணைந்து, மோட்டார் வாகனத்துடன் தொடர்புடைய கொடுகடன் மற்றும் தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கலை நோக்கி உரிமம்பெற்ற வங்கிகளினதும் நிதிக் கம்பனிகளினதும் அதிரித்துவரும் வெளிப்படுத்துகைகள் கடன்பெறுநர் அடிப்படையிலான பேரண்டமுன்மதியுடைய கொள்கைகளை வலுப்படுத்துவதனை தேவைப்படுத்தின. இதற்கு பதிலிறுத்தும் வகையில், உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் நிதிக் கம்பனிகளுக்குமான தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கலில் இடர்நேர்வினை முகாமைசெய்வது தொடர்பாக அத்தகைய கடன்வழங்கலில் மிகவும் முன்மதியுடன் செயற்படுவதை ஊக்குவிக்கும் நோக்குடன், 2026 மாச்சில் மத்திய வங்கியானது முன்னோக்கிய வழிகாட்டலை வழங்கியது. அதனைத் தொடர்ந்து, மோட்டார் வாகனத்துடன் தொடர்புடைய கடன்வழங்கலிலும் தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கலிலும் ஏற்பட்ட தொடர்ச்சியான துரிதமான வளர்ச்சிக்கு பதிலிறுத்தும் விதத்தில், மிதமிஞ்சிய கடன்சுமையைக் கட்டுப்படுத்தல், கடன்பாட்டாளர் தாக்குபிடிக்கும் தன்மையை மேம்படுத்துதல், மற்றும் முறைமைசார் இடர்நேர்வுகளை தணித்தல் போன்றவற்றை இலக்காகக்கொண்டு, மத்திய வங்கி பேரண்டமுன்மதியுடைய வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது. இதற்கமைவாக, 2026 மே மாதத்தில் தங்கத்தைப் பிணையமாகக் கொண்டு பிணையளிக்கப்படும் கொடுகடன் வசதிகளுக்கு 70 சதவீத பெறுமதிக்கான கடன் விகித எல்லையொன்றை மத்திய வங்கி அறிமுகப்படுத்தியது. மேலும், 2025 நவெம்பர் மாதத்திலும் 2026 மாதத்திலும் மத்திய வங்கி, மோட்டார் வாகனக் கடன்களுக்காக அனுமதிக்கப்படும் உயர்ந்தபட்சப் பெறுமதிக்கான கடன் விகிதத்தை குறைத்தது. இத்திருத்தங்கள் முன்மதியுடைய பாதுகாப்புக்களை வலுப்படுத்தியது மாத்திரமன்றி மோட்டார் வாகனங்களுக்கான பெறுமதிக்கான கடன் விகிதக் கட்டமைப்பினையும் எளிதாக்கி, அதன் தொழிற்பாட்டுச் செயற்றிறனை மேம்படுத்தின.*

*பேரண்டமுன்மதியுடைய கொள்கைகளுக்கு மேலதிகமாக, ஒட்டுமொத்த நிதியியல் உறுதிப்பாட்டை வலுப்படுத்துவதற்கு பல்வேறு முன்மதியுடைய ஒழுங்குவிதிகளையும் கொள்கை வழிமுறைகளையும் மத்திய வங்கி அறிமுகப்படுத்தியது. இதற்கமைவாக, பரந்த பேரண்டமுன்மதியுடைய இறுக்கமாக்கல் வழிமுறைகளுடன் இணைந்து, மூலதன போதுமாந்தன்மை தேவைப்பாட்டினை நிர்ணயிக்கும் நோக்கத்திற்கு சில தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த பூச்சிய இடர்நேர்வு நிறையேற்றத்தினை நீக்குவது உள்ளடங்கலாக, மத்திய வங்கி உரிமம்பெற்ற வங்கிகளினாலும் நிதிக் கம்பனிகளினாலும் வழங்கப்படும் தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கலுக்கு ஏற்புடைய இடர்நேர்வு நிறையேற்றங்களை இறுக்கமடையச் செய்தது. சிறியளவிலான வங்கிகளை ஒருங்கிணைப்பதனூடாக வலுவான, மிகவும் தாக்குபிடிக்கும் தன்மைக் கொண்ட அத்துடன் நிலைபெறத்தக்க வங்கித்தொழில் துறையொன்றை ஊக்குவிப்பதற்கு வங்கித்தொழில் துறை ஒருங்கிணைப்பிற்கான கட்டமைப்பினை மத்திய வங்கி அறிமுகப்படுத்தியது. மேலும், பல்வேறு பணிப்புரைகளை அறிமுகப்படுத்தியதனூடாக நிதிக் கம்பனிகளுக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு மேலும் மேம்பட்ட அதேவேளை நிதிக் கம்பனிகள் துறையின் பணம் தூயதாக்கலுக்கெதிரான, பயங்கரவாத நிதியளித்தலை ஒழித்தல் மற்றும் ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தேவைப்பாடுகளுடனான இணங்குவிப்பனை வலுப்படுத்துவதற்கான முயற்சிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன. மேலும், இடர்நேர்வு முகாமைத்துவத்தை வலுப்படுத்துவதற்கும், உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகள் துறைகள் என்பவற்றின் நிறுவனசார் தாக்குபிடிக்கும் தன்மையையும் தொழிற்பாட்டு ஆற்றல்வாய்ந்த தன்மையையும் சீரான செயற்பாடுகளையும் மேம்படுத்துவதற்கும் ஆய்விற்குரிய காலப்பகுதியில் பல்வேறு ஒழுங்குமுறைப்படுத்தல் முன்னெடுப்புக்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.*

*மேலும், கொள்கை, மேற்பார்வை மற்றும் வாடிக்கையாளரை மையப்படுத்திய முன்னெடுப்புக்கள் போன்றவற்றினூடாக நிதியியல் முறைமையின் தாக்குபிடிக்கும் தன்மை, வினைத்திறன் மற்றும் வசதிக்குட்படுத்தல் ஆகியவற்றை மத்திய வங்கி தொடர்ந்தம் வலுப்படுத்தியது. டிஜிட்டல் கொடுப்பனவு முறைகளின் பாதுகாப்பை வலுப்படுத்தி மோசடியுடன் தொடர்புடைய இடர்நேர்வுகள் பற்றிய பொதுமக்கள் விழிப்புணர்வை மேம்படுத்துவதன் மூலம் வாடிக்கையாளர்களை பாதுகாப்பதற்கு மத்திய வங்கி மேலதிகக் கொள்கை முன்னெடுப்புகளை மேற்கொண்டது. நாட்டின் தீர்மான கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கான மத்திய வங்கியின் முயற்சிகளின் பாகமாக, நிறுவனசார் அழுத்தத்தை செயற்றிறன்மிக்க விதத்தில் முகாமைசெய்வதற்கு ஆதரவளிப்பதற்காக உரிமம்பெற்ற நிதியியல் நிறுவனங்களுக்கான தீர்மானத் திட்டங்கள் படிப்படியாக உருவாக்கப்பட்டு வருகின்றன. மேம்படுத்தப்பட்ட சந்தை நடத்தைக் கண்காணிப்பு, ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வை, முறைப்பாட்டு முகாமைத்துவம் மற்றும் நிதியியல் வாடிக்கையாளர் முன்னெடுப்புக்கள் போன்றவற்றினூடாக மத்திய வங்கியானது நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பினை தொடர்ந்தும் வலுப்படுத்தியது. நிதியியல் வசதிக்குட்படுத்தலை மேம்படுத்துவதற்கான மத்திய வங்கியின் முயற்சிகளின் பாகமாக ஆற்றல்வாய்ந்த நிதியியல் முகாமைத்துவ நடைமுறைகள் தொடர்பான நிதியியல் அறிவும் பொதுமக்கள் விழிப்புணர்வும் தொடர்ந்தும் ஊக்குவிக்கப்பட வேண்டும். மேலும், மீளாய்விற்குரிய காலப்பகுதியில் ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை மற்றும் கொள்கை முன்னெடுப்புகள் போன்றவற்றினூடாக இலங்கையின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கட்டமைப்பனை மத்திய வங்கியின் நிதியியல் உளவறிதல் பிரிவு தொடர்ந்தும் வலுப்படுத்தியது.*

*உயர்வடைந்த உலகளாவிய நிச்சயமற்றதன்மைகள், பரிணமித்துவரும் புவிசார் அரசியல் மற்றும் பேரண்ட நிதியியல் இடர்நேர்வுகள் மற்றும் உள்நாட்டு நிதியியல் முறைமையினுள் உருவாகிவரும் பாதிக்கப்படக்கூடிய தன்மைகள் போன்றவற்றுக்கு மத்தியில், மத்திய வங்கியானது நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டையும் தாக்குபிடிக்கும் தன்மையையும் பாதுகாப்பதற்கு தொடர்ந்தும் உறுதிபூண்டுள்ளது. இதற்கமைவாக, மத்திய வங்கியானது தோற்றம்பெற்றுவரும் பாதிக்கப்படக்கூடிய தன்மைகளை தணித்து நிதியியல் முறைமை உறுதிப்பாட்டைப் பாதுகாப்பதற்கு, சந்தை அபிவிருத்திகள், உலகளாவிய மற்றும் உள்நாட்டு பேரண்டப்பொருளாதார மற்றும் நிதியியல் நிலைமைகளை தொடர்ந்தும் உன்னிப்பாக கண்காணித்து அதன் பேரண்டமுன்மதியுடைய நிலைப்பாட்டை அளவமைத்ததுக்கொள்ளவதுடன் பொருத்தமான முன்மதியுடைய கொள்கை நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும்.*

## 5.1 உறுதிப்பாட்டிற்கான பேரண்டமுன்மதியுடைய கொள்கைகள்

**மோட்டார் வாகனத்திற்கு நிதியளிப்பதற்கான ஏற்புடைய உயர்ந்தபட்சப் பெறுமதிக்கான கடன் விகிதங்களைக் குறைத்து தங்கத்தினை பிணையமாகக் கொண்டு பிணையளிக்கப்படும் கொடுகடன் வசதிகளுக்கான உயர்ந்தபட்சப் பெறுமதிக்கான கடன் விகிதமொன்றினை அறிமுகப்படுத்தியதன் மூலம் மத்திய வங்கியானது மீளாய்விற்குரிய காலப்பகுதியில் அதன் பேரண்டமுன்மதியுடைய நிலைப்பாட்டை இறுக்கமடையச் செய்தது.** வாகனம் மற்றும் தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கலில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புடன் இணைந்து, உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகள் என்பனவற்றில் ஏற்பட்ட துரிதமான கொடுகடன் விரிவாக்கத்தின் பின்னணிக்கு எதிராக இவ்வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகள் துறைகளில் ஏற்பட்ட ஒட்டுமொத்த கொடுகடன் வளர்ச்சியானது மீளாய்விற்குரிய காலப்பகுதியில் அதன் வரலாற்று ரீதியிலான சராசரிக்கு மேல் குறிப்பிடத்தக்களவில் உயர்வடைந்து, முறைமைசார் இடர்நேர்வுகளின் அதிகரிப்பை தணித்து நிதியியல் உறுதிப்பாட்டை பாதுகாப்பதற்கான காலோசித பேரண்டமுன்மதியுடைய வழிமுறைகளுக்கான தேவையினை எடுத்துக்காட்டியது. நிதியியல் துறைக்[1] கொடுகடனின் பிணையுறுதியளிக்கப்பட்ட கடன்வழங்களின் வளர்ச்சிக்கு முக்கியப் பங்காற்றிய மோட்டார் வாகனத்துடன் தொடர்புடைய கொடுகடனினதும்[2] தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கலினதும் இணைந்த பங்கானது 2024 இறுதியின் 19.6 சதவீதத்திலிருந்து 2026 யூன் இறுதியில் 24.9 சதவீதத்திற்கு அதிகரித்து, ஏறக்குறைய நிதியியல் துறைக் கடன்வழங்கலின் கால் பகுதி இவ்விரு பிணையுறுதியினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கல் பிரிவுகளில் செறிவடைந்து காணப்பட்டதென எடுத்துக்காட்டியது. ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிதியியல் நிறுவனங்களின் கொடுகடன் சொத்துப்பட்டியலினுள் இத்தகைய வெளிப்படுத்துகைகளின் அதிகரித்துவரும் செறிவடைதலானது பிணையுறுதி பெறுமதித் திருத்தத்திற்கான அதன் உணர்திறன் மற்றும் ஒட்டுமொத்த கொடுகடனுடன் ஒப்பிடுகையில் அவற்றின் வலுவான வளர்ச்சியுடன் இணைந்து, வலுவான பேரண்டமுன்மதியுடைய மேற்பார்வையினையும் கடன்பாட்டாளர் அடிப்படையிலான கொள்கை வழிமுறைகளை வலுப்படுத்துவதையும் தேவைப்படுத்தியது.

1 இப்பகுப்பாய்வின் நோக்கத்திற்காக, நிதியியல் துறையானது உரிமம்பெற்ற வங்கிகளையும் நிதிக் கம்பனிகளையும் உள்ளடக்குகின்றது.

2 .மோட்டார் வாகனத்துடன் தொடர்புடைய கொடுகடனானது உரிமம்பெற்ற வங்கிகளின் குத்தகைச் சொத்துப்பட்டியலுடன் இணைந்து, நிதிக் குத்தகைகள், வாடகைக் கொள்வனவு வசதிகள், மற்றும் நிதிக் கம்பனிகளினால் வழங்கப்படும் மோட்டார் வாகனக் கடன்கள் போன்றவற்றை உள்ளடக்குகின்றது. இது தரவு மட்டுப்பாடுகள் காரணமாக மோட்டர் வாகன நிதியளித்தலுக்கான பதிலீட்டு அளவுகோலாகப் பயன்படுத்தப்படுகின்றது. இதற்கமைவாக, வங்கித்தொழில் துறை குத்தகைத் தரவுகள் மோட்டார் வாகனமல்லாத நோக்கங்களுக்காக வழங்கப்படும் சிறிய குத்தகை விகிதாசாரமொன்றை உள்ளடக்கலாம்.

வரைபடம் 5.2 நிதியியல் துறையில் மோட்டார் வாகன தொடர்புடைய கொடுகடன் மற்றும் தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கொடுகடன்களின் செறிவாக்கம்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**மீளாய்விற்குரிய காலப்பகுதியில் தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கல் குறிப்பிடத்தக்க உயர்வடைதலைப் பதிவுசெய்தது.** இதன்விளைவாக, மொத்த நிதியியல் துறைக் கொடுகடனின் தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கலின் பங்கானது 2024இன்

வரைபடம் 5.1 நிதியியல் துறையில் மொத்த கொடுகடன் வளர்ச்சி




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 5.3 நிதியியல் துறையில் மோட்டார் வாகன தொடர்புடைய மற்றும் தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கொடுகடன்களின் வளர்ச்சி




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 5.4 உலகளாவிய தங்க விலைகளின் அசைவுகள்




மூலம்: உலக வங்கி

இறுதியின் 9.8 சதவீதத்திலிருந்து 2026 யூன் இறுதியளவில் 12.0 சதவீதத்திற்கு அதிகரித்து, ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிதியியல் நிறுவனங்களின் கடன் சொத்துப்பட்டியல்களினுள் அதன் அதிகரித்துவரும் முக்கியத்துவத்தைப் பிரதிபலித்தது. தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கலின் இத்துரிதமான விரிவாக்கமானது உலகளாவிய தங்க விலைகளின் நிலையான அதிகரிப்புடன் ஒத்திசைவாகக் காணப்பட்டதுடன் இது பிணையுறுதி பெறுமதிகளை மேம்படுத்தி தங்கப் பிணையுறுதிக்கு எதிராக கடன்வழங்கல் வளர்ச்சிக்கு ஆதரவளித்தது. அதிகரித்துவரும் தங்க விலைகள் பிணையுறுதிக் காப்பீட்டினை வலுப்படுத்திய அதேவேளை இக்கடன்வழங்கலின் அதிகரித்துவரும் வெளிப்படுத்துகைகளின் செறிவடைதலானது தங்க விலைகளில் சாத்தியமான மோசமான திருத்தங்கள் மற்றும் கடன்பாட்டாளர் மீள்கொடுப்பனவு இடர்நேர்வு என்பவற்றிற்கான நிதியியல் துறையின் உணர்திறனை உயர்வடையச் செய்தது.

**2025ஆம் ஆண்டு முழுவதும் உலகளாவிய தங்க விலைகள் வலுவாக அதிகரித்த அதேவேளை 2026 சனவரி இறுதியிலிருந்து உயர்வடைந்த விலைத் தளம்பல் தோற்றம்பெற்றதுடன் இதன்விளைவாக, தங்கத்தைப் பிணையமாக வைத்து கடன்பெற்றவர்களும் கடன் வழங்கியவர்களும் அத்தங்கப் பிணையுறுதியின் பெறுமதி தொடர்பில் அதிகளவிலான நிச்சயமற்றதன்மைக்கு உள்ளாகினர் என்பதுடன் இதனால் வலுவான இடர்நேர்வுக் கட்டுப்பாடுகளுக்கான தேவை மீளவலுப்படுத்தப்பட்டது.** உலகளாவிய தங்க விலைகளில் ஏற்பட்ட அதிகரித்துவரும் தளம்பலினாலும் தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கலின் துரிதமான விரிவாக்கத்தினாலும் ஏற்படும் இடர்நேர்வுகளை அடையாளங்கண்டு, மத்திய வங்கியானது 2026 மாச்சில் *"தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கலினை முகாமைசெய்வதற்கான வழிகாட்டலை"* வெளியிட்டு, பாதுகாப்பான மதிப்பீட்டு நடைமுறைகள் மற்றும் வலுப்படுத்தப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ வழிமுறைகளினூடாக[3] தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கல் தொழிற்பாடுகளில் மேம்பட்ட முன்மதிமிக்க தன்மையினை பின்பற்றுமாறு உரிமம்பெற்ற வங்கிகளையும் நிதிக் கம்பனிகளையும் தேவைப்படுத்தியது. இம்மேற்பார்வை வழிமுறைகளை பின்தொடர்ந்து மிதமிஞ்சிய கடன்சுமையினை தணித்தல், கடன்பாட்டாளர் அடிப்படையிலான பாதுகாப்புக்களை வலுப்படுத்தல் மற்றும் தங்க விலைகளில் ஏற்படும் மோசமான அசைவுகளுக்கெதிராக ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிறுவனங்களின் தாக்குபிடிக்கும் தன்மையை மேம்படுத்துதல் போன்றவற்றை நோக்காகக் கொண்டு, 2026 மே 25 அன்று தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் மத்திய வங்கியானது தங்கத்தை பிணையுறுதியாகக் கொண்டு பிணையளிக்கப்படும் கொடுகடன் வசதிகளுக்கான 70 சதவீதம் கொண்ட உயர்ந்தபட்சப் பெறுமதிக்கான கடன் விகிதத்தினை அறிமுகப்படுத்தியது. பெறுமதிக்கான கடன் விகித எல்லையினை அறிமுகப்படுத்தியமையானது மிதமிஞ்சிய இடர்நேர்வு ஏற்பினை மிதமடையச்செய்து, தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கலின்[4] துரிதமான வளர்ச்சியிலிருந்து எழும் பாதிக்கப்படும் தன்மைகள் குறைவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**2025இன் தொடக்கத்தில் மேற்கொள்ளப்பட்ட மோட்டர் வாகன இறக்குமதிக் கட்டுப்பாடுகளை தளர்த்தியதைத் தொடர்ந்து, தேங்கியிருந்த கேள்வியினால் உந்தப்பட்டு, மோட்டார் வாகனத்துடன் தொடர்புடைய கொடுகடனிற்கான கேள்வி குறிப்பிடத்தக்களவில் விரிவடைந்தது.** இதன்விளைவாக, மோட்டார் வாகனத்துடன் தொடர்புடைய கொடுகடன் துரிதமாக வளர்ச்சியடைந்து, நிதியியல் துறையில் வழங்கப்பட்ட ஒட்டுமொத்தக் கொடுகடன் வளர்ச்சியை விடக் கணிசமானளவில் அதிகரித்துக் காணப்பட்டது. நிதியியல் துறையின் மொத்தக் கொடுகடனில் மோட்டார் வாகனத்துடன் தொடர்புடைய கொடுகடனின் பங்கானது 2024 திசெம்பரின் 9.8 சதவீதத்திலிருந்து 2026 யூன் இறுதியளவில் 12.9 சதவீதத்திற்கு அதிகரித்தது. மோட்டார் வாகனத்துடன் தொடர்புடைய கொடுகடனின் துரிதமான விரிவடைதலும் அதிகரித்துவரும் செறிவடைதலும் முறைமைசார் இடர்நேர்வுகள் கட்டியெழுப்பப்படல் தொடர்பான கரிசனைகளை அதிகரிக்கச்செய்து, நெருக்கமான பேரண்டமுன்மதியுடைய மேற்பார்வையை தேவைப்படுத்தின.

3 தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கலில் இடர்நேர்வுகளை முகாமைசெய்வதற்கான வழிகாட்டல்:

https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/laws/cdg/msd_letter_to_ceos_of_banks_20260311_e.pdf

4 2026ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டப் பணிப்புரைகள்:

https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/laws/CBSL_Act_Directions_No_2_of_2026_e.pdf

**இப்பின்னணியில், மிதமிஞ்சிய கடன்சுமையைக் கட்டுப்படுத்தல், கடன்பாட்டாளர் தாக்குபிடிக்கும் தன்மையை மேம்படுத்தல், மற்றும் மோட்டார் வாகனத்திற்கு நிதியளித்தலின்**[5] **துரிதமான விரிவாக்கத்திலிருந்து எழுகின்ற முறைமைசார் இடர்நேர்வுகளை தணித்தல் போன்ற நோக்கங்களுடன், மத்திய வங்கியானது 2025 நவெம்பர் 2026 மே ஆகிய இரு சந்தர்ப்பங்களில் ஏற்புடைய பெறுமதிக்கான கடன் விகிதத் தேவைப்பாடுகளை வலுப்படுத்தியது.** தொடர்ச்சியானக் கொள்கை வழிமுறைகள் புதிய[6] வர்த்தக நோக்குடைய வாகனங்களுக்கான உயர்ந்தபட்ச அனுமதிக்கத்தக்க பெறுமதிக்கான கடன் விகிதத்தை 80 சதவீதத்திலிருந்து 60 சதவீதமாகவும் ஏனைய புதிய வாகன வகைகளுக்கு 40 சதவீதமாகவும் குறைத்த அதேவேளை பயன்படுத்தப்பட்ட[7] வாகனங்களுக்கான எல்லை 70 சதவீதத்திலிருந்து 60 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது.

**பேரண்டமுன்மதியுடைய நிலைப்பாட்டை இறுக்கமடையச் செய்ததற்கு மேலதிகமாக, மத்திய வங்கியானது அதன் தொழிற்பாட்டுச் செயற்றிறனை மேம்படுத்துவதற்கு மோட்டார் வாகனங்கள் மீதான பெறுமதிக்கான கடன்விகிதக் கட்டமைப்பினையும் எளிமைப்படுத்தியது.** 2025 நவெம்பரில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் பாகமாக, புதிய வாகனங்களுக்கான கட்டமைப்பானது பல்வகையிலான கட்டமைப்பிலிருந்து இரு பரந்த வகைகளை அடிப்படையாக உள்ளடக்கிய எளிமைப்படுத்தப்பட்ட கட்டமைப்பாக மாற்றியமைக்கப்பட்டது. பின்னர் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் இவ் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட கட்டமைப்பினைப் பேணிய அதேவேளை ஏற்புடைய வரையறைகளை மேலும் இறுக்கமடையச்செய்தன. இவ் எளிமைப்படுத்தப்பட்ட கட்டமைப்பானது வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தி ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிறுவனங்களிடையில் ஒத்திசைவினை அதிகரிக்கச்செய்து தொழிற்பாட்டுச் சிக்கல்தன்மையைக் குறைத்து கடன்பாட்டாளர் அடிப்படையிலான பேரண்டமுன்மதியுடைய கொள்கைக் கருவியாக பெறுமதிக்கான கடன் விகிதத்தின் செயற்றிறன்வாய்ந்த தன்மையை வலுப்படுத்தியது. மேலும், மீளாய்விற்குரிய காலப்பகுதியில் உரிமம்பெற்ற வங்கிகளில் நிதிக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட கொடுகடனில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றையும் மத்திய வங்கி அவதானித்தது. குறிப்பாக, மோட்டார் வாகன நிதியளித்தலின் போது ஏற்பட்ட கொடுகடனின் துரிதமான விரிவாக்கத்திற்கு மத்தியில் நிதிக் கம்பனிகளின் அதிகரித்த நிதியிடல் தேவைப்பாடுகளை இது பெரிதும் பிரதிபலித்தது. இத்தகைய நிதியிடலானது கொடுகடன் இடையீட்டின் வளர்ச்சிக்கு

5 2025ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டப் பணிப்புரைகள்: https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/laws/CBSL_Act_Directions_No_3_ 6 [illegible]
2026ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டப் பணிப்புரைகள்: https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/laws/CBSL_Act_Directions_No_1_ 6 [illegible]

6 புதிய வாகனங்கள் என்பது பதிவுசெய்யப்படாத வாகனங்களையும் முதலாவதாக பதிவுசெய்யப்பட்டதிலிருந்து இலங்கையில் ஓராண்டுக்கும் குறைவான காலத்தில் பயன்படுத்தப்பட்ட வாகனங்களையும் குறிக்கின்றது.

7 பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் என்பது முதலாவதாக பதிவுசெய்யப்பட்டதிலிருந்து இலங்கையில் ஓராண்டுக்கும் அதிகமான காலத்தில் பயன்படுத்தப்பட்ட வாகனங்களை குறிக்கின்றது.

வரைபடம் 5.5 மோட்டார் வாகனத்தின் பெறுமதிக்கான கொடுகடன் கட்டமைப்பின் படிப்படியான இறுக்கமாக்கலும் எளிமைப்படுத்தலும்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

ஆதரவளித்த அதேவேளை, உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் நிதிக் கம்பனிகளுக்குமிடையான இடைத்தொடர்புகளையும் அதிகரிக்கச்செய்து, நிதியியல் முறைமை முழுவதுமான இடர்நேர்வுகளின் ஊடுகடத்தலை சாத்தியமானளவில் அதிகரிக்கச்செய்தது. ஆகையினால், தோற்றம்பெற்றுவரும் ஏதேனும் பாதிப்பிற்குள்ளாகும் தன்மைகள் அல்லது முறைமைசார் இடர்நேர்வுகள் என்பன உரிய முறையில் அடையாளங்காணப்பட்டு தீர்வுகாணப்படுகின்றன என்பதை உறுதிசெய்வதற்கு இவ்வபிவிருத்திகளை மத்திய வங்கி தொடர்ந்தும் உன்னிப்பாக கண்காணிக்கின்றது.

**முறைமைசார் இடர்நேர்வினை தணித்து வங்கித்தொழில் துறையின் தாக்குபிடிக்கும் தன்மையை வலுப்படுத்துவதற்கான அதன் முயற்சிகளின் பாகமாக, பரந்த நிதியியல் முறைமையில் குறிப்பிடத்தக்க கசிவுத் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய சாத்தியம் கொண்ட வங்கிகளை மத்திய வங்கி கிரமமாக மதிப்பீடுசெய்கின்றது.** 2025 ஏப்பிறலில் வழங்கப்பட்ட உள்நாட்டு முறைமைசார் முக்கியத்துவம்வாய்ந்த வங்கிகளை குறித்துரைப்பதற்கான பிரமாணங்களுடன் இசைந்துசெல்லும் வகையில், 2025இன் இறுதியிலுள்ளவாறு கணக்காய்வுசெய்யப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தி, குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டு முறைமைசார் முக்கியத்துவம்வாய்ந்த வங்கிகளின் வருடாந்த மதிப்பீடானது 2026இல் நடாத்தப்பட்டதுடன், ஏற்கனவே குறித்துரைக்கப்பட்ட ஐந்து உள்நாட்டு முறைமைசார் முக்கியத்துவம்வாய்ந்த வங்கிகளின் பட்டியல் தொடர்ந்தும் பொருத்தமானதாக இருக்கின்றது என்பதை இம்மதிப்பீடு உறுதிப்படுத்தியது.

## 5.2 உரிமம்பெற்ற வங்கிகளுடன் தொடர்புடைய கொள்கைகள்

**மத்திய வங்கியானது வங்கித்தொழில் துறையின் தாக்குபிடிக்கும் தன்மையை வலுப்படுத்துவதற்கு பல்வேறு முன்மதியுடைய ஒழுங்குமுறைப்படுத்தல்கள் மற்றும் கொள்கை வழிமுறைகளை அறிமுகப்படுத்திய அதேவேளை இடர்நேர்வு முகாமைத்துவத்தையும் இணங்குவிப்புக் கட்டமைப்புக்களையும் வலுப்படுத்தியதுடன் ஆற்றல்வாய்ந்த ஆளுகை நடைமுறைகளைப் பேணிவளர்த்தது.** இம்முயற்சிகளின் பாகமாக, வங்கியின் தன்மை, அளவு, கட்டமைப்பு, சிக்கலான தன்மை மற்றும் ஒன்றுடனொன்று இணைந்திருக்கும் தன்மை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, உரிமம்பெற்ற வங்கிகள் மீட்புத் திட்டங்களை தயாரித்து, அத்திட்டங்களை சபை ஒப்புதலுடன் மத்திய வங்கியிடம் சமர்ப்பிக்குமாறு, தெரிவிக்கும் வகையில் 2025ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன. மேலும், அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் போன்றவற்றின் சார்பாக குறித்துரைக்கப்பட்ட வெளிப்படுத்துகை தேவைப்பாடுகளுக்குட்பட்டு, உரிமம்பெற்ற வங்கிகளினால் நாணயக் கடிதத்தைத் திறப்பதற்கு வரவுசெலவுத் திட்ட ஏற்பாடுகள் மற்றும் உரிய நேரத்தில் தீர்ப்பனவுசெய்வதை உறுதிப்படுத்தும் வகையில் பொது திறைசேரியினால் வழங்கப்படும் உறுதிமொழிக் கடிதத்தை ஒப்புதலளிக்கப்பட்ட பிணையமாக குறித்துரைத்து, *"உரிமம்பெற்ற வங்கிகளின் தொடர்புடைய தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கடன்வசதிகளுக்கான பிணையங்கள்"* தொடர்பான 2024ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத் தீர்மானத்திற்கான திருத்தம் வழங்கப்பட்டது. 2025இன் பிற்பகுதியில் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ள அனர்த்தங்களின் மோசமானத் தாக்கங்களினைக் கருத்திற்கொண்டு, புயல் மற்றும் வெள்ள அனர்த்தங்களினால் வருமானம் அல்லது வியாபாரம் நேரடியாகப் பாதிக்கப்பட்ட தனிப்பட்டவர்கள் மற்றும் வியாபாரங்களுக்கான நிவாரண வழிமுறைகளை வழங்குமாறு கோரி, அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் மத்திய வங்கி சுற்றறிக்கையொன்றை வழங்கியது. மேலும், நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை, ஒழுங்குமுறைப்படுத்தல், நெருக்கடி முகாமைத்துவம், மற்றும் தீர்மானம் போன்ற பகுதிகளில் ஒத்துழைப்பினை மேம்படுத்தல் மற்றும் தகவல்களைப் பகிரும் நோக்கத்திற்காக, 2025 திசெம்பர் 01 அன்று மத்திய வங்கியானது இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட்டது.

**தாக்குபிடிக்கும் தன்மை மற்றும் நிதியியல் உறுதிப்பாடு என்பவற்றை ஊக்குவிப்பதன் மூலம் நாட்டின் தற்போதைய பொருளாதார மீட்புப் பாதையினை வசதிப்படுத்தும் நோக்குடன், மத்திய வங்கி 2025 ஒத்தோபரில் வங்கித்தொழில் துறை ஒருங்கிணைப்பிற்கான கட்டமைப்பினை அறிமுகப்படுத்தியது.** அதன்பின்னர், 2025 திசெம்பரில், மத்திய வங்கியானது முன்மொழியப்பட்ட ஆண்டிற்கு இரு முறையிலான மதிப்பீட்டுப் பொறிமுறை தொடர்பில் உள்நாட்டு ரீதியில் கூட்டிணைக்கப்பட்ட சிறியளவிலான வங்கிகளுக்கு அறிவித்ததுடன் பொருத்தமான ஒருங்கிணைப்பு உபாயங்களைப் பின்பற்றுமாறு அவற்றுக்கு அறிவுறுத்தும் கட்டமைப்பினை 2026 சனவரி 23 அன்று உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வழங்கியது. இக்கட்டமைப்பானது ரூ.400 பில்லியனிற்கும் குறைவான சொத்துக்களைக் கொண்ட உள்நாட்டு ரீதியில் கூட்டிணைக்கப்பட்ட சிறியளவிலான உரிமம்பெற்ற வங்கிகளுக்கான விகிதாசார அடிப்படையிலான மதிப்பீட்டு மற்றும் ஒருங்கிணைப்புப் பொறிமுறையொன்றை தாபிக்கின்றது. இக்கட்டமைப்பின் கீழ், அத்தகைய நிறுவனங்கள் கணியம்சார் மற்றும் பண்புசார் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு ஆண்டிற்கு இரு முறை மதிப்பீடுசெய்யப்படுகின்ற அதேவேளை பரிந்துரைக்கப்பட்ட நியமங்களை பூர்த்திசெய்வதற்கு தொடர்ந்தும் தவறும் உரிமம்பெற்ற வங்கிகள் ஒருங்கிணைக்கப்பட தேவைப்படுத்தப்படலாம். வளர்ச்சியை ஆதரித்தல், ஆளுகையை வலுப்படுத்தல், தொழில்நுட்ப இயலாற்றல்களை மேம்படுத்தல், மூலதனத்திற்கான அணுகலை மேம்படுத்தல், மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அனுமதிகள், மனித

வள முகாமைத்துவம், வைப்பாளர் பாதுகாப்பு மற்றும் சந்தை நடத்தை போன்ற முக்கியப் பரிசீலனைகளை கையாளுதல் போன்ற செயற்பாடுகளுக்கான ஒருங்கிணைப்பு உபாயங்கள் மற்றும் பரந்தளவிலான வழிகாட்டலையும் இது எடுத்துரைக்கின்றது. இதற்கமைவாக, மத்திய வங்கியானது ஒருங்கிணைப்பிற்கான முன்மொழிவுகளை மதிப்பீடுசெய்து, திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் தேவையான அனுமதியினை வழங்கும் அதேவேளை பொருத்தமானவிடத்து ஒழுங்குமுறைப்படுத்தல் வழிகாட்டலையும் வழங்கும். மேலும், வங்கித்தொழில் துறை ஒருங்கிணைப்பானது நிதியியல் ரீதியிலும் தொழிற்பாட்டு ரீதியிலும் ஆற்றல்வாய்ந்த வங்கிகள் உருவாகுவதற்கு வசதிப்படுத்தும், இதன்மூலம் வங்கித்தொழில் துறையின் தாக்குபிடிக்கும் தன்மையையும் உறுதிப்பாட்டையும் வலுப்படுத்தும் அதேவேளை பொருளாதாரத்தின் அனைவரையுமுள்ளடக்கிய நிலைபெறத்தக்க வளர்ச்சிக்கு ஆதரவளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. அண்மையில், இலங்கை அரசாங்கமானது இரு அரசுக்குச் சொந்தமான, சிறிய சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளை மறுசீரமைப்பதற்கு ஒப்புதலளித்துள்ளதுடன் இலங்கையில் வங்கித்தொழில் துறையின் ஆற்றல்வாய்ந்த தன்மையை வலுப்படுத்தும் நோக்குடன், இத்தகைய முன்னெடுப்புகளை மத்திய வங்கி வசதிப்படுத்தும்.

**மேலும், வங்கித்தொழில் துறையினுள் நிறுவனம்சார்ந்த தாக்குபிடிக்கும்தன்மை, தொழிற்பாட்டு ஆற்றல்வாய்ந்ததன்மை மற்றும் இடர்நேர்வு உணர்திறன் போன்றவற்றை மேம்படுத்துவதற்கு இலக்கிடப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் முன்னெடுப்புக்கள் மீளாய்விற்குரிய காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டன.** புதிய வியாபார நடவடிக்கைகள் மற்றும் டிஜிட்டல்மயமாக்கப்பட்ட வியாபாரச் செயன்முறைகள் மற்றும் தொழிற்பாடுகளின் அபிவிருத்திகளிலிருந்து தோற்றம்பெற்றுள்ள வங்கித்தொழில் துறையின் முன்னேற்றங்களைக் கருத்திற்கொண்டு, உரிமம்பெற்ற வங்கிகள் வியாபாரத் தொழிற்பாட்டுகளை வெளியிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு ஆற்றல்வாய்ந்த மற்றும் முன்மதியுடைய கட்டமைப்பினைப் பின்பற்றுகின்றன என்பதை உறுதிசெய்யும் குறிக்கோளுடன், மத்திய வங்கியானது *"2026 மாச்சில் உரிமம்பெற்ற வங்கிகளின் வியாபாரத் தொழிற்பாடுகளை வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளல்"* தொடர்பான 2026ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளை வழங்கியது. மேலும், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளுக்கான பாசல் IIIஇன் கீழ் மூலதனத் தேவைப்பாடுகள் மீதான 2026ஆம் ஆண்டின் 02 இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளானவை தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான ஏற்புடைய இடர்நேர்வு நிறையேற்றக் கையாளுதலை பெறுமதிக்கான கடன்விகிதத்திற்கு அமைவாக வேறுபடுத்தப்பட்ட நேர் இடர்நேர்வு நிறையேற்றங்களுடன் முன்னைய பூச்சிய இடர்நேர்வு நிறையேற்றத்திற்கு பதிலாக திருத்தியமைத்த அதேவேளை உயர்வடைந்த பெறுமதிக்கான கடன் விகிதங்களைக் கொண்ட வசதிகளுக்கான உயர் இடர்நேர்வு நிறையேற்றங்களை ஒதுக்கீடுசெய்தது.

**மத்திய வங்கியானது அதன் பயன்பெறு சொத்தாளர்களை உரியவாறு அடையாளங்காணுதல், மதிப்பீடுசெய்தல் மற்றும் கண்காணித்தல் போன்றவற்றை உறுதிசெய்வதற்கு, உரிமம்பெற்ற வங்கிகளின் பயன்பெறு சொத்தாளர்களின் மதிப்பீடு பற்றிய 2026ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளை மிக அண்மையில் வழங்கியது.** மேலும், தொழிற்பாட்டு இழப்பு நிகழ்வுகளை உரிய காலத்தில் அடையாளங்காணுதல், அறிக்கையிடுதல் மற்றும் முகாமைசெய்தல் என்பவற்றை உறுதிசெய்வதன் மூலம் உரிமம்பெற்ற வங்கிகளினுள் தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் தாக்குப்பிடிக்கும் தன்மையை வலுப்படுத்துவதற்கு உரிமம்பெற்ற வங்கிகளின் தொழிற்பாட்டு இழப்பு நிகழ்வுகளை அடையாளங்காணுதல், அறிக்கையிடுதல் மற்றும் முகாமைசெய்தல் தொடர்பில் மத்திய வங்கியானது 2026ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளை வழங்கியது.

**வங்கித்தொழில் முறைமையின் சீரான தொழிற்பாட்டை உறுதி செய்வதற்கு, பரிசீலனைக்குட்பட்ட காலப்பகுதியில் மத்திய வங்கியானது ஏனைய பல்வேறு ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளை காலத்திற்காலம் அறிமுகப்படுத்தியுள்ளது.** *"உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் செல்லிட வங்கித்தொழில் பிரிவுகளை தாபிப்பதற்கான வழிகாட்டல்கள்"* மீதான 2024ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க சுற்றறிக்கைக்கான திருத்தமொன்றையும் *"உரிமம்பெற்ற வங்கிகளுக்கான வருடாந்த உரிமக் கட்டணம்"* மீதான வங்கித்தொழில் சட்டத் தீர்மானத்தையும் இவ் ஒழுங்குவிதிகள் உள்ளடக்குகின்றன. மேலும், வங்கித்தொழில் துறையின் பாதுகாப்பு, ஆற்றல்வாய்ந்த தன்மை மற்றும் தாக்குபிடிக்கும் தன்மை போன்றவற்றை வலுப்படுத்தும் நோக்கில், கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் கீழ் உரிமம்பெற்ற வங்கிகளுக்கான பணிப்புரைகள், உரிமம்பெற்ற வங்கிகளின் திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவம் மீதான பணிப்புரைகள், உரிமம்பெற்ற வங்கிகளின் நிலைபேறான நிதி நடவடிக்கைகள் மீதான பணிப்புரைகள், கொடுகடன் வசதிகளை வகைப்படுத்தல் அடையாளம் காணுதல் மற்றும் அளவிடல் மீதான பணிப்புரைகயின் திருத்தங்கள், உரிமம்பெற்ற வங்கிகளின் தகுதிபெற்ற வெளியக கணக்காய்வாளர்களுக்கு ஒழுங்குவிதிளை பல்வேறு முன்மொழியப்பட்ட ஒழுங்குவிதிகள் அண்மைய எதிர்காலத்தில் வழங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

### 5.3 நிதிக் கம்பனிகள், உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் மற்றும் முதன்மை வணிகர் கம்பனிகளுடன் தொடர்புபட்ட கொள்கைகள்

**சட்டவாக்க கட்டமைப்பில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள், இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்ட தரநியமங்களின் அறிமுகம் மற்றும் மேம்படுத்தப்பட்ட மேற்பார்வை அணுகுமுறைகளினதும் செயன்முறைகளினதும் நடைமுறைப்படுத்தல் மூலம் நிதிக் கம்பனிகளின் சட்ட, ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பு மேலும் மேம்படுத்தப்பட்டது.** அதற்கமைய, நிதிக் கம்பனிகளின் மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை வலுப்படுத்தல், அங்கீகரிக்கப்படாத நிதி வணிகர் மீதான விசாரணை மற்றும் சட்ட நடவடிக்கைகள் அத்துடன் இயங்கமுடியாத நிலையில் உள்ள நிதிக் கம்பனிகளை மறுசீரமைப்பது அல்லது முடிவுறுத்தல் ஆகியவற்றின் அவசியத்தை பிரதானமாக அங்கீகரிக்கும் வகையில் 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்கள் மூலம் இத்துறையை நிர்வகிக்கும் சட்டக் கட்டமைப்பு மேலும் வலுப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவம், நிதிக் கம்பனிகளுக்கான மீட்புத் திட்டங்கள், நிதிக் கம்பனிகளின் பயன்பெறு சொத்துரிமையாளர்களின் மதிப்பீடு, நிதிக்கம்பனிகளின் கட்டமைப்புசார் மாற்றங்கள், வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்களுக்கான திருத்தங்கள், அத்துடன் தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட சில்லறைக் கோரல்களுக்குப் பொருந்தக்கூடிய கொடுகடன் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களைக் கணக்கிடுவதற்கான முறைமையியலுக்கான திருத்தங்கள் என்பவற்றை உள்ளடக்குகின்ற பல பணிப்புரைகள் பரிசீலனை காலப்பகுதியில் மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டன. மேலும், 2025 இன் இறுதிப்பகுதியில் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ள அனர்த்தங்கள் (டித்வா) இனால் வருமானம் அல்லது வியாபாரம் நேரடியாகப் பாதிக்கப்பட்ட தனிநபர்களுக்கும் வியாபாரங்களுக்குமான நிவாரண வழிமுறைகளை வழங்குவதற்கு அனைத்து நிதிக் கம்பனிகளையும் கோரும், சுற்றறிக்கையொன்று வழங்கப்பட்டது. ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிறுவனங்கள் தோற்றம்பெறுகின்ற இடர்நேர்வுகளுக்கும் பாதிக்கப்படக்கூடிய தன்மைகளுக்கும் ஈடுகொடுப்பதற்குப் போதியளவிலான நிதியியல் தாங்கிருப்புக்களை பேணியதை உறுதிப்படுத்தும் அதேவேளை, பணம் தூயதாக்கலுக்கெதிரான, பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மற்றும் ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தேவைப்பாடுகள், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகள் என்பவற்றுடனான இணங்குவிப்பை வலுப்படுத்துவதன் மீது அதிகரித்தளவிலான மேற்பார்வை அவதானம் செலுத்தப்பட்டது.

**சிறப்பான திட்டமிடலுடன்கூடிய ஒன்றிணைத்தல் செயற்றிட்டத்தின் ஊடாக நிதிக் கம்பனிகளின் தாக்குப்பிடிக்கும்தன்மை மற்றும் நீண்டகால ஆற்றல்வாய்ந்ததன்மை என்பவற்றை வலுப்படுத்துவதற்கு மத்திய வங்கி அதன் முயற்சிகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது.** ஒன்றிணைப்பதற்கான முதன்மைத்திட்டத்தின் கட்டம் II இற்கான திருத்தப்பட்ட கட்டமைப்பு, 31 மார்ச் 2025 திகதியிலிருந்து ஆரம்பித்து 31 மடார்ச் 2028 வரையான நிறைவேற்றல் காலப்பகுதியில் அதிகளவில் தாக்குப்பிடிக்கும்தன்மைமிக்க நிதிக் கம்பனிகள் துறையொன்றை உருவாக்குவதை இலக்காகக்கொண்டு 2024 திசெம்பரில் அறிமுகப்படுத்தப்பட்டது. மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட அறிக்கையிடல் வடிவத்தைப் பயன்படுத்தி நிதிக் கம்பனிகள், 31 மார்ச் 2025 இலிருந்து காலாண்டு அடிப்படையில் சுய மதிப்பிடப்பட்ட புள்ளிகளைச் சமர்ப்பித்து வருகின்றன. அறிக்கையிடப்பட்ட புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு, விதித்துரைக்கப்பட்ட அடிப்படை அளவின் கீழ் புள்ளிகளைப்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு முதன்மைத்திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட பிரமாணங்களுடனும் எதிர்பார்ப்புக்களுடனும் இணங்குவதற்குத் தேவையான வழிமுறைகளை மேற்கொள்வதற்கான தேவையை வலியுறுத்தி பொருத்தமான மேற்பார்வை தொடர்பூட்டல்கள் வழங்கப்பட்டன.

**நிதிக் கம்பனிகளுக்கு நடைமுறைப்படுத்தப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் முன்னெடுப்புக்களுக்கு மேலதிகமாக, ஏனைய வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் தாக்குப்பிடிக்கும்தன்மையையும் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்புக்களையும் வலுப்படுத்துவதற்கான இலக்கிடப்பட்ட வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.** ஆற்றல்வாய்ந்த கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பொன்றைத் தாபிப்பதற்கு உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளைக் கோரும் உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளுக்கான கொடுடன் இடர்நேர்வு முகாமைத்துவம் பற்றிய பணிப்புரையொன்றை வழங்கியதன் ஊடாக உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளுக்கான இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு மேலும் வலுப்படுத்தப்பட்டது. மேலும், முதனிலை வணிகர் கம்பனிகள் துறையின் தாக்குப்பிடிக்கும்தன்மையை மேம்படுத்துவதற்காக, சாத்தியமான இடர்நேர்வுகளையும் எதிர்பார்க்கப்படாத இழப்புக்களையும் உள்ளீர்த்துக்கொள்வதற்கு நிதியியல் தாங்கியிருப்பொன்றை வழங்கும் நோக்கில் குறைந்தபட்ச மைய மூலதனத் தேவைப்பாடு மீதான பணிப்புரையொன்று வழங்கப்பட்டது.

## 5.4 கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகளுடன் தொடர்புபட்ட கொள்கைகள்

**மத்திய வங்கி அதன் பயனாளர் சமூகத்திற்கு மிகவும் பாதுகாப்பான, வினைத்திறன்மிக்க மற்றும் காத்திரமான கொடுப்பனவு தகவல் பரிமாற்றத்தை உறுதிப்படுத்துவதற்கு உலகளாவிய வங்கிகளுக்கிடையிலான நிதியியல் தொலைத்தொடர்புகளுக்கான சங்கத்தினால் கட்டியெழுப்பப்பட்ட ISO20022 கொடுப்பனவு தகவல் பரிமாற்ற தரநியமத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியது.** உலகளாவிய வங்கிகளுக்கிடையிலான நிதியியல் தொலைத்தொடர்புகளுக்கான சங்கத்தின் ISO20022 தரநியமத்தைப் பின்பற்றல், பரிமாற்றம்செய்யப்பட்டு வருகின்ற மிகவும் விபரமானதும் கட்டமைக்கப்பட்டதுமான கொடுப்பனவு தகவல்களுடன் மேம்பட்ட மற்றும் பன்முக ரீதியிலான கொடுப்பனவு தகவல் பரிமாற்ற நியமமொன்றிக்கான உலகலாவிய மாற்றத்தில் குறிப்பிடத்தக்களவிலான மைல்கல்லொன்றை குறித்தது. அதனூடாக தன்னியக்கத்திற்கும் இடைத்தொழிற்படுதன்மைக்கும் வசதியளிக்கின்ற அதேவேளை கைமுறையான தலையீட்டையும் செயன்முறைப்படுத்தல் தவறுகளையும் குறைப்பதுடன், வெளிப்படைத்தன்மையையும் பின்தொடரக்கூடிய தன்மையையும் ஊக்குவித்து, எல்லைகளுக்கிடையிலான கொடுப்பனவுகளுடன் தொடர்புபட்ட மோசடிக் கண்டறிவையும் இடர்நேர்வு முகாமைத்துவத்தையும் வசதிப்படுத்துகின்றது. மேலும், இலங்கையின் வேகமான கொடுப்பனவு முறைமையான பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி மற்றும் பொதுவான தன்னியக்க கூற்றுப் பொறி என்பவற்றுடன் தொடர்புடைய கொடுகடன் இடர்நேர்வை நன்றாக முகாமைசெய்வதற்கு புதிய இடர்நேர்வு தணிப்புப் பொறிமுறையொன்று 2026 யூன் 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. 2026ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சுற்றறிக்கையை வழங்குவதன் மூலம் தாபிக்கப்பட்ட புதிய பொறிமுறை, 2026 யூன் 1 தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் பொருந்தக்கூடிய தேறிய படுகடன் வரவு உச்சவரம்பு அதேபோன்று அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமையில் பொருந்தக்கூடிய தீர்ப்பனவு உத்தரவாதத் தொகை என்பவற்றுடன் இணங்குவதற்கு, அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமையில் பங்கேற்பாளர்களாகவிருக்கும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி மற்றும் பொதுவான தன்னியக்க கூற்றுப் பொறி என்பவற்றின் பங்கேற்பாளர்களை தேவைப்படுத்துகின்றது.

**டிஜிட்டல் கொடுப்பனவு வழிகளை உள்ளடக்கி இடம்பெறுகின்ற நிதியியல் மோசடிகள் மற்றும் ஏமாற்றுதல்களின் அதிகரித்த நிலவுகையைக் கருத்திற்கொள்கையில், டிஜிட்டல் கொடுப்பனவு முறைகளின் பாதுகாப்பை வலுப்படுத்துவதன் ஊடாகவும் ஏமாற்றுதலுடன் தொடர்புபட்ட இடர்நேர்வுகள் பற்றிய பொதுமக்கள் விழிப்புணர்வை மேம்படுத்துவதன் ஊடாகவும் வாடிக்கையாளர்களைப் பாதுகாப்பதற்கு மத்திய வங்கி கொள்கைசார் முன்னெடுப்புக்களை மேற்கொண்டது.** வலுப்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் அடையாளம்காணல் மற்றும் செல்லிடக் கொடுப்பனவுச் செயலிகளுக்கான உறுதிப்படுத்தல் தேவைப்பாடுகளின் அமுல்படுத்தலைத் தொடர்ந்து, தொடர்ச்சியான பொதுமக்கள் விழிப்புணர்வு முன்னெடுப்புக்களுடன், 2025 இன் நடுப்பகுதியில் சடுதியாக அதிகரித்திருந்த டிஜிட்டல் கொடுப்பனவு வழிகளை உள்ளடக்கி இடம்பெறுகின்ற அறிக்கையிடப்பட்ட மோசடி மற்றும் ஏமாற்றுச் சம்பவங்களின் எண்ணிக்கை, அதன்பின்னர் வீழ்ச்சியடைகின்ற போக்கொன்றைக் காட்டியது. மேலும், லங்காபே (பிறைவட்) லிமிடெட்டினால் தொழிற்படுத்தப்படும் சில்லறைக் கொடுப்பனவு முறைமைகளுக்கான அடுத்துவரவிருக்கின்ற மையப்படுத்தப்பட்டளவில் ஈடுபடுத்தப்படுகின்ற மோசடி முகாமைத்துவ முறைமையின் பெறுகையானது டிஜிட்டல் கொடுப்பனவுகளுடன் தொடர்புபடுகின்ற மோசடி இடர்நேர்வை நிவர்த்திப்பதற்கு உதவும்.

## 5.5 நிதியியல் நிறுவனங்களின் வைப்புக் காப்புறுதி மற்றும் தீர்மானம் மீதான கொள்கைகள்

**மத்திய வங்கி, நாட்டின் தீர்மானக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கு சில வழிமுறைகளை மேற்கொண்டது.** அத்தகைய, நிறுவனசார் நெருக்கடியின் செயற்திறன்மிக்க முகாமைத்துவத்திற்கு ஆதரவளிப்பதற்கு உரிமம்பெற்ற நிதியியல் நிறுவனங்களுக்கான தீர்மான திட்டங்கள் முன்னேற்றகரமாக உருவாக்கப்பட்டு வருகின்றன. தீர்மான வழிமுறைகளின் நடைமுறைப்படுத்தலிற்கு ஆதரவளிப்பதற்கு 2023 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட நிதியியல் உறுதிப்பாட்டு நிதியம் அதன் தொழிற்பாட்டுசார் கட்டமைப்பின் உருவாக்கத்துடன் தொழிற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், தீர்மானக் கட்டமைப்பின் நடைமுறைபடுத்தலை வலுப்படுத்துவதற்கு சுயாதீன தொழில்சார் மதிப்பீட்டாளர்கள் குழாமொன்றை மத்திய வங்கி தாபித்ததுடன் வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திற்கமைய உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகளின் தீர்மானத்தில் அவர்களின் வகிபாகம் தொடர்பில் விழிப்புணர்வு அமர்வொன்றையும் மேற்கொண்டது. இதற்கு மேலதிகமாக, தீர்மானத்திற்கான ஆர்வலர் தயார்நிலையை மேம்படுத்துவதற்காக உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகளின் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் மற்றும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கான விழிப்புணர்வு அமர்வுகள் நடாத்தப்பட்டன. தொழில்நுட்பசார் உதவியைப் பாதுகாப்பதற்கும் பன்னாட்டு ரீதியிலான சிறந்த நடைமுறைகளுடன் தீர்மானக் கட்டமைப்பை அணிசேரச்செய்வதற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நியமிக்கப்பட்ட பன்னாட்டு மற்றும் தேசிய ஆலோசகர் நிபுணரொருவருடன் மத்திய வங்கி அதன் ஈடுபாட்டைத்

தொடர்ந்த அதேவேளை, தீர்மானித்தல் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கும் முக்கிய தீர்மான முன்னெடுப்புக்களின் நடைமுறைப்படுத்தலிற்கு ஆதரவளிப்பதற்கும் அத்தகைய நிபுணர்களுடன் செயற்பணியொன்றை மேற்கொள்கின்றது.

**இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் தொழிற்பாட்டுசார் தயார்நிலையும் செயற்றின்மிக்க தன்மையும் கொள்கை, நிறுவன மற்றும் தொழிற்பாட்டுசார் மேம்பாடுகளின் தொகுதியொன்றின் ஊடாக மீளாய்வுக் காலப்பகுதியின் போது மேலும் வலுப்படுத்தப்பட்டன.** நெருக்கடி காலங்களின் போது பாரிய அளவிலான அல்லது ஏக காலத்திலான ஈடளிப்புக்களை முகாமைசெய்வதில், இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் தொழிற்பாட்டுசார் வினைத்திறனை மேம்படுத்தும் நோக்கில், நிதியியல் துறை பாதுகாப்பு வலையை வலுப்படுத்தும் கருத்திட்டத்தின் செயலாற்றத்தின் அடிப்படையிலான நிபந்தனையாக இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்திற்கான தற்காலிகத் திட்டம் உருவாக்கப்பட்டது. தனியான முகவர் வங்கியொன்றில் அதிகளவில் தங்கியிருத்தலைக் குறைப்பதற்கும் நட்டஈட்டுக் கொடுப்பனவுகளின் செயற்றிறன்மிக்க பகிர்ந்தளிப்பை உறுதிப்படுத்துவதற்கும் பரந்தளவிலான கிளை வலையமைப்புக்களையும் போதியளவிலான வளங்களையும் கொண்ட உரிமம்பெற்ற வங்கிகளை உள்ளடக்கி, அங்கீகாரமளிக்கப்பட்ட முகவர் வங்கிகளின் குழாமொன்றைத் தாபிப்பதற்கு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. தீர்மானங்களுக்கு ஆதரவளிப்பதில் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்ட வளங்களின் பயன்பாட்டிற்காக கட்டமைக்கப்பட்ட கட்டமைப்பொன்றை வழங்கும் நோக்கில், தீர்மான வழிமுறையொன்றாக அங்கத்துவ நிறுவனமொன்றின் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் மாற்றலை வசதிப்படுத்துவதற்கு நிதியியல் உதவியை வழங்குவதன் மீதான இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டக் கொள்கை இக்காலப் பகுதியில் தாபிக்கப்பட்டது. மேலும், அரசாங்க ஆதரவு நிதியிடல் ஏற்பாடுகள் மீதான நிதி அமைச்சுடனான புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றைத் தாபித்தல் உள்ளடங்கலாக கொள்கை மற்றும் நிறுவனசார் வழிமுறைகள், வைப்புக் காப்புறுதிக் கட்டமைப்பினை பன்னாட்டு சிறந்த நடைமுறைகளுடனும் காத்திரமான வைப்புக் காப்புறுதி முறைமைகளுக்கான வைப்புக் காப்புறுதி வழங்குநர்கள் மைய கொள்கைகள் பற்றிய பன்னாட்டு அமைப்புடனும் அணிசேர்ந்திருப்பதற்கு நிதியியல் துறை பாதுகாப்பு வலை வலுப்படுத்தும் கருத்திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டன.

## 5.6 நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புடன் தொடர்புபட்ட கொள்கைகள்

**மத்திய வங்கி, மேம்படுத்தப்பட்ட சந்தை நடத்தை மேற்பார்வை, ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வை, முறைப்பாட்டு முகாமைத்துவம் மற்றும் நிதியியல் வாடிக்கையாளர் விழிப்புணர்வு முன்னெடுப்புக்கள் என்பவற்றின் ஊடாக நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பை தொடர்ச்சியாக வலுப்படுத்தியதன் மூலம் ஒழுங்குமுறைப்படுத்தலில் நிதியியல் துறையிடையே நிதியியல் வாடிக்கையாளர்கள் நியாயமான கவனிப்பை ஊக்குவிக்கின்றது.** 2026இன் முதலரைப்பகுதியின் போது, இப்பகுதிகளில் கிடைக்கப்பெற்ற கணிசமானளவிலான வாடிக்கையாளர் முறைப்பாடுகளுக்கு பதிலிறுத்தும் வகையில் உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் நிதிக்கம்பனிகளால் வழங்கப்படும் தவணைக் கடன்களின் தொடர்புடைய முன்கூட்டிய தீர்ப்பனவு நடைமுறைகள் மற்றும் உரிமம்பெற்ற வங்கிகளின் குத்தகை உடைமைகளை மீட்டெடுத்தல் நிறைவேற்றல் செயன்முறை என்பவற்றின் மீதான கருப்பொருள்சார் மீளாய்வுகளினூடாக மேற்பார்வை கட்டமைப்பு மேலும் விரிவாக்கப்பட்டது. மேலும், தளத்திற்கு வெளியேயான சந்தை நடத்தை மேற்பார்வைக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு மத்திய வங்கியால் சந்தை நடத்தை மேற்பார்வைக்கான முக்கிய இடர்நேர்வு குறிகாட்டி நோக்குத்தளமொன்று உருவாக்கப்பட்டது. முறைப்பாட்டுக் கையாளல் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்துவற்கு, இணையவழி முறைப்பாட்டு முகாமைத்துவ முறைமை 2026 மே 15ஆம் திகதி அன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறைமை தரநிலைப்படுத்தப்பட்ட டிஜிட்டல் தளமொன்றினூடாக முறைப்பாடுகளை இலத்திரனியல் வழியில் சமர்ப்பிப்பதற்கு நிதியியல் வாடிக்கையாளர்களை இயலச்செய்கின்றது. தரவினால் தூண்டப்பட்ட மேற்பார்வையை வலுப்படுத்துவதற்கும் முறைப்பாட்டுக் கண்காணிப்பை மேம்படுத்துவதற்கும் மத்திய வங்கியின் நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களத்திற்கான வாடிக்கையாளர் முறைப்பாடு நோக்குத்தளம் குறித்த செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கிணையாக, தற்போதுள்ள முறைப்பாட்டு வகைப்படுத்தல் கட்டமைப்பை சீரமைப்பதற்கு முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளை முறைப்பாட்டு வகைப்படுத்தலினதும் பகுப்பாய்வினதும் தொடர்ச்சி மற்றும் தரத்தை மேம்படுத்துவதற்கு அனைத்தையுமுள்ளடக்கிய பயனாளர் வழிகாட்டி தயாரிக்கப்பட்டுவருகின்றது. மேலும், மத்திய வங்கி, இலக்கிடப்பட்ட கல்வி மற்றும் சென்றடைதல் நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக நிதியியல் வாடிக்கையாளர் விழிப்புணர்வை ஊக்குவிப்பதற்கான அதன் முயற்சியை தொடர்ந்த அதேவேளை நிதியியல் வாடிக்கையாளர்களைப் பாதுகாப்பதற்கும் அதன் ஆணைக்கு இசைந்துசெல்லும் விதத்தில் தடைசெய்யப்பட்ட திட்டங்களை கண்டறிவதற்கும், விசாரணைசெய்வதற்கும் அத்துடன் தடுப்பதற்கும் நிதியியல் முறைமையில் உறுதிப்பாட்டையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பதற்கும் அதன் முயற்சிகளை வலுப்படுத்துகின்றது.

### 5.7 பணம் தூயதாக்கலுக்கெதிரான, பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மற்றும் ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் என்பவற்றுடன் தொடர்புபட்ட கொள்கைகள்

**2026 யூன் மாதத்திலான நிறைவடைந்த ஆண்டுகாலப்பகுதியில், நிதியியல் உளவறிதல் பிரிவு, ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை மற்றும் கொள்கைசார் முன்னெடுப்புக்களின் தொகுதியொன்றின் ஊடாக பணம் தூயதாக்கலுக்கெதிரான, பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கட்டமைப்பை தொடர்ந்தும் வலுப்படுத்தியது.** தோற்றம்பெறுகின்ற இடர்நேர்வுகளையும் சந்தேகத்திற்கிடமான நடவடிக்கைகளையும் அடையாளம்காண்பதில் அறிக்கையிடும் நிறுவனங்களுக்கு உதவுவதற்காக நிதியியல் உளவறிதல் பிரிவானது, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள்/ மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள், பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல், ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தல் மற்றும் வெளிநாட்டு தேசத்தவர்களை உள்ளடக்குகின்ற இலங்கையில் ஏமாற்றுத் தொழிற்பாடுகள் என்பவற்றுடன் தொடர்புடைய சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களை அடையாளம்காணல் பகுதிகளை உள்ளடக்குகின்ற சிவப்பு எச்சரிக்கை குறிகாட்டிகளின் ஆறு தொகுதிகளை வெளியிட்டது. இதற்கு மேலதிகமாக, தேசிய பணம் தூயதாக்கல், பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் மற்றும் ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வு மதிப்பீடு 2024/25 உடன் இசைந்துசெல்லும் விதத்தில் நிறுவனசார் இடர்நேர்வு மதிப்பீடுகளை இற்றைப்படுத்தல், தடைசெய்யப்பட்ட ஆட்களுக்கும் நிறுவனங்களுக்கும் எதிரான தரவுத்தள பாதுகாப்பினை சான்றுப்படுத்தல் மற்றும் நிதியியல் நடவடிக்கைச் செயலணியினால் உயர்ந்தளவிலான இடர்நேர்வு நியாயாதிக்கங்களாக அடையாளம்காணப்பட்ட நியாயாதிக்கங்களுக்கான மேம்படுத்தப்பட்ட உரிய விழிப்புக்கவன வழிமுறைகளினதும் ஒழித்தல் வழிமுறைகளினதும் பிரயோகம் என்பவற்றின் மீது மீளாய்விற்குரிய இக்காலப்பகுதியின் போது மூன்று சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டன.

**2026 யூனுடன் முடிவடைந்த ஆண்டுக்காலப்பகுதியில் நிதியியல் உளவறிதல் பிரிவு அதன் மேற்பார்வை மற்றும் அமுலாக்கல் முயற்சிகளின் அங்கமாக, 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகாமைக்காக நிதியியல் நிறுவனங்கள் மற்றும் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்கள் உள்ளடங்கலாக 20 நிறுவனங்களின் மீது தண்டப்பணங்களை விதித்தது.** மேலும், நிதியியல் உளவறிதல் பிரிவினால் ஒருங்கிணைக்கப்பட்ட இலங்கையின் மூன்றாவது தேசிய இடர்நேர்வு மதிப்பீடு 2024/25 இக்காலப்பகுதியின் போது நிறைவுசெய்யப்பட்டது. இம்மதிப்பீடு நாட்டின் பணம் தூயதாக்கல், பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் மற்றும் ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வுகளை மதிப்பீடுசெய்தது. அதேவேளை, நாட்டின் முக்கிய பணம் தூயதாக்கலுக்கெதிரான, பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் சட்டங்கள் அதாவது 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயங்கரவாதி நிதியளித்தலை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டம், 2006ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க பணம் தூயதாக்கல் தடைச் சட்டம் மற்றும் நிதிசார் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டம் என்பன இலங்கையின் பணம் தூயதாக்கலுக்கெதிரான, பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கு பன்னாட்டுத் தரநியமங்களுடன் இசைந்துசெல்லும் விதத்தில் திருத்தம்செய்யப்பட்டன. இதற்கமைய, அதாவது 2026ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பணம் தூயதாக்கலை (திருத்தச்) தடுத்தல் சட்டம், 2026ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் (திருத்தச்) சட்டம், மற்றும் 2026ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாய (திருத்தச்) சட்டம் ஆகிய மூன்று பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் சட்டவாக்கங்களுக்கான திருத்தங்கள் 2026 ஓகத்து 4ஆம் திகதி அன்று கௌரவ சபாநாயகரினால் சான்றளிக்கப்பட்டன.

**பணம் தூயதாக்கல் மீதான ஆசிய பசுபிக் குழுவினால் நடாத்தப்பட்ட பணம் தூயதாக்கலுக்கெதிரான, பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மற்றும் பேரழிவுமிக்க ஆயுதப் பெருக்கத்திற்கு நிதியளித்தலினை ஒழித்தல் என்பன குறித்த கட்டமைப்பு தொடர்பில் மூன்றாவது பரஸ்பர மதிப்பீட்டினை இலங்கை தற்போது மேற்கொண்டு வருகின்றது.** தொழில்நுட்ப இணங்குவிப்பு அறிக்கை மற்றும் செயற்றிறன்மிக்க அறிக்கை என்பவற்றின் சமர்ப்பித்தலைத் தொடர்ந்து, ஆசிய பசுபிக் குழுவிற்கு இலங்கையின் இடர்நேர்வு மற்றும் சூழல் அறிக்கையின் சமர்ப்பிப்புடன் பரஸ்பர மதிப்பீட்டுச் செயன்முறை தொடங்கியது. களத்திலான விஜயம் 2026 ஒத்தோபர்-நவெம்பர் காலப்பகுதியில் இடம்பெறுவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. களத்திலான விஜயத்தின் போது பொது மற்றும் தனியார் துறை ஆகிய இரண்டினதும் வலுவான செயலாற்றத்தினைக் காட்டுவதானது சாதகமான பெறுபேறொன்றை அடைவதில் இன்றியமையாததாக அமையும். சாதகமான பெறுபேறொன்றினைப் பெற்றுக்கொள்ளத் தவறுவதானது நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழுவினால் பாதகப் பட்டியலிடலில் சேர்க்கப்படக்கூடிய நிலை ஏற்படுவதுடன், அது இலங்கைக்கு பொருளாதார மற்றும் நிதியியல் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றன.

## 5.8 நிதியியல் வசதிக்குட்படுத்தலுடன் தொடர்புடைய கொள்கைகள்

**நிதியியல் வசதிக்குட்படுத்தல் பரப்பில் மத்திய வங்கியின் வழிமுறைகளின் ஓர் அங்கமாக, தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம் கட்டம் I இன் இறுதிக்கால மதிப்பீடு மற்றும் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் அளவீடு என்பன நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான கூட்டணியின் ஆதரவுடன் தொடங்கப்பட்டு 2026 நடுப்பகுதியில் நிறைவுசெய்யப்பட்டன.** இறுதிக்கால மதிப்பீடு மற்றும் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் அளவீடு என்பவற்றின் கண்டறிவுகள், பரந்தளவிலான ஆர்வலர் ஆலோசனைச் செயன்முறையொன்றினூடாக வடிவமைப்பதற்கு எதிர்பார்க்கப்படும் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம் கட்டம் II இன் உருவாக்கத்திற்கான முக்கிய சான்று அடிப்படையிலான உள்ளீடுகளை வழங்கும். மேலும், நிறுவனசார் பங்குடமைகளை வலுப்படுத்துதல், தேசிய நிதியியல் அறிவு பாடவிதானத்தை வெளியிடுதல் மற்றும் காத்திரமான வழங்கல் வழிகளை அடையாளம்காணல் என்பவற்றை நோக்காகக்கொண்டு, இலங்கையின் நிதியியல் அறிவு வழிகாட்டலை நடைமுறைப்படுத்தல் (2024-2028) ஆண்டுகாலத்தின் போது தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது. தேசிய நிதியியல் அறிவு பாடத்திட்டத்தை பரவலடையச்செய்வதனை ஆதரவளிப்பதற்கான முயற்சிகளின் அங்கமாக, பாடத்திட்டத்தின் உள்ளடக்கத்தை டிஜிட்டல்மயப்படுத்தும் செயன்முறை ஆரம்பிக்கப்பட்டது. இம்முன்னெடுப்பானது நிதியியல் கல்வியை வழங்குவதற்கான சிக்கனமிக்கதும் புத்தாக்கமிக்கதுமான அணுகுமுறையொன்றை வழங்குவதனை நோக்காகக்கொள்கின்ற அதேவேளை, சுய வேகக் கற்றல், மதிப்பீடுகள் மற்றும் சான்றிதழ் வழங்கல் என்பவற்றை ஒருங்கிணைத்து, பயனாளர் நேயமிக்க டிஜிட்டல் தளமொன்றினால் ஆதரவளிக்கப்பட்ட விளையாட்டு அடிப்படையிலான கல்வியினூடாக அணுகலை விரிவடையச்செய்து, மிகவும் ஈடுபாடுமிக்கதும் இடைத்தொடர்பாடல்மிக்கதுமான கற்றலை ஊக்குவிக்கின்றது. பயிற்சிவழங்குநரின் இயலாற்றலைக் கட்டமைப்பதற்கும், உரிய ஆர்வலர்களின் ஒத்துழைப்புடன் சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள், பெண்கள், நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் அத்துடன் ஏனைய பாதிக்கப்படக்கூடிய குழுவினர்கள் போன்றோரை இலக்காகக்கொண்டு, நிதியியல் அறிவு உள்ளடக்கத்தை உருவாக்குதல் மற்றும் பரவலடையச்செய்தலை விரிவாக்குவதற்குமான முயற்சிகளும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன. இம்முயற்சிகளின் ஓர் அங்கமாக, மத்திய வங்கி, நிதியியல் அறிவை மேம்படுத்துவதற்கும் சிறந்த நிதியியல் முகாமைத்துவ நடைமுறைகள் பற்றிய பொதுமக்களின் விழிப்புணர்வை அதிகரிப்பதற்கும் 2025 ஒத்தோபரில் *"நிதியியல் அறிவு மாதம்"* இனை அறிமுகப்படுத்தியது. பரந்தளவிலான பொதுமக்கள் ஈடுபாட்டை இயலச்செய்தும், தகவலறிந்த தீர்மானமெடுத்தலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியும் அச்சு, டிஜிட்டல் மற்றும் சமூக ஊடகங்கள் அதேபோன்று நேரடி சென்றடைதல் நடவடிக்கைகள் ஊடாக மாத காலப்பகுதி முழுவதும் பரந்தளவிலான விழிப்புணர்வு மற்றும் கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. மேலும், மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்கள், நாடளாவிய ரீதியில் விழிப்புணர்வு அமர்வுகள், நிதியியல் அறிவு தின நிகழ்வுகள் மற்றும் பிரதேச ரீதியிலான மன்றங்களை நடத்துவதன் மூலம் சமூகத்தினரிடையே நிதியியல் அறிவை வலுப்படுத்துவதற்கும் மத்திய வங்கியின் பிரதேச ரீதியிலான இருப்பை ஆதரவளிப்பதன் மூலம் அவற்றின் உள்ளூர் ஈடுபாட்டு நடவடிக்கைகளை வழங்கி முக்கிய சென்றடைதல் கரங்களாக தொடர்ந்தும் தொழிற்பட்டன.

## 5.9 நிதியியல் முறைமை மேற்பார்வைக் குழு

**2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 70(2)(ஈ)ஆம் பிரிவிற்கமைய, நிதியியல் முறைமை மேற்பார்வைக் குழு, 2026 யூன் மாதத்தில் நிறைவடைந்த 12 மாத காலப்பகுதியின் போது நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பாதகமாக பாதிக்கக்கூடிய பொருளாதாரத்தில் ஏற்படும் அபிவிருத்தியை மதிப்பீடுசெய்தது.** இக்காலப் பகுதியின் போது நிதியியல் முறைமை மேற்பார்வைக் குழு ஐந்து கூட்டங்களைக் கூட்டியதுடன் இக்கூட்டங்களில் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுடன் தொடர்புடைய பல்வேறுபட்ட பிரச்சினைகள் ஆராயப்பட்டன. இக்கலந்துரையாடல்கள், இடர்நேர்வுகள் மற்றும் பாதிக்கப்படக்கூடியதன்மைகள் பற்றிய குழுவின் மேற்பார்வைக்கு பங்களித்த போதிலும், மீளாய்வின் கீழான காலப்பகுதியின் போது நிதியியல் முறைமை மேற்பார்வைக் குழுவினால் பரிந்துரைகள் ஏதும் வழங்கப்பட்டவில்லை.

**மேலும், காப்புறுதித் துறையில் அபிவிருத்திகள் பற்றிய தகவல்களை பரிமாற்றம்செய்வதனை வசதிப்படுத்துவதற்கு மீளாய்வு காலப்பகுதியின் போது மத்திய வங்கிக்கும் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவுக்கும் இடையில் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது.** பேரண்டமுன்மதிமிக்க அதிகாரசபை என்ற வகையில், இலங்கை மத்திய வங்கி, அதன் பேரண்டமுன்மதிமிக்க பொறுப்புக்கள் மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பாதுகாத்தல் என்பவற்றினை காத்திரமாக நிறைவேற்றுவதனை உறுதிப்படுத்துவதற்கு உரிய நிதியியல் துறை ஒழுங்குமுறைப்படுத்துநர்களுடன் காத்திரமான ஒத்துழைப்பு ஏற்பாடுகளைப் பேணுவது அவசியமாகும். இந்தவகையில், இவ் உடன்படிக்கை, நிதியியல் துறை முழுவதும் முறைமைசார் இடர்நேர்வுகளை மதிப்பீடுசெய்வதுடன் தொடர்புடைய தகவல்களுக்கான அணுகலை மேம்படுத்துவதன் ஊடாக மத்தியவங்கியின் பேரண்டமுன்மதிமிக்க கண்காணிப்பினையும் கொள்கை உருவாக்கத்தையும் வலுப்படுத்தும்.

## 5.10 நிலைபெறத்தக்க நிதி மீதான கொள்கைகள்

**ஆண்டு காலப் பகுதியில், மத்திய வங்கி, இலங்கையில் நிதியியல் துறைக்கான நடவடிக்கையை விரிவுபடுத்துதலை உள்ளடக்குகின்ற நிலைபெறத்தக்க நிதி வழிகாட்டி 2.0 இனை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியதுடன் நிதியியல் துறைக்கான காலநிலை தொடர்புபட்ட கொள்கைகளிலும் நடவடிக்கைகளிலும் இயலளவுகளைக் கட்டமைப்பதற்காக உள்நாட்டு மற்றும் பன்னாட்டு ஆர்வலர்களுடன் ஈடுபட்டது.** வழிகாட்டி 2.0 இனை நடைமுறைப்படுத்தல் திட்டத்தின் கீழ் முக்கிய முன்னெடுப்பொன்றாக, 2027 இல் ஆரம்பத்தில் வெளியிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்தின் ஆதரவுடன் வகைப்படுத்தல் முன்னேற்றமடைந்தது. இற்றைப்படுத்தபட்ட வகைப்படுத்தல், வழிகாட்டி 2.0 இன் கீழ் எதிர்பார்க்கப்பட்ட உபாய ரீதியிலான முன்னுரிமைகளுக்கும், விரிவாக்கப்பட்ட உள்ளடக்கத்திற்கும் இசைந்து செல்லும் விதத்தில் நிலைபெறத்தக்க பொருளாதார நடவடிக்கைகளின் நோக்கெல்லையை விரிவடையச் செய்வதற்கு எதிர்பார்க்கின்றது. மத்திய வங்கி, ஐரோப்பிய ஒன்றியத்தின் அதன் பசுமை மீட்பு வசதியின் கீழ் கிடைத்த தொழில்நுட்பசார் உதவியுடன் தற்போதைய பசுமை நிதி வகைப்படுத்தலைத் தொழிற்படுத்துவதற்காக இயலாற்றல் கட்டமைப்பு மற்றும் விழிப்புணர்வு அதிகரித்தல் நடவடிக்கைகளின் தொகுதியொன்றை மேற்கொண்டது. உயர்வடைந்த காலநிலைசார் பாதிக்கப்படும்தன்மைகளின் சூழ்நிலையில் காலநிலைக் கொள்கைகளையும் உரிய நடைமுறைகளையும் புரிந்துகொள்ளல் மற்றும் நன்றாக பிரயோகிப்பதில் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு மன்றங்கள் ஈடுபட்டது. ஆண்டு காலத்தின் போதான இவ் ஈடுபாடுகள் அரச துறை நிறுவனங்களுடனான ஆலோசனைகளையும் அதே போன்று நிதியியல் துறை ஒழுங்குமுறைபடுத்துநர்கள், நிதியியல் நிறுவனங்கள் மற்றும் தொழிற்துறை சங்கங்கள் உள்ளடங்கலாக நிதியியல் துறை ஆர்வலர்களுடன் ஈடுபடுதலையும் உள்ளடக்கியது. மத்திய வங்கி, இப்பகுதியில் செயற்படுகின்ற கூட்டாண்மைத் துறை சம்மேளனங்களினாலும் அரச சார்பற்ற அமைப்புகளினாலும் தொடங்கப்பட்ட பல்வேறு வகையான கொள்கைசார் கலந்துரையாடல்களிலும் ஆர்வலர் ஆலோசனைகளிலும் பங்குபற்றியது. மேலும், மத்திய வங்கி, காலநிலை மற்றும் நிலைபெறத்தக்கதன்மை பற்றிய பன்னாட்டு அறிவுசார் நிகழ்வுகளில் கலந்துகொண்ட அதேவேளை, 2026 இன் போது உறுப்பு நாடொன்றாக நிலைபெறத்தக்க நிதிக்கான பன்னாட்டு ரீதியிலான தளம், நிலைபெறத்தக்க வங்கித்தொழில் மற்றும் நிதி வலையமைப்பு மற்றும் நிதியியல் உள்ளடக்கத்திற்கான கூட்டணி போன்ற உலகளாவிய ஒத்துழைப்புக்களுக்கு பங்களிக்கின்றது.

# நிதியியல் துறைக்காக[1] நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய கொள்கைசார் மாற்றங்கள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகள்

## பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்பு

| | |
|---|---|
| 2025 நவெம்பர் 07 | மோட்டார் வாகனங்களை கொள்வனவு அல்லது உபயோகிக்கும் நோக்கத்திற்காக வழங்கப்படும் கொடுகடன் வசதிகளுக்கு ஏற்புடைய அதிகபட்ச பெறுமதிக்கான கடன் விகிதங்களைத் திருத்தியமைத்து, மத்திய வங்கிச் சட்டத்தின் 105(1) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட 'மோட்டார் வாகனங்கள் தொடர்பில் வழங்கப்படும் கொடுகடன் வசதிகளின் பெறுமதிக்கான கடன் விகிதங்கள்' மீதான 2025ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க மத்திய வங்கிச் சட்டப் பணிப்புரைகள் உரிமம்பெற்ற வங்கிகளுக்கும், நிதிக் கம்பனிகளுக்கும் மற்றும் பதிவுசெய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டன. அதற்கமைய, இப்பணிப்புரை வழங்கப்பட்டமையினால் 2025ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டப் பணிப்புரைகள் இரத்துச்செய்யப்பட்டன. |
| 2026 மே 24 | மோட்டார் வாகனங்களை கொள்வனவு அல்லது உபயோகிக்கும் நோக்கத்திற்காக வழங்கப்படும் கொடுகடன் வசதிகளுக்கு ஏற்புடைய அதிகபட்ச பெறுமதிக்கான கடன் விகிதங்களைத் திருத்தியமைத்து, மத்திய வங்கிச் சட்டத்தின் 105(1) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட 'மோட்டார் வாகனங்கள் தொடர்பில் வழங்கப்படும் கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதங்கள்' மீதான 2026ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க மத்திய வங்கிச் சட்டப் பணிப்புரைகள் உரிமம்பெற்ற வங்கிகளுக்கும், நிதிக் கம்பனிகளுக்கும் மற்றும் பதிவுசெய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டன. அதற்கமைய, இப்பணிப்புரை வழங்கப்பட்டமையினால் 2025ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டப் பணிப்புரைகள் இரத்துச்செய்யப்பட்டன. |
| | தங்கத்தால் பிணையுறுதியளிக்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கு ஏற்புடைய அதிகபட்ச பெறுமதிக்கான கடன் விகிதத்தை அறிமுகம்செய்து, மத்திய வங்கிச் சட்டத்தின் 105(1) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட 'தங்கத்தால் பிணையுறுதியளிக்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதங்கள்' மீதான 2026ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க மத்திய வங்கிச் சட்டப் பணிப்புரைகள் உரிமம்பெற்ற வங்கிகளுக்கும், நிதிக் கம்பனிகளுக்கும் வழங்கப்பட்டன. |

## நிதியியல் நிறுவனங்கள்

### உரிமம்பெற்ற வங்கிகள்

| | |
|---|---|
| 2025 யூலை 17 | அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் சார்பாக உரிமம்பெற்ற வங்கிகளினூடாக கொடுகடன் கடிதங்களை திறப்பதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட பிணையமாக இலங்கை அரசாங்கத்தின் நிதியியல் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் கடப்பாடுகளை கருத்திற்கொண்டு, வரவுசெலவுத்திட்ட ஏற்பாடுகள் மற்றும் உரியகால தீர்ப்பனவுகளை உறுதிப்படுத்தும் பொதுத் திறைசேரியினால் வழங்கப்படும் உறுதிமொழிக் கடிதத்தை விபரித்து, "உரிமம்பெற்ற வங்கிகளின் தொடர்புடைய தரப்பினர்களுக்காக வழங்கப்படும் கடன்வசதிக்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட பிணையங்கள்" மீதான 2024ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட தீர்மானம் திருத்தப்பட்டு வழங்கப்பட்டது. |
| 2025 செத்தெம்பர் 17 | உரிமம்பெற்ற வங்கிகளின் தாக்குப்பிடிக்கும்தன்மையை உறுதிப்படுத்தும் பொருட்டு, 2023ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் மீட்புத் திட்டங்களைத் தயாரிக்குமாறு உரிமம்பெற்ற வங்கிகளுக்கு பணிப்புரைகள் வழங்கப்பட்டன. அதற்கமைய, இது தொடர்பில் வெளியிடப்பட்ட முன்னைய வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் இரத்துச்செய்யப்பட்டன. |
| 2025 திசெம்பர் 02 | செல்லிட வங்கித்தொழில் பிரிவு நடவடிக்கைகளை நடாத்துவதற்கான முன் அனுமதியைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் "உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் செல்லிட வங்கித்தொழில் பிரிவுகளைத் தாபிப்பதற்கான வழிகாட்டல்கள்" பற்றிய 2024ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க சுற்றறிக்கை திருத்தப்பட்டது. |
| 2025 திசெம்பர் 05 | அண்மைய புயல் மற்றும் வெள்ள அனர்த்தங்களின் பாதகமான தாக்கங்களையும் உரிமம்பெற்ற வங்கிகளின் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கு செயல்திறன்மிக்க நிவாரணத்தை வழங்குவதற்கான தேவையையும் கருத்திற்கொண்டு, வருமானம் அல்லது வியாபார நடவடிக்கைகள் நேரடியாக பாதிக்கப்பட்டிருந்த தனிநபர்களுக்கும் வியாபாரங்களுக்கும் பொருத்தமான நிவாரண வழிமுறைகளை வழங்குமாறு சகல உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் "அண்மைய புயல் மற்றும் வெள்ள அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட தனிநபர்களுக்கும் வியாபாரங்களுக்கும் உதவுவதற்கான நிவாரண வழிமுறைகள்" மீதான சுற்றறிக்கையொன்று வழங்கப்பட்டது. |

1 2025 யூலை 01 தொடக்கம் 2026 யூலை 31 வரை நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய நிதியியல் துறை கொள்கை வழிமுறைகளை உள்ளடக்குகின்றது.

| | |
|---|---|
| 2025 திசெம்பர் 10 | 2026ஆம் ஆண்டிற்கு ஏற்புடைய திருத்தியமைக்கப்பட்ட உரிமப்பத்திரக் கட்டணக் கட்டமைப்பை அறிவித்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கான "ஆண்டு உரிமப்பத்திரக் கட்டணம்" மீதான வங்கித்தொழில் சட்டத் தீர்மானம் வழங்கப்பட்டது. |
| 2026 மாச்சு 25 | உரிமம்பெற்ற வங்கிகள் வியாபாரத் தொழிற்பாடுகளை வெளிபுறச் சேவை வழங்குநர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கான ஆற்றல்வாய்ந்த மற்றும் முன்மதியுடைய கட்டமைப்புக்களைப் பின்பற்றுவதை உறுதிசெய்யும்பொருட்டு, புதிய வியாபார நடவடிக்கைகள் மற்றும் டிஜிட்டல்மயமாக்கப்பட்ட வியாபாரச் சென்முறைகளிலும் தொழிற்பாடுகளிலும் அபிவிருத்தி என்பவற்றிலிருந்து தோன்றுகின்ற வங்கித்தொழில் துறையில் அபிவிருத்திகளைக் கருத்திற்கொண்டு உரிமம்பெற்ற வங்கிகளின் வியாபாரத் தொழிற்பாடுகளை வெளிபுறச் சேவை வழங்குநர்களிடமிருந்து பெற்றுக்கொள்வது தொடர்பில் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |
| 2026 மே 27 | "பாசல் III இன் கீழ் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான மூலதனத் தேவைப்பாடுகள்" மீதான 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணிப்புரை திருத்தப்பட்டு, தங்கத்தால் பிணையளிக்கப்பட்ட வெளிப்படுத்துகைகளுக்கு பொருந்தக்கூடிய இடர்நேர்வு நிறைகளை திருத்தம் செய்தது. |

## நிதிக் கம்பனிகள், சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனி, உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் மற்றும் முதனிலை வணிகர் கம்பனிகள்

| | |
|---|---|
| 2025 யூலை 04 | நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி இனால் 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டம் தொடர்ச்சியாக மீறப்பட்டது. எனவே, புதிய வைப்புக்களை ஏற்றுக்கொள்வது உள்ளடங்கலாக பொதுமக்களிடமிருந்து நிதியங்களை எவ்வகையிலேனும் திரட்டுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. மேலும், 2025 யூலை 04 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கித்தொழில் விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தீர்மான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் கம்பனிக்கு நிருவாகியொருவர் நியமிக்கப்பட்டுள்ளார். |
| 2025 யூலை 05 | பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் அத்துடன் உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் என்பவற்றின் கீழ் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்கமைய மத்திய வங்கியின் ஆளுநர் சபையானது மத்திய வங்கியினால் நடாத்தப்பட்டு வருகின்ற விசாரணைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச்செல்லும் பொருட்டு 2025 யூலை 05ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் மேலும் ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்காக முதனிலை வணிகரொருவரின் தொழில் மற்றும் நடவடிக்கைகளை கொண்டுநடாத்துவதிலிருந்து பெர்பசுவல் டெஸரீஸ் லிமிடெட்டின் இடைநிறுத்தத்தினை நீடித்தது. |
| 2025 ஓகத்து 20 | உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளின் நடவடிக்கைகளின் தன்மை, அளவு மற்றும் சிக்கல்தன்மையுடன் ஒத்திசைந்து செல்லும் விதத்தில் கொடுகடன் இடர்நேர்வினை அடையாளங்காண்பதற்கு, அளவிடுவதற்கு, கண்காணிப்பதற்கு மற்றும் கட்டுப்படுத்துவதற்குக் கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பொன்றினைத் தாபிப்பதற்காக உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளை தேவைப்படுத்தி கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவம் குறித்துப் பணிப்புரையொன்று உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டது. |
| 2025 செத்தெம்பர் 16 | சாத்தியமான இடர்நேர்வுகள் மற்றும் எதிர்பாராத இழப்புக்கள் என்பவற்றினை உள்ளீர்ப்பதற்கு நிதியியல் தாங்கியிருப்பொன்றினை வழங்குவதன் மூலம் துறையின் தாக்குப்பிடிக்குந்தன்மையினை வலுப்படுத்துவதற்காக முதனிலை வணிகர் கம்பனிகளின் குறைந்தபட்ச மைய மூலதனத் தேவைப்பாடு குறித்துப் பணிப்புரையொன்று வழங்கப்பட்டது. |
| 2025 நவெம்பர் 07 | திரவத்தன்மை இடர்நேர்வினை அடையாளம் காணுதல், அளவிடுதல், கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடல், கட்டுப்படுத்தல் மற்றும் தணித்தல் என்பவற்றினை மேற்கொள்ளும் பொருட்டு திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவ உபாயம், கொள்கை மற்றும் நடைமுறைகள், ஆளுகைக் கட்டமைப்பு மற்றும் வினைத்திறன்மிக்க திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவச் செயன்முறையொன்றினை உருவாக்குவதனூடாக வலுவான திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பொன்றினைத் தாபிப்பதற்கு நிதிக் கம்பனிகளை தேவைப்படுத்தி திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவம் குறித்துப் பணிப்புரையொன்று வழங்கப்பட்டது. |
| | 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்திற்கு முன்மொழியப்பட்ட திருத்தங்கள் ஆர்வலர்களிடமிருந்தும் பொதுமக்களிடமிருந்துமான[2] கருத்துக்கள், ஆலோசனைகள் மற்றும் குறிப்புரைகள் என்பவற்றினைக் கோரும் பொருட்டு பொதுக் கலந்தாய்விற்காக வழங்கப்பட்டன. |

2 பொதுமக்கள் மற்றும் ஆர்வலர்களிடமிருந்து பெறப்பட்ட அபிப்பிராயங்கள், ஆலோசனைகள் மற்றும் கருத்துக்கள் 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்திற்கான முன்மொழியப்பட்ட திருத்தங்களுக்கு உரியவாறு ஒருங்கிணைக்கப்பட்டன. தற்போது, 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்திற்கான திருத்தங்களுக்கான தேவைப்படுத்தப்பட்ட ஒப்புதல்களைப் பெற்றுக்கொள்ளும் செயன்முறை முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

| | |
|---|---|
| 2026 சனவரி 05 | பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் அத்துடன் உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் என்பவற்றின் கீழ் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்கமைய, மத்திய வங்கியின் ஆளுகைச் சபையானது மத்திய வங்கியினால் நடாத்தப்பட்டு வருகின்ற விசாரணைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்காக 2026 சனவரி 05ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் மேலும் ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்காக முதனிலை வணிகர் ஒருவரின் தொழில் மற்றும் நடவடிக்கைகளை கொண்டுநடாத்துவதிலிருந்து பெர்பசுவல் டெஸரீஸ் லிமிடெட்டின் இடைநிறுத்தத்தினை நீடித்தது. |
| 2026 சனவரி 09 | அண்மைய புயல் மற்றும் வெள்ள அனர்த்தங்களின் (டித்வா) பாதகமான தாக்கத்தையும் நிதிக் கம்பனிகளின் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கு செயல்திறன்மிக்க நிவாரணத்தை வழங்குவதற்கான தேவையையும் கருத்திற்கொண்டு, வருமானம் அல்லது வியாபார நடவடிக்கைகள் நேரடியாக பாதிக்கப்பட்டிருந்த தனிநபர்களுக்கும் வியாபாரங்களுக்கும் பொருத்தமான நிவாரண வழிமுறைகளை வழங்குமாறு சகல நிதிக் கம்பனிகளிடம் கோரும் "அண்மைய புயல் மற்றும் வெள்ள அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட தனிநபர்களுக்கும் வியாபாரங்களுக்குமான நிவாரண வழிமுறைகள்" மீதான சுற்றறிக்கையொன்று வழங்கப்பட்டது. |
| 2026 சனவரி 12 | உயர்ந்தபட்ச வட்டி வீதங்களுக்கான திருத்தங்கள் குறித்த பணிப்புரையொன்று வழங்கப்பட்டதுடன், நிதிக் கம்பனிகளினால் வழங்கப்படுகின்ற வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் என்பவற்றிற்கு ஏற்புடைய உயர்ந்தபட்ச வட்டிவீதங்கள் திருத்தியமைக்கப்பட்டன. |
| 2026 பெப்புருவரி 16 | கடுமையான அழுத்த நிகழ்வுகளின் நிதியியல் தாக்கங்களை முன்கூட்டியே அடையாளம்கண்டு நிவர்த்திப்பதன் மூலம் செயற்றிறன்மிக்கதும் அனைத்தையுமுள்ளடக்கியதுமான மீட்புத் திட்டங்களைத் தயாரிப்பதற்கும், பேணுவதற்கும் நிறைவேற்றுவதற்கும் நிதிக் கம்பனிகளை தேவைப்படுத்தி, நிதிக் கம்பனிகளுக்கான மீட்புத் திட்டங்கள் பற்றிய பணிப்புரை வழங்கப்பட்டது. அதனூடாக நிதிக் கம்பனிகளின் தொழிற்பாடுகளின் உறுதிப்பாடும் தொடர்ச்சியும் பாதுகாக்கப்படுகின்ற அதேவேளை செயலிழப்பு அல்லது தீர்வு நடவடிக்கைகளுக்குட்படுதல் தடுக்கப்படுகின்றது. |
| 2026 மாச்சு 17 | நிதிக் கம்பனிகளின் பயன்பெறு சொத்துரிமையாளர் / சொத்துரிமையாளர்கள் பற்றிய போதுமான, துல்லியமான மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை அடையாளம்கண்டு, பேணுவதற்கும், நிதிக் கம்பனிகளின் கணிசமானளவிலான அல்லது கட்டுப்படுத்துகின்ற உடைமையிலிருந்து குற்றவாளிகள் அல்லது அவர்களின் தொடர்புபட்டவர்கள் (அவற்றின் பயன்பெறு சொத்துரிமையாளர் / சொத்துரிமையாளர்களாக இருப்பதை) தடுப்பதற்கும், நிதிக் கம்பனிகளின் சொத்தாண்மை மற்றும் கட்டுப்பாட்டுக் கட்டமைப்புக்களின் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் நிதிக் கம்பனிகளை தேவைப்படுத்தி, நிதிக் கம்பனிகளின் பயன்பெறு சொத்துரிமையாளர்கள் பற்றிய மதிப்பீடு குறித்த பணிப்புரை வழங்கப்பட்டது. |
| 2026 மே 27 | தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட சில்லறைக் கோரல்களுக்கு ஏற்புடைய கொடுகடன் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் தொகையைக் கணிப்பிடுவதற்கான முறையியலைத் திருத்தியமைத்து, மூலதனப் போதுமாந்தன்மை தேவைப்பாடுகளுக்கான திருத்தங்கள் பற்றிய பணிப்புரை வழங்கப்பட்டது. |
| 2026 யூன் 10 | 2010ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடும் (அறிக்கையிடல் தேவைப்பாடுகள்) பணிப்புரையுடன் தொடர்ச்சியாக இணங்கியொழுகத் தவறியமை, அதனுடனான இணகுவிப்பை இயலச்செய்வதற்கு பல நீடிப்புக்கள் வழங்கப்பட்ட போதிலும், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் ஒன்றிணைத்தலுக்கான முதன்மைத் திட்டம் குறித்து மத்திய வங்கியால் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யத் தவறியமை, அத்துடன் அதன் வியாபாரத் தொழிற்பாடுகளின் நிலைபேண்தன்மையை உறுதிப்படுத்துவதற்கான ஆற்றல்வாய்ந்த திட்டமொன்றை உருவாக்கத் தவறியமை போன்றவற்றின் காரணமாக 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடும் சட்டத்தின் (திருத்தியமைக்கப்பட்ட) 9(1)(ஊ) இன் நியதிகளுக்கமைய கோப்பரேட்டிவ் லீசிங் கம்பனி லிமிடெட்டின் பதிவு 2026 யூன் 10ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இரத்துச்செய்யப்பட்டது. |
| 2026 யூலை 03 | நிதித்தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு நிதித்தொழில் சட்டத்தின் கீழ் நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி இற்கு வழங்கப்பட்ட உரிமம், நிதியியல் நிலைமை தொடர்ந்து மோசமடைவதன் காரணமாகவும் அதன் தற்போதைய நிலை தொடர்வது வைப்பாளர்கள் மற்றும் ஆர்வலர்களின் நலன்களுக்கு மேலும் தீங்கு விளைவிக்கும் என்பதைக் கருத்தில்கொண்டும், வங்கித்தொழில் விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் 66(2)ஆம் பிரிவின் நியதிகளுக்கமைய, 2026 யூலை 03 தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் இரத்துச்செய்யப்பட்டது. வங்கித்தொழில் விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் ஏஆம் பகுதியின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைய, கம்பனியின் முடிவுறுத்தலிற்கான நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச்செல்வதற்கு மத்திய வங்கி தீர்மானித்தது. |

| | |
|---|---|
| 2026 யூலை 05 | பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் அத்துடன் உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் என்பவற்றின் கீழ் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்கமைய மத்திய வங்கியின் ஆளும் சபையானது மத்திய வங்கியினால் நடாத்தப்பட்டு வருகின்ற விசாரணைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச்செல்லும் பொருட்டு 2026 யூலை 05ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் மேலும் ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்காக முதனிலை வணிகரொருவரின் தொழில் மற்றும் நடவடிக்கைகளை கொண்டுநடாத்துவதிலிருந்து பெர்பசுவல் டெஸரீஸ் லிமிடெட்டின் இடைநிறுத்தலை நீடித்தது. |

## காப்புறுதி[3]

| | |
|---|---|
| 2025 யூலை 21 | காப்புறுதித் தொழில்துறையில் நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகள், சுற்றாடல், சமூக மற்றும் ஆளுகைக் கோட்பாடுகள் அத்துடன் நிலைபெறத்தக்க நிதி முன்முயற்சிகள் என்பவற்றின் முக்கிய தூண்களை நடைமுறைப்படுத்துவதற்கான கட்டமைப்பினை உள்ளடக்குவதற்கான வழிகாட்டல்கள் காப்புறுதிக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டன. |
| 2025 யூலை 25 | 'பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாத நிதியளித்தலை ஒழித்தல் நிகழ்ச்சித்திட்டம்' மீதான வழிகாட்டல்கள் காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் காப்புறுதி தரகுக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டன. |
| 2025 ஓகத்து 15 | 2019.07.24ஆம் திகதி அன்று வழங்கப்பட்ட 19ஆம் இலக்க பணிப்புரை மற்றும் 2020.06.03ஆம் திகதி அன்று 19ஆம் இலக்க பணிப்புரை (திருத்தம் செய்யப்பட்டது) என்பவற்றைத் திருத்தியமைத்து 2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க காப்புறுதி தொழில்துறை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 96அ பிரிவின் நியதிகளுக்கமைய 'காப்புறுதித் தரகர்களால் குறைந்தபட்ச தேறிய மூலதன தேவைப்பாட்டுடன் இணங்குதல்' மீது 2025ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பணிப்புரை காப்புறுதித் தரகர்களுக்கு வழங்கப்பட்டது. |
| 2025 செத்தெம்பர் 01 | 'மரணம் அல்லது நிரந்தர ஊனமடைதலுக்காக மோட்டார் வாகன விபத்துக்களின் மூன்றாம் தரப்பு பாதிக்கப்பட்டவர்களுக்காக விருப்பத்தெரிவுக்குரிய நட்டஈட்டுத் திட்டம்' மீது பொதுக் காப்புறுதி கம்பனிகளுக்கு 2025ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சுற்றறிக்கை வழங்கப்பட்டது. |
| 12 ஒத்தோபர் 2025 | தயாரிப்பு வடிவமைப்பிலிருந்து கோரிக்கைத் தீர்ப்பனவு வரை காப்புறுதி ஆயுட்காலம் முழுவதும் பூட்கை உடமையாளர்களின் நியாயமான நடத்தையினை உறுதிசெய்வதற்கு குறைந்தபட்ச தரநியமங்களைத் தாபிப்பதற்கு காப்புறுதிக் கம்பனிகளுக்கு 'காப்புறுதி வழங்குநர்களின் சந்தை நடத்தை' மீதான வழிகாட்டல் வழங்கப்பட்டது. |
| 2025 ஒத்தோபர் 28 | பூட்கை உடமையாளர்களின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்குடன் எளிமையான மொழியில் ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதி தயாரிப்புக்களின் பூட்கை ஆவணங்களின் முக்கிய அம்சங்களை உள்ளடக்குகின்ற காப்புறுதி தயாரிப்புத் தகவல் ஆவணமொன்றை தயாரிப்பதற்கான கட்டமைப்பொன்றை நிறுவுவதற்கு தொழில்துறைக்கு 'காப்புறுதி தயாரிப்புத் தகவல் ஆவணம்' மீது 2025ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க பணிப்புரை வழங்கப்பட்டது. |
| 2025 ஒத்தோபர் 30 | 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டம், 2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க காப்புறுதி வழங்குநர்கள் (வாடிக்கையாளர் உரியவிழிப்புக் கவனம்) விதிகள், காப்புறுதித் தொழில்துறை ஒழுங்குபடுத்தல் சட்டம் மற்றும் பன்னாட்டு தர நியமங்கள் என்பவற்றுக்கமைவாக அமுலாக்க நடவடிக்கைகள் செயலுறுத்தப்பட்டு, சமவிகிதமாக, தடுப்புத்தன்மையுடைய ஒத்திசைவாக மற்றும் உரியகாலத்தில் அமைந்தவையாக இருக்கின்றன என்பதனை உறுதிசெய்வதற்கு தொழில்துறைக்கு 'பணம் தூயதாக்கலுக்கெதிரான பயங்காரவாத நிதியளித்தலை ஒழித்தலுக்கெதிரான இணங்கத்தவறியமைக்கான நடவடிக்கை அமுலாக்கல்' மீது 2025ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க சுற்றறிக்கை வழங்கப்பட்டது. |
| 2025 நவெம்பர் 17 | 2023.09.09ஆம் திகதியிடப்பட்ட 2023ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகளைத் திருத்தியமைத்தும் பொதுக் காப்புறுதிப் பூட்கைகளின் கட்டுப்பணக் கொடுப்பனவு தொடர்பில் தேவைப்படுத்தல்களை குறித்துரைத்தும் 'பொதுக் காப்புறுதிப் பூட்கைகளுக்கான கட்டுப்பணக் கொடுப்பனவு' மீது 2025ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க சுற்றறிக்கை பொதுக் காப்புறுதிக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டது. |
| 2025 திசெம்பர் 05 | அடிப்படைக் கட்டுப்பணம், வேலை நிறுத்தம், கலகம், உள்நாட்டுக் கலவரம் மற்றும் பயங்கரவாதக் கட்டுப்பணம் தொடர்பிலும் மேலதிக காப்பீடுகள் அல்லது புறக்குறிப்பீடுகளுக்கான கட்டுப்பணங்கள், பூட்கைக்கு ஏற்புடைய அனைத்து ஏனைய வகையிலான பூட்கைக் கட்டணங்கள் (நிலையான மற்றும் மாறுபடத்தக்க கட்டண வகைகள் உள்ளடங்கலாக) தொடர்பிலும் அனைத்து வகையான கட்டுப்பணங்களையும் பூட்கை உடமையாளர்களுக்கும் பூட்கை உடமையாளர்களாக வரக்கூடியவர்களுக்கும் வழங்கப்படுகின்ற அனைத்து ஆவணங்களிலும் வெவ்வேறாக வெளிப்படுத்துவதற்கு அனைத்து பொதுக் காப்புறுதிக் கம்பனிகளுக்கும் 'கட்டுப்பணங்கள் மற்றும் ஏனைய கட்டணங்களின் வெளிப்படுத்தல்' மீது 2025ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க பணிப்புரை வழங்கப்பட்டது. |

3 இவை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட கொள்கை வழிமுறைகள் ஆகும்.

| | |
|---|---|
